ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஆரம்பகாலம் கேவலம், வியாபார கம்பெனியாக வாணிக தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்ளும் வேலையை செய்தது. நூற்றுக்கணக்கான அரச குடும்பக்களுக்கு பகிர்ந்து போயிருந்த இந்தியாவை பார்த்த ஆங்கிலேயர்கள் அந்த நிலையை தங்களுடைய அரசியல் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தி கொண்டனர். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளும் அரசர்கள் இடையே பிரித்தாளும் சூழ்ச்சியை பயன்படுத்தி அவர்கள் எல்லோரையும் முறையாக தம்முடைய அதிகாரத்தின் கீழ்கொண்டு வந்தனர். அதிகாரத்திற்கு உட்படுத்தி கொள்ளும் முறையில் சமதானம் மற்றும் போர் முறைகளை, முறையாக பயன்படுத்தி கொண்டார்கள்.

பல விதிமுறைகளை பயன்படுத்தி இந்தியாவை தம்முடைய ஆட்சிக்கு உட்படுத்தி கொண்டு பின்பு அதை எவ்வாறு தம்மிடமே தக்க வைத்து கொள்வது என்று ஆலோசி த்தனர். இந்தியா ஒரு நாடு என்றும் பொது கற்பனை இல்லாமல் இருந்த வேளையில் அது பல வித அரசுகளாக பிரிந்து போயிருந்தது. பல அரசுகளை பல காரணங்களால் ஆங்கிலேயர்கள் ஒன்று படுத்தி ஒரே சீரான அரசியல் அமைப்பின் கீழ் ஒன்று படுத்தினர், இவ்வாறு அரசியல் ரீதியாக பெற்ற பரந்த பகுதியினை 18ம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதிக்கு பிறகு ஒரே சீரான ஆட்சி முறைக்கு உட்படுத்தினார்கள். கல்வி, நீதிமுறை, நிலவரி, வியாபாரம், விவசாயம் போன்ற துறைகளில் புதிய நிர்வாக முறைய அமுல்படுத்தி அவர்கள் உருவாக்கிய அரசாங்கத்தை ஒரே சீரான ஆட்சி முறைக்கு கொண்டு வருவதில் வெற்றி பெற்றனர்.

## ஆட்சிமுறை மற்றும் நீதிமுறை

***மக்கள் சேவை :*** லார்டு காரன்வாலிஸ் மக்கள் சேவை முறை நடைமுறை படுத்தினான். கிழக்கிந்திய கம்பெனி வியாபாரம் செய்வதற்காக பணியாளர்களை நியமிக்கும் முறையை முதலில் இருந்து நடைமுறை படுத்தி கொண்டு வந்தது. இங்கு வேலை செய்து கொண்டு வந்த பணியாளர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவில்லை, கம்பெனி இந்த பணியாளர்களுக்கு சொந்தமாக வியாபாரம் செய்து கொள்ள அனுமதி கொடுத்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட பணியாளர்கள், முறைகேடான ஊழல் செயலில் ஈடுபட்டு பணம் சம்பாதித்து இதனை தடுக்கும் பொருட்டு ஊழல் வாதியானார்கள். 1773ல் இங்கிலாந்து அரசாங்கம் சீரான நிர்வாக முறையை அமுல்படுத்தியது, சட்டத்தின் பெயரையே குறிப்பாதைப் போல அதன் உத்தேசம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு

©KTBS Not to be republished



www.textbookpdf.in

வருவது.

1800ல் மக்கள் சேவைக்கு சேர விரும்புவோர், கல்வியை போதிக்க கல்கத்தாவில் போர்ட் வல்லியம் கல்லூரியை உருவாக்கினான். ஆனால் கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகிகள் இதற்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. இதன்விளைவு என்றால் 1853 வரைக்கும் நாகரீக சேவை செய்யும் எல்லா பணியிடத்திற்கும் பொது நுழைவு தேர்வின் மூலமே நியமிக்க படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதனால் இந்தியருக்கு அதிக பயன்கிடைக்கவில்லை. மற்றும் ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் திறமையை சந்தேகித்தனர். கார்ன்வாலிஸ் இந்தியாவில் உள்ள ஒவ்வொருவனும் ஊழல்வாதி என்று கூறினான். இதனால் கடைநிலை பணிகளை மட்டும் இந்தியர்களுக்கு அளித்தான்.

***நீதிமுறை :*** மொகாலாயராலிருந்து ஆங்கிலேயருக்கு படிப்படியாக அதிகாரம் மாறுகின்ற கால கட்டத்தில் புதிய நீதிமுறை இந்தியாவில் வேர் ஊன்ற ஆரம்பித்தது. பக்ஸார் போருக்கு பிறகு மொகலாய பேரரசன் ஷா ஆலம் திவானி உரிமை என்ற வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயருக்கு கொடுத்தான். வாங்காளப் பகுதியில் இரட்டையாட்சி முறை வந்தது. இதனை இரட்டை ஆட்சிமுறை என்று அழைப்பார்கள். இதன்படி வரி வசூலிக்கும், மக்கள் மற்றும் குற்றவியல் நியா நிர்வாக முறையை இந்திய அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டது. வசூலாகிய வரியை நிர்வாகிக்கும் முறை தங்களிடம் வைத்துக் கொண்டனர். முறையாக ஆங்கிலேயர்கள் ஒரே சீரான நிர்வாக முறையை நடைமுறைபடுத்த வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

1772ல் கவர்னராக அதிகாரம் ஏற்றுக்கொண்ட வாரன்ஹேஸ்டிங், நடைமுறை படுத்திய புதிய யோசனைப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு வகையான நீதிமன்றங்கள் பெற்றிருக்க வேண்டியிருந்தது. அவை என்றால் ''திவாணி, அதாலத்'' என்ற பொது நீதிமன்றம். ''பௌஜதாரி, அதாலத்'' என்ற குற்றவியல் நீதிமன்றமாகும். இங்கு பொது நீதிமன்றத்தில் நீதிவழங்கும் போது இந்துகளுக்கு இந்துசாஸ்த்திர முறைப்படி மற்றும் முகமதியருக்கு சரியத் சட்டப்படி நீதி வழங்கப்பட்டது. குற்றவியல் வழக்கின்போது எல்லோருக்கும் முகமதியரின் சட்டபடி விசாரணை நடத்தப் பட்டது அதன்பிறகு ஆங்கிலேயரின் சட்டத்தை நடைமுறைபடுத்து தன் மூலம் குற்றவியல் சட்டங்களில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. பொதுநீதி மன்றங்கள் ஐரோப்பிய மாவட்ட அதிகாரிகளின் தலைமையில் செயல்பட்டு வந்தன. குற்றவியல் நீதிமன்றங்கள் 'காஜி'களின் கட்டுப்பாட்டில் இருந்த போதும் ஐரோப்பியர்களின் மேல்அதிகாரிகளின் கண்காணிப்பில் நடைபெற்றன.

***காவல்துறை :*** உள்நாட்டில் அமைதி காக்கும் பொறுப்பு பெற்றுள்ள வர்க்கமே காவல் துறை லார்டு காரண்வாலிஸ் முதன் முறையாக முறைப்படி காவல் துறையை நடைமுறைப் படுத்தினான். இவன் மாவட்ட கண்காணிப்பாளர் Supertentent of Police என்ற பதவியை உருவாக்கி மாவட்டங்களை தலைமையாக கொண்டு காவல் நிலையங்களை உருவாக்கினான். ஒவ்வொரு காவல்நிலையமும் கொத்துவாலர்களின் கண்காணிப்பிலும், கிராமங்கள், கிராம நிர்வாக அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டது. கொத்துவால்களின் கிராமங்களில் ஏற்படும் திருட்டு, குற்றங்கள், வழிபறி போன்றவற்றை நிர்வாகிக்கும் பொறுப்பை பெற்றிருந்தனர்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

1770 ஆம் நூற்றாண்டில் பயங்கர வறட்சி, பயத்தின் காரணமாக அனைத்து காவல் துறையை ஆங்கிலேய அதிகாரிகளின் கண்காணிப்பிற்கு கொண்டு வரப்பட்டது 1781ல் ஆங்கிலேயே நீதிபதிகளை நியமிக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. காவல்துறை அதிகாரிகள் நீதிபதிகளின் அதிகாரததிற்குட்பட்டனர். இவ்வாறு காவல்துறை நிரந்தர மாற்றங்களுக்கு உள்ளாயிற்று. 1861ல் காவல்துறை சட்டம் நடைமுறை படுத்தப்பட்டது. இந்த சட்டமே, நீதி மற்றும் நல்லாட்சி நடத்த அடித்தளமானது. ஆனால் அதிகாரிகளின் நியமனத்தின் போது இந்தியர்களுக்கு வாய்பளிக்கவில்லை. 1902ல் காவல்துறை சட்டம், கல்வி தகுதி பெற்ற அதிகாரி பதவிக்கு இந்தியர்களை நியமிக்க வாய்பளித்தது. இவ்வாறனாலும் இந்தியர்களைப் பற்றி இருந்த வேறுபாடு குறையவில்லை.

***இராணுவமுறை :*** ஆங்கிலேயர் காலத்து ஆட்சி முறையில் இராணுவம் தூண் போன்று விளங்கியது. இந்தியர்களையே இராணுவத்தில் சேர்த்துக்கொண்டு அவர்களின் உதவியுடனே ஆங்கிலேயர்கள் இந்தியாவை தமது அதிகாரத்திற்கு கொண்டு வந்தனர். இராணுவ பலத்தை பயன்படுத்தி இந்தியாவின் உள்ளே தமது எதிர்சக்தியாலும் வெளிநாட்டு பலத்தாலும் தமது அரசை காத்துக் கொண்டனர். அதிகாரிகள் ஆங்கிலேயர்களே இருந்தனர். இந்தியர்களுக்கு கிடைக்க வேண்டிய மிக உயர்ந்த பதவி என்றால் ''சுபேதர்'' பதவியாகும் பெரும்பாலான இந்திய ராணுவ வீரர்கள் கூலிராணுவ வீரர்களாக இருந்தனர். 1857 நிகழ்ச்சிக்கு பிறகு 'பீல்' என்பவரின் தலைமையில் ஒரு குழு நியமித்து அதன் பரிந்துரைகளை ஆங்கில அரசு பெற்றது. இந்த பரிந்துரையின் அடிப்படையில் ராணுவமுறையில் மறுமுறை ஏற்படுத்தப்பட்டது.

***நிலவரிமுறை :***

ஆங்கிலேயர்கள் வங்களைப் பகுதியை தமது தலைமையிடமாக கொண்டனர். கிழக்கிந்திய கம்பெனி ஆங்கில அரசிற்கு வருடத்திற்கு 4 லட்சம் பவுண்டுகளை கொடுக்க வேண்டியிருந்தது. இந்த நிலையில் கம்பெனி பொருளாதார நிலையை சீராக வைத்து கொள்ள வேண்டியிருந்தது. இதற்கு ஏற்ப நிலவரியை அமுல்படுத்த வேண்டியிருந்தது.

***ஜாமீன் தாரி முறை :*** வருடத்திற்கு குறிப்பிட்ட வரியை பெற லார்டு காரணவாலிஸ் பிரபு 1793ல் வங்காளம் மற்றும் பீகார் பகுதியில் புதிய வரிமுறையை நடைமுறைபடுத்தினான். இது ஜமீன்தாரி முறை எனப்பட்டது. இந்த முறையில் ஜாமீன்தாரர் நிலஉரிமையாளன் ஆனான். இந்த புதிய முறைப்படி ஜமீன்தாரர் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட தேதிக்கு முன்பே முழுவரியை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. நில உரிமையாளனுக்கு அதிக லாபம் கிடைத்தது. ஏனென்றால் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை விட அதிகமாக வசூலித்த பணத்தை அவனே வைத்து கொள்ளலாம். வறட்சி, அல்லது கடும் மழை காரணமாக வரியை வசூலிக்க முடியாது போனால் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்த முடியாவிட்டால் ஆங்கில அரசு நில உரிமையை அவனிடமிருந்து பிடுங்கி கொண்டது. இந்த முறையினால் ஆங்கிலேயருக்கும் மற்றும் ஜமீன் தாருக்கு மட்டும் நன்மை ஏற்பட்டதே தவிர விவசாயிகளுக்கு ஏற்படவில்லை ஆங்கிலேயர்கள் தமக்கு உதவும் வகையில் புதிய சமூக வர்க்கமான ஜமீன்தாரி வர்க்கத்தை உருவாக்கியது. விவசாயிகள், விவசாய கூலிகள். ஜமீன்தாரரின் பூமியில் சேவை செய்ய நிரந்த வாய்ப்பு கிடைக்காமல் வாழ்க்கை நடத்தினார்கள், 'சார்ல்ஸ் மெடகாப்' கூறுவது போன்று ஆங்கில நிலவரி

©KTBS Not to be republished



www.textbookpdf.in

முறையினால் இந்திய விவசாயிகள் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலே மாய்ந்தனர்.

***மகல்வாரி முறை :*** உத்திர பிரதேசம், மத்திய பிரதேசத்தின் பல பகுதிகள் பஞ்சாப் மற்றும் டெல்லி பகுதிகளில் பொது ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்களே அரசாங்கத்திற்கு வரியை செலுத்தும் முறையை கொண்டு வந்தனர். கிராமத்திலிருந்து கிராமத்திற்கு, மாநிலத்திலிருந்து மாநிலத்திற்கு இந்த முறையை அமுல்படுத்துவதில் வேறுபாடு இருந்தது. பெரிய மற்றும் சிறிய ஜமீன்தாரர்கள் இந்த முறையில் அடங்குவார்கள். கம்பெனி, அரசாங்க அதிகாரிகள் நிலத்தில் விளையும் உற்பத்தியை விட அதிகமான ஆண்டுவரியை நிர்ணயிர்த்தால் பல ஜமீன்தார்கள் தம்முடைய நிலையை இழந்தனர், அவர்களையே நம்பி வாழ்ந்த சிறுவிவசாயிகள், விவசாய கூலிகள், நிர்கதி யானார்கள், விவசாயிகள் முறை முதன் முறையாக ஒரு சோதனையாக பாரமகல் பகுதியில் 1792ல் அலெக்சாண்டர் ரீடு. என்பவன் நடைமுறைப்படுத்தினான். இந்த முறை தாமஸ் மன்றோ, மதராசு, மைசூரு பகுதிகளில் 1801 பிறகு நடைமுறை படுத்தினான். இந்த கால கட்டததில் இந்த பகுதியின் பல பாகங்கள் கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது முக்கிய காரணமாகும். இந்த முறைப்படி அரசாங்கம் மற்றும் விவசாயிகளிடையே நேரடி தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. நிலத்தை உழுது கொண்டிருந்தவனை அதன் உரிமையாளன் என்று அங்கிகரித்தது. விவசாயி நேரிடையாக தான் விவசாய நிலத்தில் பெற்ற உற்பத்தியில் 50 சதவீதத்தை நில வரிமூலம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. வரியை 30 வருட காலத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. பிறகு சோதனைக்கும் உட்படுத்தலாம். சிறுவிவசாயிகளின் கட்டுப்பாட்டிலிருந்தாலும், நிலவரியை கண்மூடிதனமாக அதிகமாக ஆண்டு வரியை நிர்ணயித்ததால் விவசாயிகள் துன்பத்திற்கு உள்ளானார்கள். வரிவசூலிக்கும் அதிகாரிகள் நிர்பந்தமாக வசூலித்தனர். விளைச்சல்கள் சரியாக விளையாத காலத்தில் விவாசாயிகள் வட்டிக்கு வாங்கி திரும்ப செலுத்த முடியாமல் அவர்களிடத்தில் இருந்த பூமியையும் விற்றனர்.

விவசாயிகளின் நன்மைக்காக விவசாய முறை நடைமுறை படுத்தப்பட்டுள்ளது என்று ஆங்கிலேய அரசு கூறினாலும் அதிகமான விவசாயிகள் கடனில் அகப்பட்டார்கள் என்பது கொடுமையாகும்.

## ஆங்கிலேயாரின் நிலவரி முறையின் விளைவுகள்

இந்தியர்களின் பாரம்பரிய கல்வி தொடர்ந்து நடைமுறையில் இருந்தது. இடைப்பட்ட காலத்தில் இஸ்லாமிய அரசு முறை நிலைத்த பின்பு கல்வியை அளிப்பதில் பாரம்பரிய கல்விமுறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. பின்பு இந்த கல்விமுறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. 18ம் நூற்றாண்டின் ஆங்கிலேயரின் கால கட்டத்தில் இந்தியாவில் இருந்த ஐரோப்பிய மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின் குழந்தைகளுக்கான புதிய கல்விக் கூடங்கள் திறக்கப்பட்டன. ஆனால் இந்த கல்வி முறையில் விரிவாக்கம் ஏற்படாமல் இந்தியக் குழந்தைகளுக்கு எந்த பயனும் ஏற்படவில்லை.

1. உண்மையான விவசாயிகளை துன்புறுத்தும் புதிய சமுதாய வர்க்கமான ஜமீன்தார்கள் சமுதாயம் உருவானது.
2. ஜாமீன்தார்களின் துன்புறுத்தலுக்கு உள்ளான விவசாயிகள் பலவிதமான துன்பங்களுக்கு ஆளானர்கள். மற்றும் நிர்கதிக்கும் ஆளானார்கள்.
3. நிலம் விற்பனைப் பொருளானது. இதனை விற்பனை செய்து பணத்தை கடனாக பெற முடிந்தது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

4. பல ஜமீன்தார்கள் கூட நில வரியை செலுத்துவதற்காக தங்களுடைய நிலத்தை விற்றனர்.

5. விவசாயத் துறை வாணிபமாக மாறியது. இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் காரணமாக அங்குள்ள தொழிற்சாலைக்கு தேவைப்பட்ட கச்சாப் பொருட்களை விளைவிக்க வேண்டியதாயிற்று.

6. பணத்தைவட்டிக்குவிடுபவர்களே(லேவாதேவிகாரர்கள்)வலிமையடைந்தார்கள்.

## நவீன கல்வி முறை :

நவீன கல்வி முறையின் பிரசாரத்திற்கு ஊக்குவித்த முதல் ஆங்கில அதிகாரி வாரன் ஹேஸ்டிங். 1781ல் அவன் 'கல்கத்தா மதராசாவை ஆரம்பித்தான். 'ஜோநாதன்டங்கன்' என்ற ஆங்கிலேயன் 1792ல் பனாரஸில் சமஸ்கிருத கல்லூரியை தொடங்கினான். ஆனால் ஆங்கில கல்வியின் பரந்த விரிவாக்கத்திற்கு முதன் முதலில் வலியுறுத்தியவர் சார்ல்ஸ் கிராண்ட்.

1828ல் வில்லியம் பெண்டிங் கவர்னர் ஜெனரலாகி நியமிக்கப்பட்ட பிறகு ஆங்கில கல்வியின் விரிவாக்கத்திற்கு மேலும் சிறப்பான ஊக்கம் கிடைத்தது. கவர்னர் ஜெனரலின் காரிய சபையில் மெக்காலெ பிரபுவை, பெண்டிங் சட்ட உறுப்பினராக நியமித்தான்.

பொது கல்விக்குச் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவிற்கும் தலைவனாக நியமிக்கப்பட்டான். அவனுடைய முக்கிய திட்டம் என்றால் பார்வைக்கு இந்தியனாகவும், எண்ணத்தில், அபிபிரயாத்தில், நீதி மற்றும் அறிவில் ஆங்கிலேயனாகவும் புதிய சமுதாயத்தை உருவாக்குவது. இந்தியாவின் கல்வி முறையில் ஆங்கில மொழி வழிமொழியாக ஆரம்பாமானது. 1830ம் ஆண்டிற்கு பிறகும் அதன் பிறகு முக்கிய வளர்ச்சி என்றால் சர் சார்ல்ஸ்வுட்டின் 1854கின் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் அன்றைய கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபு, கல்கத்தா, பாம்பே, மற்றும் மதராசில் புதிய பல்கலைக் கழகத்தை உருவாக்கினான். கல்வி இன்னும் சற்று விரிவடைந்தது.

## ஆங்கில கல்வியின் விளைவுகள்

1. இந்தியர்கள் நவினமுறையில், ஜனநாயகம், முற்போக்கு சிந்தனையும், தேசியவாத கண்ணோட்டத்தையும் வளர்த்து கொள்ள முடிந்தது.
2. வட்டார மொழி மற்றும் தேசிய மொழிகளில் இலக்கியம் இயற்றுவதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. இதனால் சாதரண மக்களின் எண்ணத்திலும் ஒருமைப்பாட்டை காண முடிந்தது.
3. செய்திதாள்கள் வெளிவரத் தொடங்கின. சிறப்பாக 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் நீதிகளை விமர்சிப்பதின் மூலம் இந்திய மக்களிடையே ஆங்கில ஆட்சி முறையை பற்றி கேள்வி எழுப்பும் முறை உருவாயிற்று.
4. புதிய சமுதாய, தார்மீக போராட்டங்கள் உருவாயின.
5. ஜே.எஸ்.மில், ரூசோ, மண்டெஸ்கோ, போன்றவரின் ஆலோசனைகள், படித்த இந்தியர்களிடையே புதிய சிந்தனைகளை உருவாக்கியது.
6. உலகளவில் நடைபெற்றுக் கொண்டிருந்த விடுதலைப் போராட்டம் இந்தியர்களிடமும் ஏற்பட்டது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

7. இந்தியர்கள் தம்முடைய வளமான கலாச்சாரங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

இவ்வாறு இந்தியாவில் நடைமுறைபடுத்தப்பட்ட வெளிநாட்டு கல்விமுறையினால், உரத்த சிந்தனையும், புதிய தலைமுறையையும் உருவாக்கியது.

## சட்ட ரீதியான வளர்ச்சி

இந்தியாவில் ஆங்கில அரசு வளர்ந்தது போல பிரச்சனைகளும் வளர்ந்தன. பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டியதாயிற்று. இந்த மாற்றம் இந்தியர்களின் வேணடுதலுக்கு ஆங்கிலேயர்கள் செவிசாய்க்க வேண்டிதாயிற்று. அப்பொழுது ஆங்கிலேயர்கள் காலாத்திற்கு ஏற்ப விதிமுறைகளை சட்ட வடிவில் அமுல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வாறாக சட்டங்கள் இந்திய சட்டவளர்ச்சிக்கு உதவின. இந்த சட்டங்களில் சிலவற்றை அறிவோம்.

ஒரே சீரான சட்டம்

### *1773ன் ஒரே சீரான சட்டம் :*

1765ல் நடைமுறைபடுத்தப்பட்ட திவானி உரிமைக்குப் பிறகு கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் அளவிற்கு அதிகமான ஆசைக்கு உட்பட்டு, அதிகாரத்தை தம்முடைய சொந்த நலனை உயர்த்தி கொள்ள பயன்படுத்தினார்கள். முறைகேடுகள் அதிகரித்தன. இங்கிலாந்தின் சாசன சபையின் உறுப்பினர் எட்மண்ட பர்க். வருடத்திற்கு கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கில அரசு பெறும் வரிப்பணத்தை ‘அபராத வரி’ என்று கடுமையாக விமர்சித்தார். கிழந்திய கம்பெனி அதிகாரிகள் இந்தியாவில் நடைபெற்று கொண்டிருக்கும் முறைகேடான செயல்களை அறிந்த போதும் எந்தவித நடவடிக்கை எடுக்காததினால் அவன் இவ்வாறு கூறினான்.

இவர்கள் சம்பாதித்த பணம் எவ்வளவு இருந்தது என்றால் இங்கிலாந்து அரசியல் தன்மையை தலைகீழாக மாற்ற கூடியது. என இங்கிலாந்து மக்கள் எண்ணினர். இந்த நிலையில் ஒரே சீரான சட்டம். 1773ல் நடைமுறைபடுத்தப்பட்டது.

### *சட்டத்தின் முக்கிய எண்ணங்கள்*

1. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு ஆங்கிலேயர்களின் ஆட்சி க்குட்பட்டிருந்த பகுதிகளை மூன்றாக பிரித்தனர். அவைகள் 1. வங்காளம், பாம்பே, மற்றும் மதராஸ், அவைகள் சுதந்திரமாகவும் தனித்தும் செயல்பட்டு வந்தன.
2. வங்காளத்தின் கவர்னர், இந்த மூன்று பகுதிகளுக்கும் கவர்னர் ஜெனரல் ஆனான்.
3. கவர்னர் ஜெனரல் பாம்பே மற்றும் மதராஸ் பகுதியிகளை நிர்வாகிக்கும் மற்றும் கட்டுப்பாட்டிற்கும் கொண்டு வரவும், கண்காணிக்கும் அதிகாரத்தையும் இந்த சட்டம் அளித்தது.
4. வங்காள அரசை, அல்லது இங்கிலாந்தின் நிர்வாக மண்டலத்தின் அனுமதி இன்றி பாம்பாய் மற்றும் மதராஸ் அரசுகள் யார் மீதும் போரிடக்கூடாது. அல்லது சமதானப் பேச்சும் நடத்தக் கூடாது. மிக அவசரமான வேளையில் மட்டும் இந்த நிபந்தனையில் இருந்து விலக்கு இருந்தது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

5. கல்கத்தாவில் இச்சட்டத்தின் படி ‘சுப்ரீம் கோர்ட் ஆப் ஜூடிகேச்சர்’ தொடங்கப்பட்டது. இம்மைய நீதிமன்றத்தில் ஒருவர் தலைமை நீதிபதியாகவும் மற்றும் மூன்று பேர் சாதாரண நீதிபதிகள் செயலாற்றினர்.

இவ்வாறு ஒழுங்குமுறை சட்டம் தன்னுடைய பெயரை குறிப்பிட வேண்டும் என கம்பணியை உட்கொண்டு இந்தியா முழுவதும் ஆங்கில ஆட்சி ஏற்படுத்த இங்கிலாந்து அரசு நடைமுறைக்கு வரும மிகப்பெரிய தீர்மாணத்தை மேற்கொண்டது.

## *1784ன் பிட் இந்தியச் சட்டம்*

1773ன் இந்தியாவில் இருந்த சட்டத்தில் இருந்த சில குறைபாடுகளோடு, ஆங்கில அரசின் அதிகாரத்தை அரசாங்கம் மற்றும் கிழக்கிந்திய கம்பெனிக்கு இருந்த அதிகார வரையை தெளிவு படுத்துவதே இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம். இங்கிலாந்து அரசாங்கம் இந்தச் சட்டத்தில் புதிய நிபந்தனைகளை சுமத்துவதன் மூலம் கிழக்கிந்திந்திய கம்பெனி அரசை முடிவாக கட்டுக்குள் கொண்டு வந்தது. மற்றொரு முக்கிய அம்சம் என்றால், கட்டுப்பாட்டு அமைப்பு என்ற ஆறுபேர் கொண்ட கண்காணிப்பு குழுவை உண்டாக்கியது. இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் முன்பிருந்த நிர்வாக அமைப்புஇருந்த இடத்தில் கண்காணிப்பு குழு நிறுவப்பட்டது. இந்த குழு, மக்கள் இராணுவம், வரிவசூலிப்பு விசயங்களில் எடுத்துரைக்கும், இயக்கும், மற்றும் கண்காணிப்பை பெற்றிருந்தது.

இங்கிலாந்தின் நிர்வாகக்குழு மற்றும் கண்காணிப்பு குழு இரண்டும் நடைமுறையில் இருந்தன. இந்தியர்கள் தமது அதிகாரத்தை ஆங்கில அரசின் பெயரில் பெற்றுள்ளார்களே தவிர அவர்களுக்கு சுய உரிமையில்லை என்று இந்தச் சட்டத்தில் கூறுவதின் மூலம் இந்தியர்களின் அரசியல் அதிகாரத்தை கடைசியாக நிர்ணயித்தனர். இந்தச் சட்டம் இந்தியாவில் இருந்த கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளுக்கு இங்கிலாந்து அரசே தலைமையானது என்று அறிவித்தது.

## *சார்ட்டர் சட்டங்கள் :*

சார்ட்டர் சட்டத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவிலிருந்த கிழக்கிந்திய கம்பெனியின் உரிமையை விரிவுபடுத்துவது. 1793, 1813, 1833, மற்றும் 1853ல் சார்ட்டர் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு 20 வருடத்திற்கு ஒருமுறை கிழக்கிந்திய கம்பெனிக்கு உரிமையை புதுப்பிக்கும் போது இங்கிலாந்து அரசாங்கம் எடுத்துக்கொண்ட புதிய விதிகளை இந்த சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இந்த நான்கு சட்டத்தில் 1813 மற்றும் 1833ன் சட்டங்கள் பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் பெற்றது.

## *1813ன் சார்ட்டர் சட்டம்*

1. இந்தச் சட்டம் கிழக்கிந்தியா கம்பெனிக்கு மீண்டும் 20 ஆண்டுகள் இந்தியாவில் செயல்பட அனுமதி அளித்தது. இந்தச் சட்டம் நடைமுறைபடுத்துவதற்கு முன்பு இந்தியாவில் வியாபாரம் நடத்தும் அதிகாரத்தை கிழக்கிந்திய கம்பெனிக்கு மட்டுமில்லாது விருப்பம் உள்ள அனைவருக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று போராட்டம் நடந்தது. இதன் பின்னணியில் விருப்பமிருந்த அனைவருக்கும் இந்தச் சட்டம் அனுமதி அளித்தது. இதன் காரணமாக திறந்த வெளி வியாபாரத்திற்கான ஒரு புதிய காலம் உருவானது.

© KTBS Not to be republished



www.textbookpdf.in

2. அனுமதி மற்றும் உரிமையின் புதுத்தோற்றம்
3. இனிமேல் கவர்னர் ஜெனரல் மற்றும் பதவியில் இருக்கும் முக்கிய நிர்வாக அதிகாரிகளை (Commander in Chief) குழுவே நியமிக்கும் அதிகாரத்தை பெற்றிருந்தது.
4. சர்ச்சுகளுக்கு இந்தியாவிற்கு வருவதற்கு அதிகாரபூர்வமான அனுமதி அளிக்கப்பட்டது. இந்தியர்களுக்கு புதிய ஞானத்தை கொடுக்ககூடிய, ஒழுக்கம், தார்மீக வாழ்க்கை உயர்த்தும் பொறுப்பினை மிஷனரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டது. இதனால் அதிக எண்ணிக்கையில் இந்தியாவிற்கு வரத்தொடங்கியது. கிறித்துவ மத பிரச்சாரம் மற்றும் ஆங்கில கல்வி முறை விரிவாக்கப்பட்டது.

இந்த மேற்கண்ட காரணங்களால் 1813 சார்ட்டர் சட்டம் சரித்திர முக்கியத்துவமானது.

## *1833ன் சார்ட்டர் சட்டம்*

இந்தியாவின் மொத்த நிலைமையை சீர்படுத்துவே இந்த சட்டத்தின் நோக்கமாகும். கிழக்கிந்திய கம்பெனிக்கு மற்றொரு 20 வருட உரிமை வழங்கப்பட்டது. இந்த சட்டத்தின் முக்கிய அம்சம் என்றால்.

1. வாங்காளத்தின் கவர்னர்ஜெனரல் இந்தியாவின் கவர்னர் ஜெனராலாக நியமிக்கப்பட்டார்.
2. இந்தியாவின் எல்லா சரக்குகளையும் இயக்குவது, கட்டுபடுத்துவது, மற்றும் கண்காணிப்பது போன்ற அதிகாரத்தை கவர்னர் ஜெனரல் பெற்றான்.
3. தேசிய சமஸ்தானங்களுடன், போர், அமைதி, ராஜதந்திரம், போன்ற எல்லா விசங்களையும் வங்காளத்தின் தலைமை அரசே தீர்மானிக்கும் உரிமையை பெற்றது.
4. கவர்னர் ஜெனரலின் காரியசபையில் மீதமுள்ள உறுப்பினர்களுடன் கவர்னர் ஜெனரலுக்கு ஏதாவது விசயத்தின் மீது ஒப்புதல் இல்லை என்றால் அவன் பெருபான்மை காரணங்களை நிராகரிக்க இருந்த காரணங்களை எழுத்து வடிவில் தரவேண்டும்.
5. மதம், தோலின் நிறம், மற்றும் பிறப்பிடத்தின் ஆதாரமாக எந்தவித பாகுபாடும் செய்யக்கூடாது. என்று இந்தச்சட்டம் நிர்ணயித்தது .
6. கவர்னர் ஜெனரல் அவன் ஒரு காரிய சபைக்கு சட்ட உறுப்பினரை நியமித்து கொள்ள வேண்டியதாயிற்று.
7. எல்லா ஆங்கிலேயர்களும் இந்திய வருகைக்கு ஒரு குழு அனுப்பிதரப் பட்டது.

இந்தச் சட்டம் 1830ன் நூற்றாண்டின் இந்தியாவின் உள்நாட்டு மற்றும் இங்கிலத்தில் இருந்த பல அரசியல் நிகழ்வுக்கு காரணமாக இருந்தது.

## பி. ஆங்கில அரசின் நேரடி ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்ட சட்டங்கள்.

கிழக்கிந்திய கம்பெணியின் நேர்மையற்ற ஆட்சி முறை மற்றும் விரோத சட்டங்களினால் 1857ல் சிப்பாய் கலகம் நடைபெற்றது. இதனால் கம்பெனியின் நிர்வாகத்தை பிரிட்டீஸ் அரசியே ஏற்றுக் கொண்டார்.இச்சமயத்தில் நடைமுறைக்கு வந்த


www.textbookpdf.in
©KTBS Not to be republished

முக்கிய சட்டங்களைன்றால், இந்திய அரசு சட்டம் 1858, 1861, 1892, 1909, 1919 மற்றும் 1935ன் சட்டங்கள், இந்தியாவில் வெவ்வேறு கால கட்டங்களில் உருகொண்ட அரசியல் வளர்ச்சிகளின் பின்னணியில், மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சட்டமும் வரலாற்று புகழ் பெற்றவை என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இந்திய அரசு சட்டம் - 1858.

இச்சட்டத்தை 1857ன் ராணுவம் மற்றும் மக்களின் புரட்சியின் பின்னணியை புரிந்துகொள்ள வேண்டும். பிரிட்டீஸ் இந்தியா, பிரிட்டீஸ் அரசின் நேர் ஆட்சிக்கு உட்பட வேண்டியதாயிற்று. நவம்பர் 1 1858 அன்று பிரட்டீஸ் அரசி விக்டோரியா ஒரு அறிவிப்பை வெளிப்படுத்தி, தம்முடை ஆட்சி நிர்வாகக் காலத்தில் இந்தியா அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம், அடையச் செய்ய முடியுமென்று அறிவித்தார். இச்சட்டத்தின் முக்கிய அம்சங்களென்றால் -

1. கிழக்கிந்திய கம்பெனியின் மானியத்தை ரத்துசெய்து, இந்தியாவை ஓர் அணியில், நேர் ஆட்சியின் கீழ் மாற்றம் செய்யப்பட்டது.
2. கவர்னர் ஜெனரல் பதவியின் பெயரை மாற்றி ''வைஸ்ராய்'' என்னும் பெயர் அளிக்கப்பட்டது. புதிய வைஸ்ராயாக 'லார்டு கானிங்' என்பவர் நியமிக்கப்பட்டார்.
3. ''செக்கரட்டரி ஆப் ஸ்டேட் ஃபார் இண்டியா'' என்னும் ஸ்தானத்தை பிரிட்டீஸ்அரசு ஏற்படுத்தியது. பிரிட்டீஸ் அமைச்சரவையின் உறுப்பினராகி அவர் இந்தியாவின் ஆட்சியை கவனித்துக் கொள்ளும் பொருப்பைப் பெற்று இருந்தார்.
4. இவருக்கு உதவி செய்ய 15 உறுப்பினர்களைக்கொண்ட இந்திய சபை (கவுன்சில் ஆப் இண்டியா) நடை முறைக்கு வந்தது.

### *1861ன் இந்திய அமைப்பு சட்டம் (1861)*

இச்சட்டம் 1857ன் நிகழ்வுக்குப் பிறகு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட முக்கிய சட்டமாகும். இச்சட்டத்தின் மூலமாக இந்தியர்களுக்கு சாசனத்தை உண் டாக்கும் செயலாக்கங்களில் இடமளிக்கப்பட்டது. இந்தியர்கள் ஆங்கிலேயரின் வகையில் அறிந்துள்ள அபிப்பிராயங்களை அறிய இந்தியர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் ''Polley of Association'' என்று அழைப்பார்கள்.

### *இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :*

1. வைஸ்ராய் கவுன்சிலுக்கு இந்தியர்களை அதிகாரமற்ற உறுப்பினர்களாக பெயர் சூட்டப்பட்டனர்.
2. அவசர சமயத்தில் இறுதிமுடிவுகளை வெளியிடும் அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்கு அளிக்கப்பட்டது.

### *1892ன் இந்திய சபை சட்டம்*

இச்சட்டம் 1861 சட்டத்தின் தொடர்ச்சி சட்டமாகும். 1892ன் சட்டத்தில் இந்தியர்களுக்கிருந்த சாசன சபைகளின் பிரதநிதிகளை இன்னும் அதிகளவில் விரிவாக்கியது. காங்கிரஸ் கட்சி ஆங்கிலேயரின் ஆட்சியைப் பற்றிய அங்கிகாரம் விமர்சனத்துக்குள்ளான பின்னணியில் இந்தியரின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்தியது.



©KTBS Not to be republished
www.textbookpdf.in

### இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

1. மைய மற்றும் பிராந்திய சாசன சபைகளில் அதிகளவு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாகச் செய்தது.
2. சாசன சபை (லெஜிஸ்லேடிவ் கவுனிசில்) அதிகாரத்தை அதிகமாக்கி அதில் பட்ஜெட்பற்றி விவாதிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது.
3. ஆறு நாட்களுக்கு முன்பாகவே முன்குறிப்புகளை அளித்து பொதுமக்களின் குறைகளின் விஷயங்கள் பற்றி அரசாங்கத்தை கேள்வி கேட்கும் உரிமையை அளித்தது.

### 1919 இந்திய அமைப்பு சட்டம் :

இச்சட்டத்தை ''மின்டோ மார்லி சீர்திருத்த சட்டம்'' என்றும் அழைப்பார்கள். ஏனென்றால் லார்டு மின்டோ மார்லெ இந்தியாவின் வைஸ்ராயாக இருந்தார். லார்டு மார்லென் இந்தியாவின் செக்கரட்டரி ஆப் ஸ்டேட் India's Secretary of State ஆகவும் செயலாற்றி வந்தார். ஆங்கிலேயர் இந்தியர்களை வதைத்து ஆட்சிபுரிய இச்சட்டத்தை பயன்படுத்திக் கொண்டனர்.

### இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

1. மைய சாசனசபையின் உறுப்பினரின் எண்ணிக்கை 16 லிருந்து 60 ஆக உயர்ந்ததப்பட்டது.
2. பிராந்தியங்களில் சாசன சபைகளின் இடங்கள் அதிகமாக்கப்பட்டன.
3. முதல் முறையாக தேர்தல் மூலமாக சாசன சபைக்கு தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் அளிக்கப்பட்டது.
4. முஸ்லீம்களுக்கு தனியான அரசியல் பிரதிநிதித்துவம் அளிக்க ''தனி தேர்தல் வாக்குச் சாவடி'' ஏற்படுத்தும் நடைமுறை கொண்டு வரப்பட்டது.

### 1919 இந்திய அமைப்பு சட்டம் (1919)

இச்சட்டத்தை மான்டேகு - செம்ஸ்போர்ட் சீர்திருத்த சட்டமென்றும் அழைப்பார்கள் முதல் உலகப் போர் (1914-18) நடைபெற்ற சூழ்நிலையில் இந்தியர்களை போரில் ஆங்கிலேயருக்காக பங்கேற்க ஆணையிட்ட சந்தர்ப்பத்தில் இச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. செக்கரட்டரி ஆப் ஸ்டேட்டாகிருந்த மான்டேகு அவர் ஆங்கில பாராளுமன்றத்தில் 20-8-1917 அன்று வெளியிட்ட அறிவிப்பின் பின்னணியில் இச்சட்டம் உருவாயிற்று. மாண்டேகு அவர்கள் ''இந்தியர்களுக்கு படிப்படியாக பொருப்புகளை அரசாங்கம் அளிப்பதே ஆங்கில அரசின் நோக்கமாகும்'' என்று அறிவித்தார். இந்தியாவின் வைஸ்ராயாகிருந்த செம்ஸ்போர்டு அவர்கள் அரசியல் சீர்திருத்தங்களுக்கு குரல் எழுப்பினார். இதன் பலனாக 1919ல் இந்திய அமைப்புசட்டம் நடைமுறைக்கு வந்தது.

### இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. மையத்தில் இருசபை சாசனம் (கீழ்சபை) மற்றும் மாநிலங்களின் சபை (மேல்சபை) அமைக்கப்பட்டது.
2. பிராந்தியங்களில் 'இரு அரசுகள்' முறைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.
3. இந்தியாவுக்கு ஒரு ஹைகமிஷ்னர் நியமிக்கப்பட்டார்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

4. சுயாட்சியுள்ள உள்ளூர் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கு நம்பிக்கை அளிக்கப்பட்டது.
5. மைய பட்ஜெட்டிலிருந்து பிராந்தியங்களின் பட்ஜெட் வேறுபடுத்தப்பட்டது.
6. 'தனி தேர்தல் வாக்குச் சாவடி' ஏற்பாட்டை முஸ்லீம், சீக்கியர், ஆங்கிலோ இந்தியர் மற்றும் ஐரோப்பியர்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது.

### *1935 இந்திய அரசு சட்டம் :*

இந்தியாவின் அரசியல் சாசனம் அமைப்பதற்கு இந்த சட்டம் மிகவும் அடிப்படையானதாகும். அச்சட்டம் உருவுவாவதற்கு மோதிலால் நேரு அவர்கள் தலைமையில் தயாரானது. இது 1928ன் அறிக்கை முக்கியமாகும். அரசியல் சாசனம் ஏறக்குறைய அம்சங்கள் இச்சட்டத்தையே ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. இச்சட்டம் இந்தியாவுக்கு முழுமையான பொருப்புள்ள அரசு அமைப்பதற்கு வாய்ப்பு அளித்தது. இது பிரிட்டீஸ் இந்தியா பிராந்தியங்களுக்கு மட்டுமே அல்லாமல் நாட்டின் சுதேச சமஸ்தானங்களுக்கும் பொருந்துமாறு அம்சங்களை உட்கொண்டிருந்தது.

### *இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்*

1. பிரிட்டீஸ் பிராந்தியங்கள், சுதேசிய சமஸ்த்தானங்கள் மற்றும் ஆதரவு அரசர்களை உட்கொண்ட அகில இந்தியா அளவில் ஒன்றுபட்ட இந்தியாவை அமைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியது.
2. மைய அரசில் இரு அரசு முறை துவக்கப்பட்டது.
3. இந்தியாவின் ரிசர்வ் வங்கி துவங்குவதற்கு வாய்ப்பு அளித்தது.
4. பிராந்தியங்களில் 'இரு அரசு' முறையை தடை செய்து, பிராந்தியங்களுக்கு சுயாட்சி அளிக்கப்பட்டது.
5. இந்தியாவில் 'பெடரல் கோர்ட்' அமைப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்தியாவின் அரசியல் சாசனம் வளர்ச்சியின் வரலாற்றை குறிக்கும் வகையில் வெவ்வேறு கால கட்டங்களில் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சி களின் சட்ட வடிவங்களில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதை நாம் கிரகித்து அறிந்து கொள்ள வேண்டும். பிரிட்டீஸ் காலனி ஆதிக்கத்தில் இந்தியாவில் ஆட்சியை நடத்திய சூழ்நிலையிலேயே இச்சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டதால் ஆங்கிலேயரின் அனுகூலமான அம்சங்களை இச்சட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளது என்று இந்தியர் ஆங்கிலேயருக்கு எதிராக நடத்திய போராட்டங்களினால் உண்டான கலகங்களின் பயன்பாடுகள் இவற்றிலுள்ளன என்பதை நாம் கவனித்தறிய வேண்டிய சங்கதியாகும்.

## பயிற்சிகள்

### I. *கீழ்க்காணும் விடுப்பட்ட இடங்களை நிரப்புக :*

1. திவானி நீதிமன்றம் என்னும் மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்தியவர் ____________
2. மாவட்ட காவல் துறை கண்கணிப்பாளர் என்னும் பதவியை ஏற்படுத்தியவர் ____________

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

3. நிரந்தர ஜமிந்தார் முறையை வங்காளம் மற்றும் பிகாரின் பகுதிகளில் __________ ல் நடைமுறைப் படுத்தப்பட்டது.

4. அலேக்சான்டர் ரீட் நடைமுறைக்கு கொண்டு வந்து நிலவரி முறை __________

5. நவீன கல்வி முறைக்கு ஆதரவு அளித்த முதல் ஆங்கில அதிகாரி __________

6. ஒழுங்குமுறை சட்டம் __________ ல் நடைமுறைப் படுத்தப்பட்டது.

7. பிரத்தியோக தனிதேர்தல் வாக்குச்சாவடியை நடைமுறைப் படுத்தியவர் __________

## II. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி :

1. கிழக்கிந்திய கம்பெணியின் மூலம் நாட்டில் ஆங்கிலேயர் அமைத்த நீதித்துறையைப்பற்றி ஆய்வுசெய்க.
2. ஆங்கிலேயர்காலத்தில் போலிஸ் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் யாவை.
3. நிரந்தர ஜமின்தாரி முறை விவசாயிகள் கடனில் பிறந்து, கடனிலேயே சாவார்கள் என்று இருக்கிறது, எப்படி? விவரி.
4. இராயத் துவாரி முறை உட்கொண்ட முக்கிய அம்சங்கள் யாவை?
5. ஆங்கிலேயர் நிலவரிவசூல் முறையில் உண்டான விளைவுகள் யாவை?
6. ஆங்கில கல்வியின் மூலம் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
7. ஒழுங்குமுறை சட்டம் கொண்டுள்ள நிபந்தனைகள் யாவை?
8. 1858ல் இந்திய அரசு சட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?
9. 1935ன் இந்திய அரசின் சட்டம் ''இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை'' நிருபிக்கவும்.
10. 1919ன் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?

## III. செயல்பாடு :

1. ஆங்கில ஆட்சியில் சீர்திருத்தங்கள் மூலமாக தமக்குத் தேவையானவைகளை ஏற்படுத்திக் கொண்டனர் இவ்விஷயத்தைப் பற்றி விவாதம் நடத்துங்கள்.

## IV. செயல்பாடு :

1. ஆசிரியரின் உதவியுடன் இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள சட்டங்கள் அல்லாமல் இன்னும் ஆங்கிலேயர் நடைமுறைப்படுத்திய சட்டங்களை உட்கொண்ட விவரங்களை சேகரியுங்கள்.

* * * *

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

# அத்தியாயம் 4
# கருநாடகத்தில் ஆங்கிலேயே ஆட்சிக்கு எதிர்ப்பு

## இப்பாடத்தை கற்றபின் நீங்கள் அறிவன

- ஐதர்அலி மற்றும் திப்புசுல்தான்
- ஆங்கிலேயர் - மைசூர் போர்கள்
- தோண்டியா வாக்
- கித்தூரின் எழுச்சி - சென்னம்மா - சங்கொள்ளி ராயண்ணா
- அமர சுள்ளியா, எழுச்சி
- சூருப்பூரு எழுச்சி
- ஹலகலி வேடர்களின் கலகம்

இன்றைய கருநாடகம் ஒன்றுபடுவதற்கு முன்பு பலவித அரசியல் வர்க்கத்தினரிடம் பகிர்ந்து போயிருந்தது. 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயர்கள் அரசியில் அதிகாரத்தை செலுத்தும் போதே வியாபாரம் மற்றும் விவசாய துறையில் மக்களை தங்களுடைய நன்மைக்காக துன்புறுத்த தொடங்கினார்கள். இந்த துன்பங்கள் கருநாடகவையும் சேர்த்து பல பகுதிகளை சீர்குலைத்தது. இந்திய அரசர்கள் அரசியல் நிலையற்ற தன்மையை உணர்ந்தனர். இவ்வாறு ஆரம்பத்தில் ஜமீன்தார்கள் சமஸ்தானத்தின் அரசர் போன்றோர் ஒற்றுமையுடன் இருக்க எவ்வித முயற்சியும் செய்யாமல். ஒவ்வொருவராகவே தனித்தனியாக ஆங்கிலேயரை எதிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்நிலையில் மைசூர் அரசின் அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி கொண்ட ஐதர்அலி, அவனுடைய மகன் திப்புசுல்தான். ஆங்கிலேயரை எதிர்த்து தென்னிந்தியாவில் மிகப்பெரிய எதிர்ப்பை தெரிவித்தனர். அரசியல் காரணமாக உருவான 1761-1799க்கு இடையேயான காலகட்டத்தில் இவர்களுடைய முயற்சி சரித்திரத்தில் ஒரு முக்கிய வருடமாகும். இவர்களுடைய முயற்சி ஆங்கிலேய எதிர்ப்பு எழுச்சிக்கு ஆரம்ப அத்தியாயமானது.

### ஐதர் அலி மற்றும் திப்புசுல்தான் :

இந்திய வரலாற்றில் 18ம் நூற்றாண்டு 'அரசியல் பிரச்சனைகளின் காலம் என்று அழைக்கப்படுகிறது இதற்கு பல காரணங்கள் உண்டு. மொகலாயா பேரரசன் ஔரங்கசீப்பின் மரணம் 1707ல் நிகழ்ந்தது. இதற்கு முககிய காரணமாகும். அவனின் மரணம் மொகலாயாரின் அரசியல் செல்வாக்கினை குறைத்தது. இதனால் தென்னிந்தியாவில் அவர்களுடைய அரசியில் நிலை தாழ்ந்தது. கருநாடகப் பகுதியில் அதிகாரத்திற்கான சண்டை நடந்தது. இதற்கு முன்பு 1704 நடைபெற்ற சிக்க தேவராஜருடைய மரணம், மைசூர் அரசின் அரசியல் வளர்ச்சியின் மீது தீயவிளைவுகளை ஏற்படுத்தியது. இவரின் மரணத்தினால் வாரிசு உரிமைப் பிரச்சனை தலை தூக்கியது, நிர்வாகம் சீர் குலைந்தது. இந்த நிகழ்ச்சிகள் அந்த காலத்தில் மைசூர் அரசியலை மங்கச் செய்தது இவ்வாறு தடுமாற்றத்துடன் இருந்த மைசூர் மற்றும் கருநாடக மாநிலத்தின் நிலப்படத்தில் ஐதர்அலி, அரசியல் ரீதியாக வளர்ச்சி பெற்றான்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

**ஐதர் அலி :**

இவன் 18ம் நூற்றாண்டின் புகழ்பெற்றவன். ஒரு சாதாரண போர்வீரனாக மைசூர் அரசில் வேலைக்கு சேர்ந்த ஒரு நபர் தன்னுடைய சணக்கியதனத்தால், மைசூரில் அரசியல் வளர்ச்சியை கூர்ந்து கவனித்து கொண்டிருந்தவனுக்கு, தேவனஹள்ளி முற்றுகை சம்பவம். மற்றும் ஆற்காடு நிஜாம் சம்பந்தபட்ட போர் நிகழ்ச்சியால் தன்னை உயர்த்தி கொண்டான். போர் வீரர்களை தன் வசபடுத்தி கொள்வதில் வெற்றியடைந்தான். வெகு வேகாமாக நவாப் ஐதர்அலிகான் என்று பெயர் பெற்றான். ஆயுதங்கள் பயன்படுத்துவதிலும், சோதிப்பதிலும் புகழ் பெற்றான். மற்றும் சுறுசுறுப்பான போர் நிகழ்ச்சி மூலம் தளவாய்களின் பலத்தை குறைத்தான் மற்றும் அரசனாக இருந்த கிருஷ்ணராஜ உடையாரை ஒதுக்கி அதிகாரத்தின் மீது தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்தினான். மராட்டியர்கள், ஐதராபாத்தின் நிஜாம் மற்றும் ஆற்காட்டின் நவாப்புகள் தம்முடைய நிலைக்காக மற்றும் வளர்ச்சிக்காக போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தை தம்முடைய அரசியல் செல்வாக்கு பெறுவதற்கு ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுகாரர்கள் பயன்படுத்த தொடங்கினார்கள் இந்த நிலையில் ஐதர்அலியின் காலகட்டத்தில் நிகழ்ந்த ஆங்கிலேய-மைசூர் போர்கள் மற்றும் அதற்கு ஊக்கம் அளித்த அரசியல் வளர்ச்சியை காண்போம்.



ஐதர் அலி

©KTBS Not to be republished

**முதலாம் ஆங்கிலேய - மைசூர் போர்:** கி.பி. 1767ல் ஆரம்பமான ஆங்கிலேயர் - மைசூர் போர் 1769ல் முடிவானது. தென்னிந்தியாவில் ஐதர் அலி பெற்று வந்த அரசியல் செல்வாக்கு ஆங்கிலேயர், ஐதராபாத்தின் நிஜாம் மற்றும் மராட்டியரின் அரசியல் பொறாமை ஏற்பட்டது. இதனால் ஆங்கிலேயர்கள் தம்முடைய சாம்ராஜிய வளர்சிக்கு தடையாக இருந்த ஐதர்அலியை அரசியல்ரீதியாக ஒழிக்க தந்திரங்களை செய்ய ஆரம்பித்தனர். மாராட்டியர்களின் முற்றுகையினால் அரசியல் மற்றும் பொருளாதார நஷ்டத்தை அனுபவித்த ஐதர் அலி மாராட்டியர்கள் மற்றும் நிஜாமை தன் வசம் இழுக்க முயற்சி செய்தான் ஆனாலும் முயற்சி தோல்வியடைந்தது.

ஐதர் அலிக்கு எதிராக ஆங்கிலேயர், மாராட்டியர்கள், மற்றும் நிஜாமுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனால் ஐதர்அலி தன்னுடைய சாணக்கிய ராஜசந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் தனக்கு எதிராக கூட்டணி சர்ந்திருந்தவரை பிரித்து மாராட்டியர்கள் மற்றும் நிஜாமை ஆங்கிலேயருக்கு எதிராக தூண்டி விடுவதில் வெற்றி கண்டான். இதன் நடுவே ஆற்காட்டில் அரசியல் பிரச்சனைகள் தோன்றின. 1767ல் ஐதர்அலி மற்றும் நிஜாம் ஆங்கிலேயரின் ஆட்சி குட்பட்டிருந்த ஆற்காட்டை முற்றுகை இட்டனர். இதனால் போர் மூண்டது. திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, ஆம்பூர் முதலிய இடங்களில் கலகங்கள் மூண்டன. இந்த வேளையில் ஐதர்அலி மின்னல் வேகத்தில் செயல்பட்டான். ஆங்கிலேயர்களின் பல இடங்களை கைப்பற்றினான். ஐதர்அலி தற்காலிகமாக பின்னடைவு அடைந்தான். மும்பையின் ஆங்கிலப்படை போரில் இறங்கியது. ஐதர் அலி அந்த போரை தன்னுடைய இழுக்கு என்று கருதி செயலை முன் நடத்தினான். 1769க்கு அவனுடைய படைகள்



www.textbookpdf.in

மதராஸை அடைந்தது. ஆங்கிலேயரை நடுங்கச் செய்தது. தவிர்க்க முடியாமல் ஆங்கிலேயர்கள் அவருடன் அமைதி பேச்சு வார்த்தையின் மூலம் ‘மதராஸ்’ ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். முதலாம் ஆங்கிலேயர் - மைசூர் போர் 1769ல் முடிவடைந்தது.

***இரண்டாம் ஆங்கிலேயர் - மைசூர் போர் (1780-1784)*** மதராஸ் ஒப்பந்தம் தென்னிந்தியாவில் தற்காலிகமாக அரசியல் வளர்ச்சியை தடைசெய்திருந்தது. ஆனால் ஆங்கிலேயர்கள் மதராஸ் ஒப்பந்தின் நிபந்தனைகளை மீற முயன்றனர், மராட்டிய மாதவராயனின் தலைமையில் படைகளை முன் நடத்தி ஸ்ரீரங்கப்பட்டனத்தின்பக்கம் முன் சென்றபோது, ஐதர்அலி ஆங்கிலேயர்களின் உதவியைப்பெற விரும்பினான். ஆனால் ஆங்கிலேயர்கள் இதனை நிராகரித்து மதராஸ் ஒப்பந்தத்திற் எதிராக நடந்து கொண்டனர். மாகே பிரெஞ்சுகாரர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. அது ஐதர் அலியின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்தது. மாகேயை ஆங்கிலேயர்கள் வசப்படுத்திக் கொண்டது இரண்டாம் மைசூர் போருக்கு காரணமாயிற்று 1780 ஜூலையில் இரண்டாம் மைசூர் போர் ஆரம்பம் ஆனது. போரின் ஆரம்பத்தில் ஐதர்அலி முன்னேறினான். கருநாடகப் பகுதியின் அநேக கோட்டைகளை வசப்படுத்தி கொண்டான். காஞ்சிபுரமும் வசமானது. கோரமண்டலத்தின் கரைவரை தனது படையை முன்னே செலுத்தினன். இது மதராஸ் ஆங்கில படை அதிகாரிகளுக்கு நடுக்கத்தை உண்டாக்கியது. ஐதர்அலி ஆற்காட்டின் மீது முற்றுகை இட்டு அதனை வசப்படுதிக் கொண்டான். சர்ஐயர்கூட்டின் தலைமையில் ஆங்கில படை மீண்டும் தாயார் ஆனது. ஐதர்அலி அந்த வேலையில் வேலூர் மற்றும் வந்தவாசியை முற்றுகை இடுவதாக பயமுறுத்தினான்.

ஐதர்அலியின் போர் படையை சர்ஐகூட் பாண்டிச்சேரி வரை பின் தொடர்ந்தான், பிரெஞ்சுகாரர்கள் ஐதர்அலிக்கு ஆங்கிலேயரை எதிர்க்க நிராகரித்தனர். ஐதர்அலி போர் முறையை மாற்றினான். ஆங்கிலேயரின் வசத்திலிருந்த பகுதிகளை முற்றுகையிட்டு மிகுந்த பொன்னும்பொருளும், மற்றும் யுத்த தடவாளங்களை கைப்பற்றினான். 1781ல் போரடோநோவோ என்ற இடத்தில் நடந்த போதில் ஐதர்அலி தோற்றுப்போனான். இது யுத்த நிலையை மாற்றியது. இது ஆங்கிலேயருக்கு தைரியத்தை கொடுத்தது. அதன்பிறகு புலிக்கட்டு மற்றும் சோலிங்கர் போரில் பொருளாதார இழப்பை சந்தித்தான். இந்த நேரத்தில் ஆங்கிலேயர்கள் சால்பாய் ஒப்பபந்தத்திற்கு கையெழுத்து இடுவதன் மூலம் ஐதர்அலியின் கூட்டணியில் இருந்து மராட்டியர்கள் மற்றும் நிஜாமை தங்கள் பக்கம் இழுப்பதால் வெற்றிகண்டனர். போரின் இடையே ஐதர்அலி 1782 டிசம்பர் 7ல் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தான். அவனுடைய மகன் திப்புசுல்தான் போரை முன் நடத்தினான்.

ஐதர்அலியின் மரணத்தின் போது மலபார் பகுதியில் நடந்த போரில் திப்புசுல்தான் பங்கேற்றிருந்தான். திப்புசுல்தான் இல்லாத வேளையை பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் பிதனூர் மற்றும் மங்களூரை வசப்படுத்திக் கொள்ள முயன்றனர். திருவாங்கூர், கோழிக்கோடு மற்றும் மலபாரின் அனேக அரசர்களை திப்புசுல்தானுக்கு எதிராக செயல்பட தூண்டினார்கள். இவ்வாறு திப்புசுல்தான் மங்களூர் மற்றும் கடற்கரைப் பகுதிக்கு சென்று அங்கிருந்த ஆங்கிலேயர்களை வென்றான். இறுதியாக 1784ல் மங்களூர் ஒப்பந்தத்தின் மூலம் இரண்டாம் ஆங்கிலேயர்-மைசூர் போர் முடிவிற்கு வந்தது.


www.textbookpdf.in

## திப்புசுல்தான் :


திப்புசுல்தான்

திப்புசுல்தான் ஆங்கிலேயரை தொடர்ந்து எதிர்த்து வந்த ஒரே ஒரு அரசன். தன்னுடைய தந்தையின் மரணத்திற்கு பிறகு மைசூர் அரசின் அதிபதியானான். தன்னுடைய நீதியின் மூலம் இந்திய மாநிலங்களை அபகரித்து கொண்டிருந்த ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு விரட்டுவதே தனது முக்கிய பணி என்று நினைத்திருந்தான். தன்னுடைய 17 வருட ஆட்சியில் தொடர்ந்து ஆங்கிலேயருடன் போராடினான். ஆங்கிலேயரின் பலம், தந்திரம் மற்றும் சாணகியதனத்தை நன்றாக புரிந்து கொண்டான். ஆங்கிலேயரின் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டால் அவர்களின் அரசியல் ஆதிக்கம் குறையும் என்று அறிந்திருந்தான். ஆங்கிலேயர்களின் எதிரிகளை ஒன்றுபடுத்தல் மற்றும் அவர்களின் உதவியை பெறும் முயற்சியில் ஈடுபட்டான் இவை ஆங்கிலேயருக்கு அவனின் மீது விரோதமும், கோபத்தையும் உண்டு பண்ணியது.

### *இதனை அறிக*

*18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் விரிவாக்கத்தை தடுக்கும் முயற்சியில் இருந்து ஐதர் அலி மற்றும் திப்புசுல்தன் மாறுபட்டு காண்கிறார்கள். இவர்கள் ஐரோப்பியரை, சம்பிரதாயம் மற்றும் யுத்த ஆயுதங்களினால் ஒடுக்க முடியும் என அறிந்தருந்தனர். பிரெஞ்சுகாரர்களின் உதவியுடன் ஐதர்அலி படையை புதுப்பிக்க முயற்சித்தான். ஐரோப்பியர்களின் படையைப் போன்று ஒழுக்கமாக உடற்பயிற்சி செய்தல், ஆயுதங்களை பயன்படுத்தும் படைகள் மைசூரில் படையில் இருந்தன. ஐதர்அலி மற்றும் திப்புசுல்தான் இந்தியாவில் முதன் முறையாக போரில் ராகெட்டை பயன்படுத்தினார்கள். படையை புதுப்பித்ததோடு, நிரம்பிய அரசின் கரூவூலமும் ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு தடைக்கு முக்கியம் என்று கருதினார்கள். ஐதர் அலியின் கண் முன்னே கருநாடகப் பகுதியில் இருந்த நவாப்புகள் திவாலாகிப் போனார்கள். ஆகையால் ஐதர்அலி மற்றும் திப்புசுல்தான் பொருளாதாரத்தை மேம்படுத்த பலவித முறைகளை உருவாக்கினார்கள். சந்தனம் மற்றும் புகையிலை மற்றும் பல பொருட்களை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பிரெஞ்சு வல்லுநர்களை அழைத்து மைசூரின் சம்பிரதாய் கைவினைப் பொருட்களை அதிகரித்து வெளிநாட்டு சந்தையில் வியாபாரம் செய்யும் யோசனையில் இருந்தனர்.*

**மூன்றாம் ஆங்கிலேயர் - மைசூர் போர்** இந்த போருக்கு காரணம் என்றால் திருவாங்கூர் அரசாங்கத்திற்கு சம்பந்தப்பட்டது. அந்த மாநிலத்தின் அரசன் பக்கத்து கொச்சி சமஸ்த்தானத்தில் ஆங்கிலேயரின் ஒத்துழைப்போடு கோட்டையை நிறுவினான். மற்றும் அவன் டச்சுக்காரர்களிடமிருந்து, ஆயாக் கோட்டை, சாவனூர் கோட்டையை பெற்றுக்கொண்டான். திப்புசுல்தான் இதனை தீவிரமாக எதிர்த்தான். ஆங்கிலேயர்கள் மங்களூர் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறினார்கள் என்று எண்ணினான். ஆங்கிலேயர் ஜெனரல்

©KTBS Not to be republished

மெடோஸின் தலைமையில் கார்வார், கோயமுத்தூர், திண்டுக்கல், முதலியவற்றை வசப்படுத்தி கொண்டனர். இதற்கு எதிராக திப்புசுல்தான் பாராமகல் பகுதியை முற்றுகையிட்டு சத்தியமங்கலத்தை கைப்பற்றினான். திருச்சிராப் பள்ளியை முற்றுகையிட்டு அதனை கைப்பற்றும் வகையில் தோல்வியடைந்தான். இந்த சமயத்தில் லார்டுகாரண்வாலிஸ் பிரபு ஆங்கிலபடையின் தலைமையை ஏற்றுக்கொண்டான். இது போரின் நிலையை மாற்றியது

ஆங்கிலப்படை காரண்வாலியின் தலைமையில் கோலார் மற்றும் ஒசக் கோட்டையை வசப்படுத்திக் கொண்டு பெங்களூர் நோக்கி சென்று பெங்களூர் கோட்டையை தகர்த்தது. லார்டு காரண்வாலிஸ் பிரபு திப்புசுல்தானின் அழிவிற்காக நிஜாம், மற்றும் மராட்டியர்களின் உதவியை வேண்டினான். நிஜாம் மற்றும் மராட்டியர்களின் கூட்டுப்படை ஆங்கிலேயருடன் சேர்ந்தவுடன் போர் திருப்பம் அடைந்தது. மராட்டியர்கள் சவனர், கஜேந்திரகடா, லக்ஷமேஸ்ஷ, ஊப்ளி முதலிய பகுதிகளை வசப்படுத்தி கொண்டனர்.

1792ல் இந்த கூட்டுப் படை ஒன்றாகி கோட்டைகளை வசப்படுத்திக் கொண்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தை நோக்கி சென்றது. இரவு வேளையில் கோட்டை தகர்க்கப்பட்டது. இதனால் பதறிய திப்புசுல்தான் ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முடிவெடுத்தான். இது அவனுக்கு கட்டாயமானது. 1792ல் ஸ்ரீரங்கப்பட்டன ஒப்பந்தத்தில் வேறு வழியின்றி திப்புசுல்தான் கையெழுத்திட்டான். இதனால் போர் முடிவுக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தினால் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் இருந்த ஆங்கில கூட்டணிப் படை பின்வாங்கப்பட்டது.

### நான்காம் ஆங்கிலேயர் - மைசூர் போர்

திப்புசுல்தானை அழிக்க ஆங்கிலேயர்கள் மூன்றாம் ஆங்கிலேயர் - மைசூர்போரின் ஒப்பந்தத்தில் சில ஏற்க முடியாத விதிகள் இருக்கும்படி பார்த்து கொண்டார்கள். அந்த விதிகள் யாவை எனில் திப்புசுல்தான் தன்னுடைய பாதி ஆட்சிப் பகுதியை விட்டு கொடுப்பது. மூன்று கோடி ரூபாயை போர் நஷ்ட தொகையாக கொடுக்க வேண்டும். போர் நஷ்டதொகைக்கு பிணையாக தனது இரண்டு மகன்களை பிணைக் கைதிகளாக இருப்பது. மற்றும் போரின் போது சிறைபிடிக்கப்பட்ட போர்வீரர்களை விடுதலை செய்வது திப்புசுல்தான் மூன்றாம் ஆங்கிலயேர்-மைசூர் போரின் தோல்வியை தானே பொறுப்பேற்று முக்கிய சவால் என்று தீர்மானித்தான். ஒப்பந்தத்தின்படி ஆங்கிலேயருக்கு செலுத்த வேணடிய தொகையை செலுத்தி தனது இரண்டு மகன்களை விடுவித்தான்.

திப்பு ஆங்கிலேயர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த மலையாளம் பேசும் நிலப்பகுதி நியாயமாக தனக்கு சேர வேண்டும் என வாதித்தான். ஆனால் ஆங்கிலேயர்கள் இந்த வாதத்தை ஏற்கவில்லை.லார்டு வெல்லெஸ்லி பிரபு 1798ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். திப்புசுல்தானுக்கு எதிராக அரசியலில் செயல்கள் அதிகமானது. திப்புசுல்தான் இந்திய அரசர்களின் கூட்டணியை தன் பக்கம் ஈர்க்க செய்த முயற்சி மற்றும் தனது கடும் எதிரிகளான பிரெஞ்சுகாரர்களுடன் திப்பு சுல்தான் கொண்ட உறவு லார்டு வெல்லெஸ்லி பிரபு திப்பு சுல்தானின் விசயத்தில் மேலும் கோபத்தை ஏற்படுத்தியது. பிரெஞ்சுகாரர்களின் உதவியைகேட்டு

©KTBS Not to be republished



www.textbookpdf.in

தூதுவர்களை அனுப்பியது ஆங்கிலேயருக்கு விருப்பமில்லை. திப்புசுல்தான் மற்றும் பிரெஞ்சுகாரர்களின் இடையேயுள்ள நட்பு பின்பு தமது ஆட்சிக்கு இடையூறு ஏற்படும் என்று எண்ணினார்கள். தனக்கு ஏற்பு அல்லாத விதிமுறைகளை எதிர்ப்பு தெரிவித்ததால். நான்காம் ஆங்கிலேயர் - மைசூர் போர் ஆரம்பமானது.

1799ல் போர் ஆரம்பமானது வலுவான கோட்டையை தகர்க்கப்பட்டது. இரண்டு படைகளும் வீராவேசத்துடன் போரிட்டனர்.

திப்புசுல்தான் தனது படையை ஊக்குவித்தபடி போராடி 1799ல் மே 4ம் தேதி வீரமரணம் அடைந்தான். திப்புசுல்தானின் மரணம் ஆங்கிலேயருக்கு (மொத்த) முழு இந்தியாவையே வென்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. பிறகு ஆங்கிலேயர்கள் அவனுடைய ஆட்சிகுட்பட்ட பகுதியை மராட்டியர்கள் மற்றும் நிஜாம்களுக்கு பகிர்ந்து கொடுத்தனர். ஒரு சிறிய பூகோள பகுதியை உடையார் அரசப்பரம்பரையின் பிரதிநிதிக்கு மாற்றப்பட்டு. இந்தப் பகுதியே பின்பு மைசூர் சமஸ்தானம் எனப்பட்டது.

### திப்புவுக்குப்பிறகு மைசூரு




### தோண்டியா வாக் (1800)

நவின கருநாடக வரலாற்றில் திப்புசுல்தானுக்கு பிறகு முக்கியமாக 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயே ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள், எழுச்சிகள் முக்கிய இடத்தை பெற்றுக் கொண்டன. இவைகள் ஆயுத போராட்டங்களாக இருந்தன. இதில் தோண்டியாவாக்கின் தலைமையில் நடைபெற்ற ஆயுத போராட்டம் முக்கியமானதாகும்.

தோண்டியா வாக் : தோன்டியா வாக் சென்னகிரியின் மராட்டிய குடும்பத்தில் பிறந்தான். அவன் தன்னுடைய பராக்கிரமத்தினால் மக்கள் அவனை 'வாக்' என்று அழைத்தனர். மராட்டியத்தில் 'வாக்' என்றால் புலி, கி.பி. 1789ல் மைசூரின் ஐதர்அலியின்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

படையில் குதிரைப் படைவீரனாய் இருந்து அதன்பிறகு படைத்தளபதியானான்.

பிறகு தானே சொந்தமாக ஒரு படையை உருவாக்கி திப்புசுல்தானின் படையில் சேவை செய்தான். திப்புசுல்தானிடம் ஏற்பட்ட மனத்தாங்கலால் சிறைசெல்ல நேரிட்டது. நான்காம் ஆங்கிலேய போருக்குப் பிறகு ஆங்கிலேயர் இவரை சிறையிலிருந்து விடுவித்தனர். பிறகு இவன் தானே ஒரு படையை உருவாக்கி, சிறுசிறு போர்களை செய்து வந்தான்.

அவனுடைய படை பெரியதாக இல்லை. படையில் இருந்தவர்கள் திப்புசுல்தானின் படையில் இருந்த அதிருப்தி போர் வீரர்கள். அதிகாரத்திலிருந்து விலகப்பட்ட பாளையகாரர்கள், முதலியவர்களை ஒன்று சேர்த்து ஒரு படையை உருவாக்கி எழுச்சி கொடியை பறக்கவிட்டான். சிமொகா, மற்றும் பிதனூரின் கோட்டைகளை வசப்படுத்திக் கொண்டான். சித்ரதுர்கா கோட்டையை வசப்படுத்திக் கொள்வதில் தோல்வியடைந்தான். கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு வெல்லெஸ்லி பிரபு எழுச்சியை முறியடிக்க ஆரம்பித்தான்.

கர்னல் ஜேம்ஸ் சேவன்ஸன் மற்றும் கர்னல் டார்லிம்பர் தலைமையின் ஆங்கிலப்படை இவ்வாறு செயல்படத் தொடங்கியது. தோண்டியனின் கட்டுப்பாட்டில் இருந்த, சிமொகா, ஒன்னாலி, ஹரிஹர, முதலியவற்றின் மீது தாக்குதல் நடத்தியது. தோண்டிவாக் தனது நிலையில் இருந்து தாழ்ந்தான். சிகாரிப்புரத்தை ஆங்கிலேயர் வசப்படுத்தி கொண்ட தருவாயில் தோண்டிவாக் நிஜாமின் கைப்பிடியில் இருந்த குத்தி பக்கம் ஓடிப்போனான் அப்பொழுது நிஜாம் குத்தியை முற்றுகையிடவேறுவழியின்றி தோண்டியாவாக் மராட்டிய மாநிலத்திற்கு ஓடிப்போனான். மராட்டியப்படை அவனை தோல்வியுறச் செய்து அவனுடைய ஆயுதங்கள், ஒட்டகம் மற்றும் யானைகளை வசப்படுத்திக் கொண்டாலும் தைரியத்தை இழக்காத தோண்டியாவாக் தன்னுடைய போராட்டத்தை தொடர்ந்தான்.

அரிஹரா, சித்ரதுர்கா, சிகாரிப்புரா, சவனூரு, ராணிபென்னூர், கித்தூரு மற்றும் லோண்டா இவ்வாறு பரந்த நிலப்பகுதியில் ஆங்கிலப்படை அவனை பின் தொடர்ந்து. சிரஹட்டியை, தங்களுடைய சொந்தத்திற்கு எடுத்துக்கொண்ட ஆங்கிலேயர் படை தோண்டியாவாக்கின் படைவீரர்கள் பலபேரை கொன்று குவித்தனர். பல அதிருப்தி பாளையகாரர்கள் தோண்டியாவாக்கை உற்சாகப்படுத்தினர். மலபாரின் மாகேயில் இருந்த பிரெஞ்சுகாரர்கள் அவனுக்கு உதவிக்கரம் கொடுத்தார்கள்.

### தோண்டியாவாக்கின் முடிவு :

லார்டு வெல்லெஸ்லி பிரபு தோண்டியாவாக்கை அழிக்க முடிவு செய்தான். தேசிய சமஸ்தானங்களின் அரசர்களின் உதவியை ஆங்கிலேயர்கள் வேண்டினர். சிகாரிபுரத்தின் கோட்டையை மீண்டும் வெற்றிபெற்ற தோண்டிவாக்கின் படையை ஆங்கிலப்படை சிதறடித்து. துங்கபத்ரா மற்றும் மலப்பிரபா நதிகளின் நடுவே உள்ளே அகன் நிலப்பகுதியில் எந்தவித பயமுமின்றி வந்து போய் கொண்டிருந்து தோண்டிவாக் படையை தோல்வியடை செய்ய ஆங்கிலேயர்கள முயற்சித்தனர். எல்லா திசைகளிலிருந்தும் அவனை ஆங்கிலப்படை சுற்றி வளைத்தது. ராய்ச்சூரிலிருந்து புறப்பட்ட அவனை பின் தொடர்ந்தது. நிஜாம், மற்றும் மராட்டியர்களின் படைகள்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

நடுவே அகப்பட்ட தோண்டிவாக்கின் தலைமையின் படையின் மீது ஆங்கிலேயர்கள் யாபலபெரவி என்ற இடத்தில் போர்நடத்தி கோனேகல் என்ற இடத்தில் அவனை கொலை செய்தனர். தம்முடைய தலைவனின் மரணத்திற்கு பிறகு சின்னபின்னமாக படைகள் சிதறினர். எழுச்சிகாரர்களிடமிருந்து ஏராளமான வெடிமருந்துகளும் மற்றும் ஆயுதங்களும் ஆங்கிலேயர்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

## *கித்தூரின் எழுச்சி வீர ராணி சென்னம்மா: (1824)*



சென்னம்மா

**சென்னம்மா :** ஆங்கிலேயர் தம்முடைய ஆட்சிக்கு எதிரான ஹைதர்அலியின் இடையில் உள்ள ஊர் கித்தூர் சமஸத்தானத்தின் மல்லசர்ஜனின் மரணத்திற்கு பிறகு சென்னம்மா கித்தூரின் ஆட்சியில் அதிக கவனம் செலுத்த தொடங்கினாள். அவனின் பெரிய மகன் சிவலிங்கருத்ரா சர்ஜா கித்தூரின் ஆட்சியை நிர்வாகிக்க ஆரம்பித்தான். ஆனால் அவனுடைய உடல்நிலையின் காரணமாக சென்னம்மா உண்மையான ஆட்சிசெய்பவளாக இருந்தாள். சிவலிங்கருத்ர சர்ஜா மராட்டியர்களின் போரில் ஆங்கிலேயருக்கு உதவி செய்தான். இதனால் ஆங்கிலேயர்கள் அந்த சமஸ்தானத்தை வம்ச பாரம்பரையாக அவனுக்கு கொடுத்து பின்பு வருட காணிக்கையாக அவன் செலுத்த வேண்டியிருந்தது. இது தாமஸ்மன்றோவின் காலத்தில் நடைமுறைப்படுத்த பட்டது. சிலவிங்க ருத்ரசர்ஜனின் மரணத்திற்கு பிறகு சிவலிங்கப்பா என்ற சிறுவனை தத்து பெற்று சென்னம்மா ஆட்சியை தொடர்ந்தாள். தியாக்கரே, அப்பொழுது தார்வாடாவின் கலெக்டர் மற்றும் அரசியல் தூதுவனாக இருந்தான். அவன் பாம்பாயின் கவர்னருக்கு தத்து பற்றி அறிக்கை கொடுத்து தத்து குழந்தைகளுக்கு அதிகாரம் கொடுப்பதை நிராகரித்தான்.

கித்தூரின் கருவூலம், கோட்டை கொத்தளங்களின் பாதுகாப்பை தனது வசத்திற்கு எடுத்துக்கொண்டான். சென்னம்மா தியாக்கரின் இந்த முயற்சி யை தோல்வியடைச் செய்ய போர் தவிர்க்க முடியாதது என்று சென்னம்மா நினைத்தாள். கித்தூரின் படை ஆங்கிலப்படைமீது தாக்கத் தொடங்கியது. இந்த தாக்குதலில் தியாக்கரே குண்டிற்கு பலியானான். பல ஆங்கிலப்டை வீரர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

கித்தூரை வசப்படுத்தி கொள்ள வேண்டும் என்ற திடமான முடிவால் ஆங்கிலேயர்கள் மேலும் தம்மை தயார் படுதிக்கொண்டார்கள். லெப்டினட் கர்னல் டீக்கின் தலைமையில் ஆங்கில்பபடை கித்தூரை முற்றுகைஇட்டது. மூன்று நாட்கள் நடைபெற்ற கடுமையான போரில் ஆங்கிலப் படையிடமிருந்து தப்பித்துக் கொண்ட சென்னம்மா சிறை பிடிக்கப்பட்டாள். கித்தூரு ஆங்கிலேயரின் வசமானது சென்னம்மா மற்றவர்களையும் பயலஒங்கலா கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர். சென்னம்மா மரணம் அடைந்தாலும் இன்றைக்கும் அவள் முன்னோடியாக விளங்குகிறாள்.

©KTBS Not to be republished

## *சங்கொள்ளி ராயண்ணா (1829-30)*



சங்கொள்ளி ராயண்ணா

கித்தூர் சென்னம்மாவுடன் சங்கொள்ளி ராயண்ணாவின் பெயர் மறக்க முடியாது. மற்றும் முன்னோடியாக ராயண்ணா போர்வீரன். விடுதலைக்காக போராடுவது தன்னுடைய முகியமான வேலை என்று நினைத்தான். சங்கொள்ளி பெலகாவி மாவட்டத்தின் சம்பகாவி தாலுக்காவில் இருந்தது. இவனுடைய குடும்பத்தார் பரம்பரையாக படைவீரர்களாக சேவை செய்து வந்தவர்கள். ராயண்ணா கித்தூரில் போரில் சென்னமாவுடன் ஆங்கிலேயரை எதிர்த்து போராடினான். போரில் சிறைகைதியாக கைதுசெய்யபட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டான். இவனைப்பற்றி செவிவழிச்செய்திகள் உண்டு. அவன் போர்வீரர்களை ஒன்று கூட்டி விடுதலைப்பற்றி கூறி செல்வாக்கு பெற்றான். முக்கியமான நிலைப்பகுதியில் இரகசிய சபைகளை நடத்துவதின் மூலம் அடுத்த திட்டங்களை தீட்டினான். உடனடியான அவனது உத்தேசம் எண்ணவென்றால் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முக்கிய இடமாக இருந்த தாலூக்கா அலுவலகம் மற்றும் கருவூலத்தை கொள்ளையடிப்பது முதலில் நந்துகடா அடுத்து கானாபுர, அடுத்து சம்புகாவி அவனின் செயல் இடங்களானது. அவனின் படைவீரர்களின் எண்ணிக்கை 500 பேர் இருந்தனர். ஆங்கிலேயரை படைக்கு உதவி செய்து வந்த கிராமத்தார் அவனுடைய கோபத்திற்கு ஆளானார்கள்.

ஆங்கிலேயர் ராயண்ணன் சென்ண்மாவின் உதவியுடன் செயல்படுகிறான் என்று அறிந்தனர். இவ்வாறு சென்னம்மாவை பயலுஒங்கலாவில் இருந்து குசுகல்லின் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டாள். ராயண்ணனை சிறைபிடிக்க சூழ்ச்சி செய்தனர். சென்னம்மாவை எதிர்த்த தேசாய்களை தூண்டிவிட்டனர். அவல்தாரானாக இருந்த கிருஷ்ணராயன் என்பவன் இந்த சூழ்ச்சிக்கு கை கோர்த்தான். சூழ்ச்சிக்கு பலியான ராயண்ணனை ஆங்கில்பபடை கைது செய்து தார்வாடாவிற்கு தந்தது. அவனின் கைதிற்கு பிறகு அவனுடைய போர் வீரர்கள் சரணடைந்தார்கள். ராயண்ணனை முகிய குற்றவாளி என்று அறிவித்து 1831 ஜனவரி 26 அன்று நந்தகடாவில் தூக்கிலிட்டனர். அவனுடைய அநேக தொண்டர்கள் ஆயுள்தண்டனைக்கு ஆளானார்கள். சங்கொள்ளி ராயண்ணனின் வாழ்க்கை மற்றும் நாட்டுப் பற்று சொல்லும் நாட்டுப்புறப் பாடல்கள் உண்டு.

## *அமர சுள்ளியா எழுச்சி :*

மூலம் விவசாய புரட்சி : இதன் பின்னணியை 1835-37 வருடத்தில் கடற்கரை மற்றும் குடகுப் பகுதியில் கண்டு வந்த போராட்ட்ங்களில் காணலாம். குடகின் ஆட்சியை நடத்தி வந்த ஹலேரி அரசவம்சத்தின் சிக்க வீரராஜேந்திரனை ஆங்கிலேயர்கள் 1834ல் பதவி இறக்கம் செய்து பெங்களூரின் மூலம் வேலூருக்கும் பின்பு காசிக்கு கொண்டு சென்றனர். அவனது பதவி பறிப்பு குடகில் அரசியல் வெறுப்பை ஏற்படுத்தியது. இதனால் குடகில் சுவாமி அபராம்பர கல்யாணசுவாமி, புட்டபசவப்பா, ஆயுத புரட்சியை ஏற்படுத்தினர். இவர்கள் மூன்று பேரும் தாங்கள் குடகின் பதவிபறித்த அரசனின் வம்சத்தார் என்று கூறிக்கொண்டனர். சுவாமி அபராம்பர எழுச்சியின் தலைவனானன்.



www.textbookpdf.in

©KTBS Not to be republished

1834ல் அவனை ஆங்கிலேயர்கள் கைது செய்து பெங்களூருக்கு கொன்டு வந்தனர். கல்யாணசுவாமி 1837ல் கைது செய்யப்பட்டு மைசூர் சிறையில் அடைக்கப்பட்டான்.

***புட்டபசப்பா :*** கீழ்குடகுப் பகுதியின் மக்கள் கல்யாணசுவாமியின் மரணத்திற்கு பிறகு புரட்சியைக் தொடர்ந்தனர். கனரா பகுதியின் சுள்ளியா, பெல்லாரே, மற்றும் புத்தூர் முதலிய இடங்களை அமர சுள்ளிய எழுச்சியின் தலைமை இடமாக இருந்தது. சுள்ளியாவின் விவசாயி ஒருவன் குடகின் சனிவார சந்தையின் புட்டபசப்பா என்ற விவசாயி கல்யாணசுவாமியாக தேர்ந்தெடுத்தான். இவன் தன்னை ''சுவாமி அபராம்பர'' என்று அழைத்துகொண்டு சுவையானது மட்டுமல்லாமல் புரட்சியின் இயக்கத்தை விளக்கியது. விரைவிலேயே புரட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டான். உயர்ந்த பிரதேசத்தில் இந்த எழுச்சி ஆரம்பமானது.

புட்டபசப்பா புரட்சியாளர்களை ஒன்று சேர்த்து மக்களை சமாதானப்டுத்தினான். புரட்சியாளர்களின் அரசாங்கம் அமைத்த பிறகு, புகையிலை மற்றும் உப்பின் மேல் உள்ள வரியை ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பணக்கார விவசாயிகள் குறு விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வாக்கு தரப்பட்டது. பெல்லாரேயில் இருந்த அரசாங்க அலுவலகத்தை வசப்படுத்திக் கொண்டு அரசாங்க அதிகாரிகளை கைது செய்தது. புரட்சியின் முதல்படியாகும். சுள்ளியா, மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு துன்பம் கொடுத்து வந்த அமல்காரர் ஒருவனின் கொலை புட்டபசப்பாவின் மக்கள் செல்வாக்கு அதிகப்படுத்தியது. இதனால் புரட்சி, பரந்த பிரசாரம் மற்றும் உதவியைப் பெற்றது.

போராட்டகாரர்கள் புத்தூரில் ஆங்கிலப்படையை எதிர்த்தனர், இவர்கள் எண்ணம் மங்களூரை வப்படுத்தி கொள்ளுதல். ஆங்கிலேயர்கள் மங்களூரை காப்பாற்றும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்தினர்.

புத்தூரிலிருந்து மங்களூர் பக்கம் சென்ற அவர்கள் வழியில் மங்களூர், பண்டுவாலாவில் செயல்பாடுகளை நடத்தினர். பண்டுவாலாவின் சிறைச்சாலை மற்றும் கருவூலம் கொள்ளை அடிக்கப்பட்டது. இதை கட்டுபடுத்த ஆங்கிலேயர்கள் கண்ணனூர், தலைச்சேரி, மற்றும் பாம்பாய் படைகளை அழைத்தார்கள். இதனை அறிந்த புட்டபசப்பா, மற்றும் அவரின் சங்கத்தை சேர்ந்தவர்கள் சுள்ளியாவிற்கு ஓடினார்கள். ஆங்கிலப்படை குடகில், உள்ள மக்களின் துணையோடு அவனையும் துணை போனவர்களையும் சிறைபிடித்து 1837ன் மே 13 அன்று சிறை பிடிக்கப்பட்ட புட்டபசப்பா, லக்ஷமப்ப பங்கரச, கெதம்பாடி ராமைய்யாகவுடா மற்றும் குட்டேமகனே அப்பைய்யா இவர்களை தூக்கில் இட்டனர், புரட்சி தோல்வியடைந்தாலும, இக்காலத்தில் மிக முக்கியமானது. மற்றும் அது ஆங்கிலேயருக்கு எதிராக இருந்தது என்று கூறலாம்.

### சுரப்புரா மற்றும் கொப்பள

***சுரப்புரா*** : சுரப்புரா யாதகிரி மாவட்டத்திலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ளது. மொகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப்பின் காலத்திலிருந்து இது முக்கியத்துவம் பெற்றது. நிஜாம் மற்றும் மராட்டியர்களின் பேஸ்வாக்களின் காலத்தில் இது அடிமை அரசாக இருந்தது. அதன்பிறகு நிலப்பரப்பின்மீது இருந்த கட்டுப்பாடு விலகி குறிப்பிட்ட பிரதேசத்தின் மீது தன்னுடைய அரசாங்க ஆதிக்கத்தை பெற்றது. வெங்கட்பநாயக்கனின் காலத்தில் சுரப்புர, ஆங்கிலேயர் எதிர்ப்பு புரட்சியை பெற்றிருந்தது.

**வெங்கடப்ப நாயக்கா :** தன்னுடைய தந்தை கிருஷ்ணப்ப நாயக்கனின்



www.textbookpdf.in

©KTBS Not to be republished

மரணத்திற்கு பிறகு பட்டத்திற்கு வந்தான். கி.பி. 1834ல் பிறந்த இவன் தன் சிறுவயதிலேயே பட்டத்திற்கு வந்தான். ஆனல் கிருஷ்ணப்ப நாயக்கனின் தம்பி பெத்தநாயக்கன் என்பவன் கலகம் செய்து சுரப்புரத்தின் உள்நாட்டு அரசியல் பிரச்சனை தலைதூக்கியது. ஆங்கிலேயர்கள் இதனால் ஆர்வம் கொண்டார்கள். 1842ல் ஆங்கிலேயர்கள் மேடோஸ்டெய்லர் என்பவனை அரசாங்க தூதுவனாக நியமித்து சமஸ்தானத்தின் மீது மறைமுகமாக செயல் பட்டனர்.

டெய்லர் நல்ல ஆட்சியாளராக இருந்தான் சுரப்புர சுமஸ்தானத்தை முன்னேற்றமடையச் செய்தான். பெத்த நாயக்கனை சமஸ்தானத்தின் திவனாக நியமித்தான் சமஸ்தானம் முழுவதும் நிலஅளவை செய்தான். சமஸ்தானத்தின் வருமானம் அதிகமாக்க இவன் அனுசரித்த முறைகளை காரணமாக இருந்தன. வெங்கட்டப்ப நாயக்கனுக்கு முறையான கல்வியை கொடுத்தான். 1853ல் வெங்கட்டப்ப நாயக்கன் அதிகாரத்திற்கு வந்தான்.

***சுரப்புர புரட்சி :*** ஆங்கில அரசு சுரப்புரத்தின் வளர்ச்சியை உன்னிப்பாக கவனித்தது. 1857ல் ஆரம்பத்தில் நானாசாகிபின் பிரதிநிதிகள் சுரப்புரத்தில் உள்ளனர் என்ற புகார் கண்டு வந்தது. இதனால் ஆங்கிலேயர்கள் அரசனை சந்தேகத்தோடு பார்த்தார்கள். அரசனின் ஆட்சிகாலத்தில் அறிக்கை கொடுக்கும்படி ஆங்கில அரசு கேம்பெல் என்ற அதிகாரியை நியமித்தது. இவன் அரசன் தீயசெயல்களில் ஈடுபட்டுள்ளான் என்ற அம்சத்தை அறிக்கையில் காண்பித்து ஐதாராபத்தின் ரெசிடெண்டிற்கு அனுப்பினான். வெங்கடப்பநாயக்கனை சாதரணமாக கருநாடக வரலாற்றில் 1857 புரட்சி நாயகன் என்று வரலாற்று ஆசிரியர்கள் வருணித்துள்ளார்கள். பின்பு ஆங்கிலப் படை சுரப்புராவை ஆங்கிரமித்தது. 1858ல் சுரப்புர கோட்டையை வசப்படுத்திக் கொண்டனர்.

***கொப்பளத்தின்வீரப்பா :*** ஆங்கிலயருக்கு எதிரான போராட்டம், ஆயுத புரட்சி, மற்றும் போராட்டங்களில் கொப் பளத்தின் போராட்டம் முக்கியமானது. கொப்பா மற்றும் அருகேயுள்ள நிலப்பரப்பு ஐதராபாத் நிஜாமின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தாலும் கொடுமைகளைக்கண்டு வந்தது. இதனால் கொப்பளத்தில் சில ஜமீன்தாரர்கள் வேறு வழியின்றி எழுச்சியடைந்தனர். அவர்களில் முக்கியமானவன் வீரப்பன், வீரப்பன் ஜமீன்தாரனாக இருந்து கொப்பள மற்றும் சுற்றுப் பகுசியை ஆக்கிரமித்து கொண்டான். வீரப்பனின் இந்த உத்தேசத்தின் மர்மம் அறிந்த விவசாயிகள் மற்றும் ஜமீன்தார்கள் அவனுடன் கை கோர்த்தனர். நிஜாமுடன் தொடர்பு கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் வீரப்பனின் தலைமையிலான புரட்சியை ஓடுக்க படையை அனுப்பினர். கேவலம் 100 போர் வீரர்களை பெற்று இருந்த வீரப்பன் தொடர்ந்து நான்கு நாட்கள் போராடி 1819ல் மரணமடைந்தான்.

பிறகு ஆங்கிலேயர்கள் கொப்பளத்து கோட்டை கைப்பற்றினார். இந்த புரட்சி குறுகியதாக இருந்தாலும் அதற்கு தலைமையை ஏற்ற வீரப்பன் ஒரு சரியான ஆயுத புரட்சியாளன்.

***ஹலகலி வேடர்களின் போராட்டம் :*** பாகல் கோட்டை மாவட்டம் முதோளி தாலுக்காவில் ஹாகலி என்பது ஒரு சிறிய கிராமம். முன்பு இது முதோள சமஸ்த்தானத்தின் அட்சிக்குட்பட்டிருந்தது. 1857ன் கலகத்தின் சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர் தம்முடைய ஆட்சி பிரதேசத்தில் ஆயுத பயன்பாட்டை நிர்பந்தித்து ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஹலகலியின் வேடர்கள் தலை முறை தலைமுறையாக வேட்டையாடும் நோக்கத்திற்கு சுதந்திரமாக பயன்படுத்திவந்த



www.textbookpdf.in

துப்பாக்கிகளை ஆங்கிலேயர் வசம் ஒப்படைக்க தயாராக இல்லை. வேடர்கள் தம்முடைய பரம்பரையாக வந்த உரிமையை விட்டுக்கொடுக்காத நோக்கத்துடன் ஆங்கிலேயருக்கு எதுராக போராடத்தயாரானார்கள். இப்போராட்டத்தில் ஹலகலியின் சுற்றுமுற்றிலுமுள்ள பிரதேசங்களை மன்ட்டூரு, போதானி, ஆலகுண்டியின் வேடர்கள் ஒன்றுசேர்ந்தனர். இவர்களுடைய கிளர்ச்சியை கட்டுக்குள் கொண்டுவர நவம்பரில் ஆங்கிலேயரின் படைகள் ஹலகலிகிராமத்தை அடைந்தது. கிளர்ச்சி செய்த வேடர்களை கருணையில்லாமல் கட்டுப்பாட்டில்லாமல் ஆங்கிலேயர் சிறைப்பிடித்தனர். கிளர்ச்சியாளர்களை தூக்கிலேற்றுவதன் மூலமாக இப்போராட்டத்தை முடித்தனர்.

## பயிற்சிகள்

### I. கீழ்க்காணும் விடுப்பட்ட இடங்களை நிரப்புக :

1. முதலாவது ஆங்கிலேய மைசூர் போர் __________ மற்றும் __________ ன் இடையில் நடைபெற்றது.
2. இரண்டாம் ஆங்கிலேய மைசூர் __________ ஒப்பந்தத்துடன் முடிவடைந்தது.
3. கித்தூரு சென்னம்மா __________ என்னும் சிறுவனை தத்தெடுத்துக் கொண்டார்.
4. கித்தூரு சென்னம்மாவின் சமஸ்தானத்தில் ராயண்ணனின் ஊர் __________
5. சுரபுர இன்று __________ மாவட்டத்தில் உள்ளது.
6. இன்றைய பாகலகோட்டை மாவட்டம் __________ வேடர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்டனர்.
7. அமர சுள்யா போராட்டத்தின் பின்னணி __________ போராட்டமாகும்.

### II. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி :

1. ஹைதர்அலி எவ்வாறு அதிகாரம் பெற்றார்.
2. இரண்டாம் ஆங்கிலேயர் மைசூர் போரினால் உண்டான விளைவுகள் யாவை.
3. ஸ்ரீரங்கபட்டன ஒப்பந்தத்தின் ஷரத்துகள் யாவை?
4. நான்காவது ஆங்கிலேயர் மைசூர் போரில் ஆங்கிலேயர் மைசூர் பிரதேசத்தில் எவ்வாறு பாதுகாப்பைப் பெற்றனர். விவரிக்க.
5. தோண்டியா வாக் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் போராடிய விதத்தை ஆய்வு செய்க.
6. சங்கொள்ளி ராயண்ண்ணவின் சுதந்திர போராட்ட முறையை விவரி.
7. சுதந்திர போராட்டத்தில் குடகின் பகுதியிலிருந்து புட்டபசப்பாவின் பங்கை விவரி.
8. சுரப்புராவின் போராட்டத்தைப் பற்றி விவரிக்கவும்.

### III. செயல்பாடு :

1. சங்கொள்ளி ராயண்ணனைப் பற்றிய புத்தகத்தை படி.
2. கித்தூரு சென்னம்மாவைப் பற்றிய அதிக விவரங்களை சேகரிக்கவும்.

### IV. செயல்பாடு :

1. கல்வித் தொடர்பான சுற்றுலாவை மேற்கொண்டு சுரப்புராவிலுள்ள கோட்டைக் குச் சென்று அங்கு ஆங்கிலேயர் காலத்தின் விருந்தினர் இல்லத்தின் சிறப்பை கவனியுங்கள்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# அத்தியாயம் 5
# சமய சமூகத் சீர்த்திருத்தங்கள்

## இப்பாடத்தை கற்றபின் நீங்கள் அறிவன

- பிரம்ம சமாஜத்தின் நிறுவனர் மற்றும் அதன் சீர்திருத்தங்கள்.
- இளம் வங்காளப் போராட்டம்
- ஆரிய சமாஜத்தின் தோற்றம் மற்றும் அதன் சீர்திருத்தங்கள்.
- பிரார்த்தனா சமாஜத்தின் சீர்திருத்தங்கள்.
- சத்திய சோதக் சமாஜத்தின் போதனைகள்
- அலிகார் இயக்கம்
- இராமகிருஷ்ணரின் போதனைகள்
- தியாசிபிக்கல் சொசைட்டி
- பிரம்மஞான சசபை
- ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம்
- பெரியார்

©KTBS Not to be republished

மனிதன் ஒழுக்கத்திலிருந்து தவறி மேல், கீழ் என்ற பாகுபாடுகள் நிறைந்த சமூக நீதியை மாற்றி மூடநம்பிக்கை இல்லாத சமூகத்தின் பக்கம் கொண்டு செல்லும் முயற்சியே மனித சீர்த்திருத்தம் எனப்படும். தயனந்த சரஸ்வதி, மகாதேவ கோவிந்த ரானடே, ஜோதிபாபுலே, சுவாமி விவாகானந்தா, அன்னிபெசன்ட், சையத் அகமதுகான், நாராயணகுரு, பெரியார், முதலியவர்கள் சமூக சீர்த்திருத்தத்திற்காக பாடுபட்டார்கள்.

19ம் நூற்றாண்டை இந்திய வரலாற்றிலே சமூக சீர்த்திருத்தம், இந்தியாவின் புதுயுக காலம் என்று சாதாரணமாக எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் ஆங்கிலக் கல்வியை நடைமுறை படுத்திய பின்பு இந்தியாவில் ஆங்கில கல்வியாளர்கள் உருவானர்கள். மக்களாட்சி, தேசிய வாதம், சமஉரிமை, முதலிய ஐரோப்பிய கொள்கைகள் இந்திய சமுதாயத்திற்கு அறிமுகமாக தொடங்கியது.

இதன் பின்னணியில் ஆங்கில கல்விகற்க அனேக இந்தியர்கள் தமது சமுதாயத்தைப் பற்றி யோசிக்க தொடங்கினார்கள். இதனுடன் ஆங்கிலேயர்கள் சமூக சீர்த்திருத்தத்தில் ஆர்வம் காட்டினர். தம்மை நாகரிகம் வாய்ந்தவர்கள் என்று வெளிப்படுத்திக் கொண்டு தாங்கள் இங்கு வந்திருப்பதே இந்தியர்களை நாகரீகம் வாய்ந்தவர்களாக மாற்றவே ‘‘வெள்ளையர்களின் பொறுப்பு’’ என்ற சிந்தாந்தத்தை பிரசாரப் படுத்தினார்கள். இந்த தத்துவப்படி ஆங்கிலேயர்கள் பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளை காப்பாற்றிக் கொள்ளும் திட்டத்தை தீட்டினர். ஆனால் ஆங்கில கல்விகற்ற இந்தியர்கள் மற்றும் கிறிஸ்து மிஷனரிகள் தொடர்பினால் சமய சமூகச் சீர்த்திருத்தங்கள் என்ற புதிய நிலை தொடங்கியது. இந்திய சமூகத்தில் இருந்த சாதிபேத முறை, பாலின வேறுபாடுகள் உடன்கட்டை ஏறுதல். விதவை மறுமணம், சூத்திரர்கள் மற்றும் கீழ்நிலை சூத்திரர்கள், கல்வியின்றி வஞ்சிகப்பட்ட பிரச்சனைகளை எடுத்துக்கொண்டு இந்த சீர்த்திருத்த போராட்டத்தை தொடங்கினார்கள். இந்த கால கட்டத்தில் சீர்த்திருத்தத்தின்



www.textbookpdf.in

முக்கியத்துவம் என்னவென்றால் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலையைய சட்டத்தின் மூலம் தடைசெய்ய முயற்சிக்கப்பட்டது.

### பிரம்ம சமாஜாம் :



ராஜாராம் மோகன்ராய்

நவீன காலகட்டத்தில் இந்திய சமூகத்தில் சீர் திருத்தத்தை கொண்டு வந்தவர் ராம்மோகன்ராய் (1774-1783) இவர் சமஸ்கிருதம், இந்து தத்துவம் இஸ்லாம், பாரசீகம், மற்றும் அரேபிய இலக்கியம் போன்ற இலக்கியத்துறையை நன்கு அறிந்திருந்தார். அவருடைய அறிவு மற்றும் சீர்திருத்திற்கு சாட்சி என்றால் பைபிளைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள ஹீப்ரு, மற்றும் கிரேக்க மொழிகளைக் கற்றார். இவர் தமது நண்பர்களுடன் கூடி கல்கத்தாவில் ''ஆத்மீய சபா''வை ஆரம்பித்தார். இந்த சபையின் முக்கிய நோக்கம் என்றால். சமய மற்றும் சமூக தீமைகளை வங்காளத்திலிருந்து முறியடிப்பது. 1828ல் பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தார். சாதி அமைப்பு முறை மூடநம்பிகக்கைளிலிருந்து இந்த மதத்தை தூய்மை படுத்துவது இவருடைய விருப்பமாகும். ராம்மோகன்ராய், மற்றும் வேறு பிரம்ம சமாஜவாதிகள் உபநிசத்துகள் கூறும் கருத்துக்களின் அடிப்படையில் இந்து சமயத்தை புனரமைக்க முயன்றார், இவருடைய முயற்சியின் பலனாக அன்றைய கவர்னர் ஜெனரால் வில்லியம் பெண்டிங்கின் ஒத்துழைப்போடு 1829ல் உடன்கட்டை ஏறும் முறையை சட்டப்படி தடைசெய்யப் பட்டது. பத்திரிக்கை துறையின் மூலம் மக்களிடையே முற்போக்கு சிந்தனையை வளர்க்க முயற்சி செய்தார். வங்காள மொழியில், சம்வாதகவ்முடி, என்ற பத்திரிக்கையை ஆரம்பித்தார்.

### பிரம்ம சமாஜத்தின் முக்கிய அம்சங்கள்

1. ஒரு கடவுள் கொள்கையை ஆதரித்தல்
2. அர்த்த மற்ற சடங்குகளை எதிர்த்தல்
3. சுயமரியாதையை கடை பிடித்தல்
4. பெண்களுக்கு சமஉரிமை
5. நல்ல சிந்தனைகளை ஊக்குவித்தல்.

இவையன்றி ராம்மோகன்ராய் அவர்கள் மேற்கத்திய சிந்தனையை இந்தியர்கள் வரவேற்க வேண்டும் என்று கூறினார். இதன் பின்னணியில் பல பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்கத்தாவில் வேத பாடசாலையை நிறுவினார். ''ரவிந்திரநாத் தாகூர்'' அவர்கள் ''ராம் மோகன்ராய் அவர்கள் நவீன இந்தியாவின் சிற்பி'' இந்தியாவின் ''மறுமலர்ச்சியின் தந்தை'' மற்றும் ''தேசிய வாதத்தின் முன்னோடி'' என்று கூறுவதன் மூலம் இவர் பிரம்மசமாஜம் செய்த நன்மையை புகழ்ந்துள்ளார்.

### இளம் வங்காள போராட்டம் :

வடஇந்தியாவில் நவீனத்தின் காற்று வீசத் தொடங்கியது 19ம் நூற்றாண்டில். கல்க



©KTBS Not to be republished
www.textbookpdf.in

த்தா நகரம் புதிய யோசனைகளின் தலைமையகமாக இருந்தது. 1820 மற்றும் 1830ல் புதிய போராட்டங்கள் தோன்றின. ஏற்கனவே பிரம்ம சமாஜத்தை பார்த்திருக்கிறோம். இதே காலகட்டத்தில் மற்றொரு போராட்டம் இளம் வங்காள போராட்டம், இதனை ஆரம்பித்தவர் ''ஹென்றி விவியன் டிரேஜியோ'' (1809-1831) இவருடைய தந்தை போர்ச்சுகீச்சியர் தாய் இந்தியாவை சார்ந்தவர். எனவே அவரை ஆங்கிலோ இந்தியன் என்று அழைப்பாளர்கள்.

1826 லிருந்து 1831 வரையில் கல்கத்தாவின் இந்துக் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றினார். இவருடைய போதனையின் மந்திர சந்திக்கு உள்ளான அவருடைய பல மாணவர்கள் அவருடைய உண்மையான தொண்டர்கள் ஆனார்கள். ஐரோப்பியாவின் புனரைப்பு போராட்டத்தின் கொள்கையினால் ஈர்க்கப்பட்ட இவர்.

***இளம் வங்காள போராட்டம் :*** இயற்கை, மனிதநீதி, கடவுள் போன்ற விஷயங்களைப் பற்றிய விவாதம் மற்றும் வாதங்களை நடத்தியது. மூடநம்பிக்கைகளால் நிறைந்த சமூகம் அறியாமை ஆச்சாரங்களினால் மூழ்கியுள்ள சமூக பரிசாரத்தை அனைவரையும், அனைவரும் அறிவியலாக பார்க்கும் பார்வைக் கோனத்தில் வளர்த்துக் கொண்டால் மட்டுமே என்னும் டிரெஜியோ வெளியிடும் முயற்சியை செய்தார். பெண் உரிமைகளின் எதிர்ப்பாளராகிருந்து, மதத் தொடர்பான சுரண்டல்களை எதிர்த்தார். சம்பிரதாயமான குடும்பத்தின் பின்னணியிலிருந்து வந்த அனேக மாணவர்கள் இவருடைய தாக்கத்திற்கு உட்பட்டு போராட்டங்களை ஏற்படுத்த கைக்கோர்த்தனர் இவ்வாறு இது ஒரு புதிய போராட்டமாக வளர்ந்தது. ஆனால், இதனுடைய தாக்கத் திற்கு கல்கத்தா மற்றும் வங்காளத்தின் சில பிரதேசங்கள் வரையிறுக்கபட்டது. புதிய தலைமுறை இவர்களுடைய தாக்கத்திர்க்கு உட்பட்டு நீதிக்கு ஏற்றார்போல சுருங்கியது அவர் உடன்பணியாற்றுபவர்கள் மற்றும் அவருடைய ஆதரவாளர்களின் அழுத்தத்திற்கு கோபப்பட்டு தம்முடைய பணிக்கு ராஜினாமை அளித்தார். டிரேஜியா அவர்கள் சுமார் 22 ஆண்டுகள் வரை வாழ்ந்து 1831ல் காலராநோய்க்கு ஆளாகி இறப்பெய்தினார்.

## ஆரிய சமாஜம் :


தயானந்த சரஸ்வதி

1875ல் தயானந்த சரஸ்வதி அவர்கள் ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தார். இவர் பிப்ரவரி 12. 1824ல் குஜராத்தின் கத்தே வடாவில் பிறந்தார். இவருடைய ஆரம்ப பெயர் ''மூலசங்கர'' ஆங்கிலக் கல்வியின் மீது விருப்பம் கொள்ளாத தயானந்தர் சமஸ்கிருத கல்வியை கற்றார். 21ம் வயதில் வீட்டை துறந்த இவர் சுமார் 15 வருட காலம் நாடு முழுவதும் சுற்றி வந்தார். மதுராவில், ''வீரஜனந்த சரஸ்வதி'' என்ற சாமியாரின் சீடரானார். தயானந்த சரஸ்வதி அவர்கள் தம்முடைய ஆலோசனை முறையை, சத்தியர்த்த பிரகாஷ் என்ற நூலில் வெளிப்படுத்தியுள்ளார். அவர் வேதங்களைக் கற்றதினால் கண்டு கொண்ட அம்சம் என்றால் நவீன கால இந்தியாவின் பிரச்சனைக்கு பரிகாரம் வேதங்களில் உள்ளன என்பதாகும். இதன் பின்னணியில் அவர் அறிவித்த வாக்கியம்


www.textbookpdf.in

‘வேதங்களுக்கு திரும்புங்கள்’ என்பதாகும். அதனால் இவர் சீர்த்திருத்தவாதி என்பதற்கு பதிலாக புனர் அமைப்புவாதி என்று அழைக்கப்பட்டார்.

1877ல் ஆரிய சமாஜத்தின் தலைமையிடத்தை லாகூரில் திறந்தார். இவர் வேதங்கள் மட்டும் உண்மையானது. என்று வாதித்தார்.

### ஆரியசமாஜம் கீழ்க்கண்ட அம்சங்களை கொண்டிருந்தது!

1. எல்லா இந்துக்களும் உருவமில்லாத ஒரே கடவுளை நம்ப வேண்டும்.
2. பிறந்தது முதல் யாரும் சூத்திரரும் இல்லை அல்லது பிரமணரும் இல்லை என்று சாதியை ஒதுக்க வேண்டும்.
3. கலப்பு திருமணத்தை ஊக்குவிக்க வேண்டும்.
4. பல பெண்களை திருமணம் செய்தல் மற்றும் குழந்தை திருமணத்தை ஒதுக்க வேண்டும்.
5. பெண்கள் மற்றும் ஆண்களும் சமமே.
6. வேதங்கள் மட்டும் சிறப்பானவை. புகழ்பெற்ற நூல்களை கற்க வேண்டும் மற்றும் போதிக்க வேண்டும்.

ஆரிய சமாஜத்தின் மற்றொரு முக்கிய கொள்கையென்றால். தூய்மைப் போராட்டம். இஸ்லாம், மற்றும் கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாறியவர்களை மீண்டும் இந்து மதத்தில் சேர்த்து கொள்வது. இவர் பசு பாதுகாப்பிற்கு பசுபாதுகாப்பு சங்கத்தை ஆரம்பித்தார்.

ஆரியசமாஜம் 1921க்குள் சுமார் ஐந்து லட்சம் உறுப்பினர்களை கொண்டது. தயானந்த சரஸ்வதி அவ்ரகளின் மரணத்திற்கு பிறகு “புகழ் பெற்ற தயானந்த ஆங்கிலோ வேதக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது” அவ்வாறே ஹரித்துவாரத்தில் குருகுல வித்யாலத்தை ஆரம்பிக்கப்பட்டது. லாலா லஜபதிராய் அவர்கள் ஆரிய சமாஜத்தின் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டார்.

**இதனை அறிக**

*தூய்மைப் போராட்டம், இந்துச் சமயத்தில் இருந்த சாதிப்பாகுபாடு மற்றும் மூட நம்பிக்கைகள் மக்களை வேறு மதத்திற்கு மாறச் செய்தது. இந்த வேளையில் இந்துச் சமயத்தை ஒன்று படுத்தும் வகையில் வேதங்களை (வேறுபடுத்தி) உரைப்படுத்தி பாலினம், மற்றும் சாதி சமுத்துவத்தை வலியுறுத்தினார். இந்துச் சமயத்திலிருந்து வெளியேறும் வாய்ப்பிருந்ததே தவிர உள்ளே வரும் வாய்ப்பே இருக்கவில்லை. இந்த வேளையில் மதம் மாறியவரை மீண்டும் இந்துச் சமயத்திற்கு மீண்டும் வர தூய்மை போராட்டத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் இந்துச் சமயத்தை நிலைப்படுத்தினார்.*

### பிரார்த்தனை சமாஜம்

பிரம்ம சமாஜத்தின் சீர்திருத்தப் போராட்டம் வங்காளப் பகுதியை மீறி வேறு எல்லாப் பகுதிகளுக்கும் பரவியது. தென்னிந்தியாவில் விசேசமாக பாம்பாய் பிரசிடென்ஸி பகுதியில் சீர்த்திருத்த போராட்டம் வளரத் தொடங்கியது.

பெணகளின் பிரச்சனைகள் மட்டுமின்றி சூத்திரர்களின் பஞ்சமார்கள் பிரச்சனைக்கு பரிகாரம் கண்டு கொள்ளும் வகையில் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்க தலைமையில்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

பிரார்த்தனை சமாஜம் என்ற சங்கத்தை 1867ல் மும்பையில் ஆரம்பமானது. நவின யோசனையின் பின்அணியில் இந்துச் சமயத்தை புனர் விமர்சிக்கும் தேவையுள்ளது என்று இந்த அமைப்பு தெரிவித்தது. சமூக சீர்த்திருத்தம் என்பது நம்பிக்கையாக மட்டுமின்றி உண்மையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது. இந்த அமைப்பின் தலைமையில் பெண் கல்வி, ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளித்தல், முதலிய நிகழ்ச்சிகள் நடைமுறைக்கு வந்தன.

பிரார்த்தனை சமாஜத்தின் மற்ற தலைவர்கள் என்றால். நீதிபதிகளான மகாதேவ கோவிந்த ரானடே, மற்றும் என்.ஜி. சந்திரவர்க்கர் முக்கியனவர்கள். ரானடையின் தலைமையில் பிரார்த்தனை சமாஜத்தின் சீர்திருத்தம் விரிவாக்கப்பட்டது. ரானடே அவர்கள் குழந்தைத் திருமணம், விதவையர்களை பொது வாழ்க்கையில் இருந்து விலக்கி வைப்பது, உயர் ஜாதிகாரர்களின் விதவை மறுமணம் தடைசெய்தல் போன்றவை ஆரம்ப காலத்தில் இருக்கவில்லை. இவை தற்காலத்தில் வந்தவை என வாதிட்டார். இவைகளை தடை செய்ய ஆங்கிலேயரின் உதவையை நாடுவது சரியான முடிவு என்று கருதினார்.

### சத்திய சோதக் சமாஜம்

இந்தியாவின் மற்ற பகுதியில் இருந்ததைப் போன்று மகாராஷ்டிராவிலும், பாலினம், சாதிப் பாகுபடுபரவி இருந்தது.


மகாத்மா ஜோதிபா புலே

ஆங்கிலேயரின் காலனி ஆட்சிக் காலத்தில் இதைப் போன்று கொடுமைகளுக்கு எதிராக பல போராட்டங்கள் உருவாயின. இந்நிலையில் 1873ல் தோன்றிய சத்திய சோதக் சமாஜம், பிராமணர் அல்லாத வர்க்கத்திற்கும் மற்றும் பெண்களும் சம உரிமையை பெற்றுதரும் போராட்டத்தை ஆரம்பித்தது. இந்த சத்திய சோதக் சமாஜத்தை மகாத்மா ஜோதி பாபுலே தோற்றுவித்தார். போராட்டத்தை தோற்றுவிக்கும் பின்னணியில் ''குலாமகிரி'' என்ற நூலை இயற்றினார். பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து சூத்திரர்கள் மற்றும் தலித்துக்கள், பெண்களுக்கு கல்லிவியை அளித்தார். மாலி சமுதாயத்தை சேர்ந்த பாபுலே, தாழ்த்தப்பட்ட மக்கள் தனது கிணற்றில் நீர் எடுக்க அனுமதித்தார். பாபுலேயின் இந்த முயற்சியில் அவருடைய மனைவி சாவித்திரிபாய்புலே ஒத்துழைப்பாக இருந்தார். இவருடைய முயற்சியினால் பெண்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டப்பட்டன.

சமவுரிமையின் அடிப்படையில் உருவாக்கப்படும் புதிய சமுதாயத்தை நவீன காலகட்டத்தின் முயற்சியில் பாபுலே அவரின் முயற்சி முக்கியமானது. இவரின் கொள்கைகளிலிருந்து முன்னோடியா விளங்கியவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் முக்கியமானவர்.

### அலிகார் இயக்கம் :

19ம் நூற்றாண்டின் கடைசியில் இஸ்லாமிய சமுதாயத்தில், புதிய சமய, சமுதாய

©KTBS Not to be republished



www.textbookpdf.in

சீர்த்திருத்தம் தோன்றியது. ஆங்கில எதிர்ப்பு மனோபாவத்தை 1857ன் நிகழ்ச்சிக்கு பிறகு இசுலாமிய சமுதாயத்தில் விரிவாக எங்கும் வளரத் தொடங்கியது. இதனால் ஆங்கில கல்வியை விட்டு விலகினார்கள். விளைவாக கல்வியின் மூலம் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளை இழந்து விட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தை ஆராய்ந்த சர்ச்சையத் அகமத்கான் புதிய போராட்டத்தை தொடங்க முடிவு செய்தார். 1863ல் ஆரம்பமான முகமது லிபர்டி சம்மந்தப் பட்டவைகளை விவாதிக்க தொடங்கின, இந்த விவாதத்தில் மேல்நிலை மற்றும் மத்தியநிலை இசுலாமியர் பங்கெடுப்பதின் மூலம் ஆங்கிலக் கல்வியின் மகத்துவத்தை அறியத் தொடங்கினார்கள்.



சர் சையத் அகமத்கான்

சர்சையத் அகமது கானின் முயற்சியானால் புதிய விசயங்களின் தேடுதலின் முயற்சி அலிகர் போராட்டமாக உருக்கொண்டது. சர்சையது அகமத்கானின் கால கட்டம் 1817லிருந்து 1898 வரைக்கும். குரான் நூல் மட்டும் உண்மையானது. இசுலாமைப் பற்றிய மற்ற நூல்கள் வெறும் நூல்களே என்றார். காலம் மாறுவது போல, சமயத்தையும் நாம் மாற்ற வேண்டும் இல்லா விட்டால் சமயம் என்பது பழங்காட்சிப் பொருளாகி விடும் என்கிறார். அகமது கான் அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும், சம்பிரதாய மூடநம்பிக்கை, அஞ்ஞானம், போன்றவற்றிக்கு எதிராக போராடினார். திறந்த மனம் இல்லையென்றால் நான் ஒரு சமுதாய, ே சவையை செய்ய இயாலது என்றார். இசுலாமிய சமுதாயத்தில் இருந்த 'பர்தா' சம்பிராதயத்தை போற்றவில்லை. இசுலாமிய பெண்கள் கல்வியாளர்கள் ஆக வேண்டும் என விரும்பினார். பல பெண்களை திருமணம் செய்யும் முறையை ஏற்றுக் கொள்ளவில்லை இந்த எல்லா அம்சங்களும் அவருடைய போராட்டத்தின் பாகமாகும். இந்த ஆலோசனையை செயல்படுத்த 1875ல் மகமது ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரிமை அலிகார் என்ற இடத்தில் நிறுவினார். மேற்கத்திய கல்வியும், பண்பாட்டை, குறித்து பரப்ப இந்த நிறுவனத்தை பயன்படுத்திக் கொண்டார். இந்த நிறுவனமே பிறகு அலிகார் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது.



இராமகிருஷ்ண பரமஹம்சர்

சையத் அகமது கான் அவர்கள் சமயக் கல்வியை வழங்கினார், இந்துக்கள், பாரசீகத்தார், கிறித்துவர்கள் அலிகார் கல்லூரி நிறுவ அதிக பொருள் உதவி செய்தனர். இந்தக் கல்லூரியில் எல்லா மதத்தவர்களுக்கும் அனுமதி இருந்தது. அலிகாரை தலைமையிடக் கொண்டு சையத் அகமதுகான் உருவாக்கிய போராட்டம் அலிகார் போராட்டம் எனப்பட்டது.

## இராமகிருஷ்ணா மிஷன் :

நவீன இந்தியாவின் ஆன்மீக வளர்ச்சி, தேசிய விழிப்புணர்வு, கலாச்சார வளர்ச்சிக்கு இராமாகிருஷ்ணா மடம், சிறந்த சேவை செய்துள்ளது. சுவாமி

©KTBS Not to be republished



www.textbookpdf.in

விவேகானந்தர். 1898ல் கல்கத்தாவில் ஆசிரமத்தை நிறுவினர், அப்படியே உத்ராஞ்சலில் ஆல்மோராவின் அருகில் மாயாவதி என்ற இடத்தில் இராமகிருஷ்ணா மடத்தை நிறுவியதின் நோக்கம் என்னவென்றால் இராமகிருஷ்ணா பரமஹம்சரின் சிந்தனை மற்றும் கொள்கையை மக்களிடையே கொண்டு சேர்ப்பது.

இராமகிருஷ்ணா பரமஹம்சர் காளிதேவியை வணங்குபவர் (1834-1886) கல்கத்தாவின் காளிகோவில் அர்ச்சகராக இருந்தார், சந்நியாசம், தியானம், மற்றும் பக்தியின் மூலம் முக்தியை பெறலாம் என்று தத்துவவாழ்க்கையின் மூலம் காட்டினார். தெய்வத்தை மற்றும் முக்தியை பெற அநேக வழிகள் உண்டு என நம்பினார். மற்றும் உருவ வழிபாடு தேவை என்றார். விவேகானந்தர் (1863-1902) கல்கத்தாவில் பிறந்தார். இந்தியா மற்றும் மேற்கத்திய சிந்தனையாளர்களை பற்றி அறிந்திருந்தார். இந்தியர்களுக்கு மற்றும் மேற்கத்தியர்களுக்கு அவருடைய சிந்தனைகளை தெரிவிக்கும் செயலை ஆரம்பித்தார். அவருடைய குருவான இராமகிருஷ்ணா பரமஹம்சரின் மறைவிற்குப்பின் 5 ஆண்டுகாலம் இந்தாயவை சுற்றித் திரிந்தார். இதனால் இந்தியாவின் சமூக, நிலைப்பாட்டை நேரடியாக காணும் வாய்ப்பைப் பெற்றார். சாதி அமைப்பு மற்றும் அதன் கொடுமையான முகங்கள், வறுமை, கல்வியின்மை அஞ்ஞானம் முதலிய தீமைகள் நிரம்பிய இந்தியாவிற்கு புதிய துன்பமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று விரும்பினார். விவேகானந்தரின் கொள்கைகள் என்னவென்றால் மக்களை கல்வியாளராக மாற்ற வேண்டும். சட்ட அமைப்புகள் தோன்ற வேண்டும். அவற்றின் மூலம் சமூக சீர்த்திருத்தங்கள் செய்ய வேண்டும்.


சுவாமி விவேகாநந்தர்

மேற்கத்தியரை மூடத்தனமாக பின்பற்றக்கூடாது. சமயத்தின் செயல்பாடு என்னவென்றால் இருட்டில் உள்ளவர்க்கு வெளிச்சத்தை கொடுப்பது இல்லையென்றால் அது சமயமே இல்லை என்றார். ஏழைகளுக்கு இறங்குபவனே மனிதன், இல்லையென்றால் அது தீய ஆன்மா என்றார். தனது வாழ்நாள் முழுவதும் சாதிபாகுபாட்டை, தீண்டாமையை, எதிர்த்தார். பிராமணியம் தான் உயர்ந்தது என்பதை வெறுத்தார். சமயத்தின் பேரில் நடக்கும் கொடுமைகளை எதிர்த்தார்.

***'நாம் மனித இனத்தை எங்கு வேதங்கள், பைபிள், குரான் இல்லையோ அங்கே அழைத்து செல்லவேண்டும். ஆயினும் கூட வேதங்கள், பைபிள், குரான்கள் ஒற்றுமையுடன் இதனை சாதிக்க வேண்டும்.... நம்முடைய தாய்மண்ணில் இந்து மற்றும் இஸ்லாம் மதங்களிரண்டும் கலந்திருக்க வேண்டும். வேதாந்தத்தின் மூளை இஸ்லாமியனின் உடல் - இது ஒன்றே நம்முடைய புரோகமனத்திற்கு அடிப்படை'- சுவாமி விவேகாநந்தரின் புதக வரிசை 7 - பக்கம் 238.***

விவேகானந்தர் 1893ல் அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் நடந்த உலக சமய மாநாட்டில் ஆற்றிய உரையினால் மேற்கத்தியர் இந்தியாவின் கலாச்சாரம், பண்பாட்டை



www.textbookpdf.in

அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வாறே 1900 பாரீசில் நடந்த காங்கிரஸ் ஆப் ரிலீஜியன் மாநாட்டில் அவருடைய தேசிய ஆலோசனைகள் இருந்தன. சுவராஸ்யமான விஷயம் என்னவென்றால் அமெரிக்காவின் மாநாட்டிற்கு போகுமுன் மகாராஜா 10ம் ஜெயசாமராஜ உடையாரின் விருந்தினராக மைசூருக்கு வந்தார். இவருடைய ஆலோசனைப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பள்ளிகளை உருவாக்கினார். இவருடைய ஆலோசனைப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பள்ளிகளை உருவாக்கினார். இவருடைய ஞானம், யோகம், ராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம் பற்றி நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய ஆலோசைகள் சக்தியை நிரப்பியுள்ளது. சுதந்திரம் என்றால் அது சமமே என்று கூறுகிறது.

***பிரம்ம ஞான சபை :*** இந்த அமைப்பு மேடம் பிளவாட்ஸ்சி மற்றும் கலோனியல். எச்.எஸ். ஆல்காரீட் ஆகியோரால் நிறுவப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் அடையாரில் உள்ளது. இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் பல சமயங்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்துக்களை ஒப்புமை ஆய்வு செய்தலாகும். மனிதன் ஒருவனின் தனிப்பட்ட உள்ளார்ந்த ஆற்றலைக் கண்டு கொள்ளுதல். மனிதனுக்கு உலக சகோதரத்துவத்தை உணர்த்துதல். பிரம்மஞான சபை இந்துசமயத்திற்கு சேர்ந்த நூல்கள், வேதங்கள், உபநிசத்துக்கள், சாங்கிய யோகம், வேதந்த சிந்தனைகளிலிருந்து தன்னுடைய மூல தத்துவங்களை பெற்றுக் கொண்டு பிரசாரம் செய்தனர். ஆகவே, இந்த அமைப்பு நடத்திய முயற்சிகள் இந்துச் சமயத்தின் மறுமலர்ச்சி எனப்படுகிறது. வெளிநாட்டினர் இந்த எழுச்சியில் அதிக ஆர்வம் காட்டினார்கள்.



***அனிபெசன்ட்***

ஐரிஸ் பெண்மணியான அன்னி பெசன்ட் 1893ல் இந்தியாவிற்கு வந்த பிறகு பிரம்மஞான சபையின் போராட்டம் வியக்கும்படியும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இலண்டனில் பிறந்த இவர் 1889ல் இந்த சபையின் தீவிர உறுப்பினராக செயல்பட்டார். இவர் வேதாந்த சாஸ்திரங்களை பற்றி நன்கு அறிந்திருந்தார். பூமியின் மீதுள்ள செல்வமே சி றந்தது என்று இருக்கும் மேற்கத்தியரை விட ஆன்மீக சக்தியே சிறந்தது என்று இருக்கும் இந்திய கலாச்சாரமே சிறந்தது என்று கூறினார். இவருடைய முக்கிய சாதனைகள் என்றால் பகவத்கீதையை ஆங்கிலதில் மொழிமாற்றம் செய்தது. 1898ல் சென்ட்ரல் இந்து கல்லூரியை பனாரசில் ஆரம்பித்தது. இதே அமைப்பு மதனமோகன் மாளவிய அவர்கள் முயற்சியசால்1916ல் பனராஸ் இந்து பல்கலைகழகமாக மாற்றப்பட்டது. நியூ இண்டியா காமன்வீல் என்ற பத்திரிக்கையை ஆரம்பித்தார். 1916ல் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule movement) சென்னையில் தொடங்கினார். இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டின் முதல் பெண் தலைவராக தலைமை தாங்கினார். அன்னிபெசன்ட் அவர்களுக்கு 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் புதிய சமய மற்றும் சமூக எழுச்சியை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.



www.textbookpdf.in

*அறிந்து கொள்ளுங்கள் :*

*"ஹோம்ரூல்"* : பிரிட்டனின் பிடியிலிருந்து அயர்லாந்து மற்றும் அங்குள்ள மக்கள் தம்முடைய நிர்வாகத்தை (ஆட்சியை) தாமே நடத்தும் உரிமையை பெறுவதற்கு ஹோம்ரூல் இயக்கத்தைத் தொடங்கினர். இதனால் ஈர்க்கப்பட்ட அன்னிபெசன்ட் இந்தியாவிலும் ஹோம்ரூல் இயக்கத்தைக் தொடங்கினார். 1916ல் இரண்டு ஹோம்ரூல் லீகுகள் நடைமுறைக்கு வந்தன. ஒன்று திலகரின் தலைமையில் பூனாவை தலைமையிடமாகக் கொண்டது. அது மகாராட்டிரம் வடகர்நாடகத்தின், மையப்பகுதிகள் மற்றும் பீகார் பிரதேசங்களில் தன்னுடைய கிளைகளைக் கொண்டிருந்தது. மற்றொரு ஹோம்ரூல் லீக் அன்னிபெசன்ட் அம்மையரின் தலைமையில் மதராஸை தலைமையிடமாகக் கொண்டிருந்தது. திலகர் மராட்டா மற்றும் கேசரி என்னும் பத்திரிக்கைகளை நடத்தினார். பெசன்ட் அவர்கள் 'நியு இன்டியா', 'காமன்வெல்த்', மற்றும் 'யங் இந்தியா' பத்திரிக்கைகள் மூலமாக பிரச்சாரம் செய்தார்.

## ஸ்ரீ நாராயண குரு தர்மபரிபாலன யோகம்

ஸ்ரீ நாராயண குரு அவர்கள் 1903ல் இந்த சீர்த்திருத்த அமைப்பை உருவாக்கினார். இவர் கேரளாவின் 'ஈளவு' என்ற இடத்தில் பிறந்தார். இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் என்றால் பிற்படுத்தப்பட்ட மற்றும் கொடுமைக்கு ஆளானா சமுதாயத்தை முன்னேற்றம் செய்வது. நாராயணகுரு (1854-1928) அவரின் நண்பர்களான பல்பு, குமாராசான், முக்கிய பங்கு வகித்தனர்



ஸ்ரீ நாராயண குரு

கேரளா சமுதாயத்தில் அதிகமாக சாதி பாகுப்பாடு இருந்தது. பலபிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்ட்ட சமுதாயத்தின் சமூக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அந்த கால கட்டத்தில் இந்த சமுதாயங்கள் எல்லோரும் பயன்படுத்த இருந்த குளம், கிணறுகளில் நீர் எடுக்க முடியாது. பாதைகள் மூலம் நடக்க முடியாது. செருப்புகள் அணியக்கூடாது. கோயில் உள்ளே செல்ல முடியாது. பெண்களின் உடைகள் மீது நிர்பந்தங்கள் போடப்பட்டது. இவர்களுக்கு பள்ளியிலும் அனுமதி இல்லை. இந்த காரணங்களை வைத்து ஸ்ரீ நாராயண குரு தர்மபரிலண யோகம் மூலம் சமூக எதிர்ப்பு போராட்டங்களை ஆரம்பித்தார். மனிதன் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு வழிவகுப்பதே இந்த அமைப்பின் நோக்கமாகும். மனித குலத்திற்கு ஒரே சாதி, ஒரே குலம், ஒருவனே தேவன் என்பது இதனை சாதிப்பதற்கு கல்வியே முக்கியம் என்றார். கீழ்சாதியினரின் அனுமதி மறுக்கப்பட்ட கோயிலுக்கு, எதிராக தனிக்கோயில் கட்டினார்.

நாராயணகுரு மற்றும் அவருடைய நண்பர்கள் 1924 ல் வைக்கம் சத்தியகிரகம் என்ற கோயில் நுழைவு போாரட்டத்தை நடத்தினர். இதில் சுயமரியதை இயக்கத்தை



www.textbookpdf.in

சேர்ந்த தந்தை பெரியார் கலந்து கொண்டார். குருவாயூர் கோயில் நுழைவு போரட்டம் மற்றொருநிகழ்ச்சியாகும்.

### பெரியார் :

20ம் நூற்றாண்டின் பிராமணர் அல்லாதார் போராட்டம் தென்னிந்தியாவில் ஆரம்பம் ஆனது. பெருபான்மையினராய் இருந்த பிரமாணர் அல்லாதார் அரசாங்க வேலையில் தமது மக்கள் தொகைக்கு தக்க இடஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று போராடினார், கர்நாடகம் சேர்ந்து பல மாநிலங்களில் இது ஒரு முக்கிய போராட்டமானது. பிராமிணர் தவிர்த்து மற்ற சமுதாயத்தினர் மீது செலுத்தப்பட்ட சமூக கட்டுப்பாட்டை எதிர்த்தார். இதற்கு முக்கிய காரணமானது ஆங்கில கல்வியின் தாக்கம். இத்துடன் ஆங்கிலேயர்கள் 1870 பிறகு கொண்டு வந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு பிராமணர் தவிர்த்த மக்களுக்கு தம் மக்கள் தொகையின் அளவைப் பற்றி அறிய முடிந்தது. தமிழ்நாட்டில் 1916ல் ஆரம்பமான நீதிக்கட்சி இந்த போராட்டத்தை நடத்தியது. நீதிக்கட்சி அரசியலாக பின் தாங்கிய பின்னர், இந்தப் போராட்டம் புதிய உருவம் பெற்றது. இது அதிக அளவில் புரட்சிகரமான போராட்டமானது. அந்தப் போராட்டத்தின் தலைமையை இ.வெ. ராமசாமி நாயக்கர் ஏற்றுக்கொண்டார். இது பின்பு சுயமரியாதை இயக்கம் என்று பெயர் பெற்றது. 1926ல் சுயமரியாதை இயக்கத்தை பெரியார் ஆரம்பித்தார். இவரை மக்கள் அன்புடன் 'பெரியார்' என்று அழைத்தனர்..



பெரியார்

©KTBS Not to be republished

பெரியார் தமிழ்நாட்டில் ஈரோட்டில் பணக்கார குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரியார் 1925ல் அதிலிருந்து வெளியேறினார், 'வர்ணாசி ர முறை'யின் பக்கம் உள்ளது என்று குற்றம் சாட்டினார். இதற்கு மாற்றமாக திராவிட இயக்கத்தை தோற்றுவித்தார். இது திராவிட இயக்கமானது. ஆசியர், பிராமணியர், என்ற சமுதாய உயர்வை இவர் எதிர்த்தார். தமிழ் மொழியை திராவிட மொழி என்றார். சமஸ்கிருத மொழி, இலக்கியத்தை எதிர்த்தார். மற்றொரு முக்கிய அமசம் என்றால் இராவணனை திராவிட தலைவன் என்று கூறி இராமனை ஆரியக் கடவுள் என்று நிராகரித்தார். பனாரசில் ஆன கசப்பான அனுபவத்தால் இராவண பரம்பரையை உயர்த்தி பேசினார். சாதி, மற்றும் ஆண்பெண் பாகுபாட்டை எதிர்த்து சமவுரிமையை போற்றினார்.

1924ல் கேரளாவின் வைக்கம் கோயில் நுழைவு போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். 1939ல் நீதிக் கட்சியின் தலைவாரானார். திராவிடர் கழகம் என்ற இயக்கத்தை தோற்றுவித்தார். மற்றும் நீதிகட்சி என்ற பத்திரிக்கையை வெளியிட்டார்.

இன்றைக்கும் தமிழ் நாட்டின் அரசியல் மற்றும் கலாச்சாரத் துறையில் பெரியார் உயிருடன் விளங்குகிறார். அங்குள்ள அரசியல் கட்சிகள் ''திராவிட'' என்ற பெயரை தம்முடைய கட்சிகளின் பெயர்களில் வைத்துள்ளதே சிறந்த ஆதாரம். அயோத்திதாஸ், டி.எம். நாயர், முதலியோர் ஆரம்பித்து உருவாக்கிய பிராமிணர் தவிர்த்த போராட்டத்தை



www.textbookpdf.in

பெரியார் கலாச்சார போராட்டமாக மாற்றினார். எல்லா வகையான துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு, சாதி, ஆண் பெண் வேறுபாடுகளிலிருந்து மீண்டு எல்லா சமயத்தின் சமமான சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே அவரின் வாழ்க்கை குறிகோளாக இருந்தது.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக :

1. 19வது நூற்றாண்டை __________ காலமென்று அழைக்கப்படுகிறது.
2. ராம் மோகன் ராய் அவர்கள் __________ பத்திரிக்கையை தொடங்கினார்.
3. பிரார்த்தனா சமாஜத்தை ஏற்படுத்தியவர் __________
4. வங்காள இளைஞர் போராட்டத்தைத் தொடங்கியவர் __________
5. சுவாமி விவேகாநந்தருக்கு குருவாகிருந்தவர் __________
6. ஆங்கிலோ ஓரியன்டல் கல்லூரி __________ என்னுமிடத்தில் துவக்கப்பட்டது.

### II. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி :

1. பிரம்ம சமாஜத்தின் போதனைகள் யாவை?
2. தயானந்த சரஸ்வதியவர்கள் 'வேதங்களுக்குத் திரும்புங்கள்' என்னும் முழக்கத்தை ஆய்வுசெய்க.
3. சத்ய சோதக் சமாஜம் கடைப்பிடித்த சீர்திருத்தங்களை விவரிக்க.
4. அலிகர் போராட்டத்தின் நோக்கங்களை ஆய்வு செய்க.
5. ராமகிருஷ்ண மிஷினின் நோக்கங்களை விவரி.
6. சுவாமி விவேகாநந்தர் எந்த சக்தியின் துண்டுதலாகிருந்தார். எவ்வாறு என்பதை விவரிக்க.
7. அனிபெசன்ட்டின் சீர்திருத்தங்கள் யாவை?
8. நாராயண குருவின் தர்ம பரிபாலனா யோகம் சங்கத்தின் கொடைகளைக் கூறுக.
9. பெரியாரின் போராட்டத்தின் முக்கிய அம்சங்களை பட்டியலிடுக.

### III. செயல்பாடு :

1. அருகிலுள்ள ராமகிருஷ்ணா ஆசிரமத்துக்குச் சென்று விவேகாநந்தரின் கண்ணோட்டத்தைப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும்.

### IV. திட்டம் :

1. நூல் நிலையத்திற்கு சென்று சமூக சீர்திருத்த புத்தகங்களை படி ஆசிரியரின் உதவியுடன் இணைய தளத்தின் மூலம் விவரங்களை சேகரிக்க.
2. சமுதாய சீர்திருத்திற்காக இன்று உழைத்துவரும் நிறுவனங்கள் பற்றி ஆசிரியருடன் விவாதியுங்கள்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# அத்தியாயம் - 6

# முதல் இந்திய சுதந்திரப்போர் - கி.பி 1857

## இப்பாடத்தை கற்றன் நீங்கள் அறிவன:

- முதல் இந்திய சுதந்திரப் போருக்கான காரணங்கள்
- பெரும் புரட்சிக்கான உடனடிக் காரணம்
- புரட்சியின் பரவலும் அதன் இயல்பும்
- புரட்சியின் தோல்வியும் அதன் விளைவுகளும்.

இந்தியாவில் ஆங்கில ஆட்சியை விரிவுபடுத்தும் நோக்கோடு ஆங்கிலேயர் துணைப்படைத்திட்டம் (Subsidiary Allieance) மற்றும் வாரிசு இழப்புக் கொள்கை (Doctrine of lapse) போன்றவற்றை அறிமுகப்படுத்தினர். இத்திட்டங்களின் மூலம் பல மாகாணங்கள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. இதனால் இந்தியர் மனமுடைந்து போயினர். அவர்கள் ஆங்கில நிர்வாகம் மீதும் கூட மனநிறைவுடையவில்லை. இந்த அதிருப்தி கி.பி 1857ம் ஆண்டின் புரட்சிக்கு அடித்தளமாக அமைந்தது. இந்தியர் இந்நிகழ்ச்சியை, முதல் இந்திய சுதந்திரப் போர் என அழைத்தனர். ஆனால் ஆங்கில வரலாற்றாசிரியர்கள் இதனை ‘‘சிப்பாய் கலகம்’’ (Sepoy mutiny) என அழைத்தனர்.

## முதல் இந்திய சுதந்திரப்போருக்கான காரணங்கள்

***அரசியல் காரணங்கள்:*** ஆங்கிலேயர் கொண்டு வந்த வாரிசு இழப்புக் கொள்கையால் அவகாசியிலிக் கொள்கையால் பல இந்திய அரசுகள் தங்களின் உரிமையை இழந்தன. சதாரா, ஜெய்ப்பூர், ஜான்சி, உதய்பூர் மற்றும் பல அரசுகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் விழுந்தன. டல்ஹௌசி பிரபு தஞ்சாவூர் நவாப் மற்றும் கர்நாடிக் அரசுகளின் அரச உரிமையை பறித்தார். முகல் கல்தான்கள், அயோத்தி நவாப், மற்றும் பல அரசர்களின் அரச மரியாதைகள் பிடுங்கப்பட்டன. அதனால், இவ்வரசர்களை சார்ந்திருந்த ஆயிரக் கணக்கான வீரர்கள் வேலையிழந்தனர். ஆங்கிலேயருக்கு எதிரான கி.பி. 1857ம் ஆண்டு புரட்சிக்கு இது ஒரு பெருங்காரணமாக அமைந்தது.

> ***அறிந்து கொள் :***
> *தத்து குழந்கைளுக்கு உரினம இல்லை. இச்சட்டத்தை ஆங்கிலேயர் காலத்தில் லார்ட் டல்ஹௌசி நடைமுறைப் படுத்தினார். எந்த சமஸ்தானத்தின் அரசன் தனக்கு குழந்தைகள் இல்லையென்றால் தத்து குழந்தைகளுக்கு கொடுக்க முடியாது.*

***பொருளாதார காரணங்கள் :***

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியால் இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. வாணிக நாடாக விளங்கிய இங்கிலாந்து தொழிற்சாலைகளின் அச்சாணியாக விளங்கியது. இந்திய கைவினைஞர்கள் வேலையற்றுப் போயினர். முதற்கட்டமாக, நெசவுத்தொழில் மற்றும் கம்பளி தொழிற்சாலைகள் நலிவுற்றதால், மக்கள் வேலை இழந்தனர். பாதிப்பினால் இந்திய குடிசைத் தொழிலுக்கு ஒரு மரண அடி விழுந்தது. இங்கிலாந்தில் இந்திய பொருட்களுக்கு

©KTBS Not to be republished



www.textbookpdf.in

அதிகவரியை விதித்தனர். ஜமீன்தாரி முறையால், நிலக்கிழார்கள் அரசுக்கும் விவசாயிகளுக்கும் இடையே பணம் பெறும் தரகர்களாக செயல்பட்டு விவசாயிகளை ஏய்த்தனர். வரியை வசூலிக்கும் வட்டங்கள் (தாலுகா) பெற்றிருந்த வரிவசூலிக்கும் உரிமை தடுக்கப்பட்டது. ஒரு இனாம் குழு (Inam commision) அமைக்கப்பட்டதால், இனாமாக வழங்கப்பட்ட அனைத்து நிலங்களும் மீண்டும் பறிமுதல் செய்யப்பட்டன. இதனால், விவசாயிகள் அவமானப் படுத்தப்பட்டு, பல நிதி நெருக்கடி தொல்லைகளை அனுபவித்தனர். இதுவும் ஆங்கில அரசை எதிர்த்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட துண்டியது.

***நிர்வாகக் காரணங்கள் :*** ஆங்கிலேயர் புதிய உரிமை வழக்கு சட்டம் மற்றும் குற்றச் சட்டம் ஆகியவற்றை செயல்படுத்தினர். இச்சட்டங்கள் இந்தியர்களுக்கு மட்டுமே நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆங்கிலம் நீதிமன்றங்களின் தொடர்பு மொழியாயிற்று பெரும்பாலான சமயங்களில் ஆங்கில நீதிபதிகள் ஆங்கிலேயருக்கு சாதகமாகவே தீர்ப்பளித்தனர். பொது மக்களால் புதிய விதி முறைகளை புரிந்துகொள்ள முடியவில்லை.

***இராணுவக் காரணங்கள் :*** ஆங்கிலப் படையில் பணியாற்றிய பெரும்பாலான வீரர்கள் இணைந்து போராடினால் இந்திய மண்ணிலிருந்து ஆங்கிலேயரை விரட்டியடிக்க முடியும் என திடமாக நம்பினர். அச்சமயத்தில் ''ராயல் என் பீல்டு'' என்ற புதிய தோட்டாக்களையுடைய குழல் துப்பாக்கிகள் வீரர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் இத்தோட்டாக்கள் பசு மற்றும் பன்றி கொழுப்புகளால் தடவப்பட்டது. என்ற வதந்தி பரவியது. இந்துக்கள் பசுவை புனிதமாக போற்றினர். இசுலாமியர்களுக்கோ பன்றி கடவுள் சாப சாத்தானாக கருதப்பட்டது. இந்நிகழ்ச்சி பெரும் புரட்சிக்கான உடனடிக்காரணமாக அமைந்தது.

இந்த வதந்தி பரக்பூரில் இருந்த படைவீரர்கள் மத்தியில் தாளமுடியாத அதிருப்தியை ஏற்படுத்தியது. பசு மற்றும் பன்றி கொழுப்பு தடவிய ராயல் என் பீல்டு தோட்டாக்களை மூடியுள்ள உறையைப் பற்களால் கடித்து திறக்க வேண்டும் என்ற உத்தரவை ஆங்கிலேயர் ஆணையிட்டபோது இந்திய வீரர்கள் ஆணையை எதிர்த்து உயர் அதிகாரிகளுக்கு எதிராக புரட்சியில் ஈடுப்பட்டனர். அந்த சமயத்தில் மங்கள் பாண்டே என்ற இந்திய வீரர் சீறிப்பாய்ந்து ஆங்கில அதிகாரி ஒருவரைசுட்டுக் கொன்றார். தொடர்ந்து, அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு தூக்கிலேற்றப்பட்டார்.



***தாத்தியா தோப்***

ஆங்கிலேயரின் பலம் வாய்ந்த இராணவுத்தளமாக மீரட் விளங்கியது. ஆங்கிலேயர் கொழுப்பு தடவிய தோட்டாத் துப்பாக்கிகளை பயன்படுத்துமாறு இந்திய வீரர்களுக்கு அணையிட்டபோது அவர்கள் அவ்வாணையை மறுத்தனர். வீரர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அதனால் மீரட்டில் புரட்சி வெடித்தது. இந்திய வீரர்கள்



www.textbookpdf.in

சிறைக் கூட்டத்திற்கு விரைந்து சென்று சிறைப்படுத்தப்பட்ட வீரர்களை விடுவித்தனர். இது விடுதலைப் போருக்கான தீப்பொறியாக மாறியது பிறகு வீரர்களின் கூட்டம் மீரட்டிலிருந்து டில்லிக்கு விரைந்தனர். அங்கு அவர்கள் செங்கோட்டையை முற்றுகையிட்டு முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதுர்ஷாலை இந்தியாவின் பேரரசர் என பறைசாற்றினர். போராட்ட வீரர்கள் இந்தியாவின் பலப்பகுதிகளிலிருந்து டில்லியை சென்றடைந்தனர். அதனால் போராட்டம் மிகவும் ஆபத்துக்குறியதாயிற்று. அது காட்டுத் தீயைப்போல கான்பூர் மற்றும் ஜான்சி போன்ற இடங்களுக்கும் பரவியது.

கான்பூரில் நானாசாகிப் போராட்டத்தில் குதித்தார். தாந்தியா தோபி அவருக்கு துணையாக செயல்பட்டார் ஜான்சியில், இராணி லட்சுமிபாய் தலைமையில் புரட்சி எழுந்தது. கான்பூர் அங்கிலேயர் வசமானபோது தாந்தியாதோபி ஜான்சிக்கு விரைந்து ராணி லட்சுமிபாய்க்கு உதவிபுரிந்தார்.


ஜான்சி ராணி லட்சுமியாப்

புரட்சியின் தீப்பிழம்பை லக்னோவிலும் உணர்ந்தனர். இறுதியாக, லக்னோ அங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது. இப்போர் யமுனை நதியின் தென்கரை வரை பரவியது. அதன் விளைவாக, ஜான்சியிலுள்ள வீரர்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். வாரிசு இழப்புக் கொள்கையால் சீற்றங் கொண்ட, ஜான்சிராணி லட்சுமிபாய் ஆங்கிலேயருக்கு எதிராக போரை அறிவித்தார். அவள் தன்னுடைய வளர்ப்பு மகனை முதுகில் சுமந்தவாறே போரில் பங்கேற்றார். அவள் குவாலியரை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தாள். மீண்டும் ஆங்கிலேயருக்கு எதிராக போர் நடைபெற்றபோது ஜான்சி ராணி போர்களத்தில் வீரமரணமடைந்தாள். விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றும் கூட பெருமைக்குரிய இடத்தை ஜான்ஸி ராணி வகிக்கிறார்.

## புரட்சியின் தோல்விக்கான காரணங்கள்

பல்வேறு காரணங்களால் கி.பி 1857ல் ஏற்பட்ட முதல் இந்தியச் சுதந்திரப்போர் தோல்வியுற்றது. இப்போராட்டம் இந்தியா முழுவதும் பரவவில்லை. இப்போராட்டம் தனிப்பட்டவர்களின் நலனைப் பாதுகாப்பதையே நோக்கமாக இருந்ததே ஒழிய இந்தியாவிற்கு விடுதலையைப் பெறவேண்டும் என்பதில் உறுதியற்று இருந்தனர். ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டமாக அமையாதது எதிர்பாராத காரணங்களுக்காக புரட்சி வெடித்தது. ஆங்கிலப் படையிடமிருந்த உறுதியான ஒற்றுமை இந்தியவீரர்களிடம் இல்லாததால் புரட்சி தோல்வியுற்றது. இந்தியர்களிடம் சிறப்பான தலைமையும் வழிகாட்டுதலும் இல்லை. போர்க்கலை, சிறப்பு, அறிவுத்தன்மை, தகுந்த தலைமை ஒழுக்கம் மற்றும் வழிகாட்டுதல் போன்ற சிறப்பியல்புகளை இந்தியர் கொண்டிருக்கவில்லை. பல மாகாண அரசர்கள் தங்களுடைய நம்பிக்கையை ஆங்கிலேயரிடம் காட்டுவதற்காக இப்போராட்டத்துக்கு ஆதரவளிக்கவில்லை. இந்திய வீரர்கள் ஆங்கிலேய இருப்பிடங்களை தீயிட்டு கொளுத்தி கொள்ளையடிக்கும் செயல்களில் ஈடுபட்டதால் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்தனர்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

### புரட்சியின் விளைவுகள் :

இவ்விடுதலைப் போராட்டம் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முறைக்கு முடிவு கட்டப்பட்டு, ஆட்சி நிர்வாகம் இங்கிலாந்து பேரரசின் கைக்கு மாற்றப்பட்டது. நிர்வாக ஆட்சிபொறுப்பு ஆங்கில பாராளுமன்றத்திலுள்ள இந்திய உள்துறை செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. கி.பி 1858ல் இங்கிலாந்து பேரரசி ஓர் அறிக்கையை வெளியிட்டார். இது இந்தியாவிற்கான பேரறிக்கையாக (Magna carta) அமைந்தது. அவ்வறிக்கையில் அடங்கிய குறிப்புகள் பின்வருமாறு.

- கிழக்கிந்திய கம்பெனி மற்றும் அரசர்களுடன் ஏற்பட்ட உடன்படிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- பிரதேச ஆட்சிவிரிவுத்திட்டங்கள் கைவிடப்பட்டன.
- இந்தியர்களுக்கு சிறப்பான ஆட்சி வழங்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.
- சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்.
- ஆங்கில அரசு, சமயப் பொறுமையை ஏற்படுத்தி இந்தியர்கள் மதக்கொள்கையில் குறுக்கிடுவதை நிறுத்திக்கொண்டனர்.

இந்தியர்களின் ஆதரவு, நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் ஒத்துழைப்பு அல்லாமல் அமைதியான ஆட்சியை ஏற்படுத்த முடியாது என்று ஆங்கிலேயர் உணர்ந்தனர். இந்தியர்களின் நாட்டுப்பற்று தூண்டியெழுப்பப்பட்டது.

ஆங்கிலேயர்கள் பக்கம் இருந்த இந்தியர்களின் எண்ணங்களை அறிந்து கொள்ள வழிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இதற்குக் காரணமென்று ஆங்கிலேயர் அமைதியாக இருந்தனர். இவ்வாறு இந்நிகழ்வுக்குப் பிறகு சட்டம் இயற்றும் செயலாக்கங்களில் இந்தியர்களை உட்கொண்ட (Policy of Association) என்னும் விதியை நடைமுறைப்படுத்தினர். இது இந்தியரின் விடுதலைக்கு புதிய வழிமுறையை அளித்தது. இந்தியர்கள் இதற்கு பின் போராட வழிமுறையை தேடிக் கொடுத்தாவது தவிர்க்க முடியாத காணப்பட்டது.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. கி.பி 1857ம் ஆண்டு பெரும் புரட்சியை ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் ____________ என்று குறிப்பிடுகின்றன.
2. டல்ஹௌசி பிரபு கொண்டு வந்து திட்டம் ___________ ஆகும்.
3. ___________ என்பவர் கி.பி 1857ம் ஆண்டு பெரும் புரட்சியின் போது ஆங்கில மேஜர் ஜெனரலை சுட்டுக்கொன்றார்.
4. ஜான்சி ராணி ஆங்லேயருக்கு எதிராக ________ போரில் தன்வசம் கொண்டு வந்தாள்.

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

## II. குழுவாக கலந்துரையாடி விடைதருக :

1. வாரிசு இழப்புக் கொள்கையால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? விவரி.
2. கி.பி 1857ம் ஆண்டு பெரும்புரட்சிக்கான பொருளாதார காரணங்கள் யாவை?
3. கி.பி 1857ம் ஆண்டு பெரும் புரட்சியின் போது இந்திய வீரர்களின் சமய உணர்வை பாதித்த காரணிகள் யாவை?
4. முதல் இந்தியச்சுதந்திரப் போருக்கான உடனடிக்காரணம் என்ன?
5. பெரும் புரட்சியின் தோல்விக்கான காரணங்களை பட்டியலிடுக.
6. கி.பி 1858 ல் இங்கிலாந்து பேரரசியின் பேறிக்கையின் சிறப்புக்குரிய குறிப்புகள் (உறுதி மொழிகள்) யாவை?

## III செயல்பாடுகள்:

1. இந்திய வரைபடத்தில் வாரிசு இழப்புக் கொள்கையால் ஆங்கில அரசோடு இணைக்கப்பட்ட இந்திய அரசுகளை குறிக்கவும்.
2. கி.பி 1857 ம் ஆண்டு பெரும் புரட்சி முதல் இந்தியச் சுதந்திரப் போர் என்பதை வலியுறுத்த பட்டிமன்றம் ஒன்று ஏற்பாடு செய்க.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

## அரசியல்

## அத்தியாயம் - 1

# இந்தியாவின் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வுகளும்

**நாம் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி இப்பாடத்தில் கற்போம்.**

- வேலையில்லா திண்டாட்டம்
- ஊழல்
- பாகுபாடு (பாலினம், சாதி, வட்டாரங்களின் ஏற்றத்தாழ்வு
- வகுப்பு வாதம்
- தீவிரவாதம்
- கார்ப்பரேட் தந்திரங்கள்

©KTBS Not to be republished

நாம் 1947 லிருந்து பலவித இன்னல்கள் மற்றும் மிகப் பெரிய பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளோம். அந்த பிரச்சனைகளை சரியான யோசனை நல்ல ஆட்சி முறையின் மூலம் சரிபடுத்த வேண்டியுள்ளது. நமது மக்களாட்சி முறையில் மத்திய, மாநில, மற்றும் உள்ளாட்சி மட்டத்தில் அரசாங்கம் உள்ளது. இந்த பிரச்சனைகளை சரிபடுத்தும் முறையில் மக்களின் உதவியும் மிக முக்கியம்.

எனவே நமது நாடு எதிர் கொள்ளும் பிரச்சனைகள் எவை என்று அறிந்து கொள்வது நமது கடமையல்லவா? ஆம் நாம் இந்த எல்லா தேசிய விசயங்களை பற்றி அறிந்து கொண்டு அந்தப் பிரச்சனைகளை தீர்ப்பது எவ்வாறு என்று கண்டுபிடிக்க வேண்டும்.

இவைகளில் அதிக அளவில் மனிதனால் ஏற்படும் பிரச்சனைகள், மற்றும் தேசிய துயரங்கள், எனவே நாம் அவற்றிற்கு சரி என்னும் முறையில் மனிதாபிமான தீர்வுகளை கண்டுகொள்ள வேண்டும். நல்ல சட்டங்கள், சமுதாய முன்னேற்றம், சிறந்த நிர்வாகம், மற்றும் பாகுபாடற்ற நீதி, மற்றும் மக்களின் உதவியுடன் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அப்படிப் பட்ட பிரச்சனைகளை பற்றி அறிவோம்.

***1. வேலையில்லா திண்டாட்டம் :*** வேலையில்லா திண்டாட்டம் என்றால் வேலை செய்யும் திறமையுள்ள நபருக்கு வேலை கிடைக்காமல் இருக்கும் நிலையாகும். பாரதம் இன்று மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. எனவே வேலை இல்லா பிரச்சனை ஒரு சவலாகவே உருவாகியுள்ளது. சாதாரணமாக அளவு கடந்த மக்கள் தொகை மற்றும் அதிகமான தொழில்நூட்பத்தை பயன் படுத்துவதால் வேலை இல்லா திண்டாட்டத்திற்கு முக்கிய காரணங்கள் என்று குறிப்பிடபட்டுள்ளது. இவையன்றி இயற்கை வளங்களின் குறைபாடு, வேளாண்மை மீது அதிகமான சார்பு, குடிசைத் தொழில்களின் அழிவு, கைத்தொழில் சார்ந்த கல்வி இல்லாமையும், வேலையில்லா திண்டாட்டத்திற்கு மிகப் பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவில் 2011ன் மக்கள் தொகையின்படி வறுமையின் சதவிகிதம் 7.20 உள்ளது. வேலையில்லாத திண்டாட்டப் பிரச்சனை தினந்தோறும் அதிகமாக கொண்டுள்ளதை குறிப்பிடுகிறது.

இவ்வாறு தலைவிரித்தாடும் வறுமைப் பிரச்சனைகளை குறைக்க இந்திய அரசாங்கம், மற்றும் நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களும் பல்வேறுவகை



www.textbookpdf.in

வேலைகளை உருவாக்கிடும் முறைகளை அமுல்படுத்தியுள்ளது. இவைகளில் மக்களுக்கு வேலையை கொடுக்கும் கைத்தொழில் சார்ந்த கல்வியை கொடுப்பது. சொந்த தொழில் உருவாக்க தேவையான மூலதனத்தை கடன் வடிவில் கொடுப்பது மற்றும் முடிந்தவரை உதவி தொகை கொடுப்பதன் மூலம் சொந்த தொழில் முனை வோர்களை ஊக்கப்படுத்தும் முயற்சியும் நடைபெறுகிறது. ஆனால் உண்மையாக கைத்தொழில்கள் மற்றும் மற்ற பல சொந்த தொழில்கள் விளம்பர உலகில் கைத்தொழிலில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சந்தையில் போட்டியிலும் தோல்வியடைந்துள்ளது. இந்தியாவில் பிரச்சனைகளை மேலும் அதிகமாக்கியுள்ளது. அதனால் இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வேண்டும் என்றால் நவீன தொழில் சந்தையில் போட்டியிட்டு தொழில் பெறும் வகையில் தகுதியை ஏற்படுத்த தேவையான தொழில் நுட்ப கல்வியை கொடுப்பது அவசியமாகும். மற்றொரு வகையில் தேசத்தின் எல்லா நபர்களும் ஒன்றல்ல மற்றொரு தொழிலை தொடங்க ஊக்குவிக்கும் சமுதாய மாற்றத்தை செய்யும் தொழில் கல்வியை கொடுப்பதால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்.

***ஊழல் :*** இந்தியாவில் பொதுவாழ்வில் ஊழல் ஒரு முக்கிய பெரிய நோயாகவுள்ளது. சாதாரணமாக இது பொதுவாக மற்றும் சமுதாயத்தின் எல்லா துறைகளிலும் பரவலாக பரவியுள்ளது. ஊழல் என்றால் லஞ்சம் அல்லது வேறு ஏதோ வகையில் சட்டத்திற்கு விரோதமாக செயல்படல் என்று பொருள். இது சரியான மற்றும் நேர்மையான செயல்பாட்டினால் தேவையான கல்விவைக்குட்பட்டதை குறிக்கிறது. பொதுவாழ்க்கையில் அதிகாரம் மற்றும் புகழ், போட்டி மற்றும் தவறான முறையில் பயன்படுத்தல் என்று உறவாடி எல்லா விதிமுறைகளையும் புறந்தள்ளி சொந்த காரணத்திற்கும் லாபத்திற்கும் அதிகாரத்தை பயன்படுத்தலை ஊழல் என்று கூறுவார்கள். இது ஒரு தொற்றுநோயைப் போல் பொதுவாழ்க்கையில் எங்கும் பரவியுள்ளது.

ஊழல் பலவித மோசமான பரிமாணத்தை பொதுவாகவும் மற்றும் சொந்தமாகவும் ஏற்படுத்தும். இது நாட்டின் மீது சமுதாயத்தின் மீதும் பொருளாதார வகையிலும் அரசியலிலும் தீய விளைவை ஏற்படுத்தும் இன்னொரு வகையில் கூறுவதென்றால் ஊழல் சமூகவிரோதமானது. மற்றும் பொருளாதார முறையின் எதிரியாகும், மற்றும் அரசியல் ரீதியாக திறமையற்ற மற்றும் மனசாட்ச்சிக்கு தவறு என்பதாகும். மதிப்புகள் மற்றும் ஆட்சி முறையில் லஞ்சம் சாதிமுறை, துரோகம் இவையெல்லாம் ஊழல் துறையில் வரும் சங்கதிகள். தேர்தல் சமயத்தில் இது போன்ற ஊழல், மக்களின் பொதுவாழ்வில் நுழைந்து வருகிறது.

அரசியலில் ஊழல் என்பது தண்டனைகளுக்கு வழிவகுக்கிறது. இது பொதுமக்களின் சேவைத்துறையில் அதிகாரத்திற்காக ஏற்படும் தீங்குகள், வஞ்சனைகளுக்கு வழி வகுக்கும். வரிஏய்ப்பு, முறையற்ற பத்திரங்கள், கள்ளக்கடத்தல், பொருளாதார ஏய்ப்பு, மோசடி, வெளிநாட்டு சட்டமுறையை மீறல், போன்றவை லஞ்சத்தில் சேரும்.

ஊழலை வெறும் கிண்டல் செய்து அதனுடன் சமாதனம் செய்து கொண்டு வாழ்வதால் இதனை ஒழிப்புது சாத்தியமற்றது. ஒரு நபருக்கு மற்றும் சமூக பாதுகாப்பு, மனசாட்சியின் மூலமே ஊழலை ஒழிக்க முடியும். பலமுறை மனித சமுதாயத்தின் சுயநலம், ஆபத்திலிருந்து விடுபடும் கணக்கு, சொந்த லாபம் இவையெல்லாம் லஞ்சத்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

திற்கு வழிவகுக்கிறது.

ஊழலை ஒழிப்பதற்கு முக்கியமாக அரசியல் சக்தி, மற்றும் பொதுமக்களின் உதவியும் தேவை. இன்னொரு வகையில் கூறுவதென்றால் நல்ல அரசியல் தலைமை, நேர்மையான அதிகாரிகள், மற்றும் அரசியல் ஞானம், பொது அறிவு கொண்ட மக்களுடன் சேர்ந்து ஊழலை எதிர்க்கலாம். ''லோக்பால்'' ''லோகாயுத்த'' போன்ற அமைப்புகள், ஊழலை தடைசெய்யும் பலம் கொண்டவை. கல்வி நிலையங்கள், மற்றும் சமுதாயத்தின் தலைவர்கள் இந்த வகையில் ஊழலை எதிர்க்கலாம். அரசாங்க அலுவகங்களில் சி.சி. கேமரா அமைப்பது, மற்றும் அலுவலகத்தின் செயல்களை வேகப்படுத்தல், லஞ்சத்தில் ஈடுபட்டோரை கடினமாக தண்டிப்பது. நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் முடிந்தவரை விரைவாக நீதிகளை (தீர்ப்பு) கொடுப்பதன் மூலம், ஊழலை தடைகட்ட எல்லாவித ஆயுதங்கள் மூலம் ஊழலை தடுக்கலாம்.

***பாகுபாடு:*** பாரத சமுதாயத்திற்கு, பாலினம், சாதி மற்றும் பிரதேசபாகுபாடுகள் மிகுந்த சவாலாக பரிணமித்துள்ளது. ஆண் இந்திய சமூதாயம். பாலின பாகுபாடு கொண்டது. முதன்மையான சமுதாயத்தை உருவாக்குபவனாக உள்ளான். ஆண் மற்றும் பெண்ணின் இடையே சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் பங்கில் வேறுபாடுகள் உள்ளன. இந்திய அரசாங்கம் பாலின வேறுபாட்டை போக்குவதற்கு உத் தேசமாக பெண்களுக்கு, கல்வி வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு கொடுத்துள்ளது. மற்றும் அரசியல் ரீதியாகவும், உள்ளாட்சியில் நிர்வாகிகளில் $\frac{1}{3}$ க்கும் குறைவில்லாமல் இட ஒதுக்கீடு செய்துள்ளது. கர்நாடகத்தில் உள்ளாட்சி நிர்வாகத்தில் தாழ்த்தப்பட் டோர், பழங்குடியினர், மற்றும் பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டும் மற்றும் இடஒதுக்கீடு அல்லாத மொத்த இடங்களில் பிரத்யோகமாக 50க்கும் குறைவாக இல்லாத இடங்களை கொடுத்துள்ளது. இதன் மூலம் ஆண் மற்றும் பெண்ணின் இடையேயான பாகுபாட்டை குறைக்க முயன்றுள்ளது.

பாலின பாகுபாட்டைப் போன்றே சாதி அடிப்படையில் இந்தியாவின் பழமையான சமூகத்தை உருவாக்கலாம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மூன்றாம் பாகத் தில் அடிப்படை உரிமைகள் பட்டியலில் சமஉரிமை, மற்றும் சுதந்திர உரிமைகளை கொடுப்பதன் மூலம் சாதியை அடிப்படையாக கொண்டு பாகுபாட்டை முறையாக குறைக்க முறையான செயல்பாட்டை பயன்படுத்தியுள்ளது. ஆனால் உண்மையாக இந்தியா சமுதாயத்தில் சாதிமுறை, வழக்கங்கள் தொடர்ந்து முன்னேறுகிறது. இந்த அமைப்பு முறையை ஒழிக்க வெறும் சட்டத்தின் மூலம் முடியாது. இதற்கு முன்னே னாடியாக சமுதாயத்தில் நிறைந்த மனத்துடன் கூடிய சமுதாயம் உருவாக்கும் விருப்பத்துடன் செயல் பட்டால் மட்டும் முடியும். அப்பொழுது இந்த சாதிய அமைப்பு முறையை ஒழிக்க முடியும்.

பாலின பாகுபாடு மற்றும் சாதிபாகுபாட்டைப் போன்றே பிரதேச பாகுபாடு இந்திய சமுதாயத்திற்கு ஒரு சவாலாக பரிணமித்துள்ளது. முன்னேற்றம் என்ற பெயரில் தேசத்தின் பகுதிகளை முன்னேற்றம் அடைந்துள்ளது. சில பகுதிகள் பின்தங்கியுள்ளது. இந்த வகையில் பிரதேச பாகுபாட்டை சரிபடுத்தும் முயற்சியினால் இந்திய அரசியல் சட்டம் 371ன் விதிப்படி A லிருந்து J வரை திருத்தத்தின் மூலம் சேர்க்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பின்தங்கிய பிரநாடுகளுக்கு விசேஷமாக இடமளிக்கப் பட்டுள்ளது.



www.textbookpdf.in

©KTBS Not to be republished

ஆனாலும் பிரதேச பாகுபாடு இன்று ஒரு பெரிய சவாலாக வளர்ந்து சில மாநிலங்களில் தனிமாநில கோரிக்கை உருவாக்கிருப்பதை சிந்திக்கும் போது, பிரதேச பாகுபாட்டை முழுமையாக குறைக்க வேண்டியுள்ளது. இதற்கு முன்னோடியாக கர்நாடகத்தில் பிரதேச பாகுபாட்டை போக்க 2001ல் மறைந்த எம்.நஞ்சுண்டப்ப, குழு கர்நாடகத்தில் பிரதேச பாகுபாட்டை குறித்து அறிக்கையை கொடுத்தது. இதற்கு முன்னோடியாக அரசியில் விதி 371(J) சேர்ப்பதன் மூலம் கர்நாடகத்தில் பிற்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு விசேச இடங்களை கொடுத்தது.

**வகுப்பு வாதம் :** வகுப்பு வாதம் அல்லது சமய வாதம் நம் இந்திய சமுதாயத்தில் முக்கிய பிரச்சனையாகவுள்ளது. மதத்தின் அடிப்படையில் சமுதாயத்தில் விரிசல் மற்றும் அந்தநிலத்தில்அடையாளம்படுத்திக்கொண்டுபரஸ்பரம்விரோதசக்திகளைபலப்படுத்திக் கொள்வதை வகுப்பு வாதம் என்று அழைக்கப் படுகிறது. இது சமுதாயத்தில், பிளவு, அவநம்பிக்கை, பொருளாதார வேறுபாடு, மற்றும் அரசியல் போட்டி மனப்பான்மையை உருவாக்குகிறது மற்றும் அச்சுறுத்தல் சூழ்நிலையை உருவாக்கிறது. வகுப்புவாதம் சில சமயம் சமுதாயத்தில், கூட்டாக செயல்படுதல் பொருளாதார வேறுபாடு மற்றும் அரசியலில் போட்டி ஏற்படுத்துகிறது. இந்தியாவை பொறுத்தவரை இந்த வகுப்பு வாதம் தேசத்தின் ஒருமைப்பாடு மற்றும் சமத்துவத்திற்கு பங்கம் ஏற்படுத்தும். அபாய சக்தியாக உள்ளது. இது சமுதாயத்தின் நிம்மதியை கெடுப்பதோடு நபரின் உயிருக்கும் மற்றும் சொத்துக்களையும் நாசப்படுத்துகிறது. இந்த சமயவாத குழுக்களுக்கிடையை முன்வி ரோதம் கொலை போன்ற தகதாவை நிகழ்வதற்கு காரணமாகிறது.

வகுப்பு வாதம், சமய குழுக்களின் பாதுகாப்பு சக்தி, தேசிய பாதுகாப்பு சக்தியை விட அதிகபலம் வாய்ந்தது என்று கூறிக்கொள்கிறது. நாட்டில் வகுப்பு வாதத்திற்கு முன்னோடியாக தம்முடைய பாதுகாப்புசக்திகளை பலப்படுத்தும் முயற்சிகளை வகுப்பு வாதம் செய்கிறது. தங்களுடைய மதங்களை பிரசாரம் செய்கிறது. வேறு மதங்களை வேறு வகையாக நோக்கும் படியாக, சந்தர்ப்பங்களை, ஏற்ப்படுத்துகிறது. இதனால் நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படுகிறது. இது போன்ற நாட்டின் ஆதங்கமான இந்த சிக்கலை நீக்க அதிக சிரமம் தேவைப்படுகிறது.

வகுப்பு வாதத்தை தடைசெய்ய முன்னெச்சரிக்கை தேவை. ஒருமைபாடு, எல்லா மக்களையும் சம நோக்கு பார்வையில் காண்பது. சாதிபாகுபாடு கடந்து மனபாவத்துடன் சமூக வாழ்வில் எல்லா துறைகளிலும் புகழ், தேசிய சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் போன்றவை மதவாதத்தை முடக்கும் உபாயங்கள். சமுதாயத்தை மதத்தின் அடிமட்டத்தில் பிரிப்பது, மற்றும் சமுதாயம் மற்றும் பொருளாதார வேறுபாடு, தோரனை, வகுப்புவாதத்தில் பிளவு ஏற்படுத்த முடியும். அதற்கு பதிலாக நம் இந்தியாவின் எல்லா மத சம்பிரதாயங்கள் மக்களின் சாதாரணமாக மற்றும் ஆரோக்கியமான தேசிய சிந்தனைகளை வளர்க்க முயற்சிக்கலாம். மதத்தின் அடிப்படையான ஒருமைபாடு, சமவுரிமை, சகோதரத்துவம், பண்பாடு, போன்ற வற்றிக்கு இடையூறு ஏற்படாவண்ணம் தடைசெய்ய வேண்டும். சமயசார்பற்ற தத்துவத்திற்கு உடன்படும் மனோதைரியம் வேண்டும்.

**பெண்களின் நிலைப்பாடு :** சுதந்திரத்திற்கு முன்பிருந்தே மகளிரின் சாதனைகளை குறிப்பிடலாம். ஜான்சிராணி, கித்தூர் ராணி சென்னம்மா, அன்னிபெசன்ட்,

©KTBS Not to be republished



www.textbookpdf.in

கஸ்தூரிபா காந்தி, சாவித்திரிபாபுலே, சரோஜினிநாயுடு, போன்றவர்களை நினைவுகூறலாம். இன்று பெண்கள், மருத்துவம், பேராசிரியர், எஞ்சினியர், பைலட், விண்வெளிவீரர், போலிஸ், அரசியல் பாதுகாப்பு போன்று எல்லாத் துறைகளிலும் செயல்படுகிறார்கள். ஆனாலும் பெண்களின் நிலை இன்னும் நன்றாக வேண்டும். சமுதாய முறைகள், வறுமை மற்றும் கல்வியறிவற்ற தன்மை போன்ற காரணங்களால் மகளியரின் நிலைகள் இன்னும் ஆரம்ப நிலையிலே உள்ளது. இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. மகளிரின் கல்வி மற்றும் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறையை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் மகளிரின் ஆரோக்கியம், கல்வி மற்றும் சமூகத் துறையில் மகளிரின் நிலைப்பாடுகளை பலப்படுத்துகிறது. மகளிரை ஈர்க்கும் வகையில் பெண் கல்வி, குழந்தைத் திருமணம் தடைச் சட்டம், வரதட்சனை ஒழிப்புசட்டம், போன்ற நிகழ்ச்சிகளை உருவாக்கிருக்குகிறது. கர்நாடக அரசு ``ஸ்திரி-சக்தி`` என்ற நிகழ்ச்சியை உருவாக்கி கிராமப்புற பெண்களின் முன்னேற்றத்திற்கு முயன்றுள்ளது.

சுய தொழில் செய்வதற்காக கடன் உதவி, மற்றும் மானியம், கொடுக்கும் நிகழ்ச்சி களை ஏற்படுத்தியுள்ளது. மகிளாமண்டலங்கள், இளைஞர்களின் மண்டலங்கள், ஸ்திரி-சக்தி குழுக்கள், சுயஉதவி குழுக்கள், மகளிர் உதவி குழுக்கள், மகளியரின் பன்முக முன்னேற்றாத்திற்காக நிகழ்ச்சிகளை ஏற்படுத்துகிறது. மாநிலம் மற்றும் தேசிய அளவில் மகளிரின் அமைப்பை உருவாக்கி, பெண்களின், குற்றம் குறைகளை இது பரிசிலித்து நீதி கிடைக்க செய்கிறது. சட்டசபை மற்றும் பாராளுமண்றத்தில் அரசியலில் மகளிருக்கு இடஒதுக்கீடு கொடுக்கும் படி முயற்ச்சி நடைபெறுகிறது. தற்பொழுது உள்ளாட்சியில் பெண்களுக்கு இடஒதுக்கீடு கொடுக்கப் பட்டுள்ளது. அரசாங்க வேலைகளிலும் மகளிருக்கு குறிப்பிட்ட விதத்தில் இடஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது.


திருமதி இந்திரா காந்தி முதல்பெண் பிரதமமந்திரி


பிரதிபாசிங் பாட்டில் முதல் பெண் குடியரசுத் தலைவர்


சரோஜினிநாயுடு முதல் பெண் முதல் அமைச்சர்


சுசிதா கிருபானினி முதல் பெண் முதலமைச்சர்

இந்தியாவில் திருமதி இந்திராகாந்தி பிரதமராகவும், பிரதிபா சிங் பட்டேல் அவர்கள் ஜனாதிபதியாகவும், பதவி வகித்தனர். பல மகளிர்கள், கவர்னராக, முதல் மந்திரிகளாகவும், பணியாற்றியுள்ளனர், வெளிநாட்டு தூதுவராகவும், மற்றும் பல உயர்ந்த பதவிகளை வகித்துள்ளனர். இன்னும் வேலையில் மகளியருக்கு குறிப்பிட்ட இடஒதுக்கீடு கொடுக்கப் பட்டுள்ளது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

***தீவிரவாதம் :*** தீவிரவாதத்தை பிரிவினை வாதம் அல்லது பயங்கரவாதம் என்று அழைக்கலாம். இது ஒருபலபிரயோகத்தின் அழுத்தத்தின் தந்திரம், அரசியல், தார்மீகம், அல்லது இராணுவ நிலையில் குறிகொண்டுள்ள தீவிரவாதிகள் நபர்களுக்கு மற்றும் சொத்துக்களுக்கு மிகுந்த சேதத்தை ஏற்படுத்துவார்கள். அதனால் பயங்கரவாதத்தால் மனதளவில் வேதனையை ஏற்படுத்தும். சமூக கலாச்சார சங்கங்களுக்கும், அது போன்றே அரசாங்கத்திற்கும் நாசத்தின் அலை ஏற்படுகிறது. பயங்கரவாத சங்கங்களின் உத்தேசம் பயமான சூழ்நிலையை உருவாக்கி, உத்தேசம் கொண்ட அரசியல் தந்திரம் இந்த பயங்கரவாதம் எனலாம். இப்படிப்பட்ட சங்கங்களின் கொடுமை நிகழ்ச்சிகள் சட்ட விரோதமானது மற்றும் சமூகத்துரோகமானது. 2001ல் அமெரிக்காவின் வியாபார தலமையிடம் அழித்தது, அதைப் போன்றே பிரிட்டன், இரான், இந்தியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தோனெசியா முதலிய பல நாடுகளில் தொடர் குண்டு வெடிப்பு, உலக அளவில் மிகப் பெரிய கலக்கத்தை ஏற்படுத்திய சங்கதிகளாகும் இந்த பயங்கரவாதம் தார்மீக சிந்தனையால், பிரிவினை வாதத்தால் தீவிரமான திட்டத்தால் நாட்டு விடுதலையை அடைத்ததால், நிற்பேதம் (நிறவேறுபாட்டின்) போன்ற காரணங்களால் தனிப்பட்டுள்ளது.

ஒரு நாடே மற்றொரு நாட்டின் உள்ளே பயங்கரவாதம், பொருளாதாரம் போன்ற பல உதவிகள் செய்கிறது. இந்த தீவிரவாதிகளில் ஒரு நாட்டின் மக்கள் மீது, இராணுவப்படைமீது, மொழிவாரியாக, தார்மீகமாக, இனம், அல்லது நிறவேற்றமை மீது அழிவுகளை ஏற்படுத்துகிறது. பயங்கரவாதம் பயத்தை அதிகப்படுத்த மற்றும் பிரசாரம் அடையும் நோக்கில், நடைபெறுகிறது. அது மட்டுமின்றி அதிகமான மரணத்தை ஏற்படுத்த வெடி மருந்துகளையும் விஷஅமிலங்களையும் பயன்படுத்தவும் வழிவகுக்கிறது. இப்படி பட்ட நாசகார வேலை செய்ய தேவையான முன்னேற்பாடுகளை செய்கிறது. தீவிரவாதிகள் தம்மதே ஆனா குழுக்களுக்கு சிற்பபு பயிற்ச்சி அளித்திருப்பார்கள். அவர்களின் உதவியுடன் பணத்தையும் சேகரிப்பார்கள். நவீன போக்கு வரத்து, சாதனங்களை இவர்கள் பயன்படுத்துவார்கள். தமது முக்கிய குறிக்கோள் மற்றும் அமைப்புகளுக்கு தேவையான பிரசாரத்தை பெற்று இருப்பார்கள். தரை போக்கு வரத்து, ரயில்கள், விமானம், முக்கிய அரசு அலுவலகங்கள், மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடங்கள், இதைப் போன்ற இடங்கள் இந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் இடமாகும். பிரசாரம் இந்த தீவிரவாதத்துடன் தொடரும். இது ஒரு முறையற்ற யுத்தம், என்று கூறலாம். தற்கொலை, விமானம் கடத்தல், துப்பாக்கிச் சூடு, வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தல் அப்பாவி மக்களை பினைக்கைதிகளாக வைத்தல் இவையெல்லாம் தீவிரவாதிகள் கடைப்பிடிப்பார்கள்.

இந்தியா இப்படிபட்ட பயங்கர வாதத்திற்கு ஏராளமான முறை ஆட்பட்ட நாடாக உள்ளது. காஷ்மீர், நாகாலாந்து, மிசோராம், அஸ்ஸாம், போன்ற பலமாநிலங்களில் பயங்கர வாதம் தலை எடுத்துக் கொண்டே இருக்கிறது. 2007ல் நவம்பர் 26ல் மும்பை தாஜ்மஹால் ஓட்டல் மற்றும் ரயில் நிலையத் தாக்குதல் புதுடில்லியில் பாராளுமன்றத்தின் மீது தாக்குதல், ஹைதராபாத், சென்னை, பெங்களூரு, புத்தகயா போன்ற இடங்களில் இது போன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. நக்சல்வாதிகள் பிரிவினைவாதச் செயல்களை நடத்துகிறார்கள். நமது அணடை நாடுகளான பாகீஸ்தான், சீனா, போன்றவை இப்படி பட்ட தீவிரவாதத்திற்கு உதவி செய்வதால் அவை கண்டிக்கப் படுகிறது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

இந்தியா தன்நாட்டைப் போன்றே அண்டைய நாட்டில் ஏற்படும் தீவிரவாதத்தை கண்டிக்கிறது. எதிர்க்கிறது. நமது மத்திய அரசும், மாநில அரசும் தீவிர வாதத்தை தடுக்க கடுமையாக முயற்சிக்கிறது. தன்னுடைய மக்களின் உயிர் மற்றும் சொத்துகளை காக்க முயற்சிக்கிறது. பிரிவினை வாதத்தை தடுக்கவும் சிறப்பு பயிற்சி பெற்ற படைகளை உருவாக்கியுள்ளது. சிலசமயம் பாதுகாப்பு படைகளை இந்த பயங்கரவாதிகளுக்கு எதிராக செயல்படுத்தப்படுகிறது. அமைதியவை விரும்பும் நாடான இந்தியா தீவிரவாதத்தை எதிர்க்கிறது.

மனிதகுல வரலாற்றை நோக்கினால் ஒரு உண்மைவெளிபடும் இம்சை, பயங்கரவாதாத்தால் செய்த சாதனையை விட அகிம்சை அன்பு, தியாகத்தால் சாதித்தது அதிகம். நமக்கு மிக அருகில் தெரிவதென்றால் மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி, அவர்களை கொன்றதாலும், புதிய இதிகாசத்தை உருவாக்க முடியவில்லை. ஆனால் புத்தர், மகாவீரர், ஏசு, முகமது பைங்கர், பசவண்ணர், காந்தி, நேரு, அம்பேத்கார், மார்ட்டின் லூதர், நெல்சன் மண்டேலா, போன்றோர்களால் மனித குலத்திற்கு புதிய சக்தி, புதிய ஒளி, நிம்மதி கிடைத்துள்ளது. இம்சை - பொறாமைகளை விட, அமைதி அன்பு மேலானது.

***பொதுத்துறையின் தந்திரம் :*** 21ம் நூற்றாண்டில் பொதுத்துறை தந்திரங்கள் இந்திய நாகரீக சமுதாயத்திற்கு ஒரு சவாலாகவே உள்ளது. ஒரு குறிப்பிட்ட உத்தேசத்திற்கு முன்னேற்பாட்டுடன் நோக்கத்தை அடைய கம்பெனி கை கொள்ளும் பல வித ஆட்சிமுறைக்கு பொதுத்துறை தந்திரம் எனப்படும். இன்றைய பொதுத்துறை தந்திரங்களை விளம்பரம் மற்றும் நவீனத்தால், தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொண்டு வளர்கிறது. தந்திரத்தின் முக்கிய நோக்கம் லாபத்தை பெறுவதாகும் இதனால் நாசகார வேலையின் வளர்ச்சிக்கு தனி மனிதன் வாழ்க்கை சமூகம் மற்றும் நாட்டின்மீது விழும் சிறந்த முடிவுகளை எடுத்துக் கொள்வதின் மூலம் பொதுத்துறையின் தந்திரங்களை தன்னுடைய பலத்தை மனித சமுதாய வளர்ச்சிக்கு பயன் படுத்துகிறது. பொதுத்துறை யோசனைப்படி பாதுகாப்பு வறுமை ஒழிப்பு, ஆரோக்கியம், கல்வி, குடியிருப்பு, உணவு மற்றும் பல அடிப்படை சேவைகள் செய்ய வழிவகுக்கிறது. ஆனால் இவ்வகையாக பொதுத்துறை சமூகபாதுகாப்பு யோசனை கொள்ளை, லாபத்தை பெற இந்திய சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தும் போது மட்டும் சாத்தியமாகும்.

## பயிற்சிகள்

### I. *கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிர்பபுக.*

1. தாங்கள் வசிக்கும் பகுதியை பற்றி மிகுந்த அக்கறை வளர்த்து கொண்டிருப்பதை __________ என்கிறோம்.
2. இந்தியாவில் மொழிவாரு பகுதிகளாக பிரிவினையை __________ வருடம் ஏற்பட்டது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

3. கர்நாடகத்தில் லஞ்சத்தை தடுக்க ________ அமைப்பு நடைமுறையில் உள்ளது.

4. 2011ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை ________ கோடியை தாண்டியது.

## II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குளுக்களுடன் விவாதித்து விடையளி.

1. வகுப்பு வாதம் (சமய வாதம்) நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் எவ்வாறு?
2. பிரிவினை வாதம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்காது. விவாதி.
3. மகளியரின் நிலைப்பாட்டை சரிபடுத்த உங்கள் யோசனைகள் என்ன?
4. வேலை இல்லாத் திண்டட்டம் போக்க கையாண்ட முறைகள் என்ன?
5. பொதுத்துறை தந்திரம் என்றால் என்ன? மற்றும் அதன் தற்போதிய வளர்ச்சி குறித்து விவரி.

## III. செய்முறை :

1. அரசியல் அமைப்பு விரி 371ன் படி சிறப்பு இடங்களை பெற்ற மாநிலங்களின் பெயரை பட்டியலிடு.
2. பிரிவினை வாதம் நாட்டின் பிளவிற்கு வழிவகுக்கும் என்பதை பற்றி ஒரு பட்டிமன்றம் ஏற்படுத்து.
3. உங்களுடைய உள்ளாட்சி அமைப்பின் பெண் உறுப்பினர்கள் உடன் மகளிர் நிலைப் பற்றி ஒரு நேர்காணல் நடத்து.

* * * *

©KTBS
Not to be republished



www.textbookpdf.in

# அத்தியாயம் - 2
# இந்தியாவின் வெளியுறவு கொள்கை

**இந்த அத்தியாயத்தில் கீழ்க்கண்ட அம்சங்களை அறிகிறோம்.**

- இந்திய வெளியுறவு கொள்கையின் வடிவம்.
- பஞ்ச சீல தத்துவம்
- நிறவேறுபாடு கொள்கைக்கு எதிரி
- நடுநிலை கொள்கை

உலகின் பல நாடுகள் வெளிநாடுகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன. எவ்வாறு உறவுகளை வைத்துக் கொள்கிறது என்பதைப் பற்றி நாம் கற்க வேண்டியுள்ளது. எவ்வாறு தனி ஒரு மனிதன் மற்றவர்களுடன் தொடர்ப்பு வைத்துக் கொள்ளாமல் சமுதாயத்தில் தனிமனிதனாக இருக்க முடியாதோ அதைப் போன்றே ஒரு நாடு பக்கத்து நாட்டுடன் வியாபார ரீதியாக அனுசரித்து செல்லும் கொள்கையை வெளியுறவு கொள்கை என்று அழைக்கப்படும். இன்று ஒவ்வொரு நாட்டிற்கும் தன்னுடைய வெளியுறவு கொள்கை கட்டாயம் தேவைப் படுகிறது. உலகத்தில் சுமார் 200 நாடுகள் இருந்து சில நாடுகளில் வல்லரசு நாடுகளாகவும் சில நாடுகள் வலிமையிழந்து காணப்படுகிறது. ஆனாலும் ஒன்றல்லா ஒரு வெளியுரவு கொள்கையை கடை பிடிக் கிறது. அதனாலயே கல்வியாளர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். எல்லா வலிமையையும் பெற்றுள்ள நாடு களுக்கும் கூட ஒன்றல்லா ஒரு வெளியுறவு கொள்கை உண்டு. எல்லா வளமும் உள்ள நாடு என்றால், எந்த நாடு உட்புறமாகவும், வெளியேயும் மற்ற நாடுகளுக்கு கீழ்படியாமல் சுதந்திர மாகவும், எல்லா வளமும் அல்லது எல்லா அதிகார முள்ள நாடு எனப்படும்.

> ***நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்***
>
> **எந்த ஒரு கொள்கையை உருவாக்கினாலும் வெளிநாட்டு உறவின் மூலம் அந்த நாட்டிற்கு எது முக்கிய உபயோகமானது என்பதை கண்டுபிடிப்பதில் உள்ளது. நாம் வெளிநாட்டு நன்மைகள் பற்றி பேசலாம், மற்றும் அதைப்போன்றே சிந்திக்கலாம். நாம் அமைதி, மற்றும் சுதந்திரத்தை பற்றி கூறலாம். மற்றும் நேர்மையாக அதைப்பற்றி பொருள் கொள்ளலாம். ஆனால் கடைசியில் ஒவ்வொரு அரசாங்கமும் தான் ஆட்சி செய்யும் நாட்டின் நலனுக்காக செயல்படுகிறது. அரசாங்கமும் தொலைநோக்கு பார்வையுடன் மற்றும், நாட்டின் பாதுகாப்பிற்கு தீங்குகள் செய்யும் எந்த காரியமும் எதிர்க்க தைரியம் வராது.** *- ஜவஹார்லால் நேரு*

இந்தியாவும் சுதந்திரத்திற்கு முன்பும் மற்றும் சுந்திரத்திற்கு பிறகு தனக்கே உரிய வெளியுறவு கொள்கையை கொண்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவும். இந்தியாவும் மிகப்பெரிய மக்கள் தொகை, மிகுந்த இயற்கை செல்வங்கள். அகண்ட நிலப்பரப்பு மற்றும் மிகப் பெரிய இராணுவ பலம் கொண்ட நாடு. எனவே இந்தியாவும் உலகப் புகழ்பெற்ற நாடாக விளங்குகிறது. தற்போது உலகத்தின் சில நாடுகள் தனக்கே உரிய குறிப்பிட்ட நல்ல வெளியுறவு கொள்கையை கடைபிடிக்கிறது இதில் இந்தியாவும் ஒன்று.

இந்தியா 1947ல் சுதந்திரம் பெற்று, எல்லா வலிமையும் வளமையும் பொருந்திய நாடாகவுள்ளது. தனேக்கே உரிய வெளியுறவு கொள்கையை கொண்டிருப்பதன் மூலம் உலகின் எல்லா நாடுகளுடன் நேசத்தை விரும்புகிறது. இந்தியாவிற்கு என்றே உள்ள



www.textbookpdf.in

© KTBS Not to be republished

வெளியுறவு கொள்கையின் முக்கிய நோக்க மென்றால் -

1. நாட்டின் பாதுகாப்பு.
2. நாட்டின் பொருளாதார மேம்பாடு.
3. நம் நாட்டின் கலாச்சார மதிப்பை வேறுநாட்டில் கடைபிடிக்க செய்தல்.
4. நட்பு நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு, எதிரி நாடுகளை தடைசெய்வது அல்லது ஒடுக்குவது.

> ***விவாதி :***
>
> **இந்த உலகம் கோடூரமானது. நாம் அமைதிக்கான கொடியை எங்கும் பறக்கவிட விரும்புகிறோம். ஆனால் அப்பாவியான நாம் வஞ்சிக்கப் படுகிறோம். சீனா தாக்குதலுக்கு பிறகு பாராளுமன்றத்தில் பிரதமமந்திரி நேருவின் கொந்தளிப்பு**

1946 செப்டம்பர் 7ல் நேரு அவர்கள் ரேடியோவில் ஆற்றிய உரையில் வெளியுறவு கொள்கையின் சிறப்பு பற்றி விவரித்தார். அவருடைய இந்த உரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, போன்ற நாடுகளுடன் இந்தியா உருவாக்கி கொள்ளும் உறவுகள் பற்றி குறிப்பிட்டது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பதவி வகித்த நேரு அவர்கள் வெளியுறவு துறையும் சேர்த்து சிறப்பாக செயல் பட்டார். இந்த காரணத்தால் இந்தியாவின் வெளியுறவு கொள்கையை நேரு அவர்கள் வெளியுறவு கொள்கை என்று வருணித்தார்.

இந்திய வெளியுறவு கொள்கை பல அம்சங்களின் சிறப்பால் உருவானது. நாட்டின் பாதுகாப்பு, நிலபரப்பின் அம்சம், அரசியல் நிலை, பொருளாதார நிலை, பாதுகாப்பு திறமை, மக்கள் விருப்பம், வெளிநாட்டு சூழ்நிலை போன்று பல அம்சங்கள் நம்நாட்டின் வெளியுறவு கொள்கையில் அடங்கியுள்ளது.

## இந்தியாவின் வெளியுறவு கொள்கையின் அடிப்படை அம்சங்கள்

***பஞ்சசீல கொள்கைகள் :*** உலகின் நாடுகளில் வேறுபாடுடைய சமுதாயம், பொருளாதாரம் மற்றும் அரசியல் அமைப்பு முறைகள் கொண்டாலும் பரஸ்பர உதவி, சேர்ந்துவாழும் முறையை கடைப்பிடிக்கிறது. இதன் அடிப்படையில் 1954ஜூன் மாதத் தில் உலக அமைதியின் நோக்கத்திற்காக சீனா மற்றும் இந்தியா (அன்றய சீனப் பிரதமர் சௌ.என்.லாய் மற்றும் இந்தியப் பிரதமர் நேரு) பரஸ்பரம் வெளிநாட்டு உறவு முன்னே னற்றத்திற்காக ஐந்து கொள்கையை பயன் படுத்தி கொண்டார்கள். அவைகளே பஞ்சசீல கொள்கை எனப்டும் அவை -

1. பரஸ்பர நாடுகளின் பிரதேசம் மற்றும் வலிமையை கௌரவித்தல்.
2. பரஸ்பர (நேச) நாடுகளை ஆக்கிரமிப்பு செய்யாமை.
3. சொந்த விவகாரங்களில் பரஸ்பரம் தலையீடு செய்யாமை.
4. பரஸ்பரம் உதவி மற்றும் சமஉரிமை.
5. அமைதியாக சேர்ந்து வாழ்வது, இவை நமது நாட்டின் வெளியுறவு கொள்கையின் அடிப்படை எனலாம்.

***2. நடுநிலை கொள்கை :*** இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் இரண்டு சக்திகளாக பிளவுபட்டது. அமெரிக்கா, கூட்டமைப்பு அமைப்பின் தலைமையில் மக்க ளாட்சி நாடுகள், மற்றும் சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸ்டு நாடுகள் என்று உலகின் இரண்டு பகுதியாக கண்டது. அதுமட்டுமின்றி இரண்டு பிரிவுக்களுக்கு இடையே பனிபோர் உருவானது. அந்த நாட்களில் இந்தியா எந்த ஒரு பிரிவுக்கும், சேராமல் நடுநிலை வகித்தது. மற்றும் இந்த இரண்டு நாடுகளுடன் நட்பு கொண்டதால் அமெரிக்காவிட மிருந்து பொருளாதார உதவியும், சோவியத் ரஷ்யாவிடமிருந்து

©KTBS Not to be republished



www.textbookpdf.in

பாதுகாப்பு உதவியும் பெற்றது. அது மட்டுமின்றி உலகின் ஒவ்வொரு நிகழ்ச்சியை அதன் நன்மை தீமைகளின் படி அதனை வரவேற்பது அல்லது எதிர்ப்பது போன்றி சுதந்திரமாக செயல்பட்டது. இப்படி நடுநிலை வகித்து

வெளியுறவு கொள்கையை கடைபிடித்த புகழ் இந்தியாவிற்கு உண்டு. நேருவிற்கு பிறகு லால் பகதூர் சாஸ்திரியும், இந்திராகாந்தியும் சவாலாக வெளியுறவு கொள்கையை கடைபிடித்தனர். 1965 மற்றும் 1971ல் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்த கொள்கையை, கடைப்பிடித்தன. பிறகு பிரதமரான அடல் பிஹாரி வாஜ்பேயி அவர்கள் நமது வெளியுறவு கொள்கையை சீர் செய்து பாக்கிஸ்தானுடன் நேசத்திற்கு முயற்சித்தார்.

> ***அறிந்து கொள்க :***
>
> *SAARC – **சார்க்** South Asian Association for Regional Co-operation.*
>
> ***சார்க் தெற்கு ஆசியா நாடுகளின் அமைப்பு, டிசம்பர் 8, 1985ல் இது நடைமுறைக்கு வந்தது. இந்தியா, பூடான், ஸ்ரீலங்கா, மாலத்தீவு, பங்களா தேசம் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்றவை உறுப்பு நாடுகளாகும். 1985ல் சார்க் மாநாடு நமது மாநிலத்தில் நடைபெற்ற.***

**3. புதிய குடியேற்றத்துக்கு எதிர்ப்பு :** இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் புதிய குடியேற்றத்தை எதிர்க்கிறது. ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது தன்னுடையதாக சுவாதினப் படுத்திக் கொண்டு அந்த நாட்டின் எல்லா வளமையும் அழித்து தன்னுடைய விருப்பத்திற்காக துஸ்பிரயோகம் செய்வதை புதிய குடியேற்றம் என்று அழைக்கிறார்கள். புதிய குடியேற்றத்தை எதிர்த்து சுதந்திரமடைந்த இந்தியா அதனை சுயமாக எதிர்த்து உலகின் எந்த ஒரு மூலையில் புதிய குடியேற்றம் இருக்கக் கூடாது என்று டெல்லி மற்றும் பங்கோடாவில் நடந்த ஆசிய நாடுகளின் சம்மேளனத்தில் (1949-1955) தன்னுடைய நிலையை தெரிவித்தது.

**நிற வேறுபாட்டு கொள்கைக்கு எதிர்ப்பு :** ஒரு பிரிவை சேர்ந்த மக்கள் அல்லது நிறத்தை கொண்ட சமுதாயத்தை இன்னொரு பிரிவு மக்கள் அல்லது சமுதாயம் அவர்கள் தங்களைவிட கீழானவர்கள் என்று பாவித்து அவர்களை ஒதுக்குவது அல்லது எதிரியாக நோக்கும் நிலைக்கும் நிற(வெறி) வேறுபாட்டு கொள்கை எணப்படும். இந்த நிறவெறி கொள்கை அவமானமானது. மற்றும் மனித உரிமைகளை அவமதித்து, உலக அமைதி மற்றும் சேர்ந்து வாழும் முறைக்கு எதிரானது. இந்த நிறவெறி உலகில் எங்கும் எந்த நாட்டிலும் கடைபிடிக்க கூடாது என்பது வெளியுறவு கொள்கையாக இந்தியா கொண்டுள்ளது. தற்போதைய வரையில் தென் ஆப்பிரிக்காவில் சிறுபான்மையினரான வெள்ளையர்கள். பெருபான்மையான ஆப்பிரிக்க நாட்டினரை தங்களது பிடியில் வைத்திருந்தனர் என்பது குறிப்பிடதக்கது. இந்த நிறவெறி கொள்கையை ஆப்பிரிக்கா காந்தி என்று அழைக்கப் பட்ட நெல்சன் மண்டேலா, அவர்களின் தலைமையில் ஆப்பிரிக்கா நேசனல் காங்கிரஸ் பலமாக கண்டித்து ஏற்படுத்திய போராட்டத்தை இந்தியா ஆதரித்தது.

**5. ஆயுத ஒழிப்பு :** சில குறிப்பிட்ட வகையான ஆயுதங்களை படிப்படியாக ஒழிப்பதே ஆயுத ஒழிப்பு எனப்படும். உலகில் ஆயுதங்களின் உற்பத்தி, விற்பனை, சேகரித்தலில் எல்லாம் மிகுந்து போட்டியே உருவாகியுள்ளது. இவ்வாரான ஆயுதப் போட்டியினால் மூன்றாவது உலகப் போர் ஏற்பட்டு

விடுமோ என்று உலக நாடுகள் பல வற்றிற்கு ஆதங்கம் ஏற்பட்டுள்ளது. தவறான செயலாலோ, வேண்டுமென்றோ ஒன்றின் மேல் ஒன்று போர் ஆயுதங்களை அதிலும்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

அணு ஆயுதங்களை தயாரித்து பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அமைதியை விரும்பும் இந்திய நாடு அதிகமான பலம்வாய்ந்த ஆயுதங்களை எதிர்க்கிறது. அமைதிக்கு முன்னுரிமை கொடுத்த நேரு அவர்கள் காலத்திலும் ஆயுத ஒழிப்புக்கு ஒத்துழைப்பை கொடுத்தது. முழுமையான ஆயுதஒழிப்பு என்பது இயலாதா விசஷமாக உள்ளது. ஏனென்றால் ஒவ்வொரு நாட்டிற்கும் தனக்குரிய பாதுகாப்பு தேவைப்படுகிறது. ஆனாலும் இந்தியா உலக அமைதி, கூடிவாழ்வதற்கு முன்னோடியாக வெளியுறவு கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

> ***செய்முறை :***
> **தற்போதைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை உருவாக்கிவரும், செயல் படுத்திவதில் செயல்படும் முறைப்பற்றி கூகுல் உதவியுடன் செய்தி சேகரி.**

இந்திய அரசியல் அமைப்பு தன்னுடைய 51 விதியின் மூலம் வெளிநாட்டுடன் சேர்ந்து வாழ்தல், மற்றும் வெளிநாட்டு சட்டத்திற்கு மதிப்பு கொடுத்து வெளியுறவு கொள்கையை குறிப்பிட்டுள்ளது. மத்திய அரசின் வெளியுறவுத் துறை நமது நாட்டின் வெளியுறவு கொள்கை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது நமது நாட்டின் வெளியுறவு கொள்கையை உருவாக்க நாட்டின் பாதுகாப்புசக்தி மற்றும் பொதுமக்களின் விருப்பத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நமது வெளியுரவு கொள்கை ஐநாசபையை பலப்படுத்தும் வகையில் உள்ளது. இந்தியா காமன்வெல்த் ஆப் நேசன்ஸ் மற்றும் சார்க் (செளத் ஏசியன் அசோசேசியன் பார் ரீஜினல் கோ-ஆப்பு ரேசன்) இந்த அமைப்புகளின் மூலம் பல நாடுகளுடன் சிறந்த உறவு கொள்ள விரும்புகிறது. அது மட்டுமல்லாமல் உலக சபையின் (ஐநா) முக்கிய உறுப்பு நாடாக இந்தியா பங்கு வகித்து வந்துள்ளது.

## பயிற்சிகள்

### I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவின் வெளியுறவு கொள்கையை உருவாக்கியவர் ____________.
2. உலகின் எந்த ஒரு கட்சிக்கும் சேராமல் இருக்கும் கொள்கையை ____________ எனலாம்.
3. இந்தியா சுதந்திரத்திற்கு முன்பு ____________ உட்பட்டிருந்தது.

### II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குழுக்களுடன் விவாதித்து விடையளி.

1. வெளியுறவு கொள்கை என்றால் என்ன?
2. வெளியுறவு கொள்கை நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் எவ்வாறு?
3. இந்திய வெளியுறவு கொள்கையின் நோக்கம் என்ன?
4. தீவிரவாதத்தை இந்தியா எதிர்க்கக் காரணமென்ன?
5. பஞ்சசீல கொள்கைகள் எவை?
6. இந்த உலகத்திற்கு ஆயுத ஒழிப்புமிக முக்கியம் என்று இந்தியா ஏன் வாதிடுகிறது? விவரி.

### III. யோசனை :

1. செய்தி தாளில் வரும் வெளியுறவு கொள்கையை பற்றி வரும் செய்திகளை ஆல்பமாக தயாரி.
2. வெளிநாட்டு பிரச்சனைகள், ஏற்பட்ட சமயத்தில் இந்தியா வகிக்கும் பங்கு பற்றிய விவரம் சேகரி உதாரணம், சிரியா பிரச்சனை, ஸ்ரீலங்கா பிரச்சனை.

* * * *



www.textbookpdf.in

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 3

# அயல் நாடுகளுடன் இந்தியாவின் உறவு

## இந்த அத்தியாயத்தில் கீழ்க் கண்ட விசயங்களை அறிகிறோம்.

- இந்தியா மற்றும் சீனா உறவு
- இந்தியா மற்றும் பாகிஸ்தான் உறவு
- இந்தியா மற்றும் ரஷ்யா உறவு
- இந்தியா மற்றும் அமெரிக்கா உறவு

ஒரு குடும்பம் வேறு எந்த ஒரு குடும்பத்துடனும் கொடுக்கல் வாங்கல் இன்றி முன்னேற முடியாது, அதைப் போன்றே ஒரு நாடு வேறு நாட்டுடன் கொடுக்கல் வாங்கல் இன்றி, நல்ல உறவு இன்றி முன்னேற்றமடைய முடியாது. தற்போதைய உலகமயமாக்கல், மற்றும் நவீனயுகத்தில் ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் நல்ல உறவு முறையை ஏற்படுத்துவது கட்டாயம், மற்றும் முக்கியமும் கூட, நமது அரசியல் அமைப்பு சட்டத்தின் நான்காவது பாகத்தில் அரசியல் கொள்கை தத்துவப்படி விதி 51ல் வெளிநாட்டு அமைதி மற்றும் சமாதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி இந்தியா வெளிநாடுகளுடன் நல்ல உறவை வைத்துள்ளது.

©KTBS Not to be republished.

### முக்கியமான அன்டை நாடுகளுடன் உறவு :

**இந்தியா மற்றும் சீனா :** சீனா இந்தியாவின் நிலப்பகுதியுடன் சேர்ந்து இருக்கும் மிகப்பெரிய அன்டைய நாடாகும். மற்றும் சீனாவை சிந்துச் சமவெளி நாகரிகத்துடனும் மற்றும் மெசப்படோமிய நாகரிகத்துடனும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தியாவில் தோன்றிய புத்த மதம் தற்பொழுது சீனாவில் புகழ்பெற்று விளங்குகிறது. இந்தியா மற்றும் சீனா இடையேயான பழங்காலத்து உறவு பிரதிபலிக்கிறது. இந்தியாவின் அரசர்கள் சீனாவில் பல அரச குடும்பங்களுடன் நல்ல வியாபார உறவை வளர்த்து உள்ளதை பல குறிப்புகளால் அறியமுடிகிறது. சீனா மற்றும் இந்தியாவிற்கு இடையே வியாபார சம்பங்கள், கௌடல்யரின் அர்த்தசாஸ்த்திரில் (பொருளாதாரம்) சீனாவின் பட்டுவைப் பற்றி குறிப்புள்ளது. இவ்வாறான இதிகாச உறவு கொண்டுள்ள இந்தியா மற்றும் சீனா எல்லா வளமையும் பெற்றுள்ள நாடுகளாக தோன்றிய பிறகு பஞ்சசீல கொள்கை மூலம் இரண்டு நாட்டின் உறவுகளை மேம்படுத்தும் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் 1962ல் திபெத் விவாதம் ஏற்பட்டு இரண்டு நாடுகளுக்கிடையே போர் நடந்த சந்தர்ப்பத்தில் எல்லைப் பிரச்சனை உருவானது. இந்த எல்லைப் பிரச்சனை இன்றைக்கும் தொடர்கிறது. சீனா மற்றும் இந்தியாவிற்கும் பங்காக உள்ள அருணாசல பிரதேசம் தனக்கு சேர வேண்டும் என்று வாதித்து கொண்டிருப்பது இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள உறவை மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் எல்லைப் பிரச்சனை இருந்தாலும் கூட இரண்டு நாடுகளின் இடையே தூதர்களின் சம்பந்தங்கள் நிரந்தரமாக தொடர்கிறது. இந்தியா மற்றும் சீன மக்கள் தொகையிலே உலகிலே அதிகமாக உள்ளதால் உலகத்தின் முன்னேற்ற குறிப்பில் இரண்டு நாடுகளும் முக்கிய நாடுகளாக குறிக்கப்பட்டுள்ளன. 1980ல் நூற்றாண்டில் சீனா இந்தியாவுடன் பெரிய அளவில் வியாபாரம் மற்றும்



www.textbookpdf.in

வாணிப தொடர்பை கொண்டுள்ள நாடுகளாக வளர்ந்துள்ளன. இது இரண்டு நாட்டின் உறவுகளை உறுதிப் படுத்தியுள்ளது. இதுமட்டுமல்லாமல் 2015க்கு பிறகு இந்தியா மற்றும் சீனாவின் முயற்சியினால் Brics நாடுகளின் அமைப்பு ஆரம்பமானது. இது இரண்டு நாடுகளின் இடையே உறவை மேலும் வலுப்படுத்துகிறது.

***இந்தியா மற்றும் பாகிஸ்தான் :*** இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரண்டும் அன்டைநாடுகள். பாக்கிஸ்தான் இந்தியாவிற்கு வெறும் அன்டை நாடு மட்டுமே. சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால் 1947ல் இந்தியாவின் சுதந்திர சட்டப்படி இரண்டு தனிநாடுகளாகி வல்லமையும் உருவானது. சுதந்திரத்திற்கு பிறகு இந்தியா மற்றும் பாக்கிஸ்தானின் வெளியுறவு கொள்கை ஆரம்பமானது. ஆனால் இந்த இரண்டு நாடுகளுக்கு நடுவே, ஜம்மு-காஷ்மீர், பயங்கரவாதம், தண்ணீர் பங்கீடு போன்ற பிரச்சனைகள் உள்ளன. அதனால் இரண்டு நாடுகளுக்கிடையே மூன்று முறை போர் மூண்டுள்ளது. இரண்டு நாடுகளுக்கிடையே சுமூகமான உறவு ஏற்பட தாஷ்கண்டு ஒப்பந்தம், சிம்லா ஒப்பந்தம் லாகூர் பஸ் பயணம், ஆக்ரா சார்க் பேச்சு வார்த்தை நடந்தது.

> ***செய்முறை***
>
> **இந்தியா - பாக்கிஸ்தானின் தற்போதைய உறவைப்பற்றி தினந்தோறும் செய்திதாளில் வரும் செய்திகளை சேககரித்துப் படி.**

ஆனால் இவ்வகையான ஒப்பந்தங்கள் எதிர் பார்த்ததை விட வெற்றி பெற இயலவில்லை. ஏனென்றால் இந்த இரண்டு நாடுகளும் நிரந்தரமாக கூட்டு பேச்சு வார்த்தையில் நிரந்தரமாக இருந்தாலும் கூட 2001ல் பாரளுமன்றத்தின் மீது தாக்குதல் 2008ல் மும்பை தாக்குதல் 2016ல் பாட்னா பேச்சு தாக்குதல், பரஸ்பரம் உறவிற்கு முன்னேற்றத்திற்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே காஷ்மீர் பிரச்சனைக்கு சம்பந்தப்பட்ட நிரந்தரமாக போராட்டம் நடந்து கொண்டு இருந்தாலும் சிலவிசயங்களில் இந்த இரண்டு நாடுகள் (ஒற்றுமை) சம்மதிப்பதை குறிக்கப்படலாம். இந்த இரண்டு நாடுகளுக்கிடையே கலாச்சாரம் பொருளாதாரம் விசயத்தில் பரஸ்பரம் பரிமாற்றச் செயல்களை தொடர்கிறது. ஏனென்றால் சுதந்திரமடைந்த தினத்திலிருந்து தற்போது வரை வியாபாரம், வாணிபம், உறவுகள் நிரந்தரமாக தொடர்கிறது. அதைப்போன்றே விளையாட்டு, கலாச்சாரம், வியாபாரத்தில், இயற்கை இடர்பாடு, நடைபெற்ற நேரத்தில் இரண்டு நாடுகளும் சமாதானம் மற்றும் பரஸ்பர உதவி செய்து கொள்கிறது.

## பிரபலமான நாடுகளுடன் தொடர்பு

***இந்தியா மற்றும் ரஷ்யா :*** இந்தியா ரஷ்யாவுடன் நல்ல உறவு கொண்டுள்ளது. மற்றும் இதற்கு முன்பு சோவியத் ரஷ்யாவுடன் இதைப் போன்றே நல்ல உறவு கொண்டிருந்தது. இந்தியா நடு நிலைமை கொண்டிருந்தாலும் இந்தியா சோவியத் ஒப்பந்தம் அரசியல், பொருளாதாரம் மற்றும் மற்ற துறைகளில் நல்ல முன்னேற்றத்தை கண்டது. (1962ல் சீனா தாக்குதலை சோவியத் ரஷ்யா கண்டித்தது 1961ல் கோவா பிரிவினை, சந்ததர்ப்பத்தில் சோவியத் ரஷ்யா இந்தியாவிற்கு ஐநா அமைப்பில் உதவிசெய்தது) 1966ல் தாஸ்க

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

ண்டில் நடைபெற்ற இந்தியா - பாக்கிஸ்தான் இடையே ஒப்பந்தத்திற்கு ரஷ்யா உதவி செய்தது. 1971ல் இந்தியா, மற்றும் ரஷ்யா 20 ஆண்டுகளின் அமைதி, கூட்டணி, மற்றும் உதவிக்காக ஒப்பந்த கையெழுத்திட்டது. இந்தியாவின் பிலாய் மற்றும் பொகாரோ இரும்பு தொழிற்சாலைக்கு சோவியத் ரஷ்யா உதவிசெய்தது. நமது நாட்டின் கைத்தொழில் மற்றும் வாணிபத் துறைகளின் வளர்ச்சிக்கு ரஷ்யா அதிக உதவி செய்தது. ஐக்கியநாடுகள் சபையில் (ஐ.நா) பாதுகாப்பு குழுவில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் கொடுக்க வேண்டியும் ரஷ்யா வாதித்தது.

***இந்தியா மற்றும் அமெரிக்கா :*** இந்தியா மற்றும் அமெரிக்கா ஒருங்கிணைந்த அமைப்பு இரண்டும் பெரிய நாடுகள், மற்றும் மக்கள் ஆட்சி முறை கொண்டவை தற்போதைய உலகமயமாக்குதலில், இந்த இரண்டு நாடுகளும் பரஸ்பரம் கூட்டணி மிகவும் முக்கியமானதாகும். 1947க்கு பிறகு இந்த இரண்டு நாடுகளின் உறவு நாட்டின் பாதுகாப்பு சக்தியை தக்கவாறு பலவித சிந்தாந்தங்களை கண்டது. உலக அரசியல் இரண்டாக பிரிந்திருந்த போது இந்தியா நடுநிலை கொள்கையை கடைபிடித்தது. மற்றும் அமெரிக்கா தலைமையில் மக்களாட்சி குழுவில் இருந்தது. சோவியத் ரஷ்யா தலைமையில் கம்யூனிஸ்டு பிரிவிலிருந்து சம தொலைவு கொள்கையை அனுசரித்தது. இந்தியாவின் ஐந்தாண்டு யோசனைக்கு அமெரிக்கா உதவிபுரிந்தது. 1962ல் சீனாவின் ஆக்கிரமிப்பின் போதும் அமெரிக்காவின் உதவி நமக்கு சக்தி கொடுத்தது. அதன் பிறகு அங்குள்ள அரசியல்வாதிகள் இந்தியா-பாகிஸ்தான் போரின் போது பாகிஸ்தானுக்கு உதவி செய்தனர். பலமுறை அமெரிக்காவின் வெளியுறவு கொள்கை இந்தியாவிற்க்கு எதிராகவே இருந்தது. பயங்கரவாத ஒழிப்பிற்கு நம் இரு நாட்டிற்கு இடையே சமமான பாதுகாப்பு சக்தியுள்ளது. இந்தியா வெளிநாட்டு வியாபாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், விண்வெளி, கல்வி முதலிய துறைகளில் அமெரிக்காவுடன் நல்ல உறவு உள்ளது. ஐ.நா.சபையை பலப்படுத்த மற்றும் உலக அமைதியை காக்கும் வகையில் இரண்டு நாடுகளும் சரியான நோக்கில் உள்ளன. அமெரிக்காவின் ரிபப்ளிக்கன் மற்றும் டொமெக்ரட்டி கட்சிகளைச் சேர்ந்த தேசியத் தலைவர்களின் தோரணையை இந்தியா நுட்பமாக கவனித்தது, மற்றும் அதற் கேற்றவாறு தனது வெளியுறவு கொள்கையை கடைபிடித்தது.

இந்தியா தனது அன்டை நாடுகளான, பூடான், மாலத்தீவு, இந்தோனிசியா, ஆப்கானிஸ்தான் மற்றும் நாடுகளுடன் தீவிர தொடர்பு கொண்டுள்ளது.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

### I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிர்பபுக.

1. பஞ்சசீல கொள்கை மூலம் ________ நாடுகளுடன் உறவு மேம்பட்டது.

2. வெளிநாட்டு அமைதி மற்றும் சமதானம் பற்றி தமது அரசியல் அமைப்பு ________ விதியில் குறிப்பிட்டுள்ளது.



www.textbookpdf.in

3. 1962ல் __________ நாடு இந்தியா மீது தாக்குதல் நடத்தியது.

## II. கீழ்க் கண்ட வினாக்களுக்கு குழுக்களுடன் விவாதித்து விடையளி.

1. அன்டைய நாடுகளுடன் நல்ல உறவு அவசியம் ஏன்?
2. இந்தியா மற்றும் பாகிஸ்தானிடையே கொந்தளிப்பிற்கு காரணமான விடியங்கள் யாவை?
3. தற்சமயத்தில் சீனாவுடன் நமது உறவு கெடுவதற்கு காரணமென்ன?
4. இந்தியா மற்றும் அமெரிக்கா நாடுகள் மக்களாட்சி நாடாக இருந்து இவைகள் பரஸ்பரம் சமதானம் எவ்வாறு உள்ளது என்று விவரி.
5. ரஷ்யாவுடன் இந்தியாவின் உறவுபற்றி விவரி.

## III. செய்முறை :

1. இந்தியா மற்றநாடுகளுடன் கொண்ட உறவை குறித்து செய்தியை சேகரி.
2. இந்தியாவின் வரைபடம் வரைந்து அண்டை நாடுகளைக் குறி.

* * * *

©KTBS Not to be republished

# சமூகவியல்

## அத்தியாயம் - 1

## சமுதாய ஏற்றத்தாழ்வுகள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- **சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் (கல்வி, பாலினம் தொழில் வருமானம், வாய்ப்பு முதலியன)**
- **சமுதாய ஏற்றத் தாழ்வுகள்**
- **தீண்டாமை ஒரு சமுதாயக் கொடுமை**
- **தீண்டாமையை ஒழிக்கும் முறைகள்**

## சமுதாய ஏற்றத்தாழ்வுகள்

மனிதர்கள் சமுதாயத்தில் வெவ்வேறு குண இயல்புகளின் ஆதாரத்தின் படி (பாலினம், ஜாதி, தொழில், பிரிவு மற்றும் இனம் முதலியன) கூட்டங் களைக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைப்பது சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்கிறது. அவையென்றால் வருமான மூலங்கள், கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள், ஆரோக்கியவசதிகள் மற்றும் அரசியலில் பிரதிரிதித்துவம் மற்றும் பங்கேற்பது சமுதாய ஏற்றத்தாழ்வுகள் எனப்படுவது தற்பொழுதுள்ள சம மற்ற சமுதாய வாய்ப்புகளின் பிரிதிபலன். இது சமுதாய அமைப்பில் பொருட்கள், வருமானம், வாய்ப்புகள், விருதுகள், பிரிவுகள் சமமாக கிடைக்குமாறு செய் வதின் மூலமாக முன்னேற்றமடைவார்கள். எடுத்துக்காட்டாக சமூகசேவை துறைகளான பொதுமக்கள் ஆரோக்கியம், கல்வி, சமுதாய பாதுகாப்பு மற்றும் சமுதாய நீதிகளை கணிக் காமல் அலட்சியம் படுத்துவதன் மூலமாக ஏழைகளுக்கு வாழும் வாய்ப்பே இல்லாமல் செய்யப்படுகிறது. இதன் மூலமாக நாட்டின் மற்றும் உலகின் சிலசெல்வந்தர்களிடம் செல் வம் சேருமாறு பார்த்துக்கொள்ள முடிகிறது. பொருளாதார வளர்ச்சியின், ஆதாரத்தின் படி வளர்ச்சியின் பலனினால் நாட்டின் கடந்த பத்தாண்டுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மில்லியியனர்களை மேலும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மில்லியினர்களை உற்பத்தி செய்துள்ளது. ஆனால் சமுதாய பாதுகாப்புகளான உணவுமற்றும் ஆரோக்கியம் வாய்ப்புகளை, ஜாதி அடிப்படையில், பிரிவுகள் மூலமாக மற்றும் பா லினம் மூலமாக நிர்அலட்சியங்களை கவனித்துப் பார்த்தால், சமூதாய ஏற்றத்தாழ்வுக ளின் அளவு தெரிகிறது. கல்வி மற்றும் சமமற்ற தன்மை :

***கல்வி மற்றும் சமமின்மை :*** கல்வியில் சமம், சமமான பங்கேற்பு, சமமான வாய்ப்பு மற்றும் சமூக நீதிகளில் மகத்துவமான மாற்றம் தருவதில் ஆதாரமான சக்தியை கொண்டிருக்கும். இப்பொருளில் கல்வியை பொது மக்களின் நன்மைக்காக அரசுகள் அனைத்து குழந்தைகளுக்கும் சமமாக அளிக்க வேண்டியதாகும். கல்விக்குள் சமூதாய நீதியின் நோக்கங்களை நம்மு டைய அரசியல் சாசனத்தின் பல பாங்களில் நாம் காணமுடியும். அரசியல் சா

©KTBS Not to be republished

சனத்தின் விதி 39ல் அரசுகள் சமூக நீதி மற்றும் மக்கள் நலன்கள் பற்றி வாய்ப்புகளை ஏற்படுத்துவது மாநிலங்களின் கடமையென்று கூறப்பட்டுள்ளது. விதி 45ன்படி கட்டாயமாக 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி அளிக்க வேண்டும் என்று கூறுகிறது. அரசியல் சாசனத்தின் அத்தியாயம் 19 பேச்சு சுதந்திர உரிமை மற்றும் தம் எண்ணங்களை வெளிப்படுத்துவது ஒவ்வொருவரின் அடிப்படை உரிமை என்று அறிவிக்கிறது. அதே விதமாக வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறுபான்மையினரின் கல்விக்குத் தொடர்பான அனுகூலமான அம்சங்களை காப்பது அரசியல் சாசனத்தின் கடமையாகும். இதன் பின்னணியில் விதி 30 சிறுபான்மையினரின் கல்விக்கு தொடர்பான நிறுவனங்களை ஏற்படுத்த விசேஷ வாய்ப்புகளை அளித்துள்ளது. அரசியல் சாசனத்தின் விதி 46ன்படி அரசுகள் பின்தங்கிய மக்களின் அதிலும் தாழ்த்தப்பட்ட சாதி/பழங்குடியினரின் கல்விக்கு தொடர்பான ஊக்கத்திற்கு ஆதரவு அளித்து முன்னேற்றம் அடையச்செய்வது, அரசுகளின் பொருப்பாகும் என்று கூறுகிறது.

உச்சநீதி மன்றம் அரசியல் சாசனத்தின் விதி 21ல் வாழும் உரிமையை கல்வியின் நிலையில் பொருள் கூறுவது மிகவும் மகத்துவமானது. நம்முடைய உச்சநீதிமன்றம் பள்ளிக்கல்வியை அடிப்படை உரிமை என்று அறிவித்ததின் மூலம் இவ்வனைத்து முயற்சிகளுக்கும் ஒரு புதிய திருப்பத்தை அளித்துள்ளது. இதன் மூலமாக கல்வியை வஞ்சிக்கப்பட்ட குழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு புதிய எண்ணத்தை உண்டாக்கியுள்ளது. உச்ச நீதிமன்றம் 1993ல் உன்னிகிருஷ்ணன் v/s ஆந்திரபிரதேச அரசின் தீர்ப்பில் குழந்தை பிறந்தது முதல் 14வயது வரையில் குழந்தைகளின் கல்வி அடிப்படை உரிமையைப் பெற்றுள்ளனரென்று கூறியது.

இத்தீர்ப்பில் நீதிமன்றம் அங்கனவாடிமுதல் உயர்க்கல்வி, தொழிற்கல்வி சேர்ந்த அனைத்தும் முழுமையாக - ஒன்றுபட்ட பார்வையில் காணவேண்டும் என்று கூறியது. இத்தீர்ப்பின்படி நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் கல்வியைப் பெறும் அடிப்படை உரிமையைக் கொண்டிருப்பார்கள். இது வாழும் உரிமையின் ஒரு பாகமாகும்.

ஆனால் தற்பொழுது கல்விக்குத் தொடர்பான மண்டலத்தில் இன்று சமமற்ற தன்மையை அதிகமாக்கும் சட்டரீதியான வாய்ப்புகள் இன்று அதிகமாக்கியுள்ளன. அல்லாமல் கல்விக்கு தொடர்பான வாய்ப்புகளை பயன்படுத்துவதிலும் சமுதாய பொருளாதார குழுக்களின் இடையில் சமமற்றதன்மை அதிகமாகி வருவதை நாம் கண்டு வருகிறோம். ஆயினும் அரசியல் சாசன ரீதியான உரிமை வாய்ப்புகளை சரியாக பயன்படுத்துவதன் மூலமாக கல்விக்குத் தொடர்பான சமமற்றதன்மையை போக்கக்கூடிய செயல் சுதந்திர இந்தியாவில் நிரந்தரமாக நடைபெற்றுவருகிறுத.

***பாலின வேறுபாடு :*** சமுதாயத்தின் சமமற்ற தன்மைகளில் ஒன்றான பாலின வேறுபாடு எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிப்போம். உண்மையில் நமது எண்ணங்கள் அதிகமாக ஒன்றையொன்று சார்ந்திருப் (inter dependent)பதாகும். எடுத்துக் காட்டாக கல்வியின் மதிப்பு குறித்து ஒரு மனிதனுக்கு உள்ள சிந்தனை அல்லது மனதின் எண்ணங்கள் மற்றொருவரிடமிருந்து செல்வாக்கானவர்களாக இருக்



www.textbookpdf.in

கலாம். இவ்விதமாக செல்வாக்குள்ளவர்கள் ஒரேகுடும்பத்தில் அவன்/அவள் மீது விழவேண்டிய தாக்கம் சமுதாயத்தினாலேயே உண்டாகி இருக்கலாம் அல்லது அக் கம்-பக்கம் உள்ளவர்களின் தாக்கத்திற்கு உட்பட்டிருக்கலாம். இப்பார்வையில் பெண் மற்றும் ஆண் மக்களின் கல்விக்குத் தொடர்பான முன்னேற்றசக்தி முதன்மையாக சமு தாயத்தின் பரப்பைக் கொண்டுள்ளது. இக்காரணங்களினால் பள்ளியில் பங்கேற்பதில், உணவு மற்றும் ஆரோக்கிய வசதிகளை பெறுவதில் பாலின வேறுபாட்டை நாம் காண முடிகிறது.

2015-16 தேசிய குடும்ப ஆரோக்கிய ஆய்வு-4 (எச்.எப்.எச்.எஸ்-4) படி கருநா டகத்தின் கிராமிய பகுதியிலுள்ளவர் 24.3 சதவீதம் பெண்கள் மற்றும் நகர பிரதேசம் 16.2சதவீதம் பெண்கள் பாடிமாஸ் காட்டி (பி.எம்.ஐ) குறைந்தளவைவிட குறைவான எடையைக் கொண்டுள்ளனர். 06 முதல் 56 மாதங்கள் வயதுள்ள குழந்தைகள் 60.9 சதவீதம் அளவு இரத்தம் குறைந்து காணப்படுகிறார்கள். கர்பிணி பெண்களில் 45.2 சதவீதம் பேர் இரத்த சோகையால் அவதிப்படுகிறார்கள். அவ்வாறான நிலையில் குழந் தைகள் மற்றும் பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச் சத்துக்களின் பாதுகாப்பு, கல்விகற்பது, போன்றவற்றிற்கு ஆதரவு அளிப்பதன் மூலமாக முன்னேற்றம் பெண்களை உட்கொண்டிருக்க வேண்டும். இதன் மூலமாக பாலின வேறுபாட்டை நிவர்த்திக்க முயற்சிக்க முடியும்:

## சமுதாய நிலைப்படிகள்

சமுதாயத்திலுள்ள உறுப்பினர்களை மேல்-கீழ் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிரித்து அவர்களுக்கு வெவ்வேறு சமூக இடமளவு மற்றும் பாத்திரங்களை அளிக்கும் முறை மனித சமுதாயத்தின் பண்புகளாக தொடர்ந்து வருகிறது. சமுதாயத்தில் உள்ள மக்களை பல்வேறு பிரிவுகளை பிரிக்கப்பட்டு மற்றும் அவர்களை ஏறுவரிசைகளினால் பிரித்து வெவ்வேறு வகுப்புகளாக பிரிக்கும் நிலையே சமுதாய வேறுபாடுகளாகும்.

### சமுதாய படிநிலைகளின் பண்புகள்

***1. சமுதாயபடிநிலைகள் சமுதாயமானது :*** சமுதாய வேறுபாடுகள் மனி தர்களின் உடல் பண்புகளை ஆதரித்து ஏற்பட்டதாகும். சமூகத்தில் கௌரவம் மற்றும் முக்கியமானவைகளின் ஆதாரத்தின் படி தீர்மானிக்கப் படுகிறது. எடுத்துக் காட்டாக ஒரு மனிதன் உடலளவில் உயரமாக, அழகானவனாக, பலசாலியாக இருந்தால் மட் டுமே சமுதாயத்தில் இடம் உள்ளது. கல்வி, அறிவுக் கூர்மை, வருமானம், தொழில், நுண்கலை முதலிய அம்சங்களின் ஆதாரத்தின்படி சமூதாயம் முடிவுசெய்கிறது.

***2. சமுதாய நிலைப்படிகள் அனைத்திடங்களிலும் உள்ளது :*** சமுதாய நிலைப்படிகள் உலகமயமாக உள்ளது. மனித சமுதாயம் எங்கெங்குள்ள தோ அங்கங்கு உள்ளது. உழைப்பு பகிர்வு, தொழில், வருமானம் முதலிய சமுதாய அம்சங்களின் ஆதாரத்தின்படி சமுதாய நிலைப்படிகள் அனைத்து மனித சமூகத்திலும் காணப்படுகிறது.

***3. சமுதாய நிலைப்படிகள் பழமையானது :*** மனித உயிர் பிறந்தது முதலே



www.textbookpdf.in
©KTBS Not to be republished

சமுதாய நிலைப்படிகள் உள்ளன. நாடோடி வாழ்க்கையிலிருந்து இன்றைய சமூக வாழ்க்கைவரை சமுதாய படிநிலைகள் வெவ்வேறு வடிவங்களில் வழக்கத்தில் உள்ளன.

**4. *படிநிலைகள் வெவ்வேறு வடிவிலுள்ளன* :** சமுதாய படிநிலைகள் அனைத்து சமூகங்களிலும் ஒரேவகையான பெயரில்உள்ளன. வெவ்வேறு வடிவங்களில் நடைமுறையில் உள்ளன. எடுத்துக்காட்டு : பழங்காலரோமானிய பெட்ரிசியன்கள் மற்றும் ப்ளேபியன்களின் இடையே வேறுபாடுகள் உள்ளன. இந்தியாவில் கர்மசித்தாந்தின் ஆதாரத்தின்படி பிராமிணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு சமூக பிரிவுகள் உள்ளன.

### *சமுதாய படி நிலைகளின் முக்கிய வடிவங்கள் :*

சமுதாய படி நிலைகள் உலகளவியல் காணப்பட்டாலும் அது ஒரே வடிவில் இருப்பதில்லை. இது பல குறைபாடுகளைக் கொண்டுள்ளன. அவ்வாறே பழங்கால சமுதாயத்திலிருந்து டிஜிட்டல் சமுதாயம் வரை சமுதாயபடி நிலைகள் நடைமுறையில் உள்ள முக்கிய வடிவங்களை அறிந்துகொள்வோம்.

அவை 1. ஆதிவாசிகள் சமூகம் (Primitive Society) 2. அடிமைகள் (Slavery) 3. எஸ்டேட்ஸ் முறை (Estates System) 4. வர்ணமுறை (Vernasystem) மற்றும் 5. ஜாதி முறை (Caste System)

### *தீண்டாமை சமுதாயத்திற்கு ஒரு கொடுமை*

இந்தியாவில் முதலில் வர்ணபேதமுறை பழக்கதில் இருந்தது. இது எப்பொழுது எப்படி எக்காரணங்களினால் ஆரம்பமானது என்று கூறுவது கடினம் 'சாத்தூர்வர்ண' என்பது சமுதாய பிரிவு ஏற்பாடு. இது கர்ம சித்தாந்த தத்துவத்தின்படி உருவானது என்று கூறப்படுகிறது. பிராமிணர்-கற்றல், பயிற்சி செய்தல், யாகங்கள் செய்வது, க்ஷத்திரியர் - நாட்டை ஆளுதல், மக்களை காப்பது, வைஸ்யர் வியாபாரம் விவகாரங்கள் மற்றும் சூத்திரர் - வேளாண்மை கூலி செய்பவராகவும் செயலாற்ற வேண்டும் என்பது இந்த சித்தாந்த்தின் நோக்கமாகும்.

சூத்திரர்களை விட கீழானவர்கள் கீழ்ஜாதியினர் (தீண்டதகாதவர்) நிலை, மனிதர்களே இல்லையா என நினைக்கத் தோன்றும் தீண்டாமையை கடைப்பிடிப்பது நிறபாகுபாட்டில் தோன்றி, நடைமுறையைக் கொண்டுள்ளது. தாழ்விலும் தாழ்வானவர்கள் மற்றும் தீண்டத்தகாதவர்கள் என்ற எண்ணம் முக்கியமாக தூய்மை மற்றும் அசுத்தங்களுக்கு தொடர்புள்ளது, தீண்டாமை என்பது தொடக்கூடாது. தொடமுடியாத என்னும் பொருளில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

ஆங்கில அரசாங்கம் 1935ல் மைய சட்டம் (சென்டரல் ஆக்ட்) மூலம் இந்தியாவில் தீண்டத்தகாதவர்கள் பிரிவுமற்றும் மலைக்காடு பிரிவுமக்களை தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் என்று பெயரிட்டனர்.

பாரதரத்னா டாக்டர் பீ.ஆர். அம்பேத்கார் கூறுவது போல, வெளியிலிருந்து வந்தவர்கள், ஊரிலிருந்து வெளியில் சென்று நிலைத்தனர் அல்லது ஊரிலிருந்தவர்கள் பலகா

©KTBS Not to be republished



www.textbookpdf.in

ரணங்களால் ஊருக்கு வெளியே தள்ளிவைக்கப்பட்டனர். என்பதை ஆராயும்போது தீண்டாமை பிறப்பு மற்றும் தீண்டத்தகாதவர யாரென்பது பொருளாகிறது. மகாத்மா காந்தியடிகளின்படி தீண்டதகாத ஜாதி மிகவும் நிராகரிக்கக் கூடியது. இது இந்து சமூகத்தின் உடலை குஷ்ட்ட ரோகபுண்போன்று துன்பப்படுத்தும், தீண்டாமையை போக்க அப்பேத்தார் அவர்கள் நடத்திய போராட்டம் இங்கு நினைவுக்குக் கொண்டு வரவேண்டும்.

### தீண்டாமையால் உண்டாகும் பிரச்சனைகள் :

***சமுதாயத்தில் மிகவும் கீழ்மையான இடம் :*** தீண்டத்தகாதவர்களை சமுதாயத்தில் மிகவும் கீழ்மையான இடம் அளிக்கப்படுகிறது. மனுஸ்ம்ருத்தியின்படி சண்டாளர்களை தொட்டவர்கள் பத்துக்குமேற்பட்ட பல்வேறு பிராயச்சித்தங்கள் செய்து கொள்ள வேண்டும். வியாக்ரபாத ஸ்ம்ருத்தியின்படி பசுவாலின் நீளத்தைவிட குறைந்த இடைவெளியில் கீழானவர்களை சந்தித்தால் உயர்சாதியினர் குளித்து தீட்டை போக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

மலபாரில் தாமே தயாரித்த செருப்புகளை கீழ்சாதியினர் அணிந்து கொள்வதில்லை. உயர்சாதியினருக்கு உரிய ஏரி, குளம், கிணறு, குட்டை போன்ற இடங்களை கீழ்சாதியினர் பயன்படுத்துவதில்லை. டி குப்புசாமியவர்கள் பதிவு செய்துள்ளபடி மலத்தை சுமந்து செல்வது, இறந்த விலங்குகளை கொண்டு செல்ல, தெரு-சாக்கடையை கூட்டும் ஈனமான தொழிலை செய்ய வேண்டும். இவ்வாறு சமுதாயத்தில் மிகவும் கீழ்மட்ட இடத்தை அளித்து தீண்டத்தகாதவர்களுக்குக் அவர்களுடைய பிறப்பின் காரணத்திற்காக அவர்களின் பின் சமுதாய இயக்கத்தை கட்டுப்படுத்தப்படுகிறது. கல்வி தொடர்புடைய வாய்ப்புகளிலிருந்து வெளியில்தள்ளப்படுகிறார்கள்.

அனேக நூற்றாண்டுகளிலிருந்து தீண்டத் தகாதவர்களை கல்விதொடர்பான செயல்பாடுகளிலிருந்து ஒதுக்கியுள்ளனர். வேதங்களை கேட்கவும் மற்றும் படிக்கவும் முடியாது. சமஸ்கிருத மொழியை கற்க முடியாது. சமயநூல்கள் பற்றிய அறிவு அவர்களுக்கில்லை. ஊடகங்களிலும் இதே நிலை இருந்தது. ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே தீண்டத்தகாத மாணவர்களுடன் எழுதுவதற்கு விடுவதில்லை. மொத்தத்தில் உட்கார்ந்து பாடங்களை கற்கமுடியாது. உயர் ஜாதி மாணவர்களிடமிருந்து தூரமாக உட்காரவைத்தார்கள். தீட்டு காரணமாக கீழ்ஜாதி மக்களுக்கு கல்வித் தொடர்பான வசதிகள் செய்து தரவில்லை.

பாரத ரத்னா அம்பேத்கார் அவர்களுக்கு சமூகத்தில் நீதி பெறுவதற்கு போராடிய பிறகு கல்வி அளிக்கப்பட்டது. இது இந்தியாவின் சமூக சந்தர்ப்பத்தில் மிகவும் மகத்துவமானது. மக்களாட்சியில் மக்கள் தமக்கு தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் செயலாக்கங்கள், விவாதங்களில் பங்கேற்கும் திறன் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். மற்றொரு பக்கம் தர்க்கரீதியாக விஷயங்களை அலசும்திறன் ஒவ்வொருவரும் கொண்டிருக்க வேண்டும். இது சாத்தியமானால் கல்வியின் மூலம் மட்டுமே பெற முடியும். அதனால் அம்பேத்கார் கல்வியின் மகத்துவத்தை அறிவுறுத்தி போராட்டத்திற்கு முன்னுரிமை அளித்தார்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

பொதுமக்களிடையே கல்விக்கு இருக்கும் மகத்துவம் மூலமே பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், ''கல்விபொது மக்களின் சொத்தாக வேண்டும்'' என்று போராடினார். இவ் விதமான புரட்சிகரமான சிந்தனைகளால் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் அரசி யலமைப்பு வரைவு தயாரிப்பை உருவாக்குவதில் சரியான நிர்வாகி மற்றும் மகத்துவ மான பாத்திரத்தை நிர்வாகித்துள்ளார். 'அரசியலமைப்பின் சிற்பி' என்னும் புகழுக்கு காரணகர்த்தாவாக விளங்கினார்.

***சொத்துரிமையில் சொந்தம் கொண்டாடுவதில் நிராகரிப்பு :*** சம்பி ரதாயமாக தீண்டதாகதவர் முக்கிய பொருளாதார செயல்பாடுகள் மற்றும் ஆஸ்த் தியின் சொந்தம் கொள்ளும் உரிமை கொண்டிருந்தால் உயர்ஜாதியினருக்கு சேவையை செய்யவேண்டும். இவர்கள் சில சொத்தாக நிலத்தை பெற்றிருக்காமல் மதநூல்கள் எழுதிய தீண்டதாகதவர்களுக்கு சொத்துரிமை நிராகரிப்பு செய்யப்படுகி றது. இது மனித உயிர்வாழ்க்கைக்கு எதிரி மற்றும் மனித உரிமைகளுக்கு நடைமுறை படுத்தியே தீரவேண்டும்.

***அரசியலில் பங்கேற்பதில் நிராகரிப்பு :*** தீண்டாதவர்களுக்கு நிர்வாகத் தில், இராணுவப்படைகளில் தலைமுறைத்தத்துவத்தின்படி வாய்ப்புகள் அளிக்கப்பட வில்லை. ஆங்கிலேயர் காலம் வரையிலும் தீண்டாதவர்கள் எவருக்கும் அரசியலில் வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. அரசியல் உரிமைகள் மற்றும் பிரதிநிதித்துவம் பல காலம் வரையில் நிராகரிக்கப்பட்டுவந்தது. டாக்டர் பி.ஆர். அமேபேத்கர் அவர்கள் போராடியதின் பலனாக தீண்டாதவர்களுக்கு தேர்தல்களில் தனித்தொகுதிகளை விடுத லைக்குப்பிறகு ஏற்படுத்தப்பட்டது.

தீண்டாதவர்கள் எனப்படும் சமூக கொடுமையை போக்குவதன்படி இந்தியாவின் அரசியலமைப்பு உலகிலேயே சிறப்பான நீதி மற்றும் சமமான தன்மையை அளிக்கும் திசையில் முறையான வாக்குறுதி அளித்தது. அனைத்து மக்களுக்கும் மேன்மை, கௌ ரவம், சுதந்திரம், சமமான தன்மை, மற்றும் சமவாய்ப்புகளை பெறுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நம்முடைய அரசியலமைப்பு மிகவும் மகத்துவமானது. இதன் பின்னணியிலேயே தீண்டாதவர்களின் நிவாரணத்திற்கு சட்ட, விதிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

### ***தீண்டாதவர்களின் நிவாரணத்திற்கு சட்டவிதிகள் :***

தீண்டதவர்களின் களங்கங்களை போக்க ஜோதிபாபுலே, டாக்டர் பீ.ஆர். அம்பேத் கார் முதலானவர்கள் தீவிரமான முயற்சியை மேற்கொண்டனார். இவ்வளவானாலும் முழு அளவில் போக்குவதற்கு இன்னும் முடியவில்லை. இதனை தடை செய்ய சட்டங் கள் நடை முறைப்படுத்தப்பட்டனன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 17வது பகுதியில் தீண்டாமை ஒழிக்கப்பட் டுள்ளது. 1955ஆம் ஆண்டில் தீண்டாமை தொடர்பான குற்றங்களுக்கான தண்டனைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் ஏற்பட்ட குறைபாடுகளை திருத்தி அமைத்து மக்களின் உரிமைகள் என்று 1976ல் சட்டதிருத்தும் கொண்டுவரப்பட்டது.இவ்விதிக ளின்படி தீண்டாமையை அனுசரிப்பவர்களுக்கு தண்டனை, மற்றும் அபராதமாக்கி

©KTBS Not to be republished



www.textbookpdf.in

யுள்ளது. இல்லாமல் அரசியலமைப்புபடி அனைத்து பொது தேர்தல் மற்றும் சமமான தன்மை உரிமையை நாட்டின் அனைத்து மக்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. விசேஷமாக பழங்குடியினர் உட்பட்ட பின் தங்கிய ஜாதியினருக்கு கல்வித் தொடர்பான அரசியல் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டது. 1989ல் சாசனம் தீண்டாமை ஒழிப்பதற்காக சிறப்பு பொருப்புகளை மாநில அரசுகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இவ்வாறு சுதந்திர இந்தியா தீண்டாமையை ஒழிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்து அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகள் ஏற்படுத்த உழைத்து வருகின்றன.

### அறிந்து கொள்ளுங்கள்

* அரசியலமைப்பு சட்டம் 15, 16, 17, 38, மற்றும் 42வது விதிகள் இந்திய மக்கள் இடையே எவ்வகையான ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது எனக்கூறுகிறது.
★ 16(4), 32(4) வது விதிகள் வேலை வாய்ப்புகளில் பின்தங்கிய ஜாதி, மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
★ 330, 332, 334 வது விதிகள் அரசியல் துறையில் பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
★ 29வது விதி கல்விவசதி அளிக்கக் கூறுகிறது.
★ 25வது விதி அனைத்து மக்களுக்கும் பொதுமக்கள் மதம் தொடர்பாக மையங்களில் பிரவேசிக்க வாய்ப்பு அளிக்கக் கூறப்படுள்ளது.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. அரசியலமைப்பு ________ விதி சிறுபான்மையினர் கல்வி நிருவனங்களை துவக்க வாய்ப்பு அளித்துள்ளது.
2. தீண்டாமையை கடைபிடித்தல் அரசியலமைப்பின் ________ விதி தடை செய்துள்ளது.
3. தீண்டாமை தண்டனைகள் சட்டம் ________ல் நடைமுறைக்கு வந்தது.

### II. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி.

1. சமுதாயத்தில் சமமற்ற தன்மைக்கான காரணங்கள் யாவை?
2. பாலின சமமற்ற தன்மை எவ்வாறு உண்டாயிற்று?
3. சமுதாய படிநிலைகளின் பண்புகள் யாவை?
4. தீண்டாமை சமுதாயத்திற்கு ஒரு கொடுமை விவாதிக்க?

### III. செயல்பாடு

1. உங்கள் ஊரின் சமுதாய சமமற்ற தன்மையின் பிரச்சனைகளை பட்டியல் செய்யவும்.

### IV. திட்டம் :

1. உங்கள் பள்ளிக்கு சட்ட அறிஞரை அழைத்து தீண்டாமை மற்றும் சமுதாய சமமற்ற தன்மையைப் பற்றி பிரசங்கம் மற்றும் பேச்சுப் போட்டி ஏற்படுத்தவும்.

* * * *



www.textbookpdf.in

# அத்தியாயம் - 2

# தொழில்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களைப்பற்றி அறிகிறோம்.**

- தொழிற் பிரிவும் வகையும்.
- தொழில்/பணிகளில் சமமற்றதன்மை மற்றும் பேதபாவங்கள்.
- முறைப்படுத்திய மற்றும் முறையற்று ஒழுங்குபடுத்திய தொழிலாளர்கள்.
- சம்பாதனை மற்றும் சம்பாதனையற்ற குழுமத்தின் தொழிலாளர்கள்.
- முறையற்ற தொழிலாளர்களின் அறைகூவல்கள்.

©KTBS Not to be republished

## தொழிற் பிரிவு :

தொழிற் பிரிவு (Division of Labour) பற்றி பிளாட்டோ அவர்கள் தம்முடைய தி ரிப் பப்ளிக் என்னும் நூலில் ''மனித சமுதாய சுபாவத்தில் சமமற்ற தன்மையை உருகொண்டுள்ளது. இச்சுபாவ சமமற்ற தன்மை தொழிற் பிரிவுகளை உட்கொண்டிருக்கும் என்று கூறுகிறார்.'' சமுதாயத்திற்கு அவசியமான வசதிகளையும் மற்றும் - உணவு வகைகளை வெவ்வேறு பிரிவுகளில் உழைக்கும் மக்கள் அளிக்கிறார்கள் என்று பிளோட்டோ கூறுகிறார். எடுத்துக்காட்டாக நம்முடைய சமுதாயத்திற்கு தேவையான உணவு பண்டங்களின் உற்பத்திக்கு விவசாயிகள் வேண்டும். ஆடை நெய்ய நெசவாளர்கள் வேண்டும். அதனை தைத்துக் கொடுக்க தையற்காரர்கள் வேண்டும் தொழில் பிரிவு இவ்வனைத்து தொழிலாள வர்கத்தினரின் உழைப்பு மற்றும் இவர்கள் அனைவரை ஒன்று சேர்க்கச்செய்கிறது. தொழிற் பிரிவு சமுதாயத்திற்கு பொருளாதாரம், சமூகம், மற்றும் அரசியல் தேவைகளுக்கு தேவையாகிறது. ஆனால் தொழிற் பிரிவுகளில் சுரண்டல் செய்வது கூடாது.

கார்ல்மார்கஸ் அவர்கள் ''தொழிற் பிரிவு (Division of Labour) பற்ற விவாதித்து தொழிற்பிரிவு திறமையான தொழிலாளர்களை உட்கொண்டிருக்கும்'' என்று கூறுகிறார். அவர் தொழிற்பிரிவை பொருளாதார தொழிற்பிரிவு மற்றும் சமுதாய தொழிற்பிரிவு என்று அருதியிட்டு கூறுகிறார். பொருளாதார தொழிற்பிரிவு தொழில் நுணுக்க அம்சங்களுடன் தொழிலாளர்களின் உதவியுடன் பெருமளவில் நடைபெறுகிறது என்று கூறுகிறார். சமுதாய மற்றும் தொழிற் பிரிவு இடம் மற்றும் ஏறுவரிசையின் மூலமாக சமுதாய கட்டுப்பாட்டை சாதித்திருக்கும் என்று கார்ல்மார்கஸ் கூறுகிறார்.

தொழிற் சமுதாயத்தைவிட பகிர்வான தொழில் வெவ்வேறு தொழில்களுக்கு பிறகு சமூகத்தில் நாம் காணமுடியும். இன்றைய செய்தித் தொடர்பான சமுதாயம் அல்லது டிஜட்டில் சமுதாயத்தில் உழைப்பு பகிர்வுவகைகள் கணினிகளின் மூலமாக வெவ்வேறு வடிவங்களாகியுள்ளன. எழுத்துக்காட்டாக செய்தி தொடர்பு தொழில் நுணக்கத்தின் அடிப்படை இணைய சமூகத்திலுள்ள தனி மனிதர்களின் உழைப்பு பகிர்வு ஆதாரத்தில் விசேஷ திறமையைப் பெற்றுக் கொண்டு வேலைசெய்து கொண்டிருப்பதை பார்த்



www.textbookpdf.in

துக் கொண்டிருக்கிறோம்.

***எடுத்துக்காட்டாக :*** நமது உடலின் ஆரோக்கியம் கெடும்போது நமது உடலிலுள்ள பாகங்களை பரிசோதித்து இருக்கலாம். உடலின் வேறுபாடுகளை அறிய இன்று நாம் பல வைத்தியர்களை காணச் செல்கிறோம். அவ்வாறே வெவ்வேறு இடங்களிலும் கூட விசேஷ வல்லுநர் விசித்திரமான வடிவம் பெற்று வருமானத்தை பெருக்குவதே விசேஷ வல்லுனர்களின் முன்னுரிமையாகும்.

இவ்வாறு தொழிற் பகிர்வு சிறபபு ஆளுமை காரணமாகிறது. சிறப்பு ஆளுமை என்றால் ஏதாவது ஒரு குறிப்பிட்ட துறை ஒன்றில் போதுமான அளவு ஆழமான ஆளுமை, பயிற்சி, அல்லது திறமையைப் பெறுவது என்று பொருள். தொழிற் பகிர்வு இன்று மக்களின் வெவ்வேறு துறைகளில் பொருளாதாரத்தில் அனுகூலமான மற்றும் தொழிற்பகுப்பினால் மாற்றும் முறை உருவாகியுள்ளது. தொழிற் பகிர்வுபரந்த வடிவத்தைப் பெற்றிருப்பதினால் அனைத்து வட்டங்களில் வியாபார வணிக தொழிற்சாலைகள் பரந்துள்ளன. இதன் பலனாக சில தனிமனிதர்கள் முதலீட்டை தொடங்கி அதிகலாபம் பெறமுடிகிறது.

### வேலைவாய்ப்பு/தொழில்களில் சமமற்றதன்மை மற்றும் வேறுபாடுகள்




தொழில் என்றால் ஒரு மனிதன் தன் உடல் சிரமத்துடன் அல்லது இயற்கை சுற்றும் சூழலிலிருந்து வருமானம் அல்லது பொருள் வடிவில் பிரதிபலனாக பெறுவது என்று பொருள். மனித சமுதாயத்தின் முக்கிய பாகங்களில் தொழில் மிகவும் முக்கியமானது. தொழில் என்பது நோக்கம் ஒன்றின் சாதனமாக நடைபெறும் செயல். ஒரு மனிதனின் சக்தியினால் அல்லது சுற்றுச் சூழலிலிருந்து அவனுக்கு பொருளாதாரம் அல்லது பொருள் வடிவ பிரதிபலன் கிடைக்காமிலிருந்தால் அதனை தொழில் என்பார்கள்.

பல அடுக்கு படிநிலைகளின் ஆதாரத்தின்படி பிரிவுக்குப்பிறகு சமுதாய தொழில்களில் சமமற்றதன்மை ஆரம்பமாகிறது. இவ்வாறு தொழில் இந்தியாவின் சந்தர்ப்பங்களில் பொருளாதார விஷயமாக மிகவில்லை. அது சமுதாய உட்பகுதிகளிலிருந்து சமமற்றதன்மைகளால் கூடியுள்ளன. இந்தியாவில் தொழிலுக்கு வருமானத்துடன் ஜாதி, பிரதேசம், பாலினம், மற்றும் மதங்கள் சேர்ந்துகொண்டு தொழிலுக்குள் அனேக சமமற்றதன்மைகளை உண்டாக்கியுள்ளன. இந்தியாவின் சமுதாய முறையினுள் ஒரு மனிதன் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை அதிகாரம், அந்தஸ்த்து பெற்று இயங்கினால், அவர்களுடைய வருமானம் மற்றும் அதிகாரம் இரண்டும் அதிரித்துக் கொண்டே செல்கிறது.

வேலைகளைப் பிரித்து பகிர்வு செய்துகொள்வது தனிச் சிறப்பு பயில் திறனைப்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

பெற்றுத்தரும் தனிச்சிறப்பியல்திறன் என்றால் தனிச் சிறப்பானதொரு பயிற்சியை குறிப் பிட்ட ஒரு வேலையிலேயே ஈடுபடுவதன் மூலம் வளரும் பயில் ஆற்றலேயாகும். வேலைகளைப் பிரித்து பகிர்வு செய்து பலவகைத் தொழில்களை செய்வது பொருள் சம் பாதித்து இலாபத்தையும் பொருளாதார நன்மையும் பெறமுடியும். இது பொருளாதார படிநிலை அடுக்குகளை உருவாக்க வழி வகுக்கும்.

எடுத்துக்காட்டு மிகை வருமானக்குழு, இடைநிலை வருமானக்குழு மற்றும் குறை நிலை வருமானக் குழு என பிரிக்கப்படுகிறது.

இன்றைய தொழிலியலாக்கம் பெற்ற சமூகத்தில் தனிச்சிறப்பு பயில் திறன் பெறல் என்பது மிகவும் முக்கியமானதாகும். அடைய வேண்டியதும் கூட ஒவ்வொருத்து றையிலும் தனிச் சிறப்புப் பயில் திறன் வளர்வதுடன் தொழிலகங்கள் பலவாகவும் எண்ணிக்கையில் வளர்ந்துள்ளன. வியாபாரமும் வாணி கமும் பெருக்க மடைந்தன. இக்காரணத்தினால் குறிப்பிட்டதனி மனிதர்கள் முதலீடு களாகப் பணத்தைப் போடுகின்றனர். செல்வர்களாக அதிகலாபத்தைப் பெறுகிறார்கள். இவ்வகையில் பல அடுக்குபடி நிலைகள் சமுதாயத்தில் உருவாகின்றன. தொழிலில் பிரிவும் பகிர்வும் இன்றைய வாழ்வில் தாழ் மனப்பானமை சமூகத்திற்கு ஒற்றுமையாய் இருக்க உதவுகிறது.

**செயல்பாடு : உழைப்பில் சமமற்ற தன்மைப் பற்றி குழந்தைகளின் இடையே சமமான சமுதாயத்தை அமைப்பது குறித்து நம்முடைய அரசியல் அமைப்பின் நோக்கம் சமமான உழைப்பு சமமான கூலி சட்டம் 1976ல் நோக்கங்களை விவாதிக்கவும்.**

அரசு பிரிவுகளில் இவ்வகையான சமமற்றதன்மை குறைவு ஆயினும் அங்கு தரவரிசைப்படி சம்பாதனை செய்வதில் சமமற்ற தன்மையைக் காணலாம். ஆனால் தனியார் கம்பனிகளில் மற்றும் கார்ப்பரேட் பிரிவுகளில் ஒரு உத்தியோகியின் சம்பாதனை மற்றொருவர் அறிந்திருப்பதில்லை. உழைக்கும் பிரிவுகளில் சமமற்றதன்மை சங்கமற்ற பிரிவுகளில் கண்களால் காண்கிறோம். வேளாண் பிரிவுகளில் உழைக்கும்பாலினம் வயது, திறன்களின் ஆதாரத்தின் மீது வேலை செயல்களில் சமமற்றதன்மை விதத்தில் பகிர்வு செய்யப்படுகிறது. இங்கு பெண்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பாதனையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

***எடுத்துக்காட்டாக :*** வேளாண் குடும்பங்களில் அதிக விவசாயசெயல்பாடுகள் நடைபெறும்போது அக்குடும்பத்தில் அதிகாலையில் விரைவாக எழுந்து வேளாண் தொழிலுக்கு செல்பவர்களுக்கு கட்டுச் சோறு (உணவு சிற்றுண்டி, முதலியன தயார் செய்து கொண்டு அல்லது செய்து கொடுத்து வேளாண்மையின் அனைத்து செயல்பாடுகளில் பெண்கள் முழுமையாக, ஆண்களுக்கு குறைந்தளவில் பார்த்துக் கொள்ளமுடிகிறது. ஆனால் அவர்களுக்கு சம்பளம் அளிக்கும் போது மற்றும் முடிவுகளை மேற்கொள்ளும் போது ஆண்களை விட குறைத்து மதிப்பிடப்படுகிறார்கள். அனைத்து சமுதாயங்களிலும் பெண்களின் உழைப்பை மகத்துவமானதாக கணக்கில் எடுத்துக் கொள்வது,

©KTBS Not to be republished



www.textbookpdf.in

உழைப்பில் சமமற்ற தன்மையின் வடிவத்தை குறிக்கிறது. உழைப்பின் சமமற்ற தன்மையின் வடிவங்களை குறிக்கிறது. உழைப்பின் சமமற்ற தன்மையின் வடிவங்கள் நம்முடைய கிராமங்களில் கண்ணில் படுவதைக் காண்கிறோம்.

இன்னும் கற்றவர்கள் மற்றும் கற்காதவர்களின் இடையே மிகவும் குறுகிய மனப்பான்மை உள்ளது. நம்முடைய தெருக்களின் (கிராமிய மற்றும் நகரப்பிரதேசங்களில்) குப்பையை அள்ளுவோர், சாக்கடையை சுத்தம் செய்பவர்கள், தூய்மை செய்பவர்களுக்கு குறைந்தளவு ஊதியத்தைவிட குறைவாகவே ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் நம்முடைய சமுதாயத்தை தூய்மைப் படுத்த படும் சிரமம் அதிகம். இவ்விதமாக உழைப்பில் சமமற்றபிரிவு வருமானம், ஊதியம், பாலினம், பிரதேசம், சாதி மற்றும் மதம் ஆதார மாகியே நடைபெற்றுவருகிறது.

உழைப்பில் சமமற்ற தன்மையில் ஊதியத்துடன் மற்றும் ஊதியமற்று உழைப்பு என்று அறியப்பட்டுள்ளது. இங்கு சமமற்ற தன்மை எந்த வடிவத்திலுள்ளது என்பதை பின்னர் விவாதிப்போம்.

## ஊதிய மற்ற மற்றும் உதியத்துடனான உழைப்பு :

***ஊதியமற்ற உழைப்பு*** : ஒருவரின் உழைப்புக்கு பதிலாக எவ்வகையிலும் ஊதியம் அல்லது பொருட்களின் வடிவில் எவ்வித பிரதிபலன் இல்லாமல் உழைக்கும் செயல்பாட்டிற்கு ஊதியமற்ற உழைப்பு என்று அழைக்கப்படுகிறது.

உழைப்பு சில சமயங்களில் பொருளாதார லாபம் அல்லது பிரதிபலனற்ற செயலாக இருக்கும். ஊதியமற்ற உழைப்பில் உழைப்பவர்கள் எவ்வகையிலும் கூலியை அல்லது ஊதியத்தை பெறுவதில்லை, அல்லது அளிக்கப்படுவதில்லை இவ்விதமான உழைப்பு குடும்பத்தின் உறுப்பினர்களின் இடையே, உதவுவதின்மூலமாக, சில சமயங்களில் அழுத்தத்தின் மூலமாக சுய ஆத்ம உணர்ச்சியால், அன்பினால் செய்யும் உழைப்பாகும் எடுத்துக் காட்டாக மாணவர்கள் எவ்வித லாபமும் அல்லது பிரதி பலனை எதிர்நோக்காமல் பள்ளி கல்லூரிகளில் ஸ்கவுட் கைடுகளில், தேசிய சேவா தளம் (என்.எஸ்.எஸ்) இன்னும் இவ்வகையின உழைப்பை ஆதாரமாகக் கொண்ட செயல்பாடுகளில் காணலாம். ஒரு நிலையில் கல்வியை முடித்தபின் மாணவர்களை பயிற்சியின் நோக்கத்தோடு உதவி வேலைகளுக்கு கல்வி நிறுவனங்கள், கல்விஅல்லாத கோர்ஸ்களின் பாகமாகவே அனுமதிக்கப்படுகிறார்கள்.

அவ்வேளையில் செய்யும் வேலைக்கு எவ்விதமான ஊதியத்தையும் அளிப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஐ.டி.ஐ. செவிலியர் பயிற்சி முதலியன. அவ்வாறே ஒரு கலைஞன் தன்னுடைய மனதிருப்பதிக்காக ஒரு ஓவியத்தை வரையும் செயலில் தொடங்கப்பட்டதை இங்கு கூறலாம்.

ஊதியமற்ற உழைப்பு மாதரியில் பொதுவாக காணப்படுவது குடும்பத்தினரின் உழைப்பாகும். குடும்பத்தினரின் உழைப்பில் சாதாரணமாக அதிக சுமை பெண்களுக்

©KTBS Not to be republished.



www.textbookpdf.in

குத் தான் உண்டாகிறது. ஊதியமற்ற பெண் குடும்பத்தனரின் உழைப்பு, பெண்ணைப் பற்றி அர்த்த சாத்திரத்தில் (பொருளாதாரத்தில்) அதிகளவு சர்ச்சைகளுக்குட்பட்ட விஷயமாகும். இவ்விஷயம் சாம்பிரதாய குடும்பத்தினரின் பார்வைக்கோணத்தில் பார்க்கும் போது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊதியமற்ற குடும்பத்தினரின் உழைப்பு பெண்களின் குடும்பத்திற்கு வெளியில் உழைக்கும் வாய்ப்புகளை தேடுமாறு செய்கிறது. இது பெண்களின் குடும்பத்திற்குள் உழைப்பவர்களாக இருக்குமாறு செய்துள்ளது. பெண் தன்னுடைய குடும்பத்தின் அல்லது தன்னுடைய வாழ்க்கைத் துணையின் உழைப்பில் சம்பிரதாயமாக பங்கேற்றாலும் அல்லது அவருடைய உழைப்புக்கு ஆதரவாகிருந்தாலும் அதனை பகுதிநேர உழைப்பு என்று கருதப்படுகிறது. அல்லாமல் சமீபத்தில் பெண்களின் பங்கு குடும்பத்தின் பொருப்புகள் நிர்வாகிப்பதில் மிகவும் மகத்துவமானது என்று கூறப்படுகிறது. இவ்வாறு கூறுவதின் மூலமாக பெண்களின் உழைப்பு குடும்பத்திற்குள் ஊதியமற்ற உழைப்பு மற்றும் பொருப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

***ஊதியத்துடனான உழைப்பு :*** குறிப்பிட்ட ஊதியத்தை குழுக்களின் ஆதாரத்தின்படி தினக்கூலி அடிப்படையில், வாரத்தின் அடிப்படையில் அல்லது மாதத்தின் அடிப்படையில் உடல் உழைப்பிற்கு மனிதனின் பகுதி பயிற்சி பெற்ற அல்லது நுண் கலைகளான சிற்பம் மற்றும் ஓவியக்கலை வேலைகளுக்கு அளிக்கும் ஊதிய சம்பாதனைக்கு உழைப்பு என்று கூறப்படுகிறது. கூலியென்றால் உழைக்கும் காலத்தின் அடிப்படையில் ஒன்று கூட்டி அளிக்கும் சம்பாதனையை கூலி என்று அழைக்கப்படுகிறது. அதனை மணி, நாள், வாரம், மாத அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

வாழ்க்கையை நடத்துவதற்கு சிறுகுறு வியாபாரம் செய்து சம்பாதிக்க, வீதி வீதியான வியாபாரத்தினால் பெருமளவிலான வியாபாரம்வரை உழைப்பு, நிலம்-வயல்காடு உழைப்பு, தொழிற்சாலைகளில் உழைப்பு, பள்ளியில் ஆசிரியராக உழைப்பு, கட்டிடம் கட்டுவது, செங்கல் சூளைகளில் உழைப்பது, வாகனங்களை சீர்செய்வது அல்லது ரிப்பேர் செய்யும் காரேஜுகளில் உழைப்பு, இன்னும் இதைப்போன்ற உழைக்கும் செயல்பாடுகளில் சம்பாதனைக்காக அல்லது வாழ்க்கையின் நிர்வாகத்திற்கு உழைப்பது போன்றவைகள் ஊதியதிதற்காக என்று கூறலாம். இவ்வுழைப்புகள் இன்றைய கட்டிடங்களின் குழும சமுதாயத்தில் வாழ்க்கைக்கு தவிர்க்க முடியாததாகும். இத்துறையில் உழைப்பவர்களை சில சந்தர்ப்பங்களில் காத்திருத்தலின் பிரதிபலனை பெறும் சாத்தியங்களுள்ளன.

சம்பாதனையை அளிக்கும் வேலையை அளிப்பவர் உழைப்பவரின் இடையில் ஒப்பந்தத்தின்படி நடைபெறுகிறது. சில சமயங்களில் குத்தகை ஆதாரத்திலும் பொருட்களை சம்பாதனையாக பெறுவது உழைப்பு செயலாக்கத்தில் நடைபெறுகிறுது. சம்பிரதாய சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் பாரம்பரிய வேலைகள் உள்ளன. இவ்வாறு ஒரு சுற்றுச் சூழலில் வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் சார்ந்து வாழவேண்டியதாகிறது. அதிலும் பழைய பழக்க வழக்கமுள்ள கிராமிய பொருளாதார முறையில் பணத்தின் பயன்பாடு அதிக

©KTBS Not to be republished



www.textbookpdf.in

அளவிலுள்ளது. வெவ்வேறு ஜாதி, மற்றும் பிரிவுகளின் இடையில் அன்னியோன்ய நம்பிக்கை அதிகளவில் மகத்துவம் அளிக்கப்படுகிறது. கிராமத்தின் உட்பொருளாதார தொடர்புகளில் ஒரு பொருளை பெற்று வினியோகிக்கும் முறை மக்களை ஈர்க்கிறது. ஏறக்குறைய சமயத்தில் உடற் உழைப்பு அடிப்படை உழைப்புக்கு பணத்திற்கு பதிலாக பொருட்களை மற்றும் உணவு பதார்த்தங்களை உழைப்புவர்களுக்காக சம்பாதனை வடி வத்தில் அளிக்கப்படுகிறது. இம்முறையை ''சரிசம பண்டமாற்று முறை''அல்ல சரிச மமான மாற்று முறை என்று அழைப்பார்கள், பணத்தின் பயன்பாடு அதிகரிப்பதால் உழைப்புக்கு ஊதியம் பணத்தின் வடிவிலேயே அளிக்கும் முறை அதிக பயன்பாட்டி லிருப்பதை அனேக சமூக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முறைப்படுத்திய மற்றும் முறைப்படுத்ததாத பணியாளர்கள் Organised and unorganised workers.

## முறைப்படுத்திய பிரிவுகளின் பணியாளர்கள்:

உழைக்கும் பிரிவுகளை முதன்மை, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைப் பிரிவுகளென்று பிரிக்கப்பட்டுள்ளன. உழைக்கும் நிலைகளை அடிப்படை யாகக் கொண்டு உழைக்கும் பிரிவுகளில் கிடைக்கும். வசதிகளின் ஆதாரத் தில் முறைப்படுத்திய மற்றும் முறைப்படுத்ததாத பணியாளர் பிரிவுகளென்று பிரிக்கப்பட்டுள்ளன. எந்த பிரிவு அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டு சட் டத்தின் வரையறைக்குள், உழைக்கும் தொழிலாளர்களுக்கு குறிப்பிட்ட வேலை, உத்தியோக உறுதித்தன்மை, குறிப்பிடப்பட்ட ஊதியத்தை சட்ட வரையறைக்குட்பட்டு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதோ அதனை முறைப் படுத்திய உழைப்பு பிரிவுகளென்று அழைக்கப்படுகிறது. முறைப்படுத்திய உழைப்பு பிரிவுகளில் உத்தியோக உறுதித்தன்மையுடன், அனேக சட்டதிட்டங்கள் உள்ளன. அவை குறைந்தளவு ஊதிய சட்டம், தொழிற்சாலை சட்டங்கள், சிறப்புப்படிகள் சட்டம், பிராவிடென்ட் பண்டு (சேமநல நிதி) (பி.எஸ்) சட்டங்கள் இங்கு கட்டாயமாகும்.

முறைப்படுத்திய பிரிவுகளில் முக்கியமாக பள்ளிகள் வைத்தியசாலைகள், தொ ழிற்சாலைகள், அரசுகளின் நிர்வாக சேவைகள், வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டு கம்பனிகள், சேனைகள் முதலியன வருகின்றன. முறைப்படுத்திய உழைக்கும் பிரிவு களை தொடங்கும்போது சட்டம் மற்றும் அரசுகளின் அனுமதி கட்டாயமாகும். இப்பிரி வுகளில் உழைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர் வர்க்தினருக்கு உத்தியோக உறுதித் தன்மை சேர்ந்த அனேக சேகரிக்கப்பட்ட வசதிகளை அளிப்பது.

அந்தந்த நிறுவனங்களின் பொருப்பாகும். குறிப்பிட்ட உழைப்புக்கு குறிப்பிட்ட வேளையில் ஊதியத்தை பெறுவதுடன் ஆண்டு படிகள், மற்றும் அதிக நேரம் உழைப் புக்கு அதிகளவு ஊதியத்தை அளிப்பது கட்டாயமாகும். மொத்தத்தில் இப்பிரிவுகளில் உத்தியோக விதிகள் குறிப்பிட்டுள்ளவாறு இருக்கும். இவையல்லாமல் தொழிலாளர் மற் றும் நிருவனங்களுக்கு இடையே சட்ட ரீதியான குறிப்பிட்டவாறு தொடர்பு இருக்கும்.

© KTBS Not to be republished



www.textbookpdf.in









***முறைப்படுத்தா பிரிவுகளின் பணியாளர்கள் :*** பணியாளர்கள் முறைப் படுத்தாத பிரிவுகளென்றால் உழைப்புக்குத் தொடர்பான எவ்வித சட்டத்திற்கும் உட் படாமல் இருப்பது. என்றால் இப்பிரிவுகளில் உழைக்கும் மற்றும் உழைப்பைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு இடையே எவ்வித வகையான சட்டத்திட்டங்கள் தொ டர்புகள் குறிப்பிடப்பட்டு இருப்பதில்லை. முறைப்படுத்தா உழைப்பு பிரிவுக்கு அர சுகளின் பதிவுகள் தேவைப்படுவதில்லை இப்பிரிவுகளில் அரசுகள் எவ்விதமான சட்டதிட்டங்கள் நீதி, விதிகளுக்குட்படுவதில்லை. இங்கு வரிவிதிப்பு முறை இருப் பதில்லை. இப்பிரிவுகளில் மிகச்சிறிய அளவிலான விவகாரங்களை உட்கொண் டிருக்கும். மோட்டார் வாகனங்களை பழுதுபார்ப்பது, தலைமீது மற்றும் தள்ளு வண்டிகள் மீது காய்கறிகள் மீன்கள் முதலிய பொருட்களை விற்பனை செய்வது, டையர் பஞ்சர், சைக்கிள் ரிப்பேர், இன்னும் இதைப்போன்ற சிறு குறு உழைக்கும் பிரிவுகள் முறைப்படுத்தா உழைப்பை சேர்ந்தவையாகும். இங்கு உழைக்கும் நேரம் குறிப்பிடபடுவதில்லை. இதைவிட முக்கியமாக பகல்-இரவு விடுமுறை நாட்கள் சேர்ந்த அனைத்து நாட்களிலும் இப்பிரிவுகளின் உழைப்பாளர்கள் உழைத்துக்கொண்டே இருப்பார்கள். இங்கு உழைக்கும் தொழிலாளர் ஏறக்குறைய சந்தர்ப்பங்களில் தினக்கூ லியின் ஆதாரத்தில் உழைத்துக்கொண்டு இருப்பார்கள்.

முறைப்படுத்தா உழைப்பு பிரிவுகளில் கூலியை அரசு குறிப்பிட்டுள்ள குறைந் தளவு ஊதிய விதியை விட குறைவாகவே இருக்கும் முறைபடுத்தா உழைப்புப் பணியாளர்கள் பிரிவுகளில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதிகள் இருப் பதில்லை. சிறப்புப் படிகள் இருப்பதில்லை. இங்கு உழைப்பவர்களின் வாழ்க்கைக்கு ஒவ்வொரு நாளும் உடல் உழைப்பு செய்தே ஆகவேண்டும். இங்கு உழைப்பவர்க ளுக்கு விடுமுறை இருப்பதில்லை. எல்லா நாட்களும் பணிநாட்களாகும் இப்பிரிவுக ளில் உழைத்துவரும் முக்கிய முறைப் படுத்தா உழைப்புகளென்றால், வீடுகளை கட் டும் தொழிலாளிகள், சாலைகளின் பக்கங்களில் உழைத்துக் கொண்டிருப்பர்கள். லாரி

©KTBS
Not to be republished



www.textbookpdf.in

மற்றும் வாகனங்களில் சரக்கு சாமான்களை ஏற்றுவது மற்றும் இறக்குவது போன்ற வேலைகளை செய்து கொண்டிருப்பார்கள். செங்கல் சூளைகளில் உழைத்துக் கொண்டிருக்கும் நிலமற்ற விவசாயக் கூலிகள், சிறுகுறு விவசாயிகள் விளைப கிர்வு ஆதாரத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் மீன்காரர்கள், பீடித் தொழி லாளர்கள், சுரங்கத் தொழில்களில் உழைத்து வருகிறார்கள். எண்ணெய மில், சாமில், முதலியன இந்தியாவில் உழைப்புப் பிரிவுகளில் அதிகளவிலான மக்கள் உழைத்துக் கொண்டே இருப்பார்கள். இவற்றை முறைப் படுத்தா பிரிவுகள் என்பார்கள் நம்முடைய உழைப்பாளர்களின் நிலையை தெளிவாகக் கூறுகிறது. இன்றைக்கும் இந் தியாவில் உழைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்களில் 90 சதவீதம் அளவு தொழி லாளர்கள் முறைப்படுத்தா பிரிவுகளிலேயே உழைத்து வருகிறார்கள்.



## முறைப்படத்தப் படாத பணியார்கள் எதிர் நோக்கும் சவால்கள் :

முறைப்படத்தப்படாத பிரிவுகளில் உழைத்து வருபவர்கள் அனேக சமூக பொருளா தார சவால்களை எதிர்கொள்கின்றனர். இப்பிரிவுகளில் உழைத்து வருபவர்களுக்கு குறிப்பிட்ட ஊதியமாகட்டும், குறிப்பிட்ட வசதிகள் இருப்பதில்லை குறைந்தபட்ச ஊதி யமும் கிடைப்பதில்லை.

***இடப்பெயர்ச்சி :*** முறைப்படத்தபடாத பிரிவுகளில் உழைத்துக்கொண்டிருப்ப வர்கள், மக்கள் உழைப்பது குறித்து ஆய்வு செய்துள்ள புச் லுகர்ஸ் தன்னுடைய நூலில் பற்றி ஆய்வு செய்துள்ளனர். வாழ்க்கையை நடத்துவதற்கு ஒவ்வொரு நாளும் உழைக்க வேண்டிய மக்கள் எவ்வாறு வசிக்கும் இடத்திலிருந்து வேலை செய்யும் இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வது தவிர்க்க முடியாததாகிறது, இடப் பெயர்ச்சி முறைப்படுத்தப் படாத உழைப்பாளிகளுக்கு உழைப்பை தேர்ந்தெடுத்துக் கொண்டு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்லும் மக்களுக்கு சமுதாய பாதுகாப்புகளே இருப்பதில்லை.

***சமுதாய பாதுகாப்பு :*** முறைப்படுத்தப் படாத பிரிவில் உழைப்பவர் சமுதாய



www.textbookpdf.in

பாதுகாப்பற்ற தன்மையை எதிர்க்கொள்கிறார்கள். சமுதாய பாதுகாப்பு என்றால் மனிதன் வாழ்வதற்கு அவசியமான தேவைகள் மற்றும் அடிப்படை வசதிகளான (உறைவிடம், ஆரோக்கியம், உணவு, குடிநீர், உழைக்கத் தேவையான உபகரணங்கள் முதலியன) இவற்றை அனைத்து மக்களுக்காக அல்லது சமுதாயத்திற்காக ஏற்படுத்தியளிப்பது, சமுதாய பாதுகாப்பு என்றுகூறப்படுகிறது. ஆனால் முறைபடுத்தப்படாத பிரிவில் உழைப்பாளர்களுக்கு இவ்வளவும் கூட கிடைப்பதில்லை.

***சட்டத்திற்குட்பட்ட :*** முறைப்படுத்தபடாத பிரிவுகளில் உழைப்பாளர்களுக்கு அனேக சட்டத்திற்குட்பட்ட எல்லையில் பொருந்துவதில்லை. எடுத்துக்காட்டாக குறிப்பிட்டவேளையில் உழைப்புக்கு, குறிப்பிட்ட நிச்சயமான குறைந்தளவு ஊதியம் இல்லை. இதனை பேமன்ட் ஆப் கிராச்யூட்டி ஆக்ட் 1971ன் அடிப்படையில் கூலி முறைப்படுத்தப் படாத பிரிவில் உழைப்பவர்களுக்கு கிடைப்பதில்லை. அல்லாமல் பிராவிடென்ட் பண்டு முதலியன எதுவுமே சட்ட பூர்வமாக பொருளாதார ஆதரவுகள் முறைப்படுத்தப்படாத பிரிவுகளில் உழைப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை.

***குழந்தைத் தொழிலாளர்கள் :*** முறைப்படுத்தப்படாத பிரிவுகளில் பகுதிபயிற்சி பெற்ற உடல் உழைப்பு அடிப்படையில் வேலைகளை குழந்தைகள் மிகவும் கேடான சூழ்நிலைகளில் செய்து கொண்டு இருப்பார்கள். எடுத்துக் காட்டாக பட்டாசுகளை தயாரிக்கும் தொழிற்சாலைகளில் அங்கு பயன்படுத்தும் இரசாயன பொருட்களுடன் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் உழைத்துக் கொண்டிருப்பவர்கள் பெருமளவு குழந்தைகளாவர். மூலதனக் குறைவு, குறைந்த கூலிக்கு அதிக உழைப்பு, ஆதாரமான வேலை நடைபெறுகிறது. இதற்கு முதலில் பலியாகுபவர்கள் குழந்தைகள், மொத்தத்தில் முறைப்படுத்தப் படாத பிரிவு குழந்தைத் தொழிலாளர்கள், முறையை காப்பாற்றுகிறது.

***உடல் மற்றும் தீமைகளை சந்திக்கும் மனோநிலை :*** முறைப்படுத்தா பிரிவுகளில் வீட்டு வேலைகளை செய்து உழைத்து வரும் பெரும்பாலோனர் பெண்களாவர். இவர்கள் மீது நடைப்பெறும் உடல் மற்றும் மனதின் தீய நிலைகள் சமீப நாட்களில் இருமடங்காக பெருகியுள்ளது. இந்தியாவின் கிராமிய பகுதிகளில் 2014-2015ல் கிராமிய வளர்ச்சி அறிக்கையின் படி 77சதவீதம் அளவு பெண் குழந்தைகள் முறைப்படுத்தா பிரிவுகளில் உழைத்து வருகிறார்கள். வாழ்க்கை நடத்துவதற்கு உழைத்தே வாழ வேண்டிய கட்டாயம் பெண்களுக்கு உள்ளது. மற்றும் பெண் குழந்தைகள் மீது பாலின ரீதியாக பிரச்சனைகளுடன் பலவகையான தொந்தரவுகளை சந்தித்துவரும் அறிக்கைகளை அன்றாடம் காண்கிறோம் இவ்வாறு முறைப்படுத்தா பிரிவுகளில் தொழிலாளர்கள் எதிர்க்கொள்ளும் சில சவால்கள் இங்கு கூறப்பட்டுள்ளது.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தொழிற் பிரிவு ________ காரணமாகிறது.
2. நிலமற்ற விவசாயத் தொழிலாளரை ________ தொழிலாளர்கள் என்று



www.textbookpdf.in
©KTBS Not to be republished

அழைக்கப்படுவார்கள்.

3. மருத்துவ நிருவனங்களின் இடங்களில் தொழிலாளர்களை ________ தொழிலாளர்கள் என்று அழைக்கப் படுவார்கள்.

## II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒருவரியில் விடையளி.

1. தொழிற் பிரிவுகள் என்றால் என்ன?
2. ஊதியத்துடன் உழைப்பு என்றால் என்ன?
3. ஊதியமற்ற உழைப்பு என்றால் என்ன?
4. முறைப்படுத்தப்பட்ட உழைப்பு என்றால் என்ன?
5. முறைப்படுத்தப்பட்ட உழைப்புப் பிரிவு என்றால் என்ன?
6. முறைப்படுத்தப்படா உழைப்பாளர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகள் யாவை?
7. முறைப்படுத்தப்படா உழைப்பு பிரிவுகளின் விளைவுகள் யாவை?

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடை எழுதுக.

1. முறைப்படுத்தப்பட்ட உழைப்பின் வகைகள் யாவை? கூறுக.
2. உழைப்பின் ஏற்றத் தாழ்வுகளை விவரிக்கவும்.
3. முறைப்படுத்தப்படா தொழிலாளர் எதிர்கொள்ளும் சமுதாய பாதுகாப்பு சவால்களை விவரிக்கவும்.
4. முறைப் படுத்தப்பட்ட முறைப்படுத்தப் படாதொழிலாளர்களின் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

## IV. செயல்பாடு.

1. நீங்கள் வசிக்கும் சுற்றுச்சூழலில் முறைப் படுத்தப்பட்ட முறைப்படுத்தப்படா தொழிலாளர்களின் பெயர்களை பட்டியலிடுக.

## V. திட்டம் :

உங்கள் பகுதியில் உள்ள முறைப் படுத்தப்படா தொழிலாளர் மற்றும் அவர்களுடைய குழந்தைகளை பேசச் செய்து அவர்கள் மூலமாக அறிக்கையை தயாரியுங்கள்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# புவி இயல்

## பாடம் - 1

# இந்தியா - நம் நாடு

### இந்தியாவின் இருப்பிடம் மற்றும் பரப்பு

**இப்பாடத்தில் நாம் கீழ்க் கண்டவைகளைப் பற்றி படிப்போம்.**

- ஆசியா மற்றும் உலகத்தில் இந்தியாவின் இருப்பிடம்.
- இந்தயாவின் பரப்பு மற்றும் எல்லைகள்
- இந்தியாவின் அண்மை நாடுகள்

***1.1 இருப்பிடம் :*** புவியியல்ரீதியாக இந்தியா வட கோளத்தில் அமைந்துள்ளது மேலும் இது கிழக்கு கோளத்தின் மையத்தில் உள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ளது. இது ஒரு தீபகற்பம். இந்தியாவின் முக்கிய நிலபரப்பு, $80^{o}4'$ முதல் $37^{o}6'$ வடக்கு அட்சரேகை மற்றும் $68^{o}7'$ லிருந்து $97^{o}25'$ வரை கிழக்கு தீர்க்க ரேகையில் பரவியுள்ளது. அந்தமான் நிகோபார் தீவுகள் தெற்கு நோக்கி மேலும் விரிவடைந்து இந்தியாவின் அட்சாம்ச பரப்பை நீட்டிக்கிறது. தெற்கில் கடைசி முனையான 'இந்திரா முனை' நிகோபார் தீவில் $6^{o}.45'$ வ. அட்சரேகையில் அமைந்துள்ளது.




**ஆசியா மற்றும் உலகில் இந்தியாவின் இருப்பிடம்**

கடகரேகை நாட்டின் நடுப்பகுதி வழியாக ($23\frac{1}{2}^{0}$வ)நாட்டின் செல்கிறது $82\frac{1}{2}^{0}$கி. தீர்க ரேகை இந்தியாவின் மத்திய தீர்க ரேகை.



www.textbookpdf.in

©KTBS Not to be republished

இந்திய திட்டநேரம் (*IST*) இந்த தீர்க ரேகை அடிப்படையில் கணிக்கப்படுகிறது.

***1.2 பரப்பு :*** இந்தியா உலகின் ஏழாவது மிகப்பெரும் நாடு. முதல் ஆறு நாடுகளாவது ரஷ்யா, கானடா, சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரேஜில் மற்றும் ஆஸ்திரேலியா, இந்தியாவின் மொத்த பரப்பளவு 32,87,263 சதுர கி.மீ. உலகின் மொத்த பரப்பளவில் இது 2.42% மட்டுமே. கிழக்கு முதல் மேற்கு வரை இதன் நீளம் 2,933கிமீ மற்றும் வடகிலிருந்து தெற்கே 3,214கி.மீ.

***எல்லைகள் :*** இந்தியா நிலம் மற்றும் நீர் எல்லைகளைப் பெற்றுள்ளது. நாட்டின் நில எல்லை சுமார் 15,200 கி.மீ. சில இடங்களில் தவிர இந்தியா அனைத்து பக்கங்களிலும் பெரும்பாலும் இயற்கை எல்லைகளைப் பெற்றுள்ளது. வடக்கே இமயமலைத்தொடர் இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையே இயற்கை எல்லையை உருவாக்கியுள்ளது.




இந்தியாவின் முக்கிய நிலப்பகுதி சுமார் 6,100கி.மீ. நில எல்லையை பெற்றுள்ளது. மேற்கே அரேபியக் கடல், தெற்கே இந்து மாக்கடல் கிழக்கே வங்காள விரிகுடா நீர் எல்லைகளை உருவாக்கியுள்ளன.

அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் மேலும் லட்சத்தீப் தீவுகள் சேர்ந்து இந்தியாவின் கடற்கரையின் மொத்த நீளம் 7,516.5 கி.மீ.

***அண்டை நாடுகள் :*** இந்தியா 7 அண்டைய நாடுகளைப் பெற்றுள்ளது. வடமேற்கே பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்; நேபாள், பூடான் மற்றும் சீனா வடக்கு; பங்களா தேஷ் மற்றும் மியான்மர் கிழக்கே உள்ளன. பாக்நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடாவால் இந்திய பெரும் நிலபரப்பிலிருந்து பிரிக்கப்பட்டு உள்ள ஸ்ரீலங்கா தென்கிழக்கே உள்ளது.

Not ©KTBS to be republished



www.textbookpdf.in




**உங்களுக்கு தெரியுமா?**

- *ரேட்கிளிப் கோடு : இந்தியா பாகிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக் கோடு.*
- *டுரன்ட் கோடு : இந்த எல்லைக்கோடு ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியாவை பிரிக்கிறது.*
- *மோஹன் கோடு : இந்த எல்லைக் கோடு இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையை உள்ளது.*

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

***நிர்வாக பிரிவுகள் :*** இந்தியா ஒரு மக்களாட்சி குடியரசு. நிர்வாக வசதிக்காக இந்தியா 29 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்கள் மற்றும் தேசிய தலைநகரம் டெல்லி என பிரிக்கப்பட்டுள்ளன. தெலுங்கான ஒரு புதிய மாநிலம். மாநிலங்களில் இராஜஸ்தான் மிகப்பெரிய மாநிலம் மற்றும் கோவா மிகச்சிறிய மாநிலம்.

## பயிற்சிகள்

### I. பொருத்தமான வார்த்தைகளுடன் காலி இடங்களை நிரப்புக :

1. இந்தியாவின் மொத்த பரப்பளவு ________ சதுர கி.மீ.
2. ________ நாடு இந்தியாவின் தென்கிழக்கே உள்ளது.
3. ________ அட்ச ரேகை இந்தியாவின் மத்தியில் செல்கிறது.
4. இந்தியாவில் புதியதாக உருவாக்கப்பட்ட மாநிலம் ________

### II. குழுக்களில் கலந்துரையாடி கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் கூறுங்கள்.

1. இந்தியாவின் பரப்பை அட்சாம்ச மற்றும் தீர்காம்ச ரேகைகள் மூலம் கூறுக.
2. இந்தியாவின் தென் முனை எது?
3. இந்தியாவிற்கு வடமேற்கே உள்ள நாடுகளின் பெயர்கள் கூறவும்.
4. இந்தியாவின் எல்லைகள் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுது.

### III. செயல்பாடுகள் :

1. ஒரு இந்திய வரைபடம் வரைந்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தலைநகரங்களை குறிக்கவும்.

### IV. செயல் திட்டம் :

1. உங்கள் ஆசிரியரின் உதவியுடன் உங்கள் மாநிலத்தின் வரை படத்தை வரைந்து அதன் அட்சாம்ச தீர்காம்ச பரப்பை காட்டவும். கர்நாடகாவின் அண்டை மாநிலங்களை காட்டவும்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# பாடம் - 2
# இந்தியாவின் இயற்கை அமைப்புகள்
## இப்பாடத்தில் கீழ்க் கண்டவைகளைப் பற்றி நாம் கற்போம் :

- இந்திய நில வடிவமைப்புகளின் பொது அம்சங்கள்.
- இந்தியாவின் இயற்கையமைப்பு பிரிவுகள்.
- நில அமைப்பு பிரிவுகளின் முக்கிய அம்சங்கள்.

இந்தியா ஒரு பரந்த நாடு. இது வெவ்வேறு நில வடிவங்களை பெற்றுள்ளது. அவைகளில் மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரைச் சமவெளிகள் அடங்கியுள்ளன. நதிகளின் ஒழுங்கு முறைகள், தட்ப வெட்ப நிலை, இயற்கை தாவரங்கள், நில்ப்பயன்பாடு, வேளாண்மை, போக்குவரத்து, மக்கட்தொகை பரவல் மற்றும் பிறவற்றின் மீது இந்த நில வடிவங்கள் தங்களின் ஆதிக்கத்தைப் பெற்றுள்ளன.

### *2.1.* இந்தியாவின் இயற்கையமைப்பு பிரிவுகள் :

இந்திய இயற்கையமைப்பின் அடிப்படையில் இந்தியாவை நான்கு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன் -

1. வடக்கு மலைப்பகுதிகள்
2. வடக்கு பெரும் சமவெளிகள்
3. தீபகற்ப பீடபூமி
4. கடற்கரை சமவெளிகள் மற்றும் தீவுகள்.

***1. வடக்கு மலைப்பகுதிகள் :*** இளம் மடிப்பு மலைகளின் கூட்டங்களான இமய மலைத்தொடர் இந்தியாவின் வடக்கு எல்லைப் பகுதிகளில் ஒரு தொடர் சங்கிலியாக அவை பரவி உள்ளன. உலகின் மிக உயர்ந்த மலைத் தொடர்களாக அவை உள்ளன. மிக உயர்ந்த சிகரங்கள், ஆழமான பள்ளத்தாக்குகள், மலை இடுக்குகளில் ஓடும் அருவிகள், பனிப்பிரதேசங்கள், கணவாய்கள் ஆகியவற்றை அவை பெற்றுள்ளன. இந்தியாவில் மேற்கே சிந்து மலையருவிகளிலிருந்து கிழக்கே பிரம்மபுத்திரா மலையாறு வரை 2400கி.மீ. தூரம் உள்ளது. இதன் அகலம் 240 முதல் 320 கி.மீ. வரை வெவ்வே வறாக அமைந்துள்ளது. மேற்கே அகலமாகவும் கிழக்கே குறுகியும் உள்ளது. அவை சுமார் 5 இலட்சம் கி.மீ. பரப்பளவை கொண்டுள்ளன. பொதுவாக அவை இந்தியாவை நோக்கி (தெற்கு) செங்குத்தான சரிவுகளையும் திபெத்தை நோக்கி (வடக்கு) சாதாரண சரிவுகளையும் பெற்றுள்ளன.

இமயமலைத் தொடர்கள் மூன்று இணை மலைத் தொடர்களைக் கொண்டுள்ளன.

i) உயர்ந்த மலைத்தொடர்
ii) குறைஉயர் மலைத்தொடர் மற்றும்
iii) சிவாலிக் குன்றுகள்.

> ***நீங்கள் அறிவீர்களா?***
> ***எவரெஸ்ட்சிகரம்:****இதன் நேபாளபெயர் 'சாகர் மாதா'; இதன் பொருள், 'வான தேவதை'. திபெத்தியர்கள் இதனை 'சோம்லுங்மா' என்றழைக்கின்றனர்.*

***i) உயர்ந்த மலைத் தொடர் :*** இவைகள் மிகவும் உள்ளார்ந்த, தொடர்ச்சியான மற்றும் மிக உயர்ந்த



www.textbookpdf.in

Not to be republished ©KTBS

தொடர்கள். இம்மலைத்தொடரின் சராசரி உயரம் 6100 மீ. இந்த மலைத் தொடர்களில் பல உயரமான சிகரங்கள் உள்ளன. இவற்றில் எவெரெஸ்ட் சிகரம் (8848மீ) உலகின் மிக உயர்ந்த சிகரமாகும். மற்றவை கஞ்சன் ஜூங்கா (8559 மீ), மகாலு (8481 மீ), தௌலகிரி (8172 மீ) மானஸ்லு (8156மீ) நந்தா தேதி மற்றும் சில. உயர்ந்த இமய மலைத் தொடர்கள் ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டுள்ளதால் இத்தொடர்கள் 'ஹிமாத்ரி' என்றழைக்கப்படுகின்றன. இவை பலப்பனிப்பிரதேசங்களின் தாயகம். உதாரணத்திற்கு கங்கோத்ரி மற்றும் யமுனோத்திரி பனிப்பிரதேசங்கள். பல கணவாய்கள் இங்குள்ளன. அவை புர்ஜில், லோஜிலா, ஷிப்கிலா.




ஹிமாத்ரியின் வடமேற்கில் உள்ள மலைகள் 'டிரான்ஸ் இமாலயா' என்றழைக்கப் படுகின்றன. அவை காரகோரம் மலைத் தொடர்களை பெற்றுள்ளன. இங்கு $k^2$ அல்லது காட்வின் ஆஸ்டின் எனப்படும் உயர்ந்த சிகரம் உள்ளது.

**ii) குறை உயர் மலைத் தொடர் :** உயர்ந்த மலைத்தொடர்களின் தெற்கே இத்தொடர்கள் அமைந்துள்ளன. இவைகள் 'இமாச்சல்' என்றும் அறியப்படுகின்றன.

Not to be republished

இவை 60-80கி.மீ அகலமும் 1500-4500 மீ உயரமும் கொண்டவை இதன் கிழக்கத்திய பகுதிகள் காடுகள் சூழ்ந்தவை. குறை உயர் மலைத் தொடர்களில் பல இணைத் தொடர்கள் உள்ளன. உதாரணம், பிர்பாஞ்சால், தௌலாதர், நகாடிபா, முஸோரி, மகாபாரத் மற்றும் டார்ஜிலிங் தொடர்கள். காஷ்மீர் பள்ளத்தாக்கு, கங்கிரா பள்ளத்தாக்கு, குலு பள்ளத்தாக்கு போன்ற பல பள்ளத் தாக்குகள் இதில் அடங்கும். இவை மலை வாழிடங்களுக்கும் பெயர் பெற்றவை. சிம்லா, ராணிகெட், முசோரி, நைநிடால் மற்றும் டார்ஜிலிங் அவற்றில் சில.




**iii) *சிவாலிக் குன்றுகள் :*** இவை மிக வெளிப்புற தொடர்கள் அல்லது அடிவாரக் குன்றுகள் ; முக்கிய இமயமலைகளுக்கு எதற்கே இவை உள்ளன. ஆகையால் இவை 'வெளிப்புற இமயமலை' எனவும் அறியப்படுகின்றன. இவை மிகக் குறைந்த உயரம் கொண்ட இமயமலைகளின் தொடர், இதன் உயரம் 600-1500 மீ மற்றும் அகலம் 15-15-கி.மீ. என வேறுபாடு கொண்டவை. இவை மேற்கே ஜம்மு-காஷ்மீரிலிருந்து கிழக்கே அருணாச்சல் பிரதேசம் வரை பரவியுள்ளது. இவை சமமான அடிப்பகுதிகளைக் கொண்ட பள்ளத்தாக்குகள், இவை டூன்கள் என்றழைக்கப்படுகின்றன. உ.ம். டேராடூன்.

### ***முக்கியத்துவம் :***

1. இமயமலைகள் நம் இயற்கையான எல்லைகளாக செயல் படுவதுடன் வெளிநாட்டு படையெடுப்புகளைதடுக்கிறது. மேலும் மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்காற்றைதடுக்கிறது. 2. மழைக்காற்றுகளை தடுப்பதால் பெருமழைக்கு காரணமாகின்றன. 3. இவற்றின் சரிவுகள் அடர்ந்த காடுகள் உடையன மற்றும் இவைதோட்டப் பயிர்களுக்கு ஏதுவாக உள்ளன. உ.ம். அஸ்ஸாமில் தேயிலை. 4. இவை கனிமங்களின் உறைவிடமானது. பலநதிகள் நீர்விழ்ச்சிகளின் பிறப்பிடமாகவும் இருப்பதால் புனல் மின்நிலையங்கள் நிறுவி மின்னாற்றல் தயாரிக்கப்படுகிறது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

## 2. வடக்கு பெரும் சமவெளி

இது இந்தியாவின் இமயமலைகளுக்கும் தீபகற்பபீடபூமிக்கும் இடையே பரவி உள்ளது. சட்லெஜ், கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆகிய மூன்று நதிகளின் நிலையற்ற போக்கால் இது உருவாகியுள்ளது. 2500 கி.மீ. நீளம் கொண்ட, வண்டல் மண் சார்ந்த நிலபரப்புடைய இச்சமவெளி உலகிலேயே மிகப்பெரியதாகும்.




இதனுடைய சராசரி அகலம் வெவ்வேறாக 240முதல் 340 கி.மீ கொண்டதாகும். இது சுமார் 7 இலட்ச கி.மீ. பரப்பளவை கொண்டது. இமயமலையிலிருந்து ஓடும் நதிகளால் சேகரிக்கப்பட்ட வளமான வண்டல் மண்ணினால் இச்சமவெளி உருவாக்கப்பட்டுள்ளது. இச்சமவெளி தட்டையானதாக இருப்பதுடன் பாறைகள் மேற்பரப்பில் காணப் படுவதில்லை.

**முக்கியத்துவம் :** வடக்கு பெருஞ்சமவெளி, நிலையான நதிகளையும் வளமான பரந்த வண்டல்மண் பரப்பையும் இது பெற்றிருப்பதால் இது நீர்ப்பாசனத்திற்கும் வேளாண்மைக்கும் மிகவும் உகந்ததாக உள்ளது. சாலைகளின் இணைப்பு, இரயில்வே, தகவல் தொடர்பு உள்ளது. இதன்சமமான நிலபரப்பு மிகவும் உதவிகரமாக உள்ளது. இவை தொழிற் துறை, நகரமயமாக்கப் மற்றும் வானிபத்திற்கும் பயனுள்ளதாக உள்ளன. இங்கு பல புண்ணியத்தல மையங்கள் அமைந்துள்ளன.

## 3. தீபகற்ப பீடபூமி

இந்திய இயற்கையமைப்பு பிரிவுகளிலேயே இது மிகப்பெரியது. இது மிகப் பழைமை வாய்ந்த பெரும் நிலபரப்பு. இது கோன்ட்வான நிலப்பகுதியின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. இது பெரும் சமவெளிப் பிரதேசத்திற்கு தெற்கே உள்ளது. இது 16 இலட்சம் சதுர



www.textbookpdf.in
©KTBS Not to be republished

கி.மீ. உடையது. வடிவத்தில் இது ஏறக்குறைய முக்கோணமாக உள்ளது. இதன் கடைசி தென்முகடு கன்னியாகுமரி முனையால் உருவாகி உள்ளது. பல குன்றுகள் மற்றும் பீடபூமிகளாலான எல்லைகளை கொண்டுள்ளது அவை: ஆரவல்லி, விந்தியா, சாத்பூர, மேற்கு தொடர்ச்சி மலைகள், கிழக்கு தொடர்ச்சி மலைகள், சோட்டா நாகபூர் மலைத்தொடர், டெக்கான் பீடபூமி, மால்வா பீடபூமி.




**ஆரவல்லி :** மலைகள் மிகப்பழமையான மடிப்பு மலைகள் இவை வடமேற்கில் அமைந்துள்ளன. ஆரவல்லி மலைத் தொடரின் அபுமலைகளில் உள்ள சிகரங்களில் குருஷிகார் மிக உயரமான சிகரம் (1772மீ) நர்மதா பள்ளத்தாக்கின் வடக்கே இரு பக்கங்களிலும் விந்திய மலைத் தொடர் உள்ளது. விந்தியா மலைக்கு தெற்கே நர்மதா மற்றும் தபதி நதிகளுக்கிடையே கிழக்கு மேற்காக சாத்பூரா மலைத் தொடர் நீண்டுள்ளது.

**மேற்கு மலைத் தொடர் :** தொடர்ச்சியாக தபதி பள்ளத்தாக்கு முதல் கன்னியாகுமரி வரை மேற்கு கடற்கரைக்கு இணையாக செல்கிறது. இவை 'சயாத்ரிகள்' எனவும் அறியப்படுகின்றன. இவை மேற்கே செங்குத்துச் சரிவாகவும் கிழக்கே மிதமான சரிவுடனும் உள்ளது. மேற்கு மலைத் தொடர்களில் போர்காட், தல்காட் மற்றும் பாலக்காடு போன்ற முக்கிய கணவாய்கள் உள்ளன. பாலக்காட்டுக்கு தெற்கே இதன் இடைவெளியில் இத்தொடர்கள் ஆனைமலை, பழனி மற்றும் ஏலமலைகளாக தொடர்கின்றன. தென்னிந்தியாவிலிலேயே மிக உயர்ந்த சிகரம் ஆனை மலையில் உள்ள அன்னமுடி.

தக்காண் பீடபூமி, சாத்பூரா மற்றும் விந்தியா மலைகளால் வடமேற்கு எல்லைகளாக அமையப்பெற்றுள்ளது. மேற்கே மேற்கு மலைத் தொடர், கிழக்கே கிழக்கு மலைத் தொடர், மகதேவ மற்றும் மைக்கால் மலைத்தொடர்கள் வடக்கேயும் இதற்கு எல்லைகள். தீபகற்பத்தின் வடகிழக்கு பகுதியில் சோடா நாகப்பூர் பீடபூமி அமைந்துள்ளது.

© KTBS Not to be republished

***முக்கியத்துவம் :*** தீபகற்ப பீடபூமி வளமான கனிமங்களையும் அடர்ந்த காடு களையும் உயிரின வேறுபாடுகளையும் கொண்டது. தென்மேற்கு பருவமழை மீதான தாக்கத்தை பெற்றுள்ளது மேலும் வேளாண்மைக்கு தகுந்த கருப்பு மண் படர்ந்த நிலபரப்பாகும். புனல் மின்சாரம் தயாரிக்க பயன்படும் பல தென்னிந்திய நதிகளுக்கு மேற்கு மலைத்தொடர்கள் பிறப்பிடமாக உள்ளது. இது மலை வாழிடங்களுக்கும் பெயர் போனவை உதாரணத்திற்கு ஊட்டி.

**உங்களுக்கு தெரியுமா?**

- *சாத்பூர் : 7 'சாத்' என்றால் 'ஏழு' மற்றும் 'பூர்' என்றால் மலைகள் என்று சமஸ்கிருதத்தில் பொருள்.*
- *பாபர் : சிவாலிக் மலையின் அடிவார நீளத்திற்கும் கிழக்கு மேற்காக அமைந்துள்ள நீளமான குறுகிய பகுதி.*
- *தார் பாலைவனம் : வடமேற்கு பாகத்தில் அமைந்துள்ள இந்திய பாலைவனம்.*

### *4. கடற்கரைச் சமவெளிகள் :*

இருபக்கங்களிலும் கடற்கரைச் சமவெளிகளால் இந்திய தீபகற்ப பீடபூமி சூழப்பட்டுள்ளது. மேற்கே கச் பகுதியிலிருந்து கிழக்கே கங்கையின் டெல்டா வரை பரவியுள்ளது. கடற்கரைச் சமவெளிகளை மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி என இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

i. ***மேற்கு கடற்கரைச் சமவெளி :*** இது மேற்கு மலைத் தொடர்களுக்கும் அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. இது கட்ச்சிலிருந்து கன்னியா குமரிவரை விரிந்துள்ளது. இது குறுகலான, சரிவான மற்றும் பாறைகளையும் உடையது. இதை மூன்று பாகங்களாக பிரிக்கலாம். அவை ஏ) கொங்கன் கடற்கரை, இது குஜராத் சமவெளிக்கு தெற்கே இருந்து டாமன் முதல் கோவாவரை அமைந்துள்ளது. பி) கர்நாடகா கடற்கரை இது கோவாவிலிருந்து மங்களூரு வரை. சி) மலபார் கடற்கரை இது மங்களூரு முதல் கன்னியாகுமரி வரை அமைந்துள்ளது.

ii. ***கிழக்கு கடற்கரைச் சமவெளி :*** இது சுவர்னரேகா நதியின் வடக்கிலிருந்து கன்னியாகுமரி வரை அமைந்துள்ளது. இது கிழக்கு மலைத் தொடருக்கும் வங்காள விரிகுடாக்கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. மேற்கு கடற்கறைச் சமவெளியைவிட இது அகலமானது. தென்னிந்தியாவின் பல நதிகள் இச்சமவெளி முழுவதும் ஓடி டெல்டாக்களை உருவாக்கியுள்ளன. உதாரணம், மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி.

கிழக்கு கடற்கரைச் சமவெளி பாரம்பரியமாக இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. வடக்கு சர்கார், இது கிருஷ்ணா நதியின் வடக்கே அமைந்துள்ளது. தெற்கு பகுதி, இது கொரமண்டல் கடற்கரை என்றழைக்கப்படுகிறது. இச்சமவெளியில் சில லகூன்கள் (ஆழமற்ற ஏரிகள்) உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணம், சில்கா ஏரி, புலிகட் ஏரி மற்றும் கொல்லேரு ஏரி.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

**முக்கியத்துவம் :** இந்தியாவின் கடற்கரைச் சமவெளிகள் சில இயற்கை துறைமுகங்களை அளித்துள்ளன. இவை போக்கு வரத்திற்கும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கும் உதவுகின்றன. அவை : கண்ட்லா, மும்பை, மார்ம கோவா, கொச்சி, விசாக பட்டினம், கொல்கத்தா மற்றும் பிற கடற்கரைச் சமவெளிகள் மீன்பிடித்தல், கப்பல் கட்டுதல், வேளாண்மை மற்றும் உப்பு தயாரித்தலுக்கு பயன்படுகின்றன. பல பொழுது போக்கு கடற்கறைகள் (Beaches) கடற்கரை நீளத்திற்கும் காணப்படுகின்றன. இவைசுற்றுலா பயணிகளை ஈர்க்கின்றன. கடற்கழிகள் (Backwaters) கடற்பயணத்திற்கு பயன்படுகின்றன.




**இந்திய தீவுகள் :** இந்தியாவில் சுமார் 247 தீவுகள் உள்ளன. இவற்றில் 204 வங்காள விரிகுடாக்கடலிலும் 43 அரபிக் கடலிலும் உள்ளன. அந்தமான் மற்றும் +-நிகோபார் தீவுகள் வங்காள விரிகுடாவிலும் லட்சத்தீவுகள் அரபிக்கடலிலும் அமைத்துள்ளன. இங்கு பவளப்பாறைகள் உருவாகியுள்ளன.



www.textbookpdf.in

# பயிற்சிகள்

## I. பொருத்தமான வார்த்தைகளால் காலி இடங்களை நிரப்புக :

1. உயர்ந்த இமயமலைத் தொடர்கள் ________ என்றும் அறியப்படுகிறது.
2. ________ இமயமலைத் தொடர்கள் மலை வாழிடங்களுக்கு புகழ்பெற்றவை.
3. ________ தென்னிந்தியாவின் மிக உயர்ந்த சிகரம்.
4. கிழக்கு மலைத்தொடர் மேற்கு மலைத் தொடரை ________ மலைகளில் சந்திக்கின்றன.
5. வடக்கு பெரும் சமவெளி ________ மண்ணால உருவாகியுள்ளது.

## II. குழுக்களில் கலந்துரையாடி கீழ்கண்ட கேள்விகளுக்கு பதில் கூறுங்கள்.

1. இந்தியாவின் முக்கிய இயற்கையமைப்பு பிரிவுகள் யாவை?
2. வடக்கு பெரும் சமவெளிகள் எவ்வாறு உருவாகியுள்ளது?
3. சிவாலிக் மலைகள் பற்றி சுருக்கமாக விவரி.
4. கிழக்கு மலைத்தொடர் மற்றும் மேற்கு மலைத்தொடர் இடையேயான வேறுபாடுகளை விவரி.
5. வடக்கு மலைகளின் முக்கியத்துவத்தை விவரி.

## III. செயல்பாடுகள் :

1. இந்தியாவின் வரைபடத்தை வரைந்து முக்கிய இயற்கைப் பிரிவுகளைக் காட்டவும்.
2. இந்தியாவின் வரைபடத்தை வரைந்து முக்கிய மலை வாழிடங்களை குறிக்கவும்.

## IV. செயல்திட்டம் :

1. இந்திய படத்தில் இந்திய கடற்கரையிலுள்ள மாநிலங்களை குறிப்பிட்டு பெயர்களை எழுதவும். மேலும் புகழ்பெற்ற பொழுதுபோக்கு கடற்கரைகளின் படங்களை சேகரிக்கவும்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# பாடம் - 3
# இந்திய தட்ப வெப்ப நிலை

**இப்பாடத்தில் கீழ்க்கண்டவைகளை நாம் கற்போம்.**

- **இந்தியாவின் தட்பவெப்ப வகையும் அதை பாதிக்கும் காரணிகளும்.**
- **தட்பவெப்ப காலங்கள் மற்றும் அதன் இயல்புகள்.**
- **இந்தியாவில் மழைகளின் பகிர்வு.**

## 3.1. தட்ப வெப்ப வகை :

இந்தியா 'வெப்ப மண்டல பருவகாற்று' வகை தட்ப வெப்ப வகையைப் பெற்றுள்ளது. இதன் காரணம் என்னவெனில் இந்தியாவின் பெரும்பாலான பகுதி வெப்ப மண்டத்தில் உள்ளது. எனவே இதன் வெப்பநிலை பருவ காற்றுகளின் தாக்கத்தை பெரிதும் பெற்றுள்ளன.

> ***இதை அறிந்து கொள்ளுங்கள்***
> *'மௌசம்' என்னும் அரேபிய வார்த்தையிலிருந்து 'மான்சுன்' என்ற வார்த்தை வந்தது. இதன் பொருள் காலங்கள் (பருவங்கள்) எனப்படும்.*

இந்த தட்ப வெப்பத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணிகள், அமைப்பிடம், நீர்நிலைகள், நிவாரண அம்சங்கள் மற்றும் பருவகால காற்றுகள். எனவே இந்திய தட்பவெப்பநிலை ஒரு மண்டலத்திலிருந்து மற்றொரு மண்டலத்திற்கும் ஒரு பருவகாலத்திலிருந்து மற்றொரு பருவகாலத்திற்கும் வேறுபடும்.

## 3.2 தட்ப வெப்ப நிலைக் காலங்கள் :

ஒரு ஆண்டின் இந்திய தட்பவெப்ப நிலையை 4 காலங்களாக பிரிக்கலாம்.

1. குளிர்க் காலம் (டிசம்பர் முதல் பிப்ரவரி வரை)
2. கோடைக் காலம் (மார்ச் முதல் மே வரை)
3. மழைக் காலம் (ஜீன் முதல் செப்டம்பர் மாத முதல் பாதி வரை)
4. பின் மழைக் காலம் (செப்டம்பர் இரண்டாம் பாதிமுதல் நவம்பர் வரை)

***1. குளிர்க் காலம் :*** இக்காலத்தில் சூர்யக்கதிர்கள் தென் கோளத்தின் மீது செங்குத்தாக விழுகின்றன. இந்தியா சூரியனின் சாய்வான கதிர்களைப் பெறுகிறது. எனவே வெப்ப நிலையும் ஈரத் தன்மையும் குறைவாக காணப்பட்டு வானம் தெளிவாக இருக்கும். வடக்கே குளிர்ச்சியாகவும் தெற்கே மிதமான வெப்ப நிலையும் உள்ளது. ஜனவரி மிகக்குளிரான மாதமாக இருக்கும். மலைப்பகுதிகளான காஷ்மீர் மற்றும் இமாச்சல பிரதேசம் மிகக் குறைந்த வெப்பநிலையை பதிவு செய்கிறது. கார்கிலுக்கு அருகேயுள்ள டிராஸ் மிகவும் குறைந்த வெப்பநிலை ($-40^0C$) யை பதிவு செய்துள்ளது. பனித்துளிகளும் மூடுபனியும் இங்கு சாதாரணமாக காணப்படும். மலைப் பிரதே

©KTBS Not to be republished



www.textbookpdf.in

தசங்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும். குளிர்காலத்தில் இந்தியாவின் ஆண்டு மழையளவு 2% மட்டுமே.

***2. கோடைக்காலம் :*** இக்காலத்தில் சூரியக் கதிர்கள் வடகோளத்தின் மீது செங்குத்தாக விழும். எனவே இந்தியாவில் வெப்ப நிலை அதிகமாக இருக்கும். அப்போது வெப்பமாகவும் வறண்டும் மற்றும் புழுக்கமாகவும் இருக்கும். இராஜஸ்தான் கங்காநகரில் மிகவும் அதிகபட்ச வெப்பமாக $49.4^{0}C$ பதிவாகும். நாட்டின் சில பகுதிகளில் வெப்பச்சலன மழை பெய்கிறது. இது உத்திர பிரதேசத்தில் ‘அந்திஸ்’ என்றும் மேற்கு வங்கத்தில் ‘கலாபை சக்திஸ்’ என்றும் அழைக்கப்படுகிறது. கேரளாவில் மாமரங்களுக்கு உதவியாக இருப்பதால் அங்கு இதற்கு மாவடு மழை ‘மேங்கோ ஷோவர்ஸ்’ எனப்பெயர். கர்நாடகாவில் இதன் பெயர் ‘காபி பிளாசம்’. கோடைக்காலத்தில் இந்தியாவின் ஆண்டு மழையளவு 10% இருக்கிறது.

***3. மழைக் காலம் :*** இதை ‘‘தென்மேற்கு பருவமழை’’ என்றும் அழைக்கின்றார்கள். கோடைக் காலத்தின் இறுதியில் வெப்பநிலை உயர்வதால் குறைந்த காற்றழுத்தப்பகுதி மத்திய இந்திய பகுதிகளில் உருவாகிறது. அதே நேரத்தில் இந்து மாக்கடலில் உயர்ந்த காற்றழுத்த நிலை உருவாகிறது. ஆகையால் ஈரப்பதங்கொண்ட காற்றுகள் தென்மேற்கு பகுதியிலிருந்து இந்தியாவை நோக்கி வீசுகிறது. அவை நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு கொண்டு வந்து இக்காலத்தில் 75% மழையைக் கொடுக்கிறது.

இது தெற்கில் இரண்டு கிளைகளாக உள்ளது. மேற்கு பருவமழைகள் அரபிக் கடல் கிளை மற்றும் வங்காள விரிகுடாக்கடல் கிளை. அரபிக் கடல் கிளை மேற்கு தொடர்ச்சி மலைகளில் மோதி இம்மலைத் தொடரின் மேற்கு பகுதிக்கு மிக அதிக மழையைக் கொடுக்கிறது. மேற்கு மலைத் தொடரின் கிழக்கு சரிவுகளில் மழை குறைந்து காணப் படுகிறது. ஏனெனில் இப்பகுதி ‘‘மழை மறைவுப் பகுதி’’யாக உள்ளது.

வங்காள விரிகுடாக்கடல் கிளை இதன் காற்று மேகாலயா மற்றும் அஸ்ஸாம் மலைகளில் மோதும் போது மிக அதிக மழையைப் பெறுகிறது. மேகாலயாவின் ‘மாவுஸின்ராம்’ல் மிகவும் அதிகமான மழையைப் பெறுகிறது. இம்மழை வடமேற்கே செல்லச்செல்ல அதன் அளவு குறைகிறது.

***4. பின் மழைக் காலம் :*** அக்டோபர் மாத தொடக்கத்தில் வெப்பநிலை குறைவின் காரணமாக, தாழ்ந்த காற்றழுத்தப் பகுதி, நிலபரப்பின்மீது உயர்ந்த காற்றழுத்தழ் தாழ்வு ஏற்படுவதால் படிப்படியாக இடமாற்றமாகிறது. ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை வங்காள விரிகுடாக் கடலில் உருவாகிறது. இதன் பயனாக தென் மேற்கு பருவக் காற்று பின்னடையத் தொடங்குகிறது மற்றும் வட கிழக்கலிருந்து இது வீசுகிறது. எனவே இந்த காலம் வடகிழக்கு பருவமழை காலம் எனவும் அறியப் படுகிறது. இது நிலையற்ற வானிலைத் தன்மைகளின் காலம். இக்காலத்தில் இந்தியா சராசரி ஆண்டு மழையாக 13% பெறுகிறது. இக்காலத்தில் தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் மற்றும் ஒடிசா கடற்கரைப் பகுதிகள் மழையைப் பெறுகின்றன.

இக்காலத்தில் வங்காள விரிகுடாக் கடலில் அடிக்கடி வெப்பமண்டல புயல் காற்று

©KTBS Not to be republished



www.textbookpdf.in

உருவாகி கிழக்கு கடற் கரைப் பகுதிகளைத் தாக்கி அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன.

### 3.3. மழைப் பகிர்வு :

இந்தியாவில் மழை பெய்யும் அளவின் அடிப்படையில் இந்தியாவை 3 பரந்த மண்டலங்களாக பிரிக்கலாம்.

**i) குறைந்த மழையளவு பெறும் பகுதிகள் :** (50 செ.மீ.க்கும் குறைவான): மேற்கு கட்ச், இராஜஸ்தானின் தார் பாலைவனம் மற்றும் இதனருகில் உள்ள மேற்கு பஞ்சாப், அரியானா மற்றும் குஜராத், ஜஸ்கார் மலைத் தொடரின் வடக்கு மற்றும் மேற்கு மலைத்தொடரின் மழை மறைவு பகுதிகள் இவற்றில் அடங்கும். இராஜஸ்தானின் ஜெய்சால்மாரில் உள்ள ருயிலிமிகக் குறைவான மழையளவை (8.3செ.மீ) பெறுகிறது. இது இந்தியாவின் மிக வறண்ட இடமாக கருதப்படுகிறது.




©KTBS Not to be republished

**ii) மிதமான மழையளவு கொண்ட பகுதிகள்** (50 முதல் 100 செ.மீ.): இது வடக்கு பஞ்சாப்பிலிருந்து கன்னியாகுமரிவரையிலான ஒரு நீளமான பகுதி இது வடக்கில் அகலமாகவும் தீபகற்ப இந்தியாவில் குறுகியும் மேற்கு தொடர்ச்சி மலைத் தொடருக்கும் கிழக்கு தொடர்ச்சி மலைத் தொடருக்கும் இடைப்பட்டு உள்ளது.

**iii) மிக அதிக மழையளவு கொண்ட பகுதிகள் :** (100-250 செ.மீ) இது 4 தனித்தனி நீளவாட்டு பகுதிகளாக அறியப்படுகிறது. மேற்கு மலைத்தொடரில் குறுகலான



www.textbookpdf.in

நீளவாட்டுப் பகுதி, ஜம்மு மலை களிலிருந்து இமாச் சல பிரதேசம் வழியாக ஒரு நீண்ட பகுதி, வடக்கு உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், வடகிழக்கு இந்தியா, மேற்கு கடற்கரை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மேற்கு பகுதி மற்றும் பிற, வடகிழக்கு இந்தியாவின் மாசின்ராம் மிக அதிக மழையைப் பெறுகிறது.

## பயிற்சிகள்

### I. பொருத்தமான வார்த்தைகளுடன் காலி இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் __________ வகை வெப்பநிலை காணப்படுகிறது.
2. இந்தியாவில் மிக அதிக மழை பெறும் இடம் __________
3. இந்தியாவில் __________ மிகக் குறைந்த வெப்பநிலையை பதிவு செய்கிறது.
4. இந்தியாவின் மிகக்குளிர்ந்த மாதம் __________

### II. குழுக்களுடன் கலந்துரையாடி பிறகு கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் கூறுக.

1. இந்தியாவின் வெப்பநிலையை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?
2. இந்தியாவின் முக்கிய காலங்கள் எவை?
3. தென்மேற்கு பருவ காற்றின் செயல் வழிப்பாட்டினை விவரி.
4. கோடைக் காலத்தின் வானிலைத் தன்மையை விவரி.
5. இந்தியாவின் குறைந்த மழையளவு கொண்ட பகுதிகளைக் குறிப்பிடுக.

### III. செயல்பாடு :

முக்கிய நகரங்களின் வெப்பநிலைப்பற்றி செய்தித்தாள்களிலிருந்து தகவல்களை சேகரிக்கவும். வெப்பநிலையின் மாற்றங்கள் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடு.

### IV. செயல் திட்ட பணி :

இந்திய வரைபடத்தை வரைந்து அதில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகாற்றுகளை காட்டவும்.

* * * *

©KTBS Not to be republished

## பாடம் - 4

# இந்தியாவின் மண் வகைகள்

### கீழ்க்கண்டவைகளைப் பற்றி இப்பாடத்தில் கற்போம்

- **இந்தியாவில் உள்ள மண் வகைகளின் பொருள் மற்றும் அதன் முக்கியத்துவம்.**
- **மண்களின் வகைகள் மற்றும் அவைகளின் பகிர்வு.**
- **மண் அரிப்பு - காரணங்களும் விளைவுகளும்**

### *4.1. பொருள் மற்றும் முக்கியத்துவம் :*

கனிமம் மற்றும் அங்கக பொருட்கள் நெருக்கமாக இரண்டற கலந்த, பூமியின் மெலிந்த மேற்பரப்பு அடுக்கு மண் எனப்படும். இது இந்தியாவின் மிக முக்கிய இயற்கை வளம் ஏனெனில் மக்களின் முக்கிய தொழிலாக வேளாண்மை உள்ளது. வேளாண்மை உற்பத்தி, அடிப்படையில் மண்ணின் வளத்தை சார்ந்துள்ளது.

இந்தியாவில் மண் உருவாதல்; முக்கியமாக மூல பாறைகளின் மாறுபாடுகள், தட்பவெப்பம் மற்றும் இயற்கை தாவரங்கள் சம்பந்தப்பட்டதாக உள்ளது. எனவே இந்தியாவில் பரந்த வெவ்வேறு மண் வகைகள் உள்ளன.

### மண்களின் வகைகள் :

இந்திய மண்களை 6 முக்கிய வகைகளாக பிரிக்கலாம்.

1) வண்டல் மண்      2) கருப்பு மண்
3) செம்மண்      4) சிவப்புகப்பி மண்
5) பாலைவன மண் மற்றும்      6) மலைகளிலுள்ள மண்.

***1. வண்டல் மண் :*** ஆற்று வண்டலால் உருவான மண்ணை வண்டல் மண் என்கிறோம். சிந்து கங்கை சமவெளிகளைப் போலவே நதிகளால் சேகரிக்கப்பட்ட நீரின் அடிப்பாகத்திலுள்ள மண்ணிலிருந்து உருவானதே வண்டல். கடல் அலைகளால் கடற்கறைச் சமவெளிகளில் வண்டல் மண் உருவாகிறது. வண்டல் மண் பரந்தகன்றதும் மிக முக்கியமானதுமாக உள்ளது. நாட்டின் வேளாண்மைக்கு இம்மண் மிகுந்த பங்களிப்பை அளித்துள்ளது. இது சுமார் 15 லட்சம் கி.மீ. பரப்பளவிற்கு பரவியுள்ளது. இவ்வகை மண்ணில் முக்கிய பயிர்கள் கோதுமை, நெல், கரும்பு, பருத்தி, சணல், உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகள்.

இந்தியாவில், பெரும்பாலும் வண்டல்மண் நதிச்சமவெளிகளில் காணப்படுகிறது. உ.ம்: சட்லெஜ், கங்கை, பிரம்மபுத்திரா, நர்மதா, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி.

> ***உங்களுக்கு தெரியுமா?***
> *மிகச் சிறந்த மற்றும் புதியதான வண்டல் 'காதர்' என்றழைக்கப் படுகிறது. சொரசொளுப்பான சிறுதுகளகள் மற்றும் பழைய வண்டல் 'பங்கர்' என்றழைக்கப் படுகிறது.*

***2. கருப்பு மண் :*** இவ்வகை மண்



www.textbookpdf.in

©KTBS Not to be republished

'ரெகுர்' (தெலுங்கு) என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. இம்மண் பருத்தி விளைவிக்க ஏதுவானதால் இது கரிசல் பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது. கரும் பாறைகளிலிருந்து இவை உருவாகியுள்ளது. இவை அடர்ந்த சாம்பல் மற்றும் கருப்பு வண்ணங்களில் இருப்பதுடன் களிமண் கலந்து இருக்கும். ஈரத்தன்மையை இது தேக்கிவைக்கும்தன்மைபெற்றுஇறுக்கமாகஇருக்கும்.இவ்வகைமண்ணில்பருத்தி,கரும்பு, சோளம், மக்காச்சோளம், பருப்புகள், கோதுமை மற்றும் மிளகாய் நன்கு விளையும்.

மகாராஷ்ட்ரா மத்திய பிரதேசம், தெலுங்காணாவின் சில பாகங்கள், கர்நாடகாவின் வடக்குபகுதி, குஜராத்தில் சில பகுதிகள், தமிழ்நாட்டின் சில பகுதிகள் அடங்கிய தக்காண பசால்ட் பாறைத் துகள்கள் நிறைந்த பகுதிகளில் பெரும்பாலும் கருப்புமண் காணப்படுகிறது. இம்மண் இந்தியாவின் சுமார் 5.46 இலட்சம் கி.மீ. பரப்பளவில் உள்ளது.




**3. செம்மன் :** இம்மண் உயர்வெப்பநிலையால் உருவான பாறைகள் தட்பவெப்ப நிலையால் சிதலமடைந்து உருவாகியுள்ளது. மணிப்பளிங்கான பாறைகளின் துகள்களும் கலந்துள்ளது. இம்மன் பொதுவாக சிவப்பாகவும் சிவப்புகலந்த பழுப்பு நிறமாகவும் இருக்கும். மணற்பாங்காகவும் களிமண் மிகக்குறைவாகவும் இருக்கும். எனவே இது ஈரத் தன்மையை தக்கவைத்துக் கொள்ளாது. இது சுமார் 5.2 இலட்சம் கி.மீ. பரப்பளவில் காணப்படுகிறது. இம்மண் மிக அதிகமாக தமிழ்நாட்டில் காணப்படுகிறது. இம்மண்


www.textbookpdf.in
© KTBS Not to be republished

தென் கர்நாடகத்திலும் மகாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம், ஒடிசா, கேரளா, கோவா, பீகார், உத்தரபிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து மற்றும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளிலும் காணப்படுகிறது.

செம்மண் கேழ்வரகு, வரகு, தினை, கம்பு, சோளம் கடலை, புகையிலை மற்றும் உருளைக்கிழங்கு விளைவிக்க மிகச் சிறந்தது. நீர்ப்பாசன வசதி இருந்தால் வெவ்வேறு பயிர்கள் பயிரிடலாம்.

***4. சிவப்பு கப்பி மண் :*** இந்த வகைமண் உயர்வெப்பநிலை மற்றும் மழையின் தன்மைகளால் வெப்ப மண்டல பகுதிகளில் உருவாகின்றது. இந்தியாவில் இது சுமார் 2.48 இலட்சம் கி.மீ. பரப்பளவில் காணப்படுகிறது. இம்மண் முக்கியமாக உயர்ந்த நிலப்பரப்பில்; மேற்கு மலைத் தொடர், கிழக்கு மலைத் தொடர், சோடா நாக்பூர் பீடபூமி, மேகாலயா பீடபூமி, ராஜ்மகால் மலைகள், விந்திய மற்றும் சாத்பூர் மலைகளின் மேலே காணப்படுகிறது. மழை மற்றும் வெப்பத்தால் மண்வளம் நீக்கப்பட்டிருப்பதால் சிறிதளவே வேளாண்மைக்கு பயன்படுகிறது. முந்திரி, இரப்பர், தேயிலை, காபி மற்றும் நெல் இம்மண்ணில் விளைகின்றன.

***5. பாலை வன மண் :*** இவ்வகை மண் பாலைவனத்திற்கு அடியில் மற்றும் இந்தியாவின்வடமேற்குபாகத்தில்காணப்படுகிறது. உ.ம்:இராஜஸ்தானின்பெரும்பாலான பகுதிகள், தெற்கு அரியாண, பஞ்சாப் மற்றும் குஜராத்தின் வடபாகம். இம்மண் சுலபமாக பொடியாகும் தன்மையையும் கரையக்கூடிய உப்பையும் அதிகம் கொண்டுள்ளது. மணல் அதிகமாகவும் ஈரத்தன்மை மிகக்குறைவாகவும் உள்ளது. பலவிதமான பயிர்கள் பயிரிட இம்மண் ஏற்றதல்ல. நீர்ப்பாசன வசதியுள்ள சில இடங்களில் சிலவகை பயிர்கள் பயிரிடலாம். இந்தியாவில் இது சுமார் 1.42கி.மீ. பரப்பளவில் காணப்படுகிறது.

***6. மலை மண் :*** இவ்வகைமண் காடுகள் நிறைந்த மலைகள் மற்றும் குன்றுகளின் சரிவுகளின் மீது முக்கியமாக காணப்படுகிறது. அங்கக பொருட்கள் அழுகுவதால் பெரும்பாலும் இம்மண் உருவாகிறது செடிகளுக்கு தேவையான அம்சங்கள் அதிகம் இருப்பதால் இம்மண் வளமானதாக உள்ளது. இவை தோட்ட பயிர்களுக்கு பயனுள்ளது. உ.ம: தேயிலை, காபி மற்றும் பழங்கள். இம்மன் பெரும்பாலும் ஜம்மு காஷ்மீர், இமாச்சல் பிரதேசம், மணிப்பூர் மற்றும் மேற்கு மலைத் தொடர் நீளத்திற்கும் காணப்படுகிறது. இம்மன் இந்தியாவில் சுமார் 2.85இலட்சம் கி.மீ. பரப்பளவில் பரவியுள்ளது.

## 4.3. மண் அரிப்பு :

இயற்கை சக்திகளால் நில பரப்பின் மேல் மண் நீக்கப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. நதிகள், பனிஆறுகள், காற்றுகள், கடலலைகள் போன்றவைகளால் மேற்பரப்பு வளமான மண் அடுக்கு நீக்கப்பட்டு மண்ணின் வளம் குறைகிறது. இந்தியாவில் மண் அரிப்பு மிக முக்கியமான பிரச்சனையாக உள்ளது.

***மண் அரிப்புக்கான காரணங்கள் :*** இதற்கான முக்கிய காரணங்கள் :

எ) காடுகளின் அழிப்பு

பி) கால்நடைகளை அதிக அளவில் மேய்தல்

சி) முறையற்ற வேளாண்மை

டி) தவறான முறைகளில் பயிர் செய்தல்

இ) செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிக்க மேல் மண்ண பயன் படுத்துதல் போன்றவை.



www.textbookpdf.in

©KTBS Not to be republished

***மண் அரிப்பின் விளைவுகள் :*** இதற்கான முக்கிய விளைவுகள் :

1. மண் வள இழப்பு மற்றும் விவசாய உற்பத்தி குறைவு.
2. வண்டல் அடித்துச் செல்லவும் வெள்ளங்கள் ஏற்படவும் நதிகளில் பாதை மாற்றம் மற்றும் நீர் நிலைகளில் கொள்ளளவை குறைக்கிறது.
3. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து அதனால் மண்ணின் ஈரத்தன்மை குறைகிறது.
4. தாவரங்கள் காய்ந்து பஞ்சம் அதிகரிக்கிறது.
5. மொத்தத்தில் பொருளாதாரம் ஒரு பெரும் பின்னடைவைப் பெறுகிறது.

***4.4. மண் பாதுகாப்பு :*** மண் அரிப்பிலிருந்து மன்னை பாதுகாப்பது மற்றும் மண்ணிற்கு வளத்தை சேர்ப்பதுவே 'மண் பாதுகாப்பு' என அழைக்கப்படுகிறது. மண் பாதுகாப்பிற்காக சில அளவைகள் பின் பற்றப்படுகின்றன -

1. காடுகளை பேணுதல் மற்றும் அதிக அளவில் காடுகளை உருவாக்குதல்.
2. மேய்ச்சலை கட்டுப்படுத்துதல்.
3. மேட்டு நில வேளான்மை.
4. தடுப்பணைகளை கட்டுவது.
5. மேற்பரப்புகளில் கரை கட்டுதல்.
6. இடுக்கு வழி நீரோடைகளை கட்டுப்படுத்துதல் மற்றும் அடுக்கு முறையில் மேட்டுநில விவசாயம்.

> ***நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள் :*** *மண்ணியல் (மண்பற்றிய அறிவியல்) என்பது மண்ணை உருவாக்குவது, அமைப்பு, இரசாயனக் கலவை மற்றும் இதன் மாற்றங்கள்.*

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

### I. காலி இடங்களை பொருத்தமான வார்த்தைகளால் நிரப்புக :

1. நதிகளால் அடித்து கொண்டு வரப்பட்டு சேமித்தலால் உருவான மண் ________ என்றழைக்கப் படுகிறது.
2. கருப்பு மண்கள் ________ மண் எனவும் ________ மண் எனவும் அழைக்கப்படுகிறது.
3. உயர் வெப்பநிலை மற்றும் மழையின் தன்மைகளால் வெப்பமண்டல பகுதிகளில் உருவாகும் மண் ________ என்றழைக்கப் படுகிறது.
4. தோட்டப்பயிர்களுக்கு ஏற்ற மண் ________

### II. குழுக்களில் கலந்தாலோசித்த பிறகு கீழ்கண்ட வினாக்களுக்குவிடை அளி :

1. இந்தியாவிலுள்ள முக்கிய மண் வகைகள் எவை?



www.textbookpdf.in

2. இந்தியாவில் கருப்பு மண்ணின் பகிர்வு பற்றி விவரி.

3. செம்மண்ணின் இயல்புகள் என்னென்ன?

4. மண் அரிப்பு மற்றும் மண் பாதுகாப்பு என்றால் என்ன?

5. மண் அரிப்பிற்கான முக்கிய காரணங்களை விவரி.

6. மண் அரிப்பினால் ஏற்படும் விளைவுகள் எவை?

## III. செயல்பாடு:

1. இந்திய வரைபடத்தில் முக்கிய மண் வகைகளின் பகிர்வை காட்டவும்.

## IV. செயற்திட்ட பணி:

1. அருகாமையிலுள்ள வேளாண் அலுவலகத்திற்கு சென்று உங்கள் ஆசிரியர் உதவியுடன் உங்கள் வட்டத்தில் (தாலுக்கா) காணப்படும் வெவ்வேறு வகை மண்களை பட்டியலிடவும்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# பாடம் - 5

# இந்தியாவின் காட்டுச் செல்வங்கள்

## இப்பாடத்தில் கீழ் கொடுக்கப்பட்டவைகளைப் பற்றி நாம் கற்போம்.

- காட்டு செல்வங்களின் பொருள் மற்றும் முக்கியத்துவம்.
- இந்தியக் காடுகளின் வகைகள் மற்றும் பகிர்வு.
- காடுகளின் பாதுகாப்பு.
- வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள்.
- இந்தியாவின் உயிரின பாதுகாப்பு மண்டலங்கள்.

### 5.1 காடுகளின் பொருள் மற்றும் முக்கியத்துவம்

மரங்களாலும் மரத்தடி புதர்களாலும் அடங்கிய ஒரு பெரும் நில பரப்பு காடு எனப்படும். இது பொதுவாக பரந்து விரிந்த மற்றும் வர்த்தக மதிப்பை கொண்டிருக்கிறது. இது இயற்கையாக வளர்ந்த மற்றும் நம்மால் வளர்க்கப்பட்ட தாவரங்களையும் கொண்டிருக்கும்.

இந்தியாவின் இயற்கைச் செல்வங்களில் ஒன்றாக காடுகள் உள்ளன. நேரடியாக அவை நமக்கு எரிபொருள், மரச் சாமான்கள் மற்றும் தொழிற்சாலைக்கான மூலப் பொருட்களுக்கு தேவையான மரங்களை பெருமளவில் அளிக்கின்றன. கால் நடைகளுக்கு தேவையான புல் மற்றும் மக்களுக்கு தேவையான வேலைவாய்ப்புகளையும் அளிக்கிறது.

காடுகள் மறைமுகமாக, புவிஇயல் அம்சங்களை பாதுகாக்கிறது. மண் அரிப்பை தடுக்கிறது. வெள்ளங்களை கட்டுப் படுத்துகிறது. நதிகளின் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது. காடுகள் நிலம் பாலைவனமாதலை தடுக்கிறது. மண் வளத்தை பெருக்க உதவுகிறது. தட்பவெப்ப நிலையை சமன்படுத்துகிறது. சுற்றுச் சூழல் சமன்பாட்டை பராமரிக்க உதவுகிறது. இவை வனவிலங்குகளுக்கு உறைவிடமாக திகழ்கிறது.

### 5.2 காடுகளின் வகைகள் :

இந்தியாவில் காடுகளின் வகைகள், தட்பவெப்பம், மண்மற்றும் நிலபரப்புகளின் மீது சார்ந்துள்ளன. ஆனால் தட்பவெப்பம் மிக முக்கியமான காரணி. இந்தியா மிகப் பரந்த நாடு. இது மிகச் சிறந்த வெவ்வேறு வகை காடுகளை பெற்றுள்ளது. இவைகளை 6 முக்கிய வகைகளாக பிரிக்கலாம்.

1. வெப்ப மண்டல என்றும் பசுமை நிறைந்த காடுகள்.
2. வெப்ப மண்டல இலையுதிர்க்காடுகள்.
3. முட்புதர் காடுகள் மற்றும் புல் வெளி பிரதேசம்.
4. பாலைநிலத்தாவரங்கள்.
5. மலைப்பிரதேச காடுகள்
6. மங்குரோவ் காடுகள்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

**1. வெப்ப மண்டல என்றும் பசுமை நிறைந்த காடுகள் :** ஆண்டு மழையளவு 250 செ.மீக்கும் அதிக மழை பெய்யும் பகுதிகளில் இவ்வகை காடுகள் காணப்படுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்கு சரிவு பகுதிகள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகாலாந்து, மேகாலயா, திரிபுரா, மணிப்பூர் மற்றும் அந்தமான், நிக்கோபார் தீவுகள் ஆகிய இடங்களின் மலைப்பிரதேசங்களிலும் இவை காணப் படுகின்றன.

இக்காடுகள் அடர்ந்து காணப்படுவதுடன் இங்குள்ள மரங்கள் மிகவும் உயரமானதாக இருக்கும். இங்குள்ள மரங்கள் ஆண்டில் ஒரே சமயத்தில் தம் இலைகளை உதிர்ப்பதில்லை எனவே இவை என்றும் பசுமை நிறக்காடுகள், இதன் முக்கிய மரங்கள் தேக்கு, செம்மரம், எபோனி, மகாகளி குர்ஜன் மற்றும் சம்பர்.




©KTBS Not to be republished

**2. வெப்ப மண்டல இலையுதிர் காடுகள் :**

இவ்வகைக் காடுகள் ஆண்டு மழையளவு 100-200 செ.மீ உடைய பகுதிகளில்



www.textbookpdf.in

காணப்படுகிறது. மகாராஷ்ட்ரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு அடங்கிய மேற்கு தொடர்ச்சி மலைகளின் கிழக்கு சரிவு பகுதிகளில் பெரும்பாலும் காணப்படுகின்றன. மேலும் சோட்டாநாக்பூர் பீடபூமி, இமயமலையின் அடிவாரங்கள், ஓடிசாவின் சில பகுதிகள் மற்றும் மேற்கு வங்காளம்.

இக்காடுகளின் மரங்கள் : இளவேனிற்காலம் மற்றும் கோடைக்காலத்தின் தொடக்கத்தில் இலைகளை உதிர்க்கும் எனவே இவை 'பருவக்காற்று காடுகள்' எனவும் அழைக்கப்படுகிறது. முக்கியமான மரங்களான தேக்கு, சால், சந்தனம், குகம், கஞ்சு, மைரோபலன், சிரிஸ், மா, வேம்பு, புளியன் போன்றவை இங்கு அதிகமாக உள்ளன.

***3. முட்புதர் காடுகள் மற்றும் புல்வெளி பிரதேசம் :*** இவ்வகைக் காடுகள் 60 முதல் 100 செ.மீ. மழையளவு கொண்ட பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. குறுகிய கால புற்களுடன் முட்புதர்கள், முட்கள் உடைய மரங்கள், புதர்கள் கட்ச் மற்றும் தார் பாலை வனத்தின் வரம்புகளில் ஆங்காங்கே காணப்படுகின்றன. புல்வெளிகள் பெரும்பாலும் கிழக்கு இராஜஸ்தான், பஞ்சாப் மேற்கு தொடர்ச்சி மலைகளின் சில பாகங்கள் மற்றும் கார்டமம் குன்றுகளில் காணப்படுகிறது.

***4. பாலை நிலத்தாவரங்கள் :*** ஆண்டு மழையளவு 10-50 செ.மீ. மழையுள்ள பகுதிகளில் இவை காணப்படுகின்றன. பஞ்சாப், அரியானா, இராஜஸ்தான் மற்றும் தக்காண பீடபூமியின் சிலபகுதிகள் மற்றும் தார் பாலைவனப்பகுதிகளில் இத்தாவரங்கள் உள்ளன. மிகக்குறைந்த மழையின் காரணமாக ஆங்காங்கே சிலமரங்கள் மற்றும் முட்புதர்கள் உள்ளன. மேலும் ஜான்ட், கைர், கோல்கோ, பவுல், காக்டி மற்றும் கெஜ்ரா மரங்கள் இங்குள்ளன.

***5. மலைப் பிரதேச காடுகள் :*** மலைச்சரிவுகளில் வளரும் மரங்கள் மற்றும் தாவரங்கள் 'மலைப்பிரதேச காடுகள்' என அழைக்கப் படுகிறது. இந்தியாவில் இமயமலைகளிலும் சிறிதளவு நீலகிரி மலைகளிலும் இவை காணப்படுகின்றன.கடல் மட்டத்திலிருந்து உயரம் அதிகமாக அதிகமாக மரங்கள் மற்றும் தாவரங்களின் வகைகள் மாறுபடுகின்றன. முக்கிய மரங்களாவன, ஓக், செஸ்ட்நட், ஆஷ், பீச், பைன், செடர், ஸ்புருஸ், பிர்டியோடர் மற்றும் வால்தெட்.

***6. மங்குரோவ் காடுகள் :***

> ***அறிந்து கொள்ளுங்கள்***
>
> *கங்கா நதியின் முகத்துவாரங்கள் உள்ள மங்குரோவ் காடுகளில் சுந்தரி மரங்கள் பரந்து அதிகம் காணப்படுவதால் இதை 'சுந்தரவனக்காடு' என்றும், சதுப்பு நிலங்களில் காணப்படும் 'சுந்தரவளக் காடு' என்னும், சதுப்புநிலங்களில் காணப்படும் காடுகளுக்கு 'சதுப்புநிலக்காடு' எறும் அழைக்கின்கள்.*

இக்காடுகள் ஈரமான சதுப்புநில பகுதிகள், நதி முக்கதுவார பகுதிகள் மற்றும் கடற்கரை கழிமுக பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. இவை முக்கியமாக கிழக்கு கடற்கரையிலுள்ள நதிமுகத்துவாரபகுதிகளிலும் மேற்கு கடற்கரையின் சில பகுதிகளிலும் காணப்படுகிறது. ரிஜோபோரா, கேன்ஸ், செரூபைப், பனை, சுந்தரி போன்றவை முக்கிய மரங்கள், நீரில் மூழ்கியிருக்கும்



www.textbookpdf.in

Not to be republished ©KTBS

அசையும் வேர்கள் மரக்கொம்புகளை தாங்கியிருப்பது ஒருவகை மரங்களின் முக்கிய அம்சம்.

### காடுகளின் பகிர்வு :

இந்தியாவின் மொத்த காட்டுப் பகுதிகளின் பரப்பளவு சுமார் கி.மீ.7.74 இலட்சம் சதுர கி.மீ. நாட்டின் மொத்த புவி பகுதியில் சுமார் 23.6% என கணக்கிடப்பட்டுள்ளது. 1952 ஆம் ஆண்டு தேசிய வணக்கொள்கை தீர்மானத்தால் சிபாரிக செய்யப்பட்ட 33.3% விட மிகவும் குறைவு. மேலும் இது உலக சராசரி (29.5%)யை விட குறைவு.

இந்திய காடுகளின் பகிர்வு ஒழுங்கு முறையானதாக இல்லை. நாட்டின் 60% காட்டுப் பகுதி இமயமலைகளிலும் தீபகற்ப மலைகளிலும் மற்றும் 20% வடக்கு சமவெளிகளிலும் உள்ளது. மத்திய பிரதேச மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகள் காடுகளால் சுழப்பட்டுள்ளது. மேலும் கோவா மிகக்குறைந்த அளவை பெற்றுள்ளது.

## 5.3. காடுகளின் பாதுகாப்பு :

இந்திய தேசிய பொருளாதாரத்தில் காடுகள் மிக முக்கிய பங்காற்றுகின்றன. சமீப ஆண்டுகளில் துர்அதிர்ஷ்ட்ட வசமாக காடுகளில் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. வேளாண் நிலங்களின் விஸ்தரிப்பு, சாலைகள் மற்றும் இரயில் பாதைகளின் நிர்மாணம், நீர்ப்பாசன திட்டங்கள், தொழிற்சாலைமயமாதல், நகரமயமாதல், அதிகமான கால்நடை மேய்ப்பு, காடுகள் தீக்கிரையாதல் போன்ற அம்சங்கள் காடுகளின் அழிவுக்கு முக்கிய காரணங்களாக உள்ளன. ஆகையால் காடுகளை பாதுகாப்பது எதிர்கால சந்ததியினர்க்கு மிகமிக அவசியம். அழிவுகளிலிருந்து காத்தல், காடுகளை சுரண்டுதலிலிருந்து காத்தல் மற்றும் அதன் சரியான மேலாண்மை 'நாடுகளின் பாதுகாப்பு' எனப்படுகிறது.

### இந்தியாவில் காடுகளை பாதுகாப்பதற்கான அளவைகள்

1) காட்டின் அழிவை தடுத்தல்
2) கால்நடை மேய்ச்சலை கட்டுப்படுத்தல்
3) காட்டுத் தீகளை கட்டுப்படுத்தல்
4) காடுகளின் ஆக்கிரமிப்பை தடுத்தல்
5) காட்டில் பூச்சிகள் மற்றும் நோய்களை தடுத்தல்
6) சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவதை தடுத்தல்.
7) அறிவியல் முறைப்படி மரங்களை வெட்டுதல்.
8) காடுகளை அழிப்பதை தடுக்க சட்டம் கொண்டு வருதல்.
9) புதிய காடுகளை உருவாக்குவது.
10) காட்டின் முக்கியத்துவம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

## 5.4 வனவிளங்கு சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள்:

வனவிலங்குகளை காப்பாற்றுவதற்காக அளிக்கப்பட்டுள்ள ஒரு இடமே வனவிலங்குகள் சரணாலயம் எனப்படுகிறது. அதிகாரம் படைத்த ஒருவரின் ஆணைகளைத் தவிர எந்த ஒரு விலங்குகளை பிடிப்பது அல்லது கொல்வதை தடை செய்யப்பட்ட பகுதியே இது. இந்தியாவில் சுமார் 523 வன உயிரின சரணாலயங்கள்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

உள்ளன. அவைகளில் முக்கியமானவை : ஆனை மலை மற்றும் முதுமலை (தமிழ்நாடு), தான்டேலி, பாத்ரா, தலைக்காவேரி, பி.ஆர்.குன்றுகள் (கர்நாடகா), பெரியார் (கேரளா), நாகார்ஜுனசாகர், (தெலுங்கானா), பாரத்பூர் மற்றும் ராதம் போர் (இராஜஸ்தான்) மானஸ் (அஸ்ஸாம்), ஜல்டபாரா (மே வங்கம்) போன்றவை.

**தேசிய பூங்காக்கள் :** அவற்றின் இயற்கையழகை பராமரிக்க சிறப்பாக பாதுகாக்கப்பட்ட ஒரு பகுதி, வன உயிரினங்கள் மற்றும் காடுகள், பொது மக்கள் பொழுது போக்கிற்கும் அறிவியலார்ந்த உணர்வுகளுக்காகவும் அமைந்ததே 'தேசிய பூங்கா' இங்குகாடு சம்பந்தப்பட்ட தொழில், மேய்த்தல் அல்லது வேளாண் செயல்பாடுகள் இங்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியாவில் மொத்தம் 99 தேசிய பூங்காக்கள் உள்ளன.

***இந்தியாவின் சில முக்கிய தேசிய பூங்காக்கள் :*** காஜுரஸ்கா (அஸ்ஸாம்), சுந்தர்பன் (மேற்கு வங்கம்), கார்பெட் (உத்ரான்ச்சல்), கிரி (குஜராத்), கான்ஹா (ம.பி), பண்டிபூர், பன்னர்கட்டா, நாகர்ஹொளே (கர்நாடகா), சரீஸ்கா (இராஜஸ்தான்), துதாவா (உ.பி.) டொடே டாபா (மகாராஸ்ட்ரா).

> ***அறிந்து கொள்ளுங்கள்***
> - *உலகின் முதல் தேசிய பூங்கா : எல்லோஸ்டோன், (USA) 1872.*
> - *இந்தியாவின் முதல் தேசிய பூங்கா : ஜிம்கார்பெட், உத்ரான்ச்சல் (1936)*

## 5.5. உயிர் கோள மண்டலம் :

உயிர்கோள மண்டலம் என்பது ஒரு பாதுகாக்கப்பட்ட நிலபரப்பு அல்லது கடற்கரை சூழ்நிலைகளின் சிறப்பு பிரிவைச் சேர்ந்த பகுதிகள்.

இவ் ஒழுங்கு முறையில் ஒருங்கிணைந்த அங்கமாக இங்கு வாழும் மக்கள் உள்ளனர். உயிர்கோள மண்டலத்தின் முக்கிய நோக்கங்கள் பாதுகாப்பு, ஆராய்ச்சி, கல்வி மற்றும் உள்ளூர் மக்களின் ஈடுபாடு.

இந்தியாவில் 18 உயிர் கோள மண்டல பகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டு அமைக்கப்பட்டன. அவை : நீலகிரி, நந்தாதேவி, நோக்ரெக், மானாஸ், கிரேட் நிகோபார், மன்னார் வளைகுடா, சுந்தர்பன், சிமிலிபால், கன்சன்ஜூங்கா, பாச்மரி, அகத்தியமலை, திப்சிசைகோவா, திஹாங், திபாங் மற்றும் சில.

> ***அறிந்து கொள்ளுங்கள்***
> - ***யுனெஸ்கோ (UNESCO) தனி மனிதன் மற்றும் உயிர்கோள மண்டல செயற்திட்டத்தின் (Man and Biosphese programme) கீழ் 1971ல் உயிர் கோள மண்டல பகுதிகளை தொடங்கியது.***
> - ***இந்தியாவில் முதல் உயிர் கோள மண்டலப் பகுதி 1986ல் நீலகிரி மலைகளில் ஏற்படுத்தப்பட்டது.***

©KTBS Not to be republished



www.textbookpdf.in

## பயிற்சிகள்

### I. காலி இடங்களை பொருத்தமான வார்த்தைகளை நிரப்புக.

1. __________ காடுகள் ஆண்டின் ஒரே காலத்தில் மரங்கள் அதன் இலைகளை உதிர்ப்பதில்லை.
2. __________ காடுகள் பருவநிலைக் காடுகள் எனவும் அமைக்கப்படுகிறது.
3. இமயமலைகள் __________ வகைக் காடுகளைப் பெற்றுள்ளது.
4. __________ காடுகள் நதிகளின் முகத்துவாரங்களில் முக்கியமாக காணப்படுகின்றன.
5. நாகார்ஜுன வனவிலங்கு சரணாலயம் __________ மாநிலத்தில் உள்ளது.

### II. கீழ்க்கண்டவைகளை குழுக்களில் கலந்துரையாடி பிறகு பதிலளிக்கவும்.

1. காடுகள் என்றால் என்ன?
2. பாலைவனத் தாவரங்கள் காணப்படும் பகுதியின் பெயர் என்ன?
3. காடுகளின் பாதுகாப்பிற்கு எடுக்கப்பட்ட நான்கு அளவைகள் யாவை?
4. வனவிலங்கு சரணாலயங்கள் என்றால் என்ன?
5. கர்நாடகாவின் தேசிய பூங்காக்கள் பெயர்களைக் கூறு.
6. உயிர் கோளமண்டல பகுதிகளின் முக்கிய நோக்கங்களை கூறு.

### III. செயல்பாடுகள் :

உங்கள் பகுதியில் கானப்படும் முக்கிய மரங்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வகைகளை கண்டறிந்து பட்டியலிடவும்.

### IV. செயற்திட்டபணி :

1. வனவிலங்கு சரணாலயங்களில் உள்ள காட்டு விலங்குகளில் புகைப்படங்கள் வைத்து ஒரு ஆல்பம் தயார் செய்யுங்கள்.
2. இந்தியாவின் வரைப்படத்தில் உயிர் கோள மண்டலத்தின் பகுதிகளை குறிப்பிட்டு பெயர்கள் எழுதவும்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# பாடம் - 6

# இந்திய நீர் வளங்கள்

## இப்பாடத்தில் கீழ்க் கண்டவைகளைப் பற்றி நாம் கற்போம்

- நீர் வளங்களின் முக்கியத்துவம். • இந்தியாவின் முக்கிய நதிகள்.
- நீர்ப்பாசனம் - பொருள் மற்றும் இதன் அவசியம்.
- நீர்ப்பாசன வகைகள் மற்றும் அவற்றின் பங்கீடு.
- பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டங்கள்.

***6.1. முக்கியத்துவம் :*** மதிப்புமிக்க இயற்கை வளங்களில் தண்ணீர் மிக முக்கியமானவைகளில் ஒன்று. நீரின்றி வாழ்க்கை நிலைத்திருக்க இயலாது. நீரின்றி அமையாது உலகு (வள்ளுவர்), பருகுதல், சமைத்தல், தோய்த்தல், நீர்பாசனம், புனல் மின்சக்தி, தொழிற்சாலை, கப்பல் போக்குவரத்து, மீன் பிடித்தல் மற்றும் சிலவற்றுக்கும் மனிதன் வாழ தேவைப்படுகிறது.

பெருமளவு நீர்வளங்களை இந்தியா கொடையாக பெற்றுள்ளது. இது பல நதிகளை பெற்று மழையையும் போதுமான அளவு பெற்றுள்ளது. இந்தியா பரந்த மேற்பரப்பு நீர் வளங்களையும் பெற்றுள்ளது. மேலும் நிலத்தடி நீரையும் பெருமளவு கொண்டுள்ளது.

நீர் வளங்களை மேற்பரப்பு நீர் வளம் மற்றும் நில்தத்தடி நீர்வளம் என இரண்டாக பிரிக்கலாம். மேற்பரப்பு நீர் வளங்களாவன - மழை, நதிகள், ஏரிகள், குளங்கள் மற்றும் ஊற்றுகள். இந்தியா பெருமளவு மேற்பரப்பு நீர் வளங்களை பெற்றுள்ளது.

### இந்தியாவின் முக்கிய நதிகள்

இந்தியா பல நதி முறைகளைப் பெற்றுள்ளது. அவைகளே நாட்டின் இயற்கை வளங்கள். நீர்ப்பாசனம், புனல் (நீர்) மின் உற்பத்தி, உள்நாட்டு நீர்வழிப்பாதைகள், மீன்பிடித்தல் ஆகியவற்றிற்கு நதிகள் மிகவும் பயன்படுகிறது. இந்திய நதிகளை இரண்டு குழுக்களாக பிரிக்கலாம். 1) வட இந்திய நதிகள் 2) தீபகற்ப இந்தியாவின் நதிகள்.

> ***அறிந்து கொள்ளுங்கள்***
> *பிரம்ம புத்திரா நதி திபெத்தில் சேங்-போ என்றும் பங்களா தேஷில் ஜமுதா என்றழைக்கப்படுகிறது. இந்நதி உலகிலேயே மிக நீ ளமான மஜூலி என்ற நதி தீவினை உருவாக்கியுள்ளது.*

**1) வட இந்திய நதிகள் :** இவை இமயமலை நதிகள் என்றும் அறியப் படுகின்றன. வட இந்தியாவின் முக்கிய நதிகள் - சிந்து, கங்கை மற்றும் பிரம்ம புத்திரா.

***சிந்து நதி :*** இது கைலாஷ் (திபெத்) மலையில் உற்பத்தியாகிறது. தொடக்கத்தில் இது வட மேற்கு நோக்கி பாய்கிறது, பிறகு தென்மேற்கு நோக்கி ஓடி பாகிஸ்தானில் நுழைகிறது இறுதியாக இது கராச்சி அருகே அரபிக்கடலில் கலக்கிறது. சிந்து நதியின் மொத்த நீளம் 2897 கி.மீ இதில் 709 கி.மீ நம்நாட்டில் ஓடுகிறது. இதன் உபநதிகள் ஜீலம், செனாப், ரவி பியாஸ் மற்றும் சட்லெஜ்.

***கங்கா நதி :*** இது இந்தியாவின் மிகப்பெரிய நதி. இதன் மொத்த நீளம் 2,525

©KTBS Not to be republished



www.textbookpdf.in

கி.மி. இது கங்கோத்ரி பனிப்பாறைகளிலிருந்து உற்பத்தியாகிறது. இது தெற்கு மற்றும் தென்கிழக்கு நோக்கி பாய்ந்து பங்களாதேஷ் நாட்டில் நுழைந்து அங்கே பிரம்ம புத்திராவில் கலக்கிறது. பிரம்ம புத்திராவில் சேர்ந்த பிறகு இந்நதி பத்மா என்ற பெயரில் தொடர்ந்து பாய்ந்து இறுதியாக வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது. இதன் முக்கிய உபநதிகள் யமுனா, காக்ரா, காந்தக், இராமகங்கா, கோமதி, சாரதா, சன் மற்றும் கோசி. இவற்றில் யமுனா நதியின் உபநதிகள் மிகவும் நீளமானது.



©KTBS Not to be republished



www.textbookpdf.in

***பிரம்ம புத்திரா :*** இது மானச சரோவர் (திபெத்) ஏரியிலிருந்து புறப்படுகிறது அங்கிருந்து கிழக்கு நோக்கி செல்கிறது. இது அருணாச்சல பிரதேசத்தின் குறுகிய செங்குத்து பாறை களுக்கிடையே பாய்ந்து நாட்டை அடைகிறது. பிறகு இது மேற்கே பாய்ந்து பிறகு தெற்கே திரும்பி பங்களா தேஷில் பாய்கிறது. இங்கு கங்கையில் கலக்கிறது. இதன் நீளம் 2580 கி.மீ.

***தென்னிந்திய நதிகள் :*** தென்னிந்தியா முழுவதும் பல நதிகள் ஓடுகின்றன. இவை தீபகற்ப நதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவற்றில் பல மேற்கு மலைத்தொடர்களில் உற்பத்தியாகின்றன. தென்னிந்திய நதிகளில் முக்கியமானவை - மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி, காவேரி, நர்மதா, தபதி மற்றும் இவற்றின் உபநதிகள். இவற்றை மேற்கு நோக்கி பாயும் நதிகள் மற்றும் கிழக்கு நோக்கி பாயும் நதிகள் என இரண்டு குழுக்களாக பிரிக்கலாம்.

> ***அறிந்து கொள்ளுங்கள்***
> *நீர்ப்பாசனத்தின் கீழுள்ள மிகப்பெரிய நிலப்பரப்பை பெற்று நம்நாடு முதலிடமும் சீனா இரண்டாவது இடமும் உலகத்தின் தர வரிசையில் உள்ளன.*

***ஏ) கிழக்கே பாயும் நதிகள் :*** மகாநதி 'சிவஹா' மலைத் தொடரில் பிறந்து கிழக்குநோக்கி பாய்ந்து (851 கி.மீ.) வங்காள விரிகுடாக்கடலில் கலக்கிறது. கோதாவரி நதி தென்னிந்தியா விலேயே மிகப் பெரிய நதி. இது 'திரியம்பிகா' என்ற இடத்தில் தோ தான்றுகிறது பின்பு கிழக்கு நோக்கி பாய்ந்து (1,465 கி.மீ) வங்காளக்கடலில் கலக்கிறது. கிருஷ்ணாநதி 'மகாபலீஷ்வரா' என்ற இடத்தில் உற்பத்தியாகி தென்கிழக்கு நோக்கி பாய்ந்து (1,400 கி.மீ) வங்காளக்கடலில் கலக்கிறது. இதன் முக்கிய உபநதிகள் - பீமா, துங்கபத்ரா, கொய்னா, கட்டப்பிரபா மற்றும் மலப்பிரபா, காவேரி நதி தலைக் காவேரி (குடகு)யில் பிறந்து கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காளக்கடலில் தமிழ்நாட்டில் கலக்கிறது. ஹேமாவதி, சிம்ஷா, கபிலா, அர்காவதி, லக்ஷ்மணதீர்த்தா, சுவர்ணாவதி மற்றும் பவானி இதன் முக்கிய உபநதிகள்.

***பி) மேற்கே பாயும் நதிகள் :*** நர்மதா மற்றும் தபதி நதிகள் மேற்கு நோக்கி பாயும் தென்னிந்தியா நதிகளில் முக்கியமானவை. நர்மதா 'அமரகன்டகா' மலைகளில் தோன்றி மேற்கு நோக்கி (1312கி.மீ) ஒரு குறுகிய செங்குத்தான பாறைகளை கரைகளாகக் கொண்ட பகுதிகளில் பாய்ந்து அரபிக் கடலில் கலக்கிறது. தபதி நதி 'முல்தாய்' என்னுமிடத்தில் தோன்றி மேற்கு நோக்கி பாய்ந்து (724 கி.மீ) அரபிக்கடலில் கலக்கிறது. மேற்கு நோக்கி பாயும் மற்ற பல நதிகள் குறைந்த நீளத்துடன் வேகமாக செல்லக் கூடியதாக உள்ளன. அவற்றில் முக்கியமானவை ஷராவதி, காளி, நேத்ராவதி மற்றும் பெரியாறு.

## நீர்ப்பாசனம்

***பொருள் :*** வேளாண்மைக்காக செயற்கையான முறையில் தண்ணீர் வினியோகிப்பதற்கு நீர்ப்பாசனம் எனப்படும். நதிகள், நீர்த் தேக்கங்கள், ஏரிகள் அல்லது நிலத்தடிநீர்வளம் ஆகிய வற்றிலிருந்து வேளாண்மைக்கு நீர் வினியோகிப்பதை இது குறிக்கிறது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

***நீர்ப்பாசனத்தின் அவசியம் :*** இந்தியா ஒரு விவசாய நாடு. எனவே ஒழுங்கான மற்றும் தேவையான நீர் தேவைப்படுகிறது. நம்நாட்டு வேளாண்மை முக்கியமாக பருவமழைகளை நம்பி உள்ளது. பருவமழைகள் குறிப்பிட்ட காலம் அதுவும் நிச்சயமற்றதாக இருந்து ஒழுங்கற்ற பகிர்வை ஏற்படுத்துகிறது. சில குறிப்பிட்ட பயிர்களுக்கு அதிகமான மற்றும் ஒழுங்கான நீர் வினியோகம் தேவைப் படுகிறது. (உ.ம்.) நெல், கரும்பு மற்றும் மேலும் சில பயிர்களின் உற்பத்தி மற்றும் சாகுபடியை அதிகரிக்க தொடர்ந்து நீர் வினியோகம் அவசியம். இது நீர்ப்பசாசனத்தால் மட்டுமே சாத்தியம். நம் நாட்டிற்கு இது மிகமிக அவசியம்.

### 6.4 நீர்ப்பாசனத்தின் வகைகள் :

நம் நாட்டின் முக்கிய நீர்ப்பாசன வகைகள், கிணறுகள், கால்வாய்கள் மற்றும் ஏரிகள், சமீபத்தில், தெளிப்பான் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற மற்ற வகை நீர்ப்பாசனங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இவை நீரை சிக்கனமாக பயன் படுத்த உதவும்.

***1. கிணற்று நீர்ப்பாசனம் :*** இந்தியாவில் இது மிகமுக்கியமான நீர்ப்பாசனம். சுமார் 60.7% மொத்த நீர்ப்பாசன நிலபரப்பின் கிணற்று நீர்பாசனத்தின் சதவீதமாக இது உள்ளது குறைந்த மழையளவு உள்ள பகுதிகளில் கிணற்று நீர்ப்பாசனம் இயன்றதாக உள்ளது. இது பலமானது, சுலபமானது, இதற்கு உயர் தொழிற்நுட்பம் தேவைப்படாது. சிறு விவசாயிகளுக்கும் கூட கிணறுகள் வெட்டுவது சுலபமானதாக உள்ளது.

பஞ்சாப், அரியானா, உத்திரபிரதேசம், பீகார் மற்றும் மேற்கு வங்காளம் அடங்கிய கங்கைச் சமவெளி பகுதிகளில் கிணற்று பாசனம் பெருமளவில் நடைமுறையில் உள்ளது. தென்இந்தியாவில் கிணற்று பாசனம் பெருமளவில் தமிழ்நாடு, ஆந்திரா பிரதேசம், கர்நாடகா மற்றும் ஒடிசா மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது.

கிணறுகள் இரண்டு வகைகள் ஒன்று திறந்த கிணறுகள் மற்றொன்று குழாய்க் கிணறுகள். இது இந்தியா முழுவதும் பரவி வருகிறது.

***2. கால்வாய் நீர்ப்பாசனம் :*** இது கிணற்று நீர்ப்பாசனத்திற்கு பிறகு இரண்டாவதாகவும் மொத்த நீர்ப்பாசன பரப்பில் 27% உள்ளது. உலகின் மிகப்பெரிய கால்வாய் நிர்ப்பாசன நாடுகளில் இந்தியாவும் ஒன்று. கால்வாய்கள் கட்டுவது மற்றும் பராமரிப்பது அரசின் பொறுப்பாக உள்ளது.

இரண்டு வகை கால்வாய்கள் உள்ளன - நதிகளிலிருந்து நேரடியாக கால்வாய்கள் மற்றும் அணைகள் கட்டிபிறகு கால்வாய்கள் கட்டப்படுவது ஒன்று நிலையற்றது. இரண்டாவது நிலையானவை. நதிகளின் குறுக்கே அணைகள் கட்டி நீரைத்தேக்கி அணைகளிலிருந்து கட்டப்பட்ட கால்வாய்கள் மூலம் நீர்ப்பானம் செய்யப்படுகிறது. இது நிரந்தரமாக பயன்படும்.

கால்வாய் நீர்ப்பாசனம் உத்திரபிரதேசம் பஞ்சாப், பீகார், மத்தியபிரதேசம் இராஜஸ்தான், அரியானா, ஆந்திர பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, ஒடிசா, மேற்கு

©KTBS Not to be republished



www.textbookpdf.in

வங்கம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் பரந்து காணப்படுகிறது.

***3. ஏரி நீர்ப்பாசனம் :*** ஏரிகள் இயற்கையானவை அல்லது மனித முயற்சியால் உருவாக்கப்பட்டவை. இவை இரண்டும் பூமிக்கு மேற்பரப்பில் இருந்து மழைநீரால் நிரம்புகின்றன. இவ்வாறு சேமிக்கப்பட்ட மழை நீர் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலான ஏரிகள் நிலையற்றவை. சமீப ஆண்டுகளில் ஏரி நீர்ப்பாசன பகுதிகள் குறைந்து வருகின்றன. இப்பொழுது மொத்த நீர்ப்பாசன பகுதிகளில் ஏரிப்பாசனம் நம் நாட்டில் 3% மட்டுமே நடைபெறுகிறது. இவ்வகை நீர்ப்பாசனம் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மகாராஷ்ட்டிரா, கர்நாடகா, ஒடிசா, மத்திய பிரதேசம் இராஜஸ்தான் மற்றும் உத்திர பிரதேச மாநிலங்களில் முக்கியமாக காணப்படுகிறது.

## 6.5. பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டங்கள்.

நதி பள்ளத்தாக்கு திட்டங்கள் பன்முக பயன்களை அளிப்பதால் இவை ''பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டங்கள்'' என்று அழைக்கப் படுகின்றன. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் -

1) நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் வினியோகிப்பது.

2) வெள்ளங்களை தடுப்பது

3) நீர் மின்சக்தியை உற்பத்திசெய்வது

4) மண் அரிப்பை தடுப்பது

5) உள்நாட்டு நீர்வழி போக்கு வரத்து மற்றும் மீன் பிடித்தலை மேம்படுத்துவது.

6) மக்களுக்கு பொழுது போக்கை அளிப்பது.

7) வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்குவது.

8) விவசாயத்திற்காக நிலத்தை மீட்டு பயன்படுத்துவது, காடு வளர்ப்பு முதலியன.

### முக்கிய பல் நோக்கு திட்டங்கள்

***1) தாமோதர் நதி பள்ளத்தாக்கு திட்டம் :*** இது நம் நாட்டின் முதன் முதல் நதிபள்ளத்தாக்கு திட்டமாகும். இத்திட்டம் USAவில் உள்ள டென்னெஸ்சி பள்ளத்தாக்கு ஆணையத்தின் வடிவமைப்பை கொண்டு அதன் வழிமுறைகளின்படி கட்டப்பட்டுள்ளது. தாமோதர் நதி 'வங்காளத்தின் துயரம்' என்று அழைக்கப்பட்டு வந்தது. ஏனென்றால் மழைக்காலங்களில் மிகுந்த வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி பயிர்களை சேதப்படுத்தியும் மனித இன குடியிருப்புகளை அழித்தும் வந்தது. எனவே இதன் பிரதான நோக்கம் வெள்ளங்களை கட்டுப்படுத்துவது. மேலும் நீர்ப்பாசனம், நீர்வழிப்போக்குவரத்தளிப்பது, புனல் மின்சக்தியை உற்பத்தி செய்வது, காடு வளர்ப்பது, மண் அரிப்பை தடுப்பது, சுரங்கத் தொழிலையும் தொழிற்சாலைகளையும் மேம்படுத்துவது, மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றல். பீகார் மற்றும் மேற்கு வங்காள அரசாங்கங்கள் இணைந்து இத்திட்டம் தாமோதர் நதி மற்றும் அதன் உபநதிகளின் குறுக்கே கட்டப்பட்டது.

இத்திட்டம் 4 அணைகட்டுகளை உள்ளடக்கியது அதாவது 1. திலையா 2. கோளார் 3. மைதான் மற்றும் பான்சேம் மலை 4. தூர்காபூர் அணை, பொகாரோ, துர்காபூர்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

மற்றும் சந்திராபுரா பகுதிகளில் 3. அனல் மின்சார நிலையங்களையும் இத்திட்டம் கொண்டுள்ளது.




©KTBS Not to be republished

***2. பக்ரா-நங்கல் திட்டங்கள் :*** இது பஞ்சாப், அரியானா மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களின் கூட்டு திட்டம். இத்திட்டம் இரண்டு அணைகள் ஒன்று பக்ரா இரண்டாவது நங்கல். இவ்வணைகள் சட்லெஜ் (இமாசலப்பிரதேசம்) ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இதில் 4 மின் நிலையங்கள் அடங்கும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் - வெள்ளத் தடுப்பு, நீர்ப்பாசன வசதிகள், மின்சாரம் தயாரித்தல், மண் அரிப்பு தடுத்தல், காடு வளர்த்தல் பக்ரா அணை 226 மீட்டர்கள் உயரமுடையது. இது இந்தியாவின் நேர்-வழி புவிஈர்ப்பு விசை அணையாகும். இவ்வணையின் நீர்த் தேக்கத்திற்கு 'கோவிந்த சாகர்' என்று பெயர்.



www.textbookpdf.in

***3. இராகுட் திட்டம் :*** இது ஒடிசாவின் மிக முக்கிய பல்நோக்கு திட்டமாக உள்ளது. இத்திட்டம் மகாநதியின் குறுக்கே இராகுட், திகராபுரா மற்றும் நாரஜ் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட 3 அணைகளை கொண்டது. இது 2 நீர்மின்சார நிலையங்களைக் கொண்டுள்ளது. இராகுட் அணை இந்தியாவிலேயே மிக நீளமான அணை. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன வெள்ளத்தடுப்பு, நீர்ப்பாசனவசதி, நீர்மின் நிலையங்கள், நீர்வழிபோக்கு வரத்து, மீன் வளர்த்தல் மற்றும் காடு வளர்த்தல்.

***4. துங்கபத்ரா திட்டம் :*** இத்திட்டம் ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகாவின் கூட்டு திட்டம். இதன் முக்கிய நோக்கங்களாவன : நீர்ப்பாசனம் அளிப்பது, நீர் மின்சக்தி உற்பத்தி மற்றும் உள்நாட்டு மீன்வளர்ப்பு. இத்திட்த்தில் ஒரு அனைக்கட்டு மற்றும் 3 நீர் மின்நிலையம், கிருஷ்ணாவின் உபநதியான துங்கபத்ராவின் குறுக்கே மல்லாபுரம் என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இது ஒசப்பேட்டை அருகே பல்லாரி மாவட்டத்தில் உள்ளது கர்நாடகாவிலுள்ள இந்த அணையின் நீர் தேக்கத்திற்கு 'பம்பசாகரா' என்று பெயர்.

***5. கிருஷ்ணா மேற்கரை திட்டம் :*** கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்ட வட கர்நாடகாவின் மிகப் பெரிய பல் நோக்கு திட்டம். இதில் ஆலமட்டி அணை மற்றும் நாராயணபுரா அணை என்கிற 2 அணைகள் அடங்கும் இதன் முக்கிய நோக்கங்களாவன; நீர்ப்பாசனம் அளித்தல், குடிநீர் மற்றும் நீர் மின்சாரம் தயாரித்தல்.

ஆலமட்டி அணை பசவன பாகேவாடி வட்டத்தில் உள்ள ஆலமட்டி கிராமத்தின் அருகே கட்டப் பட்டுள்ளது. நாராயணபுரா அணைகட்டு, விஜயபுரா மாவட்டம், முத்தே பிஹால் வட்டத்தில் சித்தாபூர் கிராமத்தின் அருகே உள்ளது. இத்திட்டத்தினால் பாகல் கோட், விஜயபுரா, கல்புர்கி, யாத்கிரி மற்றும் பௌகாவியின் சில பகுதிகள் பயனடைகின்றன.

***6. கோசி திட்டம் :*** இது ஒரு சர்வதேச திட்டம். இந்தியா மற்றும் நேபாள நாடுகளின் கூட்டு திட்டம். அனுமன்நகர் அருகே கோசி நதியின் குறுக்கே இவ்வனை கட்டப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கங்கள் நீர்ப்பாசனம், வெள்ளத்தடுப்பு, நீர் மின்சாரம் உற்பத்தி மற்றும் மீன் பிடித்தல், இத்திட்டத்தை இந்திய அரசாங்கம் நிர்வகித்து வருகிறது ஆனால் இதன் பயன்களை இரு நாடுகளாலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

> ***அறிந்து கொள்ளுங்கள் :***
>
> *கோசி நதி 'பீகாரின் துயரம்' என்றழைக்கப்பட்டது. மகாநதி 'ஒடிசாவின் துயரம்' என்றழைக்கப்பட்டது.*
>
> *நாகார்ஜுன சாகர் திட்டதத்தின் வலது கரை கால்வாய் 'வைகர் கால்வாய்' என்றும் இடதுகரை கால்வாய் லால் பகதூர் கால்வாய் என்றும் பெயர் சூட்டப்படுள்ளது.*

***7. ரிஹான்ட் பள்ளத்தாக்கு திட்டம் :*** இது ரிஹான்ட் நதியின் குறுக்கே கட்டப்பட்ட உத்திரபிரதேசத்தின் மிக முக்கிய பல்நோக்கு திட்டம். (ரிஹான்ட்நதி சன் நதியின் உபநதி) வெள்ளத்தடுப்பு, மண் அரித்தலை தடுத்தல், மீன்பிடித்தல், நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரம் தயாரித்தல் ஆகியவை இதன் முக்கிய நோக்கங்கள் இவ்வணையின் நீர்த் தேக்கத்திற்கு ''கோவிந் பல்லப் பந்த் சாகர்'' என்று பெயர்.

© KTBS Not to be republished



www.textbookpdf.in

***8. நாகர்ஜுன சாகர் திட்டம் :*** தெலுங்கானா மாநிலத்தின் நாகார்ஜுன கொண்டா அருகே கிருஷ்ணா நதியின் குறுக்கே இவ்வனை கட்டப்பட்டுள்ளது. நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரம் தயாரித்தல் இதன் முக்கிய நோக்கங்கள்.

## பயிற்சிகள்

**I. காலி இடங்களை பொருத்தமான வார்த்தைகளால் நிரப்புக.**

1. சிந்து நதி ________ இடத்தில் உற்பத்தியாகிறது.
2. தென்னிந்தியாவின் மிக நீளமான நதி ________
3. இராகுட் அணை ________ நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
4. கங்கா நதியின் மிக நீளமான உபநதி ________
5. கோசி அணை திட்டம் ________ மற்றும் ________ நாடுகளின் கூட்டு திட்டம்.

**II. குழுக்களில் கலந்துரையாடி கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் எழுது.**

1. நீர்ப்பாசனம் என்றால் என்ன?
2. நீர்ப்பாசனத்தின் வகைகள் யாவை?
3. இந்தியாவிற்கு நீர்ப்பாசனம் ஏன் அவசியம்?
4. பல் நோக்கு நதிபள்ளத்தாக்கு திட்டம் என்றால் என்ன?
5. ஆலமட்டி திட்டத்தைப்பற்றி ஒரு குறிப்பு எழுது.
6. கிணற்று நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவம் மற்றும் பகிர்வு பற்றி எழுது.

**III. கீழ்க்கண்ட திட்டங்களை (ஏ) அதனதன் மாநிலங்களின் (பி) இணைக்கவும்.**

| | ஏ | | பி |
|---|---|---|---|
| 1. | நாகார்ஜுன சாகர் | எ) | கர்நாடகா |
| 2. | பாக்ரா-நங்கல் | பி) | இமாச்சல் பிரதேசம் |
| 3. | இராகுட் | சி) | தெலுங்கானா |
| 4. | துங்கபத்ரா | டி) | ஒடிசா |

**IV. செயல்பாடு.**

1. உங்கள் அருகாமையிலுள்ள நீர்ப்பாசன திட்டத்திற்கு சென்று வாருங்கள்.
2. இந்தியாவிலுள்ள பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டங்களை பட்டியலிடவும்.

**V. செயற்திட்ட பணி :**

1. இந்தியாவின் வரைபடம் வரைந்து உங்கள் ஆசிரியர் உதவியுடன் பிரதான நீர்ப்பாசன திட்டங்களை குறித்து காட்டவும்.

* * * *

© KTBS Not to be republished



www.textbookpdf.in

## பாடம் - 7

# இந்தியாவின் நில வளம்

### இப்பாடத்தில் நாம் கிழ்க்கண்டவைகளைப் பற்றி கற்போம்

- இந்தியா நில பயன்பாட்டின் வகைமுறை.
- இந்தியாவில் வேளாண்மை மற்றும் அதன் முக்கியத்துவம்.
- இந்திய வேளாண்மையின் வகைகள்
- இந்தியாவின் பிரதான பயிர்கள்.
- தோட்டக்கலை மற்றும் மலர் தோட்டக் கலைகளின் பங்கு.
- பயிர்க் காலம் மற்றும் சாகுபடி வகை முறை.

### இந்திய நில பயன்பாட்டின் வகைமுறை :

**பொருள் :** காடு வளர்ப்பு, பயிரிடுதல், மேய்ச்சல் நிலம் பொன்ற வெவ் வேறு பயன்களுக்காக நிலங்களை பகிர்தல் 'நில பயன்பாடு' என்றழைக்கப்படுகிறது. நிலப்பரப்பு அம்சங்கள், தட்பவெப்பம், மண் மக்கட்தொகை அடர்த்தி, சமூக பொருளாதாரம் மற்றும் தொழிற்நுட்ப காரணிகள் போன்ற சில வெவ்வேறு காரணிகளால் இது தீர்மானிக்கப்படுகிறது.

நாட்டின் மிகமுக்கிய இயற்கை வளங்களில் நிலமும் ஒன்று. பொருளாதார வளர்ச்சி க்கு இதன் முறையான பயன்பாடு அவசியம்.

**வகைப்பிரித்தல் :** இந்தியாவில் நில பயன்பாட்டின் வகைமுறைகளை ஏழு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை- 1) விதைக்கப்படும் நிலபரப்பு 2) காட்டு நிலபரப்பு 3) விவசாயத்திற்காக நிலம் கிடைக்காமை 4) தரிசு நிலம் 5) பயிரிடத்தக்க விணான நிலம் 6) நிரந்தர மேய்ச்சல் நிலம் மற்றும் இதர புல்வெளி 7) இதர பயன் பாட்டுகளுக்காக நிலம்.

***1. விதைக்கப்படும் நிலபரப்பு :*** பயிர்கள் பயிரிட பயன்படுத்தலாம் எனப்படும் நிலம்இதில் அடங்கிய இந்தியாவைப் போன்ற ஒரு வேளாண்மை நாட்டிற்கு இந்த பிரிவு மிக அவசியம். இந்தியாவில் அறிவிக்கப்பட்ட மொத்த நிலபரப்பில் 46.2% என இது கணக்கிடப்பட்டுள்ளது. எப்படியேனும், இது நம்நாடு முழுவதும் ஒரேசீராக பகிர்ந்தளிக்கப்படவில்லை. பஞ்சாப், அரியானா மேற்கு வங்காளம், உத்திரபிரதேசம் மற்றும் கேரள மாநிலங்களில் மிக அதிகப்படியான விகிதாச்சாரம் காணப்படுகிறது. இது வடகிழக்கு மாநிலங்களில் மிகவும் குறைவாகவும் மற்ற மாநிலங்களில் மிதமாகவும் உள்ளது.

***2. காட்டு நிலபரப்பு :*** இந்தியாவில் மொத்தம் அறிவிக்கப்பட்ட பகுதியில் 22.8% பகுதி காடுகளாக உள்ளன. இது அந்தமான் நிகோபார் திவுகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் அதிகம் காணப்படுகிறது. அரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களில் குறைவாக உள்ளது.

***3. விவசாயத்திற்காக நிலம் கிடைக்காமை :*** மனித இன குடியிருப்புகள்,

©KTBS Not to be republished



www.textbookpdf.in

சாலைகள், இரயில்வே, கால்வாய்கள், மலைகள், மணற்பாங்கான வீணான பகுதி போன்ற விவசாயத்திற்கல்லாத நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நிலங்கள். இப்பிரிவில் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 14.1% அளவில் உள்ளது. இப்பகுதிகள் பெரும் பாலும் அஸ்ஸாம், மனிப்பூர் மற்றும் சிக்கிம் பகுதிகளிலும் குறைவான விதிதாச்சாரம் கோவா, கேரளா, ஒடிசா மற்றும் மகாராஷ்ட்டிரா பகுதிகளில் உள்ளன.

***4. தரிசு நிலம் :*** வேளாண்மைக்கு பயனற்ற நிலங்களை இது குறிக்கிறது. இது அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பகுதியில் 8.2% உள்ளது. இப்பகுதிநிலம் பெரும் பாலும் மிஜோராம், தமிழ்நாடு மற்றும் மேகாலயா மற்றும் குறைவான அளவில் திரிபுரா, புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிகோபார்களில் உள்ளன.

***5. பயிரிடத்தக்க வீணடித்தநிலம் :*** மண் வளம் குன்றியவைகளை வேளாண்மைக்காக எடுத்துக் கொள்ளப்படாத நிலம் இதில் அடங்கும் இது மிக அதிகமாக மேகாலாய, கோவா, நாகாலாந்து மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ளது. இது 4.37% மாக அறிவிக்கப்பட்டுள்ளது.

***6. நிரந்தர மேய்ச்சல் நிலம் மற்றும் இதர புல்வெளிகள் :*** இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 3.4% இவை உள்ளன. இவை பெரும்பாலும் இமாச்சல் பிரதேசம், குஜராத் மற்றும் மத்திய பிரதேசம் மாநிலங்களில் உள்ளன.

***7. இதர பயன்பாட்டுகளுக்கான நிலம் :*** இவற்றில் பழத்தோட்டங்கள் தோப்புகள் மற்றும் இரப்பர், தேயிலை போன்ற தோட்டபயிர்கள் அடங்கிய இது நம்நாட்டில் 1.1% நிலப்பரப்பில் உள்ளது. இந்நிலங்கள் அஸ்ஸாம், நாகாலாந்து, மேகாலயா, கேரளா, கர்நாடகா, இமாச்சல் பிரதேசங்களில் அதிகமாக காணலாம்.

## வேளாண்மை

மனித இனத்திற்கு தேவையான உணவு பயிர்கள் மற்றும் மூலப்பொருட்களை பயிரிடுவதற்காக நிலங்களை உழுதல் என்பது ‘வேளாண்மை’ எனப்படும் - இப்பொழுது இதில் வாணிப பயிர்கள், கால்நடைகளை வளர்த்தல் மற்றும் தேனீ வளர்த்தல் போன்றவையும் இதில் அடங்கும்.

***முக்கியத்துவம் :*** வேளாண்மை, மனித இனத்தின் தொன்று தொட்டு செய்துவரும் மிக முக்கிய தொழில்களில் ஒன்று. இந்தியா வேளாண்மைக்கு மிக புகழ் பெற்றது. சுமார் 65 சதவீகிதம் மக்கள் வேளாண்மையை சார்ந்துள்ளனர். நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேளாண்மை வளர்ச்சியை பொருத்து காணப்படுகிறது.

மனித வாழ்க்கைக்கு வேளாண்மை மிக மிக முக்கியமானதாக இந்தியாவில் உள்ளது. இது மக்களுக்கு மிக முக்கிய உணவு மூலமாகவும் கால் நடைகளுக்கான தீவனத் திற்கும் மூலமாக உள்ளது. வேளாண்மை நாட்டின் வரவு மற்றும் வருவாய் மூலமாய் உள்ளது. வேளாண்மை மூன்றாம் படிநிலை பிரிவுகளான வர்த்தகம், போக்குவரத்து, வங்கி, காப்பீடு போன்றவைகளுக்கு பெரும் ஆதரவாக உள்ளது. இதுமேலும் நாட்டின் சமூக அரசியல் சூழ்நிலைகளின் மீது இதன் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இது பல தொழிற்சாலைகளுக்கு பெரும் ஆதரவாக உள்ளது. உம் : பருத்தி மற்றும் சணல் நூற்பாலைகள், சர்க்கரை தொழிற்சாலைகள் போன்றவை.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

**7.3. வேளாண்மைகளின் வகைகள் :** புவியியல் ரீதியாக மற்றும் சமூக பொருளாதார காரணிகளின் அடிப்படையில் விவசாயதில் வெவ்வேறு வகைகள் இந்தியாவில் நடைமுறையில் உள்ளன. அவை கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளன.

***1. சுய பயன்பாட்டிற்கான விவசாயம் :*** உற்பத்தி செய்யப்படும் வேளாண் பொருட்கள் தனக்கும் தன்குடும்பத்தினருக்கும் மட்டும் பயன் படுத்திக் கொண்டு சிறிதளவு விற்பனைக்கு கொடுத்தல். விவசாயிகள் பழங்கால விவசாய முறைகளை பயன்படுத்தினர். இவ்வகை விவசாயம் வடகிழக்கு மாநிலங்கள், ஒடிசா மற்றும் மத்திய பிரதேசத்தில் நடைமுறையில் உள்ளது. இதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அ) இடமாற்று சுயபயன்பாட்டிற்கான வேளாண்மை ஆ) சுறுசுறுப்பற்ற சுயபயன்பாட்டிற்கான வேளாண்மை .

***அ) இடமாற்று வேளாண்மை :*** காட்டின் ஒருபகுதியை அகற்றி எரியவிட்டு சில ஆண்டுகளுக்கு அங்கு பயிர் செய்து மண்ணின் வளம் குன்றியவுடன் வேறு இடத் திற்கு செல்வது அங்கு காட்டை அகற்றி பயிரிடுதல். இதை மலைவாழ் இனத்தினரால் நடைமுறைபடுத்தி வருகின்றனர். உம் : அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மத்திய பிரதேசம், கேரளா, மற்றும் ஒடிசா.

***ஆ) சுறுசுறுப்பற்ற வேளாண்மை :*** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட இடத் தில் பயிர் செய்தல். பயிரிடும் இடம் கைவிடப்படாமல் ஆண்டாண்டுக்கும் பயிர் செய்து வருதல்.

> ***அறிந்து கொள்ளுங்கள் :***
> *இடமாற்று விவசாயம் அஸ்ஸாமில் ‘ஜூமிஸ்’ என்றும் கேரளாவில் ‘போனம்’ என்றும் ஆந்திரா மற்றும் ஒடிசாவில் ‘போடு’ என்றும் அழைக்கப்படுகிறது.*

***2. தீவிர வேளாண்மை :*** நிலத்தின் ஒரு பகுதிக்கு பெரும் பண முதலீட்டையும் தொழிலாளியையும் பயன்படுத்தி பயிர் செய்யும் முறைக்கு தீவிர வேளாண்மை என்று அழைக்கப்படுகிறது. இவ்வகையில் செய்யப்படும் வேளாண்மை ஆண்டு முழுவதும் தீவிரமாக செய்யப்படுகிறது. குறைந்த அளவு நிலப்பரப்புகளில் சில விவசாயிகள் அதிக அளவு மகசூலை பெற இரண்டு அல்லது மூன்று பயிர்களை செய்ய முயற்சிக்கிறார்கள். நாட்டின் வளமான நீர்ப்பாசன பகுதிகளில் இவ்வகை சாதாரணமாக காணப்படுகிறது.

***3. வணிக வேளாண்மை :*** சந்தைக்காக பயிர்கள் பயிரிடப்படுவதே. இவ் வேளாண்மை முறை இதற்கு ‘வணிக வேளாண்மை’ எனப்பெயர். இவ்வகை வேளாண்மையில் பெரும்பாலும் பணப்பயிர்கள் அதிகமாக பயிர் செய்யப்படுகின்றன. குறைந்த அளவு தொழிலாளிகள் பயன்படுத்தப்பட்டு இயந்திரம் மற்றும் அறிவியல் முறைகளை வேளாண்மையில் பயன்படுத்துகின்றனர்.

***4. கலப்பு வேளாண்மை :*** பயிர்களை பயிர்செய்தல் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை அடங்கியதே ‘கலப்பு வேளாண்மை’ விவசாயிகள் இரண்டிலிருந்தும் வருமானத்தை பெறுகின்றனர். இம்முறை இந்தியாவில் 1951ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது இது பல மாநிலங்களில் பிரசித்துப் பெற்று வருகிறது.



www.textbookpdf.in

©KTBS Not to be republished

**5. தோட்ட வேளாண்மை :** சந்தைக்காக பெரும்தோட்டங்களில் ஒரே பயிரை செய்வதை இது குறிக்கிறது. இதற்கு அதிக முதலீடு, மற்றும் தொழிலாளர்கள் அவசியம். இந்தியாவின் முக்கிய தோட்ட பயிர்கள், தேயிலை, இரப்பர் மற்றும் தென்னை.

**6. உலர் வேளாண்மை :** மிகப்பரலான மழையும் மற்றும் மிகக்குறைந்தளவு நீர்ப்பாசன வசதியும் கொண்ட நிலபரப்புகளில் இவ்வகை விவசாயம் நடைபெறுகிறது. இவ் வேளாண்மை இந்திய தீபகற்பம் மற்றும் இராஜஸ்தானின் மேற்கு பகுதிகளில் நடைபெறுகிறது.

**7. ஈரப்பகுதி பகுதி வேளாண்மை :** இவ்வகை வேளாண்மை போதுமான அளவு மழை பெறும் பகுதிகளில் நடைபெறுகிறது. பயிர்கள் நீர்ப்பாசனமே இல்லாத இடங்களில் பயிரிடப்படுகிறது. இவ்வகை மேற்கு கடற்கரை முழுவதும் மற்றும் போதுமான மழையளவு உள்ள பகுதிகளில் காணப்படுகிறது.

**8. நீர்ப்பாசன வேளாண்மை :** நீர்ப்பாசனத்தின் உதவியுடன் பயிர்கள் வளர்ப்பதற்கு நீர்ப்பாசன வேளாண்மை முறை என்றழைக்கப்படுகின்றன. இவ்விவசாயம் பருவமழை நிச்சய மற்றதாகவும் போதுமான அளவு இல்லாமல் இருக்கும் நம்நாட்டிற்கு மிக அவசியம்.

### 7.4 பயிர் பருவம் மற்றும் சாகுபடி வகைகள் :

**பயிர் பருவங்கள் :** ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெவ்வேறு பயிர்களின் கீழுள்ள விகிதாச்சார நிலப் பகுதி பயிர்பருவங்கள் என்றழைக்கப்படும். இந்தியாவில் 3 பயிர்கள் காலம் : கரீப், ரபி, ஜெய்ட் பயிர் பருவங்கள்.

**அ) கரீப் பயிர் பருவம் :** மழைக்காலங்களில் பயிரிடப்படும் பயிர்கள் கரீப் பயிர்கள் எனப்படும். தென்மேற்கு பருவமழை தொடக்க காலத்தில் ஜூன்-ஜூலை மாதங்களில் விதைக்கப்பட்டு பயிர்கள் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் சாகுபடி செய்தல் நெல் சோளம், கேழ்வரகு, பருத்தி, நிலக்கடலை, புகையிலை போன்றவை முக்கிய கரீப் பயிர்கள்.

**ஆ) ரபி பயிர் பருவம் :** வடகிழக்கு பருவமழை தொடங்கும் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் விதைக்கப்பட்டு பிப்ரவரி மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படும் பயிர்கள் இது ரபி பயிர்க்காலம் என்றும் இந்த பயிர்களுக்கு ரபி பயிர்கள் என்றும் பெயர். உ.ம் : கோதுமை, பார்லி, பருப்புகள், ஆளி விதை மற்றும் சில.

**இ) ஜெய்ட் பயிர்க்காலம் :** கரீப் மற்றும் ரபி பயிர்காலங்களுக்கு இடையே பயிர் செய்யப்படும் பயிர்களுக்கு ஜெய்ட் பயிர்கள் எனப்படும். உ.ம் : தர்பூசனி, வெள்ளரிக்காய், எண்ணெய் வித்துக்கள், சில பருப்பு வகைகள், காய்கறிகள் மற்றும் சில.

**பயிர் செய்யும் வகை :** ஒரு பிரதேசத்தில் வெவ்வேறு பயிர்களின் கீழ் விகிதாச்சார நிலப்பகுதியை குறிப்பது. பயிரிடப்படும் வகை இந்தியாவின் எந்த பிரதேசத்திலும் காலத்திற்கேற்ப மாறுபடும். இது நிலமேற்பரப்பு மண், தட்பவெப்பம், நிலங்களின் அளவு, நீர் வினியோகம், விவசாயிகளின் வருமானம், தொழிற்நுட்பம் போன்ற காரணிகளால் இது ஏற்படுகிறது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

## 7.5 இந்தியாவின் முக்கிய விளைபயிர்கள் :

இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் பலவிதமான பயிர்வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. இவைகளை உணவு பயிர்கள். வாணிப பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தோட்ட பயிர்கள் என பிரிக்கலாம்.

**உணவு பயிர்கள் :** மக்களுக்கு உணவளிக்க வேண்டி பயிரிடப்படும் விளைவுகள் 'உணவு பயிர்கள்' எனப்படும். உ.ம் : நெல், கோதுமை, சோளம், பருப்புகள் போன்றவை.




**நெல் :** நெல் இந்தியாவின் மிக முக்கிய உணவுப்பயிர். இது கிழக்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதி இந்திய மக்களின் முக்கிய உணவு. நெல்வினையும் பெரும் நிலைப்பரப்பை உலகிலேயே இந்தியா அதிகம் பெற்றுள்ளது. ஆனால் நம் நாடு சீனாவிற்கு அடுத்தப்படியாக நெல் உற்பத்தி செய்யும் உலகின் இரண்டாம் நெல் உற்பத்தி நாடு. நெல் இந்தியாவின் முக்கிய கரீப் விளைபயிர். இது முதன்மையாக வெப்பமண்டல பயிர். இதற்கு உயர் வெப்பநிலை மற்றும் 100-200 செ.மீ. மழையும் வண்டலும் களி மண்ணும் கலந்த மண் இதற்கு மிகவும் உகந்தது. நெல்லுக்கு நீர் தேங்குதல் மிகவும் அவசியம் மேலும் இதன் மேற்பரப்பு சமமானதாக இருக்க வேண்டும். மழையளவு குறைந்த பகுதிகளில் நீர்ப்பாசனம் மிக அவசியம்.




இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பெரும் பாலும் நெல் பயிரிடப்படுகிறது. நாட்டில் மேற்கு வங்காளம் அதிக நெல் விளைவிக்கும் மாநிலமாகும் மற்ற நெல் விளைவிக்கும் முக்கிய மாநிலங்கள் ஆந்திர பிரதேசம், உ.பி. பஞ்சாப், தமிழ்நாடு, ஒடிசா மற்றும் கர்நாடகா.

**கோதுமை :** இது இரண்டாவது முக்கிய விளைபொருள் மற்றும் இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பாகங்களின் முக்கிய உணவுப்பொருள். இது வெப்பமண்டலங்களில் பயிரடப்படும்

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

பயிர். இதற்கு மிதமான வெப்பமும் 10-15சி. மற்றும் வருட மழையளவு 50-70செ.மீ தேவை. இதற்கு மணல் கலந்த களிமண் மற்றும் கருப்பு மண் இப்பயிருக்கு உகந்தது. பஞ்சாப், இராஜஸ்தான், குஜராத், மகாராஷ்ட்ரா மற்றும் கர்நாடகாவின் வடக்கு பகுதிகள் அடங்கிய வடக்கு சமவெளிகளில் கோதுமை முக்கியமாக பயிரிடப்படுகிறது. இந்தியாவில் உத்திர பிரதேசத்தில் கோதுமை மிக அதிகமாக விளைகிறது. சீனாவிற்கு அடுத்தப்படியாக உலகின் கோதுமை உற்பத்தி நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

**வாணிபப் பயிர்கள் :** விற்பனைக்காக பயிரிடப்படும் விளைபயிர் ‘வர்த்தகப் பயிர்’ எனப்படுகிறது. உ.ம் : கரும்பு, பருத்தி, புகையிலை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பல.







**கரும்பு :** இது இந்தியாவின் மிக முக்கிய வாணிப பயிர். இந்தியா மிக அதிக கரும்பு விளை நிலங்களை பெற்ற நாடு. இது உலகில் பிரேஜில் நாட்டுக்கு அடுத்தபடியாக இரண்டாவது மிக அதிகமாக கரும்பு உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. கரும்புக்கு இந்தியாவே தாயகம். இது சர்க்கரை வெல்லம் மற்றும் ஆல்கஹால் தயாரிப்புகளுக்கு இதுவே மூலப்பொருள். கரும்பு ஓராண்டு பயிர் இது நீர்பாசனபகுதிகளில் விளையும் பயிர் இது $21^{\circ}$-$26^{\circ}$ வரை உயர் வெப்பத்திலும் 100-150 செ.மீ. மழை பெறும் பகுதிகளிலும் விளையக்கூடியது. இது வண்டல் மண் மற்றும் மணற்பாங்கான களிமண்ணிலும் விளையக் கூடியது. மிக முக்கிய கரும்பு உற்பத்தியாகும் மாநிலங்கள் - உத்திரபிரதேசம், மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் மற்றும் ஆந்திரபிரதேசம்.

**புகையிலை :** இது இந்தியாவின் மிக முக்கிய பணப்பயிர். புகையிலை புகைப்பிடித்தலுக்கு பயன்படுகிறது. பீடி, சிகெரெட், சுருட்டு மற்றும் செரூட், ஹூக்கா போன்ற போதைப்பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. மிகக்குறைவாக சூவிங்கம், பொடி மற்றும் பூச்சி நாசினிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இது வெப்பமண்டலபயிர். இதற்கு உயர்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

வெப்பம் 21°-27°சி மற்றும் மிதமான மழையளவு 50-100 செ.மீ. மழை ஆண்டிற்கு தேவைப்படுகிறது. மணற்பாங்கான களிமண் இதற்கு மிகவும் ஏற்றது. இதற்கு இரசாயண உரங்கள் தேவை. ஆந்திர பிரதேசம், குஜராத், உத்திரபிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, மகாராஷ்ட்டிரா மற்றும் பீகார் இந்தியாவில் புகையிலை மிகவும் அதிக உற்பத்தி செய்யும் மாநிலங்கள். இந்தியா உலகின் மூன்றாவது அதிக புகையிலை உற்பத்தியையுயம் நான்காவது மிகப்பெரிய ஏற்றுமதி நாடாகவும் உள்ளது.

***அறிந்துகொள்ளுங்கள்.***

- ***புகையிலையின் அறிவியல் பெயர் : நிகோட்டியனா டொபாகம்.***
- ***குடும்பம் : சொலநாசியே. • இதன் தாயகம் : ஆன்டர் மலைகள் (தென் அமெரிக்கா) பிரான்சின் ஜீன்நிகாட் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இந்தியாவில் 17ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.***

***நார்ப்பயிர்கள் :*** நூற்பாலைகளுக்கு மூலப்பொருட்களை அளிக்கும் பயிர்கள் ‘நார்ப்பயிற்கள்’ எனப்படும். பருத்தி மற்றும் சணல் இந்தியாவின் மிக முக்கிய நார்ப் பயிர்கள்.

***பருத்தி :*** பருத்தி மிக முக்கிய தொழிலக மற்றும் நார்ப்பயிர். இந்தியாவின் பருத்தி நூற்பாலைக்குளுக்கான மூலப்பொருளை அளிக்கிறது. பருத்தி வெப்பமண்டல மற்றும் மித வெப்பமண்டல பயிர். இப்பயிருக்கு 21°-24°சி வெப்பம் மற்றும் 50-100 செ.மி. மழையளவு ஆண்டிற்கு தேவைப்படுகிறது. கருப்பு மண் இப்பயிருக்கு மிகவும் ஏற்றது. இது கரீப் பயிராக விளைவிக்கப்படுகிறது. இந்தியாவில் மிக பிரதானமாக பயிரிடப்படும் மாநிலங்கள், மகாராஷ்ட்ரா, ஆந்திரபிரதேசம், அரியானா, மத்திய பிரதேசம், பஞ்சாப், கர்நாடக மற்றும் தமிழ்நாடு. இந்தியா மிகப்பெரும் பருத்தி உற்பத்தியாகும் நிலப்பரப்பை பெற்றுள்ளது. இந்தியா உலகின் மூன்றாவது மிக அதிக பருத்தி உற்பத்தி செய்யும் நாடாக திகழ்கிறது.

***அறிந்துகொள்ளுங்கள்!***

- ***கரும்பின் அறிவியல் பெயர். சக்ஹாரும் ஆபீஸனாரும்.***
- ***குடும்பம் : கிராமிநியே.***

***பானப்பயிர்கள் :*** ஆக்கம் ஊட்டும் பானங்களை தயாரிக்க பயன்படும் பயிர்களுக்கு ‘பானப்பயிர்கள்’ எனப்பெயர் காபி மற்றும் தேயிலை மிகமுக்கிய இந்திய பானப்பயிர்கள்.

***தேயிலை :*** தேயிலை மற்ற பானங்களை விட மலிவானது மற்றும் மிக முக்கியமானது. சீனாவிற்கு அடுத்து இந்தியா உலகின் மிக அதிக உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடு. தேயிலை ஒரு தோட்டப்பயிர். இது ஒரு வெப்பமண்டல மற்றும் மித வெப்ப மண்டல பயிர்.

இதற்கு 21°-30°சி வெப்பமும் 150-250 செ.மீ. மழையும் தேவை. இது ஆழமான



www.textbookpdf.in

©KTBS Not to be republished

மற்றும் வளமான மண்ணில் பயிர் செய்யப்படுகிறது. இதற்கு இலை மக்குகள் நிறைந்த வளம் நிறைந்தமண் உகந்தது. இப்பயிர் கடல் மட்டத்திலிருந்து 1200 மீட்டர் முதல் 2400 மீட்டர் உயரப்பகுதிகளின் சரிவு பிரதேசங்களில் நன்கு விளையும். இது அஸ்ஸாம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் கேரளாவில் முக்கியமாக அதிகம் விளைகிறது.

## தோட்டக்கலை பயிர் மற்றும் மலர் தோட்டக்கலை பயிர்களின் பங்கு:

> ***அறிந்துகொள்ளுங்கள்!***
>
> *தேயிலைப் பயிரின் அறிவியல் பெயர். கேமெலியா தியா. தேயிலைகளில் 'தெயின்' என்னும் பொருள் அடங்கியுள்ளது.*

**தோட்டக்கலை :** பழங்கள், காய்கறிகள், மலர்கள், மருத்துவ மற்றும் நறுமணமிக்க பயிர்கள் 'தோட்டக் கலைபயிர்' என்றழைக்கப்படுகிறது. இந்தியாவில் தோட்டக்கலை, பயிர் விளைவுள்ள நிலப்பயன்பாட்டின் மூலம் விவசாயத்தை லாபகரமாக செய்வதற்கு ஒரு ஊக்கத்தை அளிக்கிறது. இயற்கை மூலவளங்களை உயர் அளவில் பயன்படுத்துவதற்கு மற்றும் திறன்படைத்தது. வேலை வாய்ப்புகளை ஊரகமக்களுக்காக ஊக்கத்தை அளிக்கிறது. இது ஏற்றுமதியை மேம்படுத்தி ஊட்டச் சத்தான பாதுகாப்பையும் அளிக்ககிறது.

இந்தியா பரந்த வெவ்வேறுவகை தட்பவெப்பம் மற்றும் மண் பெற்றிருப்பதால் வெவ்வேறு தோட்டக்கலை பயிர்கள் வளர்ப்பதற்கான மூலவளங்கள் நன்முறையிலும் பெற்றுள்ளது. சீனாவிற்கு அடுத்தபடியாது உலகின் இரண்டாவது அதிக அளவில் பழங்களையும் காய்கறிகளையும் விளைவிக்கும் நாடாக உள்ளது. உலக உற்பத்திகளில் நம் நாட்டின் பங்கு 11 சதவிகிதம் பழங்களும் , 7 சதவிகிதம் காய்கறிகளும் உள்ளது.

தோட்டக்கலை பயிர்கள் முக்கியமாக ஆந்திரபிரதேசம், அரியானா, இமாச்சல் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்ட்ரா மற்றும் உத்திரபிரதேசமாகும்.

***மலர் தோட்டக்கலை :*** இது வாணிப நோக்கத்துடன் மலர்களை பயிரிடுதல். இந்தியா மலர்கள் உற்பத்திக்கு மிகவும் பிரசித்திப் பெற்றது. இக்கலை நினைவு தெரியா காலம் முதல் இங்கு நடைமுறையில் உள்ளது. இந்திய வேளாண்மையில் இப்பயிர் முக்கிய பங்காற்றி வருகிறது. வருவாயை பெருக்கும் பல்வேறு வசதிகளை இது பெற்று உழவர் வேலை வாய்ப்பினை மிகவும் பெருக்கி உள்ள இப்பயிரிடுதல் குறிப்பாக பெண்களுக்கான வேலை வாய்ப்பை அளித்துள்ளது. மேலும் இது இந்திய ஏற்றுமதிக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது.

> **அறிந்துகொள்ளுங்கள்!**
>
> - ஹார்டி கல்சர் எனும் ஆங்கிலச்சொல் 'ஆர்டஸ்' என்கிற லத்தீன் மொழியிலிருந்து வந்தது. இதன் பொருள் தோட்டம் மற்றும் 'கொலேரி' என்றால் பயிர் செய்தல் ஆகும்.
> - தோட்டக்கலை பயிரிடுதல் தொழில் வேகமாக வளர்ந்து வருவதால் 'தங்க புரட்சி' என்று அழைக்கப்படுகிறது.

இந்திய வேளாண் தட்ப வெப்பநிலை பல்வேறு மலர்களை விளைவிக்க சாதகமாக உள்ளது. இந்தியா பாரம்பரிய மலர்கள் விளைவிப்பதில் பெயர்

© KTBS Not to be republished



www.textbookpdf.in

பெற்ற நாடு. அவைகள் - மல்லகை, மேரி கோல்ட், ரோஜா, கிராசந்ரா மற்றும் அஸ்த்தர். மேலும் ஆர்ச்சிட்ஸ் கிலாடியோலஸ், கார்னேஷன், அந்தூரியம் மற்றும் லில்லி போன்ற வெட்டு மலர்களும் பயிரிடப்படுகின்றன.

மலர் தோட்டக்கலை தமிழ்நாடு, கர்நாடக ஆந்திரபிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், அரியான மற்றும் மேற்கு வங்காளத்தில் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது.

## பயிற்சிகள்

**I. பொருத்தமான வார்த்தைகளுடன் காலி இடங்களை நிரப்புக.**

1. பயிர் செய்வதற்கு பயன்படுத்தப்படாநிலம் ________
2. பயிர்கள் பயிரிடுதல் மற்றும் கால்நடை வளர்ப்பு இரண்டும் செய்யப்படும் முறைக்கு ________ பயிர் எனப்படுகிறது.
3. கரீப் மற்றும் ரபி பயிர் காலங்களிற்கு இடையே பயிரிடப்படும் ________ பயிர்க்காலம் எனப்படும்.
4. ________ மாநிலம் இந்தியாவிலேயே அதிக நெல் பயிரிடப்படும் மாநிலம்.

**II. குழுக்களில் கலந்துரையாடி பின்பு கீழ்க்கண்ட கேள்விகளுக்கான பதில் எழுது.**

1. நில பயன்பாட்டு வகை என்றால் என்ன?
2. தோட்டப்பயிர் செய்தல் என்றால் என்ன?
3. கரீப் மற்றும் ரபி பயிர் காலங்களுக்கிடையேயான வேறுபாடுகள் யாவை.
4. கரும்பு பயிரிடுவதற்கு தேவையான சூழல்கள் யாவை?
5. பானப்பயிர்கள் என்றால் என்ன? இரு உதாரணங்கள் கொடு.
6. தோட்டக்கலை பயிர்களின் பங்கு பற்றி விவரி.

**III. செயல்பாடுகள் :**

1. கர்நாடகாவில் பயிரிடப்படும் வெவ்வேறு உணவு தானியங்களை மாதிரிக்காக சேகரிக்கவும்.
2. இந்திய வரைபடத்தை வரைந்து பருத்தி மற்றும் தேயிலை விளைவிக்கும் பகுதிகளை குறிப்பிட்டு காட்டவும்.

**IV. செயற்திட்ட பணி :**

1. உங்கள் பகுதியில் விளைவிக்கப்படும் பயிர்களின் படங்கள் மற்றும் தகவல்களை சேகரிக்கவும்.
2. மலர் தோட்டக்கலை பற்றி குழுக்களில் கலந்துரையாடி இது எவ்வாறு பெண் ஆதிக்கத்திற்கு உதவுகிறது என்பதைப் பற்றி விவரங்களை சேகரித்து சமூக விவாதங்கலை ஏற்பாடு செய்யுங்கள்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# பொருளாதாரம்
# அத்தியாயம் - 1
## வளர்ச்சி

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின்மையின் பொருள் மற்றும் தன்மை
- வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின்மையின் காரணங்கள்.
- மனிதவளர்ச்சியின் அறிகுறிகள்.
- பாலினத்தொடர்பான வளர்ச்சி.

***1. அறிமுகம்:*** நாம் நிரந்தரமாக வாழ்க்கைத் தரத்தை நன்கு அமைத்துக் கொள்வதற்காக முயற்சியை மேற்கொள்கிறோம். நம்முடைய நோக்கம் மற்றும் விருப்பங்களை அதிகளவில் ஈடேற்றிக்கொண்டு முன்பைவிட நன்கு அமைத்துக்கொள்ள விரும்புகிறோம். அதே விதமாக ஒவ்வொரு பொருளாதார ஏற்பாடுகளையும் கூட மக்களுக்கு கிடைக்கும் சரக்குசேவை களின் அளவை உயர்த்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு வருகிறோம். ஒரு தனிமனிதன் அல்லது சமுதாயத்தின் விருப்பங்களை ஈடேற்றும், திறனைப்பெருக்கும் செயல்பாட்டை வளர்ச்சி என்று அழைக்கிறோம். பொருளாதார வளர்ச்சி ஒரு நாடு தன்னுடைய மக்களின் பொருளாதார விருப்பங்களை ஈடேற்றும் திறனைப்பெருக்கும் செயல்பாட்டை வளர்ச்சி என்று அழைக்கிறோம். பொருளாதார வளர்ச்சி ஒரு நாடு தன்னுடைய மக்களின் பொருளாதார விருப்பங்களை அளிக்கும் இதனை மேம்படுத்தி, வறுமை வேலைவாய்ப்பின்மை, சமமற்றதன்மை, பணத்தட்டுப்பாட்டால் பொருளாதார பிரச்சனைகளை தீர்த்துவைப்பதாகும்.

## *2. வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின்மை*

***வளர்ச்சி :*** வளர்ச்சி என்னும் சொல்லை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் அனேகமுறை பயன்படுத்துகிறோம். ஏதாவது ஒரு நிலை இல்லாவிடில் தனிமனிதர்களின் முன்னேற்றத்தை குறிப்பிடுவதில் நாம் சாதரணமாக 'வளர்ச்சி' என்னும் சொல்லை பயன் படுத்துகிறோம். எடுத்துகாட்டாக கிராமிய வளர்ச்சி, சமுதாயவளர்ச்சி, கல்வி வளர்ச்சி, பெண்கள் மற்றும் குழந்தைகள் (தாய்-சேய்) வளர்ச்சி முதலியன. அவ்வாறே ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நாம் பொருளாதார வளர்ச்சி என்று அடையாளம் காண்கி றோம். ஆனால் பொருளாதாரவளர்ச்சி ஒரு கூட்டாக உண்மையானதாகிருந்தால் அதனை எளிதாக வெளிப்படுத்தமுடிவதில்லை.

பேராசிரியர் மேயர் மற்றும் பால்டிவின் அவர்களின்படி 'ஒரு நாட்டின் உண்மையான நாட்டின் வருமானம் நீண்டகாலம்வரை அதிகரிக்கும் செயல்பாடே பொருளாதாரவளர்ச்சியாகும்.' இந்த வாக்கியம் பொருளாதாரவளர்ச்சியின் மூன்று அம்சங்களை அழுத்திக் கூறுகிறது. அவை எவையென்றால்



©KTBS Not to be republished
www.textbookpdf.in

1. ஒரு செயல்பாடு 2. உண்மையான தேசிய வருமானம் அதிகரிப்பு மற்றும் 3. நீண்டகால அளவு அதிகரிப்பு,

இவற்றை சுருக்கமாக கவனித்தல் வேண்டும்.

***1) ஒரு செயல்பாடு*** : செயல்பாடு என்னும் சொல் உற்பத்திகளின் திருப்தியளித்தல் மற்றும் தேவைகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிடுகிறது. புதிய மூலப்பொருட்களை தேடுவது, மூலதனத்தை தொழில் நுணக்கபயன்பாடு, போன்றவைகளால் உற்பத்தியின் தேவைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதேவிதமாக மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் அதனுடைய குணஇயல்புகளில் மாற்றம், வருமானத்தின் அளவு மேலும் அதன் பங்கீட்டில் மாற்றம், மக்களின் சுவைகளில் மாற்றம், போன்றவைகளால் தேசிய வருமானத்தில் நீண்டகால பெருக்கத்திற்கு ஒரு வாய்ப்பாகிறது.

***2) உண்மையான தேசிய (நாட்டின்) வருமானம்*** : தேசிய வருமானம் என்பது ஒரு ஆண்டு காலத்தில் நாட்டில் உற்பத்தியான அனைத்து சரக்கு சேவைகளின் மொத்த மதிப்பாகும். இது பொருளாதார வளர்ச்சி அளவீட்டின் முக்கிய சாதனமாகும். தேசிய வருமானம் அதிகரித்தளவுக்கு வளர்ச்சியும் அதிகமாகும். ஆனால் இங்கு 'உண்மை' சொல்லின் மீது அதிக அழுத்தம் அளித்து அது மக்கள் வாங்கும் சக்தியை எதிரொலிக்கிறது. அவ்வாறெனில் உண்மையான வருமானமென்றால் என்ன? நம்முடைய வருமானம் விலை மாற்றத்திற்கு பொருந்துமாறு உண்மையான வருமானம் கிடைக்கிறது. எடுத்துக் காட்டாக இன்றைய 100 ரூபாய் வருமானம் ஒரு ஆண்டுக்குமுன்பு எவ்வளவு வாங்கப்பட்டதோ, விலையேற்றத்தினால் அதனைவிட குறைவான அளவில் சரக்குகள் வாங்கப்படுகிறது. இவ்வாறு பணருபாயின் வருமானத்தை விலை ஏற்றத்தை பொருத்திப்பார்க்கும்போது அதனுடைய உண்மையான வாங்கும்சக்தி கிடைக்கிறது. இது வளர்ச்சி செயல்பாட்டில் விலைகளின் நிலையான மகத்துவத்தை குறிப்பிடுகிறது.

***3) நீண்டகால அதிகரிப்பு*** : மேலேகுறிப்பிடப்பட்ட உண்மையான வருமானம் நீண்டகாலம்வரை என்றால் 10 ஆண்டுகள் அல்லது அதற்கும் அதிகமான காலம் வரையில் அதிகரிப்பை சாதிக்கவேண்டும். குறைந்தகால அதிகரிப்புகளை வளர்ச்சி என்று கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இதற்குமுன் கூறப்பட்ட தேவையின் அளவு மற்றும் உற்பத்தி தேவையின் மாறுபாடு நிரந்தர செயல்பாடாக மட்டுமே, வளர்ச்சியின் அளவு நீண்ட காலமாகிருக்கும்.

ஆனால் பல பொருளாதார அறிஞர்கள் வருமானத்திற்கு மாற்றாக மக்களின் நலன் அதிகரிக்கும் மகத்துவத்தை அளித்து அதனை பயன்படுத்தி வளர்ச்சியை விவரிப்பார்கள். எடுத்துக் காட்டாக பேராசிரியர் கோலின் கிளார்க் அவர்கள் 'பொருளாதார வளர்ச்சி மக்களின் பொருளாதார நலனின் அதிகரிப்பென்று விவரித்துள்ளார்.' ஆனால் பொருளாதார நலன் மக்கள் பயன்படுத்தும் சரக்கு சேவைகளின் மொத்தமாகிருக்கும். பொருளாதார நலன் அதிகரிப்பு மற்றொரு பொருளில் வறுமையைப் பொன்ற பிரச்சனைகள் குறைந்து வருவதை குறிப்பிடப் படுவதினால் வளர்ச்சியை 'நீண்டகாலம் வரை நிரந்தரமாக, வறுமையின் நட்டத் தன்மையைப் போக்கி ஒரு நாட்டை சுயமாக தன்னைக்காத்துக் கொள்ளும் வளர்ச்சியை கொண்டு செல்லும் செயல்பாடொன்றாக இருக்கும் என்று கூறப்படுகிறது.'

© KTBS Not to be republished



www.textbookpdf.in

ஆனால் காலங்களுக்கிடையில் வளர்ச்சியின் நோக்கங்களில் மாற்றங்கள் பொருந்தியிருப்பதில்லை, பரவுதலிலும் கூட பொருந்தியுள்ளன. தற்போது நாம் ஒவ்வொருவரும் பயன் அளிக்கக் கூடிய, ''உட் கொள்ளக்கூடிய வளர்ச்சியற்ற, உண்மையான இயற்கை வளங்களையும் மற்றும் சுற்றுச் சூழலையும் வரும் தலைமுறையினருக்கும் பயன் தரும் ''நிரந்தர வளர்ச்சியைப் பற்றி விவாதம் செய்து கொண்டிருக்கிறோம். தற்போது வளர்ச்சியின் நோக்கங்களான வருமானம் அதிகரிப்பு; வறுமை, வேலைவாய்ப்பின்மை மற்றும் ஏற்றுத் தாழ்வுகளில் இறங்குமுகம், சுற்றுச் சூழல் பாதுகாப்பை ஏற்படுத்தி அனைவரின் பொது நலன் ஏற்றமடைய செய்வதை கூறலாம்.''

அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து, ஆஸ்த்திரேலியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் அல்லாமல், கடந்த நூற்றாண்டில் சிங்கப்பூர், ஹாங்காங், மலேஷியா, சீனா மற்றும் பல்வேறு நாடுகளின் வருமானம் நீண்டகாலமாக ஏற்றம் கண்டு வருகின்றன. அவற்றை வளர்ச்சியுற்ற நாடுகளென்று பிரிக்கப்பட்டுள்ளன.

***வளர்ச்சியின்மை :*** வளர்ச்சியின்மை என்னும் சொல் பின்தங்கிய, வளர்ச்சி யடையாமலிருக்கும் நிச்சயமற்ற நிலையை குறிப்பிடுகின்றது. வளர்ச்சியற்ற நாட்டில் மொத்த உற்பத்தி குறைவாகிருந்து, மக்களின் வருமானம் மிகவும் குறைவாக இருக்கும். ஏறக்குறைய மக்களுக்கு குறைந்தளவு அடிப்படைத் தேவைகளான, உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைப் பெறுவதே கடினமாக இருக்கும். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் எழுத்தறிவற்றவர்களாகவும், மூட நம்பிக்கையில் மூழ்கியுள்ளவர்களாவார்கள். ஆரோக்கியம் மற்றும் தூய்மையான வசதிகள் இல்லாமல், ஆரோக்கியமற்று அல்லல் படுகின்றனர். எடுத்துக்காட்டாக விடுதலைக்கு முன் இந்தியா ஆங்கிலேயரின் நீண்டகால ஆட்சி, மற்றும் பொருளாதார கொள்ளைகளின் பலனாக ஒரு ஏழைநாடாக மாற்றமடைந்திருந்தது. அவ்வப்பொழுது இந்தியாவை பொருளாதாரத்தில் 'இந்திய' ஏழை நாடு என்று அழைக்கப்பட்டது. ஆனால் இவ்வகையான நாடுகளை வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளென்று அழைக்கப்பட்டு அவற்றின் வளர்ச்சியிலும் திறனையும் மற்றும் அந்நோக்கில் அவற்றின் முயற்சி களையும் பிரதிபலிக்கிறது.

ஒன்றுபட்ட நாடுகளின் படி ''அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் மேற்கு ஐரோப்பியா நாடுகளை விட குறைவான தனிநபர் வருமானம் பெற்றுள்ள நாடுகளை வளர்ச்சியின்மையற்ற நாடுகளாகும்'' என்று கூறப்படுகிறது. இங்கு முன்னேறிய நாடு களுடன் ஒப்பிட்டால் தனி நபர் வருமானம் குறைவாக இருப்பதைக் குறிப்பிடப்படுகிறது.

உலக வங்கி தன்னுடைய உலக வளர்ச்சி அறிக்கையில் நாடுகளை முதல் நிலை (அதிகம்) இரண்டாம் நிலை (இடைநிலை) இறுதிநிலை (கடைநிலை) வருமானம் கொண்டுள்ள நாடுகளென்று அழைத்து வருகிறது இந்தியா முன் னேற்றமடைந்து வளர்ச்சியுறும் நாடுகளில் ஒன்றாகிருந்து சமீப ஆண்டுகளில் வருமானத்தில் பெருமளவில் சாதனை புரிந்து வருகிறது.

## 2. வளர்ச்சி, வருமானத்தின் காட்டிகள் :

பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அளவீடு செய்வது ? பொருளாதார அறிஞர்கள்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

பல்வேறு அளவீடுகளைப் பற்றி விவாதித்து வருமானத்தை ஒரு முக்கியமான அளவீடாக பயன் படுத்தியுள்ளனர். இதற்கு முன் குறிப்பிட்டது போன்று நாட்டில் வசித்து வரும் அனைத்து மக்களின் வருமானத்தை ஒன்று கூட்டினால் தேசிய (நாட்டின்) வருமானம் கிடைக்கிறது. வருமானம் பெருகிக்கொண்டே சென்றால் வளர்ச்சியின் அளவும் அதிகமாகிக் கொண்டே இருக்கும். ஆனால் தேசிய வருமானத்துடன் கூட மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமானால் அது பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்து விடும். அதனால் துண்டு துண்டான வருமானம் மற்றும் மக்கள் தொகையுள்ள நாடுகளுடன் ஒப்பிடுவது அவ்வளவு ஏற்புடையதல்ல. இப்பிரச்சனையைத் தீர்க்க தனிநபர் வருமானத்தை வளர்ச்சியின் அளவீடக உலக அளவில் பயன்படுத்தப் பட்டுவருகிறது. அது ஒரு நாட்டிலுள்ள மக்களின் சராசரி வருமானமாகிருந்து அதனை நாட்டின் வருமானத்தை மொத்த மக்கள் தொகையினால் வகுக்கும்போது கிடைப்பத தேசிய வருமானமாகும்.

### *இதனை அறியுங்கள்*

*2016ல் இந்தியாவில் தனி நபர் வருமானத்தை 1,21,603 என்று கணக்கிடப்பட்டுள்ளது. அது உலகின் சராசரி வருமானத்தில் 15 சதவீதமாகும். அவ்வாண்டின் மொத்த வருமானம் ரூ.1,47,86,557 கோடிகளாகும். 121.6 கோடி மக்கள் தொகையினால் வகுக்கப்படும்போது வரும் எண்களே இதுவாகும்.தேசிய வருமானத்தில் ஏழாம் இடத்தில் உள்ள இந்தியாவின் தனிநபர் வருமானத்தில் 143வது இடத்திலுள்ளது.*

தனிநபர் வருமானம் ஒரு மக்கள் விரும்பும் அளவீடாக இருந்தாலும் மக்களிடையே வருமான பங்கீட்டை அது காட்டுவது இல்லை. அல்லாமல் அது உணவு, இருப்பிடம், கல்வி, ஆரோக்கியம் மற்றும் மற்ற சமுதாய அம்சங்கள் கிடைப்பதை ஏற்றுக் கொள்வதில்லை, அதனால் பொருளாதார வளர்ச்சியை சரியான முறையில் அளவீடு செய்ய வேண்டிய அளவீடுகளின் ஏற்பாட்டிற்கு நிபுணர்கள் முயற்சி மேற்கொண்டது அளவீட்டின் வளர்ச்சிக்குறிப்பீடுகளில் மிகவும் மகத்துவமானதாகும்.

### 3. மனிதவளர்ச்சிக் காட்டிகள்:

பொருளாதார முன்னேற்றத்தின் முக்கிய நோக்கம் மக்கள் விரும்பும் வசதிகளையும் நலன்களையும் அதிகரிப்பதாகும். என்னும் கருத்தை தற்காலத்தில் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர் வளர்ச்சி மக்களுக்கு சிறப்பான வாழ்க்கையை நடத்துவதற்கு உதவுகிறது. அது வாழ்க்கைக்குத் தேவையான உணவு. இருப்பிடம், உடை, கல்வி, ஆரோக்கியம், சமூகபாதுகாப்பு தூய்மையான குடிநீர், தூய்மையான காற்று மற்றும் மாசு அடையாத சுற்றுச் சூழல் அம்சங்கள் தேவைப் படுகிறது. வருமான அதிகரிப்பு இவையனைத்தையும் ஒரேசமயத்தில் சாதிக்க முடியும்.

அமர்த்திய சென் அவர்களின் சிந்தனைகளை பயன்படுத்திக் கொண்டு பாகிஸ்தானின் பொருளாதார அறிஞ்ரான மகபூர் ஹூல் ஹக் அவர்களின் கூற்றுப்படி மனிதர்கள் உயர்வான வாழ்க்கையை நடத்திட வேண்டிய மிகவும் மகத்துவமான

©KTBS Not to be republished

அம்சங்களான ஆரோக்கிய வாழ்க்கை நடத்துவது, அறிவாளிகளாகிருப்பது, மற்றும் வாழ்க்கைக்குத் தேவையானவைகளான குறைந்தளவிலான வசதிகளை வாங்குவதற்கு தேவையான வருமான அளவு, இதனையே அமர்த்திய சென் அவர்கள் மனித வளர்ச்சி யென்று நினைவூட்டினார். அவரின் கூற்றுப்படி மனிதனின் திறனை மேம்படுத்தும் செயலாற்றலே மனிதனின் வளர்ச்சியாகும். இங்குள்ள முக்கிய திறன்களென்றால் ஆரோக்கியம், கல்வி, மற்றும் வருமானம், அவ்வாறெனில் மனித வளர்ச்சியை எவ்வாறு அளவீடுசெய்வது.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் வளர்ச்சி செயல் திட்டம் (UNDP) பிரிவு இச்சிந்தனைகளை பயன்படுத்திக்கொண்டு மனித வளர்ச்சி வழியலகு என்னும் புதிய மனித அளவீட்டை ஏற்படுத்தி நாடுகளின் முன்னேற்றத்தை அளவீடு செய்கிறது. முக்கிய திறன்களை அளவீடு செய்வதற்கான காட்டிகளை பயன்படுத்தி, மனித வளர்ச்சியின் வழியலகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆரோக்கியத்தை தனிமனிதர்களின் வாழ்நாட்கள், கல்வியில் எழுத்தறிவின் அளவு, மேலும் வாங்கும் சக்தியை தனிமனித வருமானத்தை பயன்படுத்தி அளவீடு செய்யப்படுகிறது. இக்காட்டிகளை கீழ்க்காணும் படத்தில் காட்டப் பட்டுள்ளது.

***படம் 1, மனித வளர்ச்சியின் காட்டிகள்***




©KTBS Not to be republished

எதிர் நோக்கும் வாழ்நாட்களில் ஒரு நாட்டிலுள்ள மக்கள் தொகையில் உயிருடனுள்ள மக்களின் சராசரி ஆயூளாக இருக்கும். அது சத்தான உணவு, ஆரோக்கியம் மற்றும் தூய்மை, தூய்மையான சுற்றுச் சூழல் போன்றவைகளின் தேவை எதிர்நோக்கும் வாழ்நாட்களை தீர்மானிக்கிறோம். கல்வியின் அளவு நாட்டின் முன்னேற்றத்திற்கு பிரதிபலிப்பாக இருக்கும். நாட்டின்கல்வியில் சாதனையை 25 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அதிக வயதுள்ளவர்கள் முடித்த கல்வியின் காலம், மேலும் 5 ஆண்டுகள் உள்ள குழந்தைகள் பெற வேண்டிய கல்வியின் கால அளவைபயன்படுத்தி அளவீடு செய்யப்படுகிறது. அதேவிதமாக தனிநபர் வருமானத்தைப் பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தை அளவீடு செய்யப்படுகிறது. இம்மூன்று குறிப்புகளின் சராசரியே அவனுடைய வளர்ச்சியின் குறி எண்ணாகிறது.



www.textbookpdf.in

படம் - 2 இந்தியாவின் மனித வளர்ச்சி முன் னற்றம் நீங்கள் ஒவ்வொரு குறிப்பையும் முன்னேற்றமில்லாமல் மொத்த குறிப்பு எண்களின்படி முன்னேற்றத்தை அளவீடு செய்யவேண்டும். நாடுகளுக்கிடையே மனித வளர்ச்சியின் முன்னேற்றத்தை எடை இடலாம் 2014ஆம் ஆண்டு, இந்தியாவின் மனிதவளர்ச்சி 0.586 இருந்தது. கணக்கீடு செய்யும்போது 187 நாடுகளில் 135வது இடத்தைப் பெற்றிருந்தது இந்தியா UNDD ல் பிரிக்கப் பட்டிருப்பதின்படி இடைநிலை அளவில் மனிதவளர்ச்சி கொண்டுள்ள நாடு களின் சமூகத்தின் குழுக்களில் சேர்க்கப்படும்.

படம் 2ல் காட்டியவாறு 2012ல் இந்தியாவின் மனித வளர்ச்சி குறிப்பெண்கள் 0.554 இருந்தது. 186 நாடுகளில் 136வது இடத்தைப் பெற்றிருந்தது. இந்த 0.554 குறிப்பெண்களின் மதிப்பு 65.8 ஆண்டுகள் எதிர்நோக்கும் ஆயூட் காலமிருந்தது; 4.4 ஆண்டுகள் சராசரி பள்ளியில் கற்கும் காலமாகும். மேலும் 3203 தனி நபர் வருமானம் இருந்தது. 1980 மற்றும் 2012ன் காலத்தில், தனி மனிதனின் வளர்ச்சி அனைத்து உறுப்புகளும் விருத்தியடைந்து, இந்தியாவின் மொத்த மனிதவளர்ச்சி குறிப்பெண்கள் 0.334 லிலிருந்து 0.554 ஆக பெருகியது. ஆனால் முதல் பத்து நாடுகளின் சாதனையைப் பார்க்கும்போது இந்தியா சாதிக்கக் கூடியது இன்னும் அதிகமுள்ளது.



படம் 2 இந்தியாவின் மனித வளர்ச்சியின் முன்னேற்றம்

***4. பாலினத் தொடர்பான வளர்ச்சி:*** வளர்ச்சி செயலாக்கத்தில் பெண்களின் பங்கு மிகவும் மகத்துவமானது. மக்கள் தொகையில் அரைபாகமுள்ள பெண்களின் பொருளாதார நிலையில் அனைத்து இடங்களிலும், உழைக்கும் திறனைப் பெற்றுள்ளனர், அவர்களுக்கு சமூக, பெருளாதார கல்வி, மற்றும் அரசியலில் சமமானதன்மையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியுள்ளது. குடிமக்கள் : சமுதாயத்தின் கடமையாக உள்ளது. சுதந்திர இந்தியாவில் நம்முடைய அரசியல் அமைப்பு சட்டம் பெண்களுக்கு ஆண்களுக்கு உள்ளது போன்றே சுதந்திரம், மனித தன்மை, மற்றும் வாய்ப்புகளை அளித்துள்ளது. ஆனால் பெண்களுக்கு எதிராக இன்னும் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர். பெண்கள் இன்னும் முழுமையான வளர்ச்சியில் சமநிலையில் பங்குதாரர்கள் ஆகமுடியவில்லை. அதனால் தற்போதுள்ள பாலின வேறுபாட்டை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

***வளர்ச்சியில் பாலின வேறுபாடிருந்தால் அது நசித்துவிடும் மனித வளர்ச்சி அறிக்கை 1994.***

©KTBS Not to be republished

இந்தியாவில் தற்போதுள்ள பாலின வேறுபாடுகள் பலவற்றை பரந்தளவில் காணலாம். ஒவ்வொரு 1000 ஆண்களுக்குள்ள பெண்களின் எண்ணிக்கை பாலின வேறுபாடுகள் என அழைக்கப் படுகின்றன. அது ஒரு சமுதாயத்தில் பெண்களின் நிலையைக் குறிப்பிடும்போது காட்டுகின்றது. நமது நாட்டில் மொத்தத்தில் பெண்களுக்கெதிராக ஏற்றத் தாழ்வுகள் காரணமாக உள்ளது. 2011ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பாலின வேறுபாடு 945 இருந்தது அபாய நிலையாகும் இன்னுமுள்ள அபாய நிலை அம்சங்களென்றால் குழந்தைகள் (0-6) பாலின வேறுபாடு இதைவிட குறைவாகிருப்பதாகும்.

அதே விதமாக 2011ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பெண்களின் எழு த்தறிவு அளவு 65.46 சதவீதமிருந்தால் ஆண்களின் எழுத்தறிவு அளவு 82-14 இருந்தது. இன்னும் கூட சில மக்கள் பெண்களுக்கு கல்வி அவசியமில்லை என்று நம்பிக்கைக் கொண்டிருப்பதால் மேலும் பல்வேறு பகுதிகளில் பெண்களின் கல்விக்கு சிறந்த வசதிகள் இல்லாமிருப்பது இவ்வேற்றத்தாழ்வுகள் நடந்தேறி வருகின்றன. நீ ங்கள் பெண்களின் வேலைவாய்ப்பு நிலைகளை கவனத்தில் கொள்ளும்போது, அவர்கள் முக்கியமாக சிரமமான நிலைகளில் உழைத்து (வேளாண்மை, கட்டுமானம், சிறுதொழில்களா, குடிசைத் தொழில்கள் முதலியன) அவர்களுக்கு ஆண்களைவிட குறைந்தளவில் கூலி அளிக்கப்படுகிறது. அவர்கள் சம்பாதனை செய்யும் பணத்தை செலவழிக்கும் சுதந்திரம் கூட அவர்களுக்கு இருப்பதில்லை. குறைந்தளவு கல்வியின் காரணமாக மிகக் குறைவான எண்ணிக்கையில் பெண்கள் சிறந்த உத்தியோகத்தில் மற்றும் அதிக சம்பளம் பெறும் உத்தியோகங்களில் காணப்படுகிறார்கள்.

பெரும்பாலும் வீடுகளில் பெண்கள் உணவு தயாரித்து கணவன் மற்றும் குழந்தைகள் உணவு உண்டபின் மிகுதியான உணவை உண்ணும் சூழ்நிலையும் உள்ளது. இதனால் அவளுக்கு போஷாக்காண உணவின்மையின் காரணமாக பல்விதமான நோய்கள் தாக்குவதற்குக் காரணமாகின்றாள். ஓரிடத்தில் சத்தற்றஉணவு மற்றொருபக்கம் அதிக வேலையின் அழுத்தத்தினால் அவள் நோய் வாய்ப் படுகிறாள், ஆண்கள் அதனை அலட்சியம் செய்வதே அதிகமாகும்.

> ***செயல்பாடு :***
> *இந்தியாவிலுள்ள அனுகூல மற்ற ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுகளுக்கான காரணங்களை பட்டியலிடு.*

அதிலும் கர்பினிப்பெண்களின் ஆரோக்கியம் கெட்டால், அது பிறக்கும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை பாதிப்படைய செய்துவிடும் இக்காரணங்களினால் இந்தியாவில் தாய்மார்களின் இறப்பு (கர்பினியாக இருக்கும்போது மற்றும் பிரசவ சமயத்தில்) சிசுக்களின் இறப்பு (ஒரு ஆண்டுகுள்ளாக மற்றும் குழந்தைகளின் இறப்பு) (ஐந்து ஆண்டுகட்குள்ளாக) அளவு அதிகளவிலிருக்கும் தாயின் கர்பத்திலுள்ளபோதே பெண் கருக்களை அறிந்து கொலை செய்யும் தீய பரம்பரை வளர்ந்து வருகிறது. இதனால் பாலினம் நசிந்து வருகிறது.

அரசியல் நிறுவனங்களில் (பஞ்சாயத்துகள், சட்டசபைகள் மற்றும் மக்கள் சபை (பார்லிமென்ட்)) பெண்களுக்கு இடஓதுக்கீடு செய்தாலும் அவர்களின் இடத்தில் பலமுறை அவமானத்திற்கு உட்படுகின்றார். அவர்களுடைய கடமையை இன்னும்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

பலமுறை கம்பீரமாக செய்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை இவ்வாறு பாலின ஏற்றத் தாழ்வுகள் நடைமுறையில் உள்ளதை நாம் காண்கிறோம்.

பொருளாதார செயலாக்கங்களில் பெண்களின் பங்கேற்பை அதிகரித்து அவர்கள் வெற்றியை சாதிக்க சுய உதவி குழுக்கள் துவக்கப்பட்டுள்ளன. ஒரு சுய உதவிக் குழுவில் 20 சமமான பெண்களின் ஒரு குழுவாகிருந்து, உறுப்பினர்கள், தமக்குள்ளே குறைந்தளவில் மூலப்பொருட்களை ஒன்றுகூட்டி, அரசு உதவியைப் பெற்று, வியாபரம் தொடங்கி, லாபம் அதிகரிக்க முயற்சி செய்கிறார்கள், கணக்கு வழக்கு நிர்வாகம், வங்கி விவகாரத்தைத் தொடங்கி, வருமானத்தைப் பெருக்கும் செயல்களை குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கவகை செய்யப்படுகிறது. சுயஉதவி குழுக்கள் பெண்களுக்கு வருமானம் மேலும் சேமிப்புகளை பெருக்க காரணமாகியுள்ளதே தாடு அவர்கள் தங்களுடைய விருப்பம்போன்று செலவு செய்வதற்கு அனுமதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பெண்களின் மதிப்பு மற்றும் சுயகௌரவம் அதிகரித்துள்ளது.

சமீப ஆண்டுகளில் பெண்களுக்கு அதிகாரமளிப்தற்கு பல்வேறு செயலாக்கங்களை கைகொண்டுள்ளது. வெற்றியின் மூலம் அவர்களுக்கு நிராகரிக்கப்பட்ட வாழ்க்கையின் மகத்துவத்தை தேர்ந்தெடுக்கும் திறன்களை விரிவு படுத்துவதன்மூலம் அதிகாரம் அளிப்பதை வியாக்காணம் செய்யலாம் அவர்களுக்கு அதிகாரமளிப்பதில் மக்க ளிடையே சக்தி பெறுவதும் ஒரு செயலாகும்.

பெண்களுக்கு எதிரான இம்சைகளை தடைசெய்ய பல்வேறு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சமமான சம்பளம், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் நிறுவனங்களில் பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவை பெண்களின் வளர்ச்சிக்கு முக்கிய பதவிகளில் அமர்த்துவதற்கு கண்டிப்பாக உதவி செய்யக் கூடியனவாகும்.

### *நீங்கள் அறிவீர்களா?*

*UNDP*யின் பாலின சமமான தன்மையை அறிவதற்காக அனைத்துநாடுகள் அளவில் பாலின சமதன்மையைக் காட்டும் காட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இக்காட்டியின் மதிப்பு 0 விலிருந்து 1 வரை உள்ளது. 0ஐ முழு சமமானதென்றும் 1 முழு சமமற்ற நிலையை பிரதிபலிக்கின்றன. 2015ல் இந்நிலையில் பாலின காட்டியின் மதிப்பீடு 0.563 இருந்தது. 188 நாடுகளில் 130வது இடத்தை இந்தியா பெற்றுள்ளது. இதன் பொருள் பாலின சமதன்மை மற்றும் பெண்கள் வளர்ச்சியில் இந்தியா மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

© KTBS Not to be republished



www.textbookpdf.in

# பயிற்சிகள்

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பொருளாதார வளர்ச்சி ஒரு ____________.
2. ____________ வருமானம் அதிகரிக்கும்போது வளர்ச்சி நடைபெறுகிறது.
3. வளர்ச்சியின்மை நாட்டில் முக்கியமாக ____________ குறைவாக இருக்கும்.
4. மனித வளர்ச்சி ____________ ன் பரப்பளவைக் குறிக்கிறது.
5. ____________ நிறுவனத்தின் உலக மனித வளர்ச்சியின் அறிக்கை பிரகடனத்தின் பொருப்பை ஏற்றுள்ளது.
6. 2014ல் இந்தியாவில் மனிதவளர்ச்சி குறிப்பெண்களில் ____________ வது இடத்தை பெற்றிருந்தது.
7. 2015ல் இந்தியாவில் பாலின வளர்ச்சியின்மை குறிப்பெண்களில் ____________ வது இடத்தைப் பெற்றிருந்தது.
8. 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் பாலின வேறுபாடு ____________ இருந்தது.

## II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்துமுதல் ஆறுவரிகளில் விடையளிக்கவும்.

1. வளர்ச்சியைப்பற்றியும், வளர்ச்சியின் செயலாக்கங்களைப்பற்றிய விவரங்களை அளிக்கவும்.
2. வளர்ச்சியின்மை என்றால் என்ன? அதற்கான காரணங்கள் யாவை?
3. மனிதவளர்ச்சி காட்டி என்றால் என்ன? அதனை எவ்வாறு கணக்கிடுகிறார்கள்?
4. இந்தியாவின் மனித வளர்ச்சி காட்டி குறைவாக இருப்பதற்கான காரணங்களை அளிக்கவும்.
5. பாலின சமதன்மையை எவ்வாறு தீர்ப்பது?

## III. செயல் திட்டம்

உங்கள் கிராமம் அல்லது நகரங்களில் உள்ள வீடுகளுக்கு நேரில் பேட்டியளித்து அங்குள்ள குடும்பங்களில் உள்ள குறைபாடுகளை அடையாளம் காணவும்.

## IV. செயல்பாடு :

சமீப நாட்களில் அரசு மேற்கொண்ட பெண்களுக்கு அதிகாரம் அளித்தபின் செயல்பாடுகளை பட்டியலிடவும்.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# அத்தியாயம் - 2

## கிராமிய வளர்ச்சி

### இவ்வத்தியாயத்தைக் கற்றபின் நீங்கள் இவற்றை அறிந்துகொள்வீர்.

- **கிராமிய வளர்ச்சியின் பொருள் மற்றும் மகத்துவம்.**
- **கிராமிய வளர்ச்சி மற்றும் பகிர்ந்தளிப்பு.**
- **கிராமிய வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜின் ஏற்பாடு.**
- **கிராமிய வளர்ச்சி மற்றும் பெண்கள்**

### அறிமுகம்

இந்திய நாடு கிராமங்கள் நிறைந்த ஒரு நாடு. 2011 ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 68.84 சதவீதம் அளவு மக்கள் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். தேசத்தந்தை மகாத்மா காந்தியவர்கள் வெகு காலத்திற்கு முன்பே இந்தியாவின் உண்மையான வளர்ச்சி என்றால் அது கிராமங்களின் வளர்ச்சியிலுள்ளது என்று கூறினார்கள். ஆனால் விடுதலையடைந்த சுமார் 70 ஆண்டுகட்கு பிறகு இந்திய கிராமங்கள் வஞ்சிக்கப்பட்டன மற்றும் பின்தங்கிய நிலையை அடைந்துள்ளன. மூன்றில் ஒரு பங்கு கிராமிய மக்கள் மிகவும் பரிதாபமான வறுமையில் வாடுகின்றனர். வளர்ச்சி செயலாக்கங்கள் மற்றும் ஏழ்மையைப் போக்கும் திட்டங்கள் மக்களை அடைய முடியாமல் தோல்வியடைந்துள்ளதைக் காணமுடிகிறது.

நாட்டின் விடுதலைக்குப்பிறகு அரசு கடைப்பிடித்த வளர்ச்சி தொழில் நுட்பங்கள் நகர்மைய வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தது என்று பெரும்பாலான அறிஞர்கள் வாதித்து வருகின்றனர். ஆங்கில ஆட்சியில் கிராமிய குடிசைத் தொழில்கள் இறுதி நிலையில் இருந்தன. விடுதலைக்குப் பிறகு நவீன தொழிற்சாலைகளின் போட்டியினால் அவைமேன்மேலும் ஒரு சரிவை அனுபவித்தன. வேளாண்மையை சார்ந்த வேலைவாய்ப்புகள் மற்றும் சரியான அளவில் கூலி அளிக்க முடியாத காரணங்களினால் மக்கள் நகரங்களுக்கு குடிபெயர்ந்தனர். தாரளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் செயல்கள் நடைமுறைப்படுத்தியதால் நவீன தொழில் நுட்பத்தைத் தமதாக்கிக்கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் சேவைத் துறைகள் வெகுவேகமாக பரவிய செயலாக்கங்களினால் மேலும் உற்சாகமடைந்தன.

ஏறக்குறைய வேளாண்மையைச் சார்ந்து வாழும் கிராமிய மக்களின் ஏழ்மை மேலும் அதிகரித்தது. இவர்களில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் மிகவும்வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றனர். நவீனமயமாக்கலின் பலம் பொருந்திய தாக்கத்தால் கிராமிய கைத்தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் நலிவடைந்துவிட்டன. சுமார் 60 சதவீதம் அளவு மக்கள் ஆரம்ப நிலையில் உழைத்து வந்தாலும், தேசிய வருமானத்தில் இத்துறைகளின் பங்கு மிகவும் குறைவானதாகும். அது நிரந்தரமாக குறைந்து வருகிறது. இதனால் நகரம் மற்றும் கிராமிய பிரதேசங்களின் இடையே இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இச்சமமற்ற நிலையை போக்கி, நாட்டின் சமமான வளர்ச்சியை சாதிக்க வேண்டுமானால் முதலில் கிராமிய பிரதேசங்களை வளர்ச்சியடைய செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

Not to be republished ©KTBS

இவ்வத்தியாயத்தில் நீங்கள் கிராமிய வளர்ச்சியின் பொருளை அறிந்துகொண்டு அதனை நடைமுறைப் படுத்த கைகொண்ட அரசின் செயல்களை பரிசீலனை செய்ய உள்ளீர்கள்.

2. கிராமீய வளர்ச்சி மற்றும் அதனுடைய முக்கியத்துவம், கிராமிய வளர்ச்சியின் பொருள். கிராமிய வளர்ச்சி கிராமங்களின் பொருளாதார மற்றும் சமூதாய மேம்பாட்டுக்காக தயாரிக்கப்பட்ட ஒரு செயல்திட்டம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். கிராமிய மக்களின் வாழ்க்கை குண இயல்பை சிறப்புறசெய்வதற்கு கிராமங்களின் வளர்ச்சி, கிராமிய வளர்ச்சி என்றும், அழைக்கலாம். அது ஒரு முழுமையான செயலாகும், ஏழைமக்களின் சமூகநலன் பொருளாதாரம், அரசியல் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு செயல்பாடுகளை உட்கொண்டுள்ள பரவலான வளர்ச்சியின் செயலாக்கங்களாகும்.

வேளாண்மை நிலை மற்றும் வேகமற்ற வளர்ச்சியே கிராமங்கள் பின்தங்கியிருக்க முக்கிய காரணங்களாகும். அதனால் அதிக அளவில் வேளாண்மையற்ற செயலாக்கங்களை காப்பது மிகவும் அவசியமாகிறது. இதற்காக எழுத்தறிவு: ஆரோக்கியம், தூய்மை, போக்குவரத்து, ஆற்றல் செய்தி போக்குவரவு, சந்தை, பணபரிவர்தனை, போன்ற அடிப்படை வசதிகளை பலப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

அதுவல்லாமல் வேளாண்மைவளர்ச்சிக்காக நீர்ப்பாசனம் மற்றும் நிலசீர் திருத்தங்கள் கூட மிகவும் அவசியமாக உள்ளது. இவ்வாறு கிராமிய வளர்ச்சி எழுத்தறிவு, ஆரோக்கியம், அடிப்படை வசதிகள், நிலசீர்திருத்தம், நீர்பாசன மில்லாமல் ஏழைகளின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த திடமான செயல்களை கை கொள்ள வேண்டியுள்ளது. அதனால் கிராமிய வளர்ச்சிக்காக அவசியமான செயல்களை பட்டியலிட்டால் அது இவ்வாறு இருக்கும்.

### *1. மனிதவள வளர்ச்சி*

i. எழுத்தறிவு, அதிலும் பெண்களின் எழுத்தறிவு, கல்வி மற்றும் திறன் வளர்ச்சி.

ii. தூய்மை மற்றும் பொதுமக்களின் ஆரோக்கியத்தைக் காத்தல்.

2. நில சீர்திருத்தம்.

3. உள்ளூர் உற்பத்தி மூலப் பொருட்களின் வளர்ச்சி.

4. மின் சக்தி, நீர்ப்பாசனம், பணபரிவர்தனை, சந்தைகள், போக்குவரவு (கிராமிய மற்றும் போக்குவரவுக்கான சாலைகள்) வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், மேலும் தகவல், தொடர்பு பிரச்சாரங்களை உட்கொண்ட அடிப்படை வசதிகளின் வளர்ச்சி.

5. வறுமையை போக்க திடமான திட்டங்கள்.

### *கிராமிய வளர்ச்சியின் மகத்துவம்:*

கிராமிய வளர்ச்சி வேளாண்மை மற்றும் வேளாண்மையற்ற மையங்களின் வளர்ச்சியை உட்கொண்டிருப்பதாகும். அதனால் மொத்தமாக நாட்டின் வளர்ச்சியாகிருக்கும். அதிகளவில் வேளாண்மை ஆதாயத்தின் பலனாக சரக்கு - சேவைகளின் தேவை பெருகியுள்ளது. இதன்மூலம் அதிகளவில் வேலைவாய்ப்பு பெருகி



www.textbookpdf.in

©KTBS Not to be republished

அச்செயல்பாடுகளிலும் கூட விரிவாக்கம் கொண்டிருக்கும். அதிகளவில் கல்வி மற்றும் திறன்களால் அதிக உற்பத்தியை சாதிக்க முடியும். சிறந்த ஆரோக்கியம் மக்களின் வேலை வாய்ப்பில் பங்களிப்பு அதிகமாகி நாட்டின் உற்பத்தி பெருக்கமடையும். வேளாண்மை, சிறுகைத்தொழில்கள் வளர்ச்சியடைந்து கிராமிய மாறுபாடுகள் ஒருமாதிரியாக திகழும். இவையனைத்தும் ஏழ்மைநிலையை குறைப்பதற்கு காரணமாக இருக்கும்.

## 3. அதிகாரம் பகிர்ந்தளித்தல்

ஒவ்வொரு கிராமத்தின் நிர்வாக அதிகாரம் மற்றும் கிராமத்தின் வளர்ச்சியின் பொருப்பை கிராமத்தின் மக்களுக்கே வகித்துக் கொடுக்கவேண்டும் இதனை அதிகாரப்பகிர்வு என்பார்கள். இது அதிகாரம் பகிர்ந்தளித்தலை ஒரு செயலாக்கமாகவும் முடிவுகளை மேற்கொள்வதில் மக்களுடைய பங்களிப்பு அதிகமாகிறது. கீழ்மட்டத்திலிருந்து திட்டங்களை மேற்கொள்வது மற்றும் வளர்ச்சி சாதனைகளின் செயலாக்கமாக உள்ளது. இதனையே மகாத்மா காந்தியவர்கள் ''கிராம சுயராஜ்யம்'' என்று அழைத்தார். அதிகாரம் பகிர்ந்தளித்தலில் அனைத்து வகையான சுரண்டல்களையும் தடுக்கிறது. மனிதனின் சுதந்திரம் மற்றும் பெருந்தன்மையைக் காப்பாற்றுகிறது. மேலும் இரக்கம் மற்றும் ஒற்றுமை மனிததன்மையின் மதிப்பை உயர்த்துகிறது.

அதிகாரப் பகிர்வை ஊக்கப்படுத்துவதற்காக இந்தியாவில் பஞ்சாயத்துராஜ் ஏற்பாட்டை ஊக்கவித்து உயிருட்டப் பட்டுள்ளது. இந்திய அரசு 1993ல் அரசியல் சாசனசட்டம் 73வது திருத்த சட்டத்தின் மூலம் நாடுமுழுவதும் ஒரே விதமான பஞ்சாயத்துராஜ் சபைகளை நடைமுறைக்கு கொண்டுவந்தது. இதனால் பஞ்சாயத்துராஜ் சபைகளுக்கு அரசியல் சாசனத்தில் இடம்கிடைத்தது. இத்திருத்தத்தின்படி மூன்று நிலை (Three tier system) பஞ்சாயத்து நடைமுறைக்கு வந்தது. இந்தியாவில் நடைமுறையிலுள்ள பஞ்சாயத்ராஜ் ஏற்பாட்டின் குணஇயல்புகள் இவையாகும்.

i. கிராம பஞ்சாயத்து, தாலூக்கா பஞ்சாயத்து மற்றும் ஜில்லா பஞ்சாயத்துக்கள் என மூன்று பஞ்சாயத்து நிலைகளின் பஞ்சாயத்து ஏற்பாடு இதில் கிராமசபையே அஸ்த்திவாரமாகும்.

ii. நேரடியான மற்றும் நியமன தேர்தல்கள்.

iii. தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி இனமக்கள் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு.

iv. பணபரிவர்தனை, நிர்வாகம், வரவுசெலவு பத்திரம் மற்றும் கணக்கு வழக்கு களை பரசீலனை செய்யும் பொருப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

v. செயல் நிர்வாகம் மற்றும் நம்பிக்கையான ஊழியர் அளிக்கப்பட்டு மற்றும்.

vi. பஞ்சாயத்துக்களை கலைக்கும்போது கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடான செயல்கள் மற்றும் ஆறு மாதங்களுக்குள் கட்டாயமாக தேர்தல் நடத்த வேண்டும்.

கர்நாடகத்தில் 30 மாவட்ட ஜில்லா பஞ்சாயத்துக்கள் 176 தாலூக்கா பஞ்சாயத்துக்கள் மற்றும் 6000ம் அதிகமான எண்ணிக்கையில் கிராம பஞ்சாயத்துக்கள் உள்ளன.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

## *4. கிராமிய வளர்ச்சியில் பஞ்சாயத்துராஜ் சபைகளின் பங்களிப்பு*

கிராமிய வளர்ச்சியில் கிராம மக்கள் பங்கேற்கும் வகையில் பஞ்சாயத்துராஜ் சபைகளின் பாத்திரம் பெரியதாகும். வறுமை ஒழிப்பு, உயிர்களுக்கு பாதுகாப்பு மேலும் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை அளித்து, திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இச்சபைகளின் பொருப்பு பெரியதாகும். இவை கிராமபுர சாலைகள், வடிகால், குடிநீர், தெருவிளக்குகள், பொதுகழிப்பிடங்கள், பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டிடங்கள், சந்தைகள் போன்ற சமுதாயத்திற்கு பயன்படும் அடிப்படை வசதிகளை வளர்ச்சியடையச் செய்ய சாத்தியமுள்ளது. தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி கல்வி, முதியோர்கல்வி, தொழில் நுட்பம், தொழிற்கல்வி பயிற்சிக்கு ஆதரவு அளித்து உற்சாகமூட்டுதல், ஆரோக்கியம் மற்றும் தூய்மை வசதிகளின் விரிவாக்கம் மூலமாக மனிதவளத்தை வளர்ச்சியடையச் செய்வதில் பஞ்சாயத்து சபைகள் செயலாற்ற வேண்டியதாகிறது.

கிராம பஞ்சாயத்துகளில் கிராம சபைகள் மிகவும் மகத்துவமான சபைகளாகும். குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அதனுடைய சபை நடைபெறவேண்டும். கிராமத்தின் அனைத்து வாக்காளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். கிராமத்தின் அனைத்து வளர்ச்சிப் பணிகளுக்கு மற்றும் திட்டங்கள் குறித்து விவாதம் சபைகளிலேயே நடைபெறும்.

மகாத்மா காந்தியடிகளின் கிராமிய வேலைவாய்ப்பு உறுதிதிட்டம், சுவர்ன ஜெயந்தி கிராம சுயவேலை வாய்ப்பு திட்டம் போன்ற உத்தியோக நிர்மாணம் மேலும் வறுமை ஒழிப்பு திட்டங்களை பஞ்சாயத்து சபைகளின் மூலமாக பலனளிக்கும் வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதனால் கிராமிய வறுமை மற்றும் வேலையின்மையை போக்க சாத்தியமுள்ளது. 'இந்திரா ஆவாஸ் யோஜனெ' 'அம்பேத்கார்-வால்மீகி வசதியோஜனெ', 'ஆஸ்ரய யோஜனெ' போன்ற இருப்பிட திட்டங்களை நடைமுறைப்படுத்தி அனைத்து உறைவிடமற்றவர்களுக்கு வீடுகள் கட்டி கொடுக்கப்படுகிறது. 'சுவர்ண கிராமோதய திட்டம் மூலம் அடிப்படை வசதிகளை பலப்படுத்துவது.'

கிராமங்களில் குடும்ப அட்டைகள் (வினியோக முறையை பலபடுத்தி அருகதையுள்ள (வினியோக) ஏழைமக்களுக்கு அவசியமான உணவு தானியங்களை எளிதாகக் கிடைக்குமாறு செய்யப்படுகிறது. கிராமங்களிலுள்ள வயோதிகர், உடல் ஊனமுற்றவர்கள், விதவைப்பெண்கள் மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அரசு மூலமாக கிடைக்கக் கூடிய வசதிகளை அளிப்பதின் மூலமாக சமுதாய நல சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

பெண்கள் சுய உதவி குழுக்களை ஏற்படுத்தி உத்வேகமான செயல்பாடுகள் மூலமாக நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் கௌரவத்துடன் பங்கேற்க செய்யப்பட்டு வருகிறது. கிராமிய விழாக்கள், பண்டிகைகள் மூலமாக சமூக மற்றும் கலாச்சார செயல் பாடுகள் உற்சாகப்படுத்தப் படுகிறது. இதனால் கிராமிய கலைகள் வளர வழியேற்படுகிறது. கிராமியக்கலைகள் சிறப்படைகின்றன.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

கிராமிய உற்பத்தி செயல்பாடுகளான வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு, சமூகநலக்காடுகள் போன்றவைகளை வளர்ச்சிப்படுத்துதல் மூலமாக மக்கள் சம்பாதனை செய்யும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ஏரிக்கரைகளை அமைத்தல், அவற்றிலுள்ள மண்ணை தூர்வாருதல், சிறு நீர்ப்பாசன திட்டங்களை நிர்வாகித்தல் போன்ற செயல்கள் மூலமாக வேளாண்மைக்கு நீர்ப்பாசன வசதியை விரிவாக்கம் செய்யலாம். கிராமிய மற்றும் குடிசைத் தொழில்களை வளர்ச்சியடைய செய்யலாம். உணவு பாதுகாப்பு அமைப்புகளுக்கு புத்துணர்வு அளிப்பது.

மேற்காணும் அனைத்து செயல்பாடுகளில் பஞ்சாயத்துகள் மிக முக்கிய பங்களிப்பை அளித்து கிராமங்களின் வளர்ச்சியை பெருக்கி வருகின்றன.

## 5. வளர்ச்சி பாதையில் பெண்கள் :

மனிதவாழ்க்கையில் பெண் என்பவள் தாயாகவும், மனைவியாகவும், மருமகளாகவும், மகளாகவும் இருந்து பல்வேறு வகையான கடமைகளை நிர்வாகித்து வருகிறாள். மனித வாழ்வு உருவாவது பெண்ணால்தானாகும். அவள் வீட்டில் உழைப்பதோடல்லாமல், வீட்டிற்கு வெளியே வேளாண் தொழிலில் வேலை செய்வதில் அதிகாரியாகவும், உத்தியோகியாகவும், நீதியை அளிப்பவளாகவும், ஆண்களுக்கு இணையாகவும் உழைத்து வருகிறாள். அவ்வாறே நாட்டின் வளர்ச்சியிலும் அதிலும் சிறப்பாக கிராமிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு ஈடற்றது. பூ வேளாண்மை, கோழிவளர்ப்பு துறையில் பெண்கள் வெகுவாக உழைத்து வருகின்றனர். வேளாண் செயல்பாடுகளிலும் பெண்களே அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

கல்வி கற்ற பெண்கள் பொருளாதார ஏற்பாடுகளில் வெவ்வேறு துறைகளில், பல்வேறு உத்தியோகங்களில் வெற்றியுடன் செயலாற்றி வருகிறார்கள். அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள் அனாதை ஆசிரமங்கள் போன்ற இடங்களில் பெண்களின் சேவையை அளவிட முடியாது. இது வல்லாமல், கல்வி கற்ற பெண்கள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பு அளித்து வருகின்றனர்.

பெண்கள் அரசியல் துறையிலும் தங்களுடைய பங்கை அளித்து வருகிறார்கள். கிராம பஞ்சாயத்துக்கள் முதற்கொண்டு குடியரசு தலைவர் பதவி வரையில் அரசின் வெவ்வேறு நிலைகளில் அரசியலில் முதன்மையானவர்களாக பல்வேறு பொருப்புகளை நிர்வாகித்து வருகிறார்கள். பஞ்சாயத்துராஜ் சபைகளில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றன, சாதாரண கிராமிய பெண்களுக்கு அதிகாரம் என்னும் சுக்கானை பிடித்து கிராமங்களின் வளர்ச்சிக்கு உழைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. சமீபத்தில் கர்நாடக பஞ்சாயத்துசபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாக உள்ளனர், இது ஒரு மகத்துவமான அம்சமாக உள்ளது.

கிராமிய பிரதேசங்களில் அனைத்து நிலைகளிலும் 'பெண்கள் சுய உதவிக் குழுக்கள் (ஸ்த்ரிசக்தி சங்கம்) நடை முறையில் உள்ளன. இவை கிராமிய ஏழைப் பெண்களை சங்கங்களிலும் மற்றும் அவர்கள் பொருளாதாரத்திலும் தன்னிறைவு அடையச்

©KTBS
Not to be republished



www.textbookpdf.in

செய்வதற்கு முக்கிய பங்காற்றி வருகிறார்கள். இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பெண்கள் இவற்றின் மூலமாக எளிதாக கடன் பெற்று உற்பத்தி செயல்பாடுகளில் சிறப்பாக சம்பாதனை செய்யமுடியும். மிகவும் வெற்றிகரமாக செயலாற்றிவரும் இச்சங்கங்கள் சேமிப்புகளை சேகரிப்பதில் மற்றும் கடன்களை வசூலிப்பதில் சிறப்பான சாதனையை செய்துள்ளன. கிராமங்களில் குடி, சூதாட்டம் போன்ற தீய பழக்க வழக்கங்கள் பரவலாக அதிகரித்து வருகின்றன. குழந்தைத் திருமணங்கள் வரதட்சனை, ஜாதி முறை, மூடநம்பிக்கைகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் சுரண்டப் படுவதைப் போன்ற சமுதாயத் துயரங்கள் இன்னும் உயிருடனுள்ளன. அதிகரித்து வரும் பெண்களின் சங்க முயற்சிகளின் மூலம் இவைப் போன்ற விருப்பமற்ற பழக்க வழக்கங்களைப் போக்க வேண்டும். அதன் மூலமாக தூய ஒளிமயமான சமுதாயத்தை ஏற்படுத்துவதில் உதவியாக அமைய வேண்டும்.'

பெண்கள் வீட்டில் செய்யும் கூலியற்ற வேலையை சிரமம் என்று நினைப்பதில்லை. வீட்டிற்குள் மற்றும் வீட்டுக்கு வெளியே உழைப்பதை கணக்குக்கு எடுத்துக் கொண்டால் பெண்கள் ஆண்களைவிட அதிக நேரம் உழைக்கிறார்கள். ஆயினும் அவர்கள் உழைப்பில் முக்கால் பங்கு கூலியற்ற உழைப்பாகும். அதனை தேசிய வருமானத்திலும் சேர்ப்பதில்லை. பெண் தொழிலாளர்களுக்கு சமமான சம்பளம் மேலும் உத்தியோகம் செய்யும் பெண்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும். மொத்தத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்கள் - ஆண்கள் இருவரும் சமமான பொருப்பைக் கொண்டுள்ளனர். அவர்களிருவரும், வளர்ச்சி என்னும் தேரின் இரண்டு சக்கரங்களாக உள்ளனர் இங்கு யாரும் குறைந்தவர்களில்லை.

**செயல்பாடு** : உங்கள் ஊரிலுள்ள பெண்கள் சுய உதவி குழுக்களுக்கு பேட்டியளித்து அதன் செயலாக்கங்களை அறியுங்கள்.

## பயிற்சிகள்

### I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. இந்தியாவின் உண்மையான வளர்ச்சியென்றால் அது கிராமங்களின் வளர்ச்சி என்று கூறியவர் ____________.
2. அரசியல் சாசனத்தின் 73-வது திருத்தத்தின்படி இந்தியாவில் ____________. நிலை பஞ்சாயத்துக்கள் வழக்கத்திலுள்ளன.
3. பஞ்சாயத்து சபைகள் ____________ தத்துவங்களின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.
4. கிராமிய ஏழைப் பெண்களை ஒன்று கூட்ட மற்றும் அவர்களை பொருளாதாரத்தில் தன்னிறைவடையச் செய்ய ____________ களை நடைமுறைக்குத் தரப்பட்டுள்ளன.

Not to be republished ©KTBS



www.textbookpdf.in

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

1. கிராமிய வளர்ச்சி பொருள் கூறுக.
2. அதிகாரம் பகிர்ந்தளித்தல் என்றால் என்ன?
3. மூன்று நிலை பஞ்சாயத்துராஜ் சபைகள் யாவை?
4. ஏதாவது இரண்டு வீட்டுவசதி திட்டங்களைக் கூறுக?
5. பெண்களின் எந்த உழைப்பை கடினமானது என்று நினைப்பதில்லை?

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்தாறு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

1. இந்தியாவில் கிராமிய பொருளாதாரம் எந்த நிலையில் உள்ளது?
2. கிராமிய வளர்ச்சியின் மகத்துவத்தை விவரிக்கவும்?
3. காந்தியடிகள் கிராமிய சுயாட்சியை அதிகாரம் பகிர்ந்தளித்தலின் பின்னணியைக் கூறுக.
4. கிராமிய வளர்ச்சியில் பஞ்சாயத்தராஜ் சபைகளின் பங்களிப்பை எழுதுக.

**IV. செயல்பாடுகள் :**

1. உங்களுக்கு அருகிலுள்ள கிராம பஞ்சாயத்துகளுக்குச் சென்று கிராமிய பிரதேச வளர்ச்சிக்காக நிர்வாகித்துவரும் செயல்களை பட்டியலிடவும்.

2. உங்களுக்கு அருகிலுள்ள பெண்கள் சுய உதவி குழுக்களுக்குச் சென்று கண்டு வரவும். பெண்களை தன்னிறைவை அடையச் செய்வதில் அவற்றின் பங்கு குறித்து விவரங்களை சேகரித்து விவாதிக்கவும்.

* * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# அத்தியாயம் - 1
# வங்கியியல் பரிமாற்றங்கள்

## இவ்வத்தியாயத்தில் நாம் கற்பவை

- **வங்கிகளின் பொருள்.**
- **வங்கிகளின் தன்மைகள்.**
- **நிதிபரிமாற்றங்களில் வங்கிகளும் மற்றும் அஞ்சல் அலுவலகங்களும் மற்றும் வங்கிகளின் வகைகள்.**
- **ஒரு வங்கியில் வெவ்வேறு வகை கணக்குகள் துவங்க இயல்வது.**
- **வங்கிகளில் கணக்குகள் துவங்கும் முறை**
- **வங்கிகணக்குகளின் சாதகங்கள்**

வங்கிகள் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே துவங்கியவை. வங்கிகளின் தன்மைகள் காலமாறுதலுக்கு உட்பட்டது. வங்கி எனும் பதம் நிதிபரிமாற்றங்களுக்கு தொடர்பானது. வங்கிகள் நிதிநிறுவனங்களாகும். அவை வாடிக்கையாளர்களின் நிதி முதலீடுகளை பெற்று பயன்படுத்திக்கொண்டு தேவை ஏற்படும் போது திரும்ப அளிக்கும் வங்கிகள் தனது வாடிக்கையாளர்களுக்கு முன் பணம் கடனாக வழங்கி அதற்கேற்ப வட்டியை வசூலிக்கும் வங்கிகள் அந்நிய செலாவணிகளை பரிமாற்றம் செய்யும். எந்தவொரு நாட்டின் முன்னேற்றமும் அந்நாட்டின் திறன்மிகு வங்கியியல் நடைமுறைகளேயே சார்ந்திருக்கும். விவசாயம், தொழிற்சாலைகள், வணிகர்கள் மற்றும் இன்னபிற சமூக பிரிவுகள் தங்களின் நிதித்தே தவைகளை வங்கிகளிடமிருந்து கடனாக பெறுகின்றன. இவையாவும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் அந்நாட்டின் துரித வளர்ச்சிக்கும் பெரும் பங்கு வகிக்கின்றன.

### வங்கி என்றால் என்ன?

பேங்க் எனும் பதம் இத்தாலிய பதம் ''பேங்கோ''(Banko) அல்லது ஃப்ரெஞ்ச் பதம் ''பேங்க்'' Banque எனும் சொற்களில் இருந்து வந்தது இவற்றினுடைய விளக்கம் 'பென்ச்' அல்லது பணத்தை பரிமாறும் அமர்வாக உள்ளது.

ஒரு வங்கியியல் நிறுவனத்தைப்பற்றி விளக்க வேண்டுமென்றால் ஒரு நிறுவனம் வணிக நோக்கோடு நிதியையும் பரிமாறக் கொள்வதேயாகும். அவை பொதுமக்களிடமிருந்து பணத்தை முதலீடாக பெற்று தேவையானவர்களுக்கு கடனாக வழங்கும், பணத்தை சேமிக்க வேண்டுமென்பவர்களிடமிருந்து முதலீடுகளாக இருத்தி பணத்தை கடனாக வேண்டுபவர்களுக்கு அவற்றை வழங்கும் அனைத்து வங்கிகளின் சேவையே வங்கியில் என அழைக்கப்படும் வங்கிகள் தன்னிடம் உள்ள முதலீட்டை காசோலை, கேட்பு காசோலை அல்லது வங்கி நடைமுறைகளில் தற்போது உள்ள இன்னபிற வடிவங்களில் திரும்ப அளிக்கும்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

## வங்கிகளின் தன்மைகள்

1. ***நிதி (அ) விவகாரங்கள் :*** வங்கிகள் நிதி நிறுவனங்கள் என்ற முறையில் பொதுமக்களின் பண விவகாரங்களோடு தங்களின் சேவையை ஈடுபடுத்திக்கொள்கிறது.
2. ***தனி மனித / வணிக அமைப்பு / நிறுவனம் :*** வங்கி தனிமனிதனோ சிறு வணிக அமைப்போ அல்லது நிறுவனமாகவோ இருக்கலாம் பண விவகாரங்களை கையாளும் அமைப்பே வங்கி எனும் நிறுவனமாகும்.
3. ***முதலீடுகளை ஏற்றுக்கொள்வது :*** வங்கிகள் பொது மக்களிடமிருந்து பணத்தை முதலீடாக ஏற்றுக்கொள்கிறது இந்த முதலீடுகள் வாடிக்கையாளர் கோரும்போது திரும்ப அளிகின்றது. இந்த முதலீடுகள் குறித்த காலத்திற்கு வங்கிகளில் உரிய பாதுகாப்புடன் இருப்பன. பொதுமக்களின் இவ்வகை முதலீடுகளுக்கு பொறுப்பாளராக இருக்கும்.
4. ***கடன் வழங்குதல் :*** வங்கிகள் தொழிற்துறை, விவசாயம், கல்வி, கட்டுமானம், வீட்டுவசதி மற்றும் இதர வகையான பணத்தேவைகளுக்கும் தேவைப்பட்ட நிதியினை கடனாக அளிக்கும்.
5. ***பெறுவது மற்றும் திரும்ப அளிப்பது :*** வங்கிகளில் முதலீடாக உள்ள பணத்தை வாடிக்கையாளர்களுக்கு காசோலைகளின் மூலமாகவோ, வரைவு காசோலைகளாக திரும்ப அளிக்கும்.
6. ***முகமை மற்றும் பயன்கொள் சேவைகள் :*** வங்கிகள் முகமையாகவும் பயன்கொள் அமைப்பாகவும் மற்றும் இன்னபிற சேவைகளையும் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.
7. ***இலாப நோக்கம் மற்றும் சேவை மனப்பான்மை :*** வங்கிகள் இலாபம் நோக்கம் கொண்டதோடு சேவை மனப்பான்மையோடு செயல்படும் அமைப்பாகும்.
8. ***நிரந்தர வளர்ச்சியுடனான செயல்தன்மை :*** வங்கிகள் தொடர்ந்து விரிவடைந்து பவதரப்பட்ட செயல்பாடுகளை முன்னிறுத்தி சேவை மற்றும் பிற நடவடிக்கைகளையும் செயல்படுத்தும்.
9. ***இணைப்பு மற்றும் தொடர்பு படுத்துதல் :*** வங்கிகள் முதலீட்டாளர்களையும் கடனாளர்களையும் இணைக்கும் கருவியாகவும் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருக்கும் தேவைக்கு மேற்பட்ட பணத்தைப் பெற்று பிற தேவையுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடனாக வழங்கும்.'
10. ***வங்கி வணிகம் :*** முதலீட்டை பெறுவது மற்றும் கடன் அளித்தல் மட்டுமே இதன் குறிக்கோளாகும் இது ஒரு நிறுவனம் எதற்கான துணை அமைப்பும் அல்ல.

©KTBS Not to be republished

11. **பெயர் எனும் அடையாளம் :** இந்நிறுவனங்கள் வங்கி எனும் சொல்லை தனது பெயரோடு இணைத்து கொள்ளும் உதாரணமாக அவை கனரா வங்கி, விஜயா வங்கி, கார்ப்போரேஷன் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, ஸ்டேட் பாங்க் ஆப்ஃ மைசூர் தற்போது பல வங்கிகள் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவுடன் ஐக்கியமாகி விட்டன.

**வங்கிகளின் செயல்பாடுகள்**

1. பொதுமக்களிடமிருந்து முதலீடுகளை பெறுவது
2. பொதுமக்களுக்கும் இன்னபிற அமைப்புகளுக்கும் கடன் வழங்கல்
3. ஓரிடத்திலிருநத் வேறிடத்திற்கு பணம் அனுப்புவது
4. காசோலைகள், வரைவோலைகள் மற்றும் வங்கி உண்டி மூலம் பணம் பெறுவது / செலுத்துவது
5. மாற்று உண்டி தள்ளுபடி செய்வது
6. அரிதானபொருட்களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதி வாடகைவிடுவது.
7. அந்நிய செலாவணி பரிமாற்றங்களை மேற்கொள்வது.
8. விலைமதிப்பு மிக்கவற்றை பாதுகாப்பது / பராமரிப்பது
9. கடனுக்கான உத்தரவாதம் அளிப்பது
10. அரசாங்கங்களின் நிதி பரிமாற்றங்களில் ஈடுபடுவது. (மத்திய மற்றும் மாநில)

**வங்கியாளர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் இடையேயான உறவு**

**இவை இரண்டு பெரும் பிரிவுகளாகும்**

1. பொதுவான உறவு முறை  2. சிறப்பு உறவுமுறை

***1. பொதுவான உறவு முறை***

- தொடக்க உறவுமுறை (கடனாளி மற்றும் கடனீந்தோர் உறவு)
- துணை உறவுமுறை (அறங்காவலர் மற்றும் பயனாளி உறவு முறை)
- முகவர் மற்றும் முதன்மையாளர் தொடர்பு முறை.

***2. சிறப்பு உறவுமுறை***

- காசோலைகளை பணமாக்கும் முறை
- கணக்கு இரகசியம் பராமரிக்கும் கடமை

| |
|---|
| வங்கிக்கு சென்று உயர்கல்வி கடன்வசதி சேவையை பற்றி விவரங்களை சேகரிக்கவும். |

**வங்கிகளின் சேவைகள்**

1. பற்று அட்டை (Debit Cards)

5. பாதுகாப்பு பெட்டக வசதி

மற்றும் கடன் அட்டை



www.textbookpdf.in
©KTBS Not to be republished

(Credit Cards) சேவை

2. தனிப்பட்ட கடன்கள்
3. வீட்டு மற்றும் வாகன கடன்கள்
4. பரஸ்பர நிதிகள்
6. அறங்காவலர் சேவைகள்
7. கையெழுத்துக்கான உத்தரவாதம்
8. மின்னனு வங்கியல்

# வங்கியியல் பரிமாற்றங்கள்

## வங்கிகள் மற்றும் அஞ்சல் (தபால்) அலுவலகங்கள்

கணக்கு வைப்பில் நடைபெறும் பணம் அல்லது பண செலாவணி போன்ற எந்தவொரு இயக்கமும் வங்கி பரிமாற்றமாகும். பணம் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் நிறுவனங்கள் வங்கிகள் ஆகும். வங்கிகள் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற பணத்தை வைப்பு நிதியாக்கி பிற வாடிக்கையாளர்களுக்கு கடனாக வழங்கும் அவையே கடன்களாகும். அதற் கேற்ப வட்டியை ஈட்டி தனது முதலீட்டாளர்களுக்கும் வட்டியை வழங்கும் அது முதலீட்டாளர்களின் வருவாயாக கருதப்படுகிறது தனது வாடிக்கையாளர்களின் பணத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகத்தில் முதலீடு செய்து அதன் மூலம் தனது நிதி ஆதாரத்தை பெருக்கிகொள்ளும்.

அனைத்து வங்கிகளின் பரிமாற்றச் சேவைகளும் ஆர்.பி.ஐ. எனும் மத்திய ரிசர்வ் வங்கியினால் (RBI) கட்டுப்படுத்தப் படுகின்தது. இதை அனைத்து வங்கிகளின் தாயாக அழைக்கப்படுகிறது அல்லது வங்கிகளின் வங்கி அல்லது இந்தியாவின் மத்திய வங்கி எனப்டுகிறது. ஆர்.பி.ஐ. பணக்கொள்கைகளை உருவாக்கி அமைத்து அதனை மற்ற வங்கிகள் பின்பற்றி செயல்படுத்துகிறது. இன்று ஸ்டேட் பேங்க் குழுமம், 20 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், 21 தனியார் வங்கிகள் மற்றும் 19 வெளிநாட்டு வங்கிகள் உள்ளன. இன்று 8000 வங்கி கிளைகள் கொண்டு வங்கிகள் பரந்து விரிந்து செயலாற்றுகின்றது. கிராமம் புற வங்கிகள், மண்டல வங்கிகள், அரசு மற்றும் தனியார் வங்கிகளும் செயல்படுகின்றன.

சில காலமாக வங்கி தொழிலில் அஞ்சல் அலுவலகங்களும் இணைந்துள்ளன இந்திய தபால்துறை தனது 1.55 இலட்சம் தபால் அலுவலகங்களை ஆதாரமாக கொண்டு இந்திய தபால் வங்கியை (Postal Bank of India) தொடங்க திட்டமிட்டுள்ளது. 90 சதவீதம் இவை சிறு நகரங்களிலும் கிராமபுறங்களிலும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறை முன்னரே ஒரு அஞ்சல் (தபால்) அலுவலக சேமிப்பு வங்கியாக பல நிதிச்சேவைகளை வழங்குகிறது அவை தேசிய சேமிப்பு சான்றிதம் (National Savings Certificate) கிஸான் விகாஸ் பத்திரம், மாதாந்திர முதலீட்டுத் திட்டம், அஞ்சல் ஆயுள் காப்பீடு, ஓய்வூதியம் வழங்கல், பணப்பரிமாற்றம் போன்றவை இன்னப்பிற அஞ்சல் துறை ரூ. 1000 கோடிக்கான முதலீட்டை வங்கி பரிமாற்றங்களில் திரட்ட விழைந்துள்ளது அது அஞ்சல்துறையின் துணை அமைப்பாக இயங்கும்.

©KTBS Not to be republished

## வங்கிகளின் வகைகள்

பலவகையான வங்கிகள் தன்னுள் சிறப்பு வகைகளுக்கேற்ப உள்ளது முக்கிய வங்கிகள் வகைகள் :

> **நடைமுறை பயிற்சி:**
> அஞ்சல் அலுவலகதிதற்கு சென்று அதன் வங்கியியல் செயல்பாடுகளை சேகரி.

- மத்திய வங்கி (அ) இந்திய ரிசர்வ் வங்கி
- வணிக வங்கிகள்
- தொழில் முன்னேற்ற வங்கிகள்
- நிலவள வங்கிகள்
- உள்ளூர் வங்கிகள் (பணம் வழங்குவோர் (அ) சௌக்கார்)
- கூட்டுறவு வங்கிகள்

(இவற்றை சென்ற வகுப்பில் பொருளாதாரப் பாடப்பிரிவில் படித்து அறிந்து கொண்டோம்.)

## வங்கி கணக்குகளின் வகைகள் (Types of Bank Accounts)

பொதுவாக பலப்பிரிவுகளில் வங்கி கணக்கு துவங்கலாம் :

1. சேமிப்புக் கணக்கு (Savings Account)
2. நடப்புக் கணக்கு (Current Account)
3. தொடர்புவைப்புக் கணக்கு (Recurring Deposit Account)
4. கால (அ) நிரந்தர வைப்புக் கணக்கு (Fixed Deposit Account)

### 1. சேமிப்பு கணக்கு (Savings Bank Account)

பொதுவாக இவ்வகை கணக்குள் மாதச்சம்பளம் பெறுவோர் அல்லது குறிப்பிட்ட வருமானம் உள்ளோரால் தொடங்கப்படுகிறது. இது தற்போது மாணவர்கள், முதுமையடைந்தோர் ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடம் சேமிப்பின் முக்கியத்துவம் உணர இது உதவுகிறது எவ்வளவு பணம் வேவண்டுமானாலும் சேமித்து பராமரிக்கலாம் தடையில்லை தேவைப்படும்போது காசோலை, வங்கியில் கிடைக்கும் பணம் திரும்பபெறும் சீட்டு மூலம் பணம் எடுக்கலாம்.

> **நடைமுறை பயிற்சி :**
> பலதரப்பட வங்கி கணக்கின் வட்டி சதவிதத்தை அறிந்து கொள்க.

### 2. நடப்புக்கணக்கு (Current Account)

இவ்வகை கணக்குகள் பெருவணிகம் செய்வோரால் தொடங்கப்படுகிறது. இதில் முதலீடுகள், திரும்பபெறுதல் மற்றும் Contra பரிமாற்றங்களின் சேவைகள்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

கிடைக்கின்றன இக்கணக்கு வகையில் ஒரே நாளில் பலமுறை பணம் செலுத்தி (அ) திரும்பப் பெறலாம் இவற்றிற்கான வட்டி கிடைக்காது. ஆனால் அவத்திற்கு வங்கிக்கட்டணங்கள், அல்லது சேவைக்கட்டணங்கள் விதிக்கப்படுகிறது.

***3. தொடர்வைப்புக் கணக்கு :*** (Recurring Deposit Account) இது எதிர்கால நலன் மற்றும் தேவைக்கான மாதாந்திர மூதலிட்டுத் திட்டமாகும் (திருமணம் மற்றும் குழந்தைகளின் படிப்புச் செலவுக்காக) குறிப்பிட்ட மாதங்களுக்கு பின்னர் திட்டம் முடிவடைந்து வட்டியுடன் திரும்பகிடைக்கும்.

***4. கால அல்லது நிரந்தர வைப்புக்கணக்கு*** (Fixed Deposit Account) **:**

இவ்வகையான கணக்கு குறிப்பிட்ட கால வரையறைக்கு (கால அளவு மாதம், 6 மாதம் ஒரு வருடம், 5 வருடம் (அ) 10 வருடம் இருக்கலாம்) உட்பட்டு தொடங்கப்படுகிறது. ஆனால் அக்குறிப்பிட்ட கால உரையறைக்கு முன்னரே பணம் திரும்ப பெறு இயலாது அக்கணக்கில் உள்ள பணத்தின் மீதான வட்டி கால (அ) நிரந்தர வைப்புக்கு ஏற்றவாரு கணக்கிடப்படும்.

> ***பயிற்சி :***
> *நிரந்தரவைப்பு கணக்கில் உள்ள ரூ. 50,000/- க்கான கொகைக்கு மாத வட்டி 8% ஒரு வருடத்திற்கானதை கணக்கிடு.*

©KTBS Not to be republished

### ஒரு வங்கியில் கணக்கு துவங்க நெறிமுறைகள் :

இன்று வங்கிகள் முக்கியமாக நிதி ஆதாரங்களின் நிறுவனங்களாக வெளிப்பட்டுள்ளது. நிதிப் பரிமாற்றங்களுக்கான பாதுகாப்பு சூழலை ஏற்படுத்துகிறது. வங்கிச் சேவைகளை முறையாகப்பெற ஒவ்வொரு வரும் வங்கி கணக்கை துவங்குவது கட்டாயமாகிறது அது சுலபமாநது பின்வருமாறு

> ***தெரிந்து கொள்க***
> *கூட்டுக்கணக்கு* (Joint A/c) *என்பது ஒருவர் (அ) அதற்கு மேற்பட்டவரால் தொடங்கி பராமரிப்பது.*

***1. நீங்கள் துவங்கும் வங்கி கணக்கு வகையை முடிவு செய்க :***

சேமிப்புக் கணக்கு, நடப்புக்கணக்கு, தொடர்வைப்புக்கணக்கு கால (அ) நிரந்தர வைப்புக்கணக்கு போன்றவைகளில் உங்களின் தகுதிக்கேற்ப தெரிவு செய்து தொடங்கலாம்.

***2. நீங்கள் தெரிவு செய்த வங்கியை அணுகுதல் :***

நீங்கள் எவ்வகை கணக்கு துவங்க முடிவு செய்தீர்களோ அதற்கு ஏற்ப தெரிவு செய்த வங்கி அலுவரை சந்தித்து கணக்கு துவங்க தேவையான விண்ணப்பம் மற்றும் அறிவுரைகளை பெறவும்.



www.textbookpdf.in

### 3. வங்கி விவர விண்ணப்ப படிவத்தை நிரப்புக :

படிவத்தில் பெயர், விலாசம் தொழில் இன்னபிற தேவைப்பட்ட விவரங்களை நிரப்பி தங்களின் முழுமையான கையொப்பங்களை படிவத்திலும் கையொப்ப அட்டையிலும் இடவும் கூட்டுகணக்காக இருந்தால் வேண்டப்பட்டவர்களும் இணைந்து கையொப்பமிடவும் தற்போது கணக்கு துவங்க பாஸ்போர்ட் மற்றும் ஆதார் போன்ற மிகமுக்கிய அடையாள ஆவணங்களாக கோரப்படுகிறது அவை சுயகையொப்ப சான்றாகும்.

### 4. அறிமுகம் செய்பவர் தேவைப்படுகிறது :

வங்கிகள் புதுகணக்கு துவங்க வருபவர்களை அறிமுக கையொப்பம் கோருகிறது அச்சான்றாதாரர் (அறிமுகம் செய்பவர்) முன்னரே வங்கியின் வாடிக்கையாளராக (அ) கௌரவமிக்க நபராக இருத்தல் வேண்டும் இது வங்கியின் நலனுக்கு உகந்தது.

### 5. நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பித்தல் :

நிரப்பிய விண்ணப்பத்தை மற்ற அடையாள ஆவணங்களான முகவரி, பான் அட்டை, ஆதார் அட்டை மற்றும் புகைப்படம் ஆகியவற்றோடு சமர்ப்பிக்க வேண்டும்.

### 6. விவரங்கள் சரிபார்த்தல் :

நிரப்பபட்ட அனைத்து விவரங்களை சரியே என வங்கி அலுவலர் சரி பார்க்கின்றார் மற்ற ஆவணங்கையும் ஏற்று அங்கீகாரம் செய்கிறார்.

### 7. ஆரம்ப பணம் செலுத்தல் :

அனைத்தும் சரிபார்த்து ஏற்று கொண்டப்பின் தேவைப்பட்ட பணம் முதன்முறையாக செலுத்தியபின் வங்கி கணக்கு எண் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தேவைப்பட்ட கட்டணங்களை அக்கணக்கில் கழித்து காசோலை புத்தகம், வங்கி கணக்குப்புத்தகம் மற்றும் திரும்ப பணம் பெறும் சீட்டுப்புத்தகமும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. அனைத்து கணக்கு வகைகளுக்கும் ஏற்ற பரிமாற்ற ஆவணங்கள் வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப வழங்கப்படுகிறது.

### வங்கி கணக்கு துவங்கிவதினால் ஏற்படும் நன்மைகள் :

- வங்கி கணக்கு பணத்திற்கு பாதுகாப்பு வழங்குகிறது
- வங்கி கணக்கு பணம் செலுத்தலுக்கு பயன்படுகிறது
- வங்கி கணக்கு பணம் பெறவும், வசூலிக்கவும் உதவுகிறது
- வங்கி கணக்கு வைத்திருப்போர் முன்பணம் மற்றும் கடன்பெற உதவுகிறது.
- வங்கி கணக்கு வங்கி கணக்கு மூலம் பக்குவமான நிதி பரிமாற்றங்களை மேற்கொள்ளலாம்.
- வங்கி கணக்கு பாதுகாப்பு பெட்டக வசதிகளை வழங்குகிறது.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# பயிற்சிகள்

## I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரபபுக.

1. பேங்க் எனும் பதம் (அ) சொல் ஃப்ரெஞ்ச் சொல்................வந்தது
2. வங்கிகளின் வங்கி எனப்படுவது................
3. தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கான உதாரணம்................
4. தேசிய சேமிப்பு பத்திரங்களை வெளியிடுவது..................
5. ஒரு வங்கியில் எத்தனை வகையான பரிமாற்றங்களையும் ஒரே நாளில் செய்யும் வசதியுள்ள கணக்குவகை..................
6. குறிப்பிட்டத் தொகையை குறித்த காலத்திற்கு முதலீடு செய்யும் கணக்கு வகை.................. ஆகும்.

## II. நண்பர்களுடன் கலந்துரையாடி பின் விடையளி:

1. வங்கி (Bank) என்றால் என்ன?
2. வங்கிப் பரிமாற்றங்களின் தன்மைகளை வகைப்படுத்து.
3. எவையெல்லாம் வங்கிசெயல்பாடுகளாகும்?
4. வங்கியாளருக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் உள்ள தொடர்பினை விவரி.
5. ''சமீப காலங்களில் வங்கியில் சேமிப்பு கணக்காளர் எண்ணிக்கை உயர்கிறது'' காரணம் கூறு.
6. வங்கி கணக்கு துவங்குவதினால் ஏற்படும் நன்மைகள் எவை?

## III. செயல்பாடுகள் :

1. உங்களுக்கு தெரிந்த வங்கிகளின் பட்டியலைத் தயாரிக்க.
2. வங்கி கிளைக்கு சென்று காலவைப்பு கணக்கின் வட்டி விகிதங்களை சேகரிக்கவும்

## IV. திட்டப்பணி

உங்களது வசிப்பிடம் அருகில் உள்ள வங்கிக்கு சென்று விண்ணப்பம் பெற்று அலுவலருடன் விவாதித்து தேவையெனில் கணக்கு துவங்குக.

* * * *

©KTBS Not to be republished



www.textbookpdf.in

# அத்தியாயம் - 2

# தொழில் முனைவோர் திறன்

**இவ்வத்தியாயத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வது :**

- தொழில் முனைவோர் மற்றும் தொழில் முனைவுத்திறன் விளக்கம்
- தொழில் முனைவுத்திறன் பங்கும் முக்கியத்துவமும்
- சுயவேலை வாய்ப்புகள்
- சுயவேலை வாய்ப்பு திட்டங்கள்
- சாதனை படைத்த தொழில் முனைவோர் விவரங்கள்

இன்றைய சந்தை பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தொழில் முனைவோர்த்திறன் அமைகிறது. நிலம், தொழிலாளர், முதலீடு மற்றும் நிறுவனங்களோடு இதுவும் முக்கிய பங்காற்றுகிறது. ஒரு நாட்டின் தொழிற்துறையோடு இன்றைய மாற்றமிகு வியாபார சூழ்நிலைகளில் சக்தி வாய்ந்ததாக உள்ளது.

**தொழில் முனைவோர் என்பதன் விளக்கம் :**

Entrepreneur (தொழில் முனைவோர்) என்ற பதம் (அ) சொல் Entreprende என்ற ஃபரெஞ்ச் வார்த்தையிலிருந்து வந்தது தொழில் முனைவர் என்பவர் நூண்ணறிவோடு நூதன வணிக செயலாக்கம் புரிபவர் வணிகத்தில் புதுமை புகுத்துபவர். இவர் தலைமை பண்பு கொண்டு அனைவரையும் ஒருங்கிணைத்து செயலாற்றும் மேலாண்மை அறிவு படைத்தவர்.

இவர் சரியான வணிக வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளும் முனைப்பு மிக்கவர் முதலீட்டாளராகவும் இருப்பர். தொழில் முனைவர் என்பவர் என்ன எப்பொழுது எவ்வளவு வகையான சரக்கு மற்றும் சேவை போன்ற வணிக தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்பவர். இவர் பொருட்களுக்கான சந்தை அல்லது நுணுக்கங்களுக்கு புதிய உத்திகளை அளிப்பவர் சுலபமாக கூறவேண்டுமெனில் வாய்ப்புகளை உணர்ந்து தேவைப்படும் ஆதாரங்களை உருவாக்கி வணிகத்தில் வெற்றிகளை குவிப்பவர் உ.ம் : கணினிகள், நவீன தொலைபேசிகள், தானியங்கி பணம் வழங்கும்/பெறும் இயந்திரங்கள், உடனடி உணவுகள் மற்றும் தனியார் விரைவு அஞ்சல் ஆக இவையெல்லாம் தொழில்முனைவோரின் புதுமைமிகு தொழில் உத்திகளே பிறகு தயாரிப்பு பொருட்களாகவும் சேவைகளாகவும் ஆனது..

**தொழில் முனைவுத்திறன் :**

தொழில் முனைவுத்திறன் Entrepreneurship என்பது செயலாக்கம் மிக்க நடைமுறை உத்தியாகும். தொழில் முனைவோர் தொழில் நிறுவனத்தை அமைத்து நடத்தும் பணியை மேற்கொள்பவர் தொழில் முனைவுதிறன் என்பது ஒரு படைப்பை உருவாக்கி நடத்தும் செயல்படைத்தது ஒரு திறன்மிகு ஆற்றல் கொண்டு ஒன்றை உருவாக்கி அதனை விரிவாக்கம் செய்வதாகும் வணிகத்தில் மற்றவர்கள் குழம்பி, முரண்பட்டு, கலக்க மடைந்து பின்வாங்கியவற்றை தொழில் முனை

©KTBS Not to be republished



www.textbookpdf.in

வோர் அறிந்து உணர்ந்து அந்த வாய்ப்பை மிகச் சாமர்த்தியமாக பயன்படுத்துபவர் ஆவர். தொழில் முனைவுத்திறன் என்பது ஒரு சவால்மிகு முதலீட்டின் கணிக்கப்பட்ட இடர்களிலிருந்து இலாபப்பயன்களை பெற வேண்டுமென்ற எண்ணங்களின் அணுகுமுறையே ஆகும். அது பலவித நடைமுறைகளுக்குட்பட்ட தத்துவமாகும். அது ஒருவரின் எண்ணத்தின்படி பலதரப்பட்ட சூழ்நிலைகளில் நின்று நிரந்தரமாக சாதிப்பதே, அது வணிகத்திலோ அல்லது அரசு முறையிலோ மற்றும் கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மேலும் ஏழ்மையை அகற்றல் அல்லது இனைமிறவற்றிலும் இருக்கலாம்.

### தொழில் முனைவோரின் தன்மைகள்

- படைப்புத்திறன்
- முனைப்புத்திறன்
- குழு கட்டமைத்தல்
- சிக்கலுக்கான தீர்வு
- இடர்களை எதிர்கொள்ளுதல்
- சாதிப்பதிலிருந்து விலகாமை
- புத்தாக்கம்
- தலைமைப்பண்பு
- சாதனைக்கான ஊக்குவிப்பு
- இலக்கை நெறிப்படுத்துதல்
- தீர்வு காணல்
- சுய நம்பிக்கை

### தொழில் முனைவோர் இயங்கும் முறைகள் : (Functions of an entrepreneur) :

ஒரு தொழில்முனைவர் வாய்ப்புகளை மனத்தால் உணர்ந்து திட்டமிட்டு கிடைக்கும் ஆதாரங்களை அமைத்து தயாரிப்பு மற்றும் சந்தையை மேற்காண்பவர் தனது கீழ் உள்ளவர்க்கு உந்து சக்தியாக இருப்பர் மிகமுக்கியமாக புதுமையை புகுத்தி இடர்களை வெற்றி கொள்பவர் தொழில் முனைவரின் முக்கிய செயல்கள் :

1. தொழில் முனைவர் வியாபாரம் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட திட்டங்களை தீட்டி வணிக நடைமுறைகளை தொடங்குபவர்
2. வணிகத்தயாரிப்புகளுக்காண காரணிகளை அமைப்பவர்
3. தயாரிப்பு பொருட்கள், தொழில்நுட்பம், சந்தை மற்றும் வேலை வாய்ப்புகளுக்காக முடிவுகளை மேற்கொள்பவர்
4. அனைத்தையும் திறமையாக ஒருங்கிணைப்பவர்.
5. புதுமுறைகளை அறிமுகப்படுத்தி நடைமுறைக்கு தருபவர்.
6. தேவைப்பட்ட வருவாய் செலவினங்களை கையாள்பவர்
7. நிலையற்ற சூழல் மற்றும் இடர்களை பொறுத்தாள்பவர்
8. ஒரு வியாபார நிறுவனத்தின் சிறப்புமிக இயக்கங்களுக்கான அறிவுறு த்தல்களை மேற்கொள்பவர்

### தொழில் முனைவரின் பங்கு

தொழில் முனைவோர் வணிகத்தின் தலைமையாளர்கள் ஆவார். இவர்கள்



www.textbookpdf.in

©KTBS Not to be republished

தங்களின் எண்ண விருப்பங்களை பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் முன்னேற்றத் திற்கும் பயன்படுத்தி நடைமுறைக்கு தருபவர் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிப்பவர் இவர்கள் தொழிற்துறை மட்டுமல்லாது விவசாயம் மற்றும் சேவைத்துறையின் முன்னேற்றத்திற்கான பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆவர்.

பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு :

1 தொழில்முனைவோர் பொதுமக்கள் சேமிப்புகளிலிருந்து மூலதன அமைப்பை முன்னெடுப்பவர் மற்றும் பிற ஆதாரங்களைக்கொண்டு நிறுவனத்தை ஏற்படுத்துபவர்.

2. தொழில் முனைவோர் சமூகத்தில் உள்ள கலை, அறிவியல் நுட்ப வியலாளர்களுக்கும், தொழிற்சார்புடைய தகுதிமிக்கவர்களுக்கும் பெருமளவு வேலைவாய்ப்பை வழங்குபவர்.

3. தொழில் முனைவோர் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் (GDP) மற்றும் தனிநபர் வருவாய் உயர்வுக்கும் காரணிகளாவர்.

4. தொழில் முனைவோர் அறிவுசார் நடைமுறைகள் கொண்டு புதிய தயாரிப்புகளையும், சேவைகளையும் முன்னெடுத்து நாட்டின் விற்பனை சந்தையை மேம்படுத்தி பொருளாதார வளர்ச்சி காண்பவராவார்.

5. தொழில் முனைவோர் மக்களின் உயர்தரமிக்க வாழ்க்கைக்கு தேவையான தரமான பொருட்களை குறைந்தவிலைக்கு தருபவர்.

6. தொழில் முனைவோரால் பல பிராந்தியங்கள் ஏற்ற தாழ்வு இன்றி தொழில் முன்னேற்றம் காண்கின்றன. குறிப்பாக ஊரக மற்றும் பின்தங்கிய பகுதிகள் முன்னேற்றம் காண்கின்றன.

7. தொழில் முனைவோர் வருவாய் மற்றும் சொத்து சேர்க்கை ஓரிடத்தில் குவியாமல் சீரான சமுதாய வளர்ச்சிக்கு வித்திடுபவர்.

8. தொழில் முனைவோர் நாட்டின் வெளிநாட்டு வணிகம் அல்லது ஏற்றுமதியை பெருக்குபவர்.

9. தொழில் முனைவோர் மாறிவரும் தொழில் நுட்ப சூழ்நிலைகளிலிருந்து சவால்களை ஏற்று பண்புரிந்து தங்களது இலாபத்தை புது உத்திகளை கொண்டு அதிகப்படுத்தி கொள்வர்.

## *தொழில் முனைவோரின் முக்கியத்துவங்கள்*

தொழில் முனைவோர் சந்தை பொருளாதாரத்தின் மையமாக திகழ்பவர். இவர்கள் பொருளாதாரம் எனும் இயந்திரத்தின் தொடக்கமின்பொறியாக உள்ளனர். அது இயங்கி நுண்ணூக்கியாக அனைத்து முனைப்ப திறன்க ளோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேலும் உலகளவு பரவசெய்யும் அளவிற்கும் முக்கியத்துவம் பெற்றவராவர்.

©KTBS Not to be republished



www.textbookpdf.in

எந்தவொரு சமுதாயமும் அவர்களை உற்சாகபடுத்தி வெகுமதியளித்து பாராட்ட வேண்டும் ஏனெனில் தொழில் முனைவோர் அவர்களின் செயல்முறைகளால் அச்சமுதாயம் வாமைபெற தீர்மானிக்கும் சக்தி பெற்றவர். வெற்றி, வளமை, வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளுக்கு காரணகர்த்தவராவர் உலகின் வெற்றியடைந்த சமுதாயங்கள் எண்ணற்ற தொழில் முனைவோர்களை தன்னகத்தே கொண்டுள்ளதை காணலாம் தொழில் முனைவோர் பொதுமக்களின் சேமிப்புகளிலிருந்து முதலீடுகளை திரட்டி ஊக்கமளிக்கின்றன. அவர்கள் தங்களின் சொந்த தொழிற்சார்புகளை கொண்டும் அதேபோன்று தருவிக்கப்பட்ட ஆதாரங்களைக்கொண்டும் நிறுவனத்தை அமைக்கின்றனர். இதுபோன்ற தொழில் முனைவு நடவடிக்கைகள் மதிப்புயர்வுக்கும், சொத்து உருவாக்கப்படவும் அணுகுமுறையாகின்றன. இது போன்ற தொழில் முனைவுத்திறன் சக்தியாகி, படைப்புமிக்க மற்றும் புதுமை உத்திமிக்க தன்மைகளோடு புதிய தயாரிப்புகளுக்கும் அதன் விற்பனை மற்றும் சேவைக்கும் உந்து பொருளாக உள்ளது.

எனவே தொழில் முனைவோர் இலாபம் தடமுற் படும் போது அதற்கேற்ற இடர்களையும் சந்திக்க வேண்டியவராகிறார். இது மூலம் தேவைப்படுவோரை திருப்திபடுத்த முற்படும் வாய்ப்புகளை நாடி இலாபம் பெறவிழைகிறார்.

### தொழில் முனைவோருக்கான சுயவேலை வாய்ப்புகள்

தொழில் முனைவோர் நாட்டின் முதுகெலும்பாவர் தெருமுனை தேநீர் அங்காடி, மளிகை பொருட்கள் விற்பனையகம், கணினி இணையதள சேவையகம், பயன்படுத்தப்பட்ட பொருட்கள் வாங்கும் வியாபாரி இவர்கள் சுயதொழில் முனை வோருக்கான உதாரணங்களாவர் போட்டிமிகு உலகப்பொருளாதாரத்தில் தொழில்முனைவோரை ஊக்குவித்தல் அவசியமாகும். புதிய உத்திகளுக்கும், முன் னேற்றத்திற்கும் காரணமாக உள்ளனியார் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதில் இந்திய அரசாங்கம் முன்னிலை வகிக்கின்றது அதற்கேற்ற சமூக பொருளாதார சூழலை நமது நாடு உருவாக்கி தருகிறது. ஒரு தனிமனிதனை சுயவேலை வாய்ப்புபெற்றவனை அதிலிருந்து தொழில்முனைவராக உருவாகுவது ஒரு வணிக அமைப்பின் அடித்தளமாகி ஒரு திறவுகோல் ஆகிறார். குறு, சிறு மற்றும் இடைப்பட்ட தொழிற் நிறுவனங்கள் (MSMEs) அமைச்சகம் இம்மாற்றத்திற்கு உதவி புரிகின்றன பெருமளவில் குறைந்த முதலீட்டில் பரந்த நோக்கோடு புதிய நிறுவனங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன.

எந்த தனிப்பட்ட நபரும் தொழிற் தொடங்க பரந்த வாய்ப்புகள் சரியென்ற அடிப்படையில் ஓரளவு பின்வரும் தொழில்வாய்ப்புகள் பயன்படுத்திக்கொள்ளலாம் அவைகள்

- விளம்பர நிறுவனங்கள்
- சந்தைக்கான ஆலோசனை மையங்கள்
- தொழிற்சாலைக்கான ஆலோசனை மையங்கள்
- உபகாரணங்களுக்கான வாடகை மற்றும் குத்தகை
- நகல் எடுக்கும் மையங்கள்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

- தொழிற்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
- தொழிற் பரிசோதனைக் கூடங்கள்
- இணையத்தேடல் / இணைய சேவை மையங்கள்
- தொலைக்காட்சி வலைப்பின்னல் (Network) வசதிகள்
- அழகு நிலையங்கள்

**சுயவேலை வாய்ப்பு திட்டங்கள்**

ஒரு தொழில் தொடங்க நிதி ஆதாரங்கள் அல்லது பணத்தேவைகள் மிக முக்கியமானதாகும். நிதி இல்லாமல் எந்தவொரு வியாபாரமும் தொடங்க இயலாது. எனவே தொழில் வேலைவாய்ப்புகளை அமைத்து உருவாக்க தகுதி வாய்ந்தவர்களுக்கு கடன் வழங்க மத்திய மாநில அரசுகள் நிதி நிறுவனங்கள் குறிப்பாக சிறுதொழில் தொடங்கி முன்னேற வழிவகை செய்துள்ளன.

***சில முக்கிய நிதி நிறுவனங்கள் :***

1. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI)
2. வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (NABARD)
3. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி (EXIM BANK)
4. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI)
5. இந்திய தொழிற்துறை நிதி கழகம் (IFCI)
6. இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டு கழகம் (ICICI)
7. இந்திய தொழில் புனரமைப்பு வங்கி
8. வணிகம் மற்றும் இன்னபிற வங்கிகள்
9. மாநில நிதிக்கழகம் (SFC)
10. இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் (LIC)
11. யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இண்டியா (UTI)

தொழில் முனைவோருக்கான ஊக்கமளிப்பு (Promotional) அமைப்புகள்

தொழில் முனைவோருக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு அரசு சம்பந்தப்பட்ட மத்திய மாநில அளவில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன சில பலவகை எண்ணிக்கையுள்ள முகமைகள் மற்றும் நிறுவனங்கள் தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் சிறு மற்றும் மத்தியதர தொழில் நிறுவனங்களை உருவாக்கி உதவிபுரிய துணை நிற்கின்றன. குறிப்பாக இந்த அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் தொழில் முனைவோருக்கு தேவையான பயிற்சி, நிதி ஆதாரம் மற்றும் விற்பனை சந்தைக்கு ஆதாரமாக விளங்குகின்றன அவை பின்வருமாறு :

1. மாவட்ட தொழில் மையங்கள் : (DIC's)
2. சிறுதொழில் வளர்ச்சி குழுமம் வரையறைக்கப் பட்டது. (SIDCO)
3. தேசிய சிறுதொழில் குழுமம் (NSIC)

©KTBS Not to be republished



www.textbookpdf.in

4. சிறு அளவீட்டு தொழில் அமைப்பு (SSIB)
5. சிறுதொழில் சேவை நிறுவனங்கள் (SISI)
6. தொழிற் பேட்டைகள்
7. கதர் மற்றும் கிராம தொழில் குழுமங்கள் (KVIC)
8. தொழில் நுட்ப ஆலோசனை அமைப்புகள் (TCO)

**வெற்றிமிகு தொழில் முனைவோரின் விவரங்கள் :**

***டாக்டர் ப்ரதாப் ரெட்டி :*** இந்தியாவின் முதல் மருத்துவமனை குழுமத்தை தோற்றுவித்தவர் அவையே தி அப்பல்லோ மருத்துவமனைகள் புரட்சிகரமான முழுமையான சுகாதார பாதுகாப்பு பெறுநிறுவன குழுமமாக இந்தியா முழுமையும் 750 மருத்துவமனைகளை நவீன வசதிகளுடன் அமைத்து நடத்தி வருகிறார். இது ஒரு நெருக்கடி மிகுந்த இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ள அமெரிக்காவின் டெக்ஸாஸ் செல்ல இயலாத நோயாளின் இயலாமையை கருத்தில்கொண்டு அதே போன்ற மிக நவீன கட்டுமான மருத்துவ பாதுகாப்பு வசதிகள் அனைவருக்கும் கிடைக்குமாறு உருவாக்கி இயங்கி வருகிறது.



***திரு. நரேஷ் கோயல் :*** இந்தியாவின் மிகப்பெரிய உள்நாட்டு வான்வழி தனியார் விமான நிறுவனமான ஜெட் ஏர்வேஸ் எனும் போக்குவரத்து நிறுவனத்தை நிறுவியவர் அதன் நிறுவனர் மற்றும் தலைவராக உள்ளார். கி.பி. 1974ஆம் ஆண்டு வெளிநாட்டு விமான நிறுவனங்களின் விற்பனை மற்றும் சந்தை படுத்துதல் துறையை கவனித்து வந்தவர். 1991 இந்திய பொருளாதார சீர்த்திருத்தின் மாற்றங்களுக்கேற்ப புதிய பொருளாதார கொள்கையின் அடிப்படையில் விமானச்சேவை துறையின் மாற்றங்களையும் வாய்ப்புகளையும் முன்னரே கண்டுணர்ந்து அத்துறையில் காலடி வைத்து உள்நாட்டு விமானச்சேவையில் முதன்மையானவராக விளங்குகிறார்.



***திரு. நாராயணம் மூர்த்தி :*** புகற்பெற்ற தொழில்நுட்ப நிறுவனமான ''இன்ஃபோஸிஸ் டெகனாலிஜிஸ் லிட்'' நிறுவனத்தலைவர்களில் ஒருவர் 1999ல் ஏற்படுத்தப்பட்டது. NASDAQ (National Association of Securities Dealers Automated Quotations) எனும் அமைப்பில் பட்டியலிடப்பட்ட முதல் நிறுவனமாகும். 2006ஆம் ஆண்டு 50,000 பணியாளர்களை கொண்டு இரண்டு பில்லியன் டாலர்கள் விற்பனை அளவை எட்டிய நிறுவனமாகவும் திகழ்கிறது. இந்நிலைக்கு நிறுவனத்தை முன்னேற்றிய திரு. நாராயணமூர்த்தி நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும்



©KTBS Not to be republished



www.textbookpdf.in

தார்மீக எண்ணம் கொண்டுள்ளமையால் மிகச்சிறந்த தொழில் முனைவராக உயர்ந்து நிற்பவர்.



***திரு. வர்கீஸ் குரியன் :***

வெண்மை புரட்சியின் தந்தை என்று போற்றப்படும் இவர் சமூகம் சார்ந்த தொழில் முனைவர் விவசாய மேம்பாட்டு திட்டங்களின் மூலம் எண்ணிடலங்கா அளவு பால் உற்பத்திக்கு வித்திட்டவர் குஜராத் மாநிலம் கைரா மாவட்டத்தில் ஆனந்த் பால் உற்பத்தியை தொடங்கியவர் அமுல் மில்க் மற்றும் பால் சம்பந்தப்பட்ட பொருட்களின் உற்பதியில் பெரும் சாதனை படைத்து இந்திய அளவில் உயர்த்தியவர்

***திரு. திருபாய் அம்பானி :*** இவர் பேரார்வம்மிக்க தொழில் முனைவர் ஆவார் இவரது வாழ்க்கைப்பயணம் இல்லாமையிலிருந்து இருப்பவர் வரை நினைவூட்டுவதாக உள்ளது. இவர் இந்தியாவின் உயர்தரமிக்க ஒழுக்க சீரான பெருநிறுவன வரலாற்றை மீட்டெடுத்தவர் என்பது நினைவு கூரத்தக்கது. தனது நிறுவனத்தை உலகளவிலான தரம்மிக்க பெருநிறுவன குழுமமாக உயர்த்தியவர் திருபாய் அம்பானி எனும் திராலால் ஹிராசந்த் அம்பானியுடைய தந்தை ஒரு பள்ளி ஆசிரியர் ஆவார். திருபாய் அம்பானி தனது தொழில் முனைவு திறனை வாழ்க்கை அமைவினை பஜன் புத்தங்களை கொண்டு வார இறுதி நாட்களில் புனித தலமான மவுண்ட் கிர்னார்-ல் விற்பனை செய்து வந்தார். தனது 16வது வயதில் பள்ளி படிப்பை முடித்து ஆப்ரிக்காவில் உள்ள ஈடன் சென்றடைந்தார். அங்கு இயற்கை எரிவாயு நிலையத்திலும் மற்றும் எண்ணெய் நிறுவனத்திலும் சாதாரண அலுவலராக பணிபுரிந்தார். பிறகு 1958ல் இந்தியா வந்தடைந்து ஐம்பாதாயிரம் முதலீட்டில் ஜவுளி வணிக நிறுவனத்தை தொடங்கினார். பிறகு பலதரப்பட்ட சிறிப்பு கூறுகள் கொண்ட திறனாளராக பெட் ரோ-கெமிக்கல் துறையில் கவனம் செலுத்தியதோடு கூடுதலாக தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் சக்தி, மின்சக்தி, சில்லரை வணிகம், கட்டுமானத்துறை சேவை கள் மூலதன சந்தைகள், சரக்கு போக்குவரத்து மற்றும் பலவற்றில் வணிகம் மேற்கொள்வதைக் காணலாம். உலகின் மிக முககிய தொழில் முனை வோரில் தி ரிலையன்ஸ் கம்பெனி பெரும் பங்கு வகிக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.





***திரு. அஜிம் பிரேம்ஜி :*** இந்தியாவின் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனம் விப்ரோ டெக்னாலஜிஸ்-ன் தலைவர் ஆவார். மாணவ பருவத்தில் தந்தையை இழந்தவர் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் நெருக்குதலுக்கு உள்ளாகி தனது நிறுவனத்தை உறுதி மிக்க திறனுடன் ஆராய்ச்சி மற்றும்

©KTBS Not to be republished



www.textbookpdf.in

மேம்பாட்டில் (R.D) சேவை வழங்கலில் உயர்த்தி காட்டியவர்.



***ஏக்தா கபூர் :*** இந்திய தொலைக்காட்சி துறையின் அரசியாக விளங்குபவர். சிறந்த படைப்பாளி பாலாஜி டெலிஃபிலிம்ஸ்ன் சாதனையாளர் 2001 ஆம் ஆண்டின் சிறந்த தொழில் முனைவர் வெகுமதியை பெற்றவர் தனது 19ஆம் வயதில் தொலைக்காட்சி தயாரிப்பில் நுழைந்தவர்.



***கிரண் மஜூம்தார் ஷா :*** இவர் மிகப்பெரிய உயரி தொழில் நுட்பத் துறையின் சாதனை படைக்கும் பயோகான் லிமிடெட்ன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆவார் இதனை 1978ல் ஒரு வாடகை வீடில் பல்வேறு சிக்கல் சவால்களுக்கு மத்தியில் தொடங்கியவர். ஏனெனில் உயரி தொழில் நுட்பம் என்பது முற்றிலும் புதிய துறையான பெண் தொழில் முனைவராக அனைத்து தடைகளையும் உடைத்து வெற்றி பெற்றவர்.

## பயிற்சிகள்

### I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. Entrepreneur எனும் பதம் ஃப்ரெஞ்சு பதமான ............லிருந்து வந்தது.
2. செயலாக்கம் மிக்க தொழில் முனைவோர் தொழில் நிறுவனத்தை அமைத்து நடத்துபவர் அத்திறன்.................. எனப்படுகிறது.
3. அப்பல்லோ மருத்துவ குழுமங்களை நிறுவியவர்...................
4. விப்ரோ நிறுவனத்தின் தலைவர்.................ஆவார்.

### II. குழுவாக கலந்துரையாடி பின்பு விடையளிக்கவும் :

1. தொழில் முனைவர் என்பவர் யார்?
2. ‘‘தொழில் முனைவுத்திறன் ஒரு படைப்புத்திறன் கொண்ட நடத்தை’’ எவ்வாறு?
3. தொழில் முனைவோரின் தன்மைகள் விளக்குக.
4. தொழில் முனைவோரின் முக்கியத்துவத்தை விவரி.

### III. நடைமுறைப்பயிற்சிகள் :

1. ஒருவணிக நிறுவனத்தை தேர்ந்தெடுத்து சென்று பணியாளர்களின் விவரங்களை சேகரிக்கவும்.
2. இணையதளம் மற்றும் புத்தகங்கள் வாயிலாக வணிக நிறுவனங்கள் பற்றி சேகரிக்கவும்.
3. தொழில் முனைவோரின் நிழற்படங்களை சேகரி.

### IV. திட்டவேலை :

1. உங்களின் அருகில் உள்ள தொழில் முனைவோரின் சாதனைகளைப்பெற்று அவரிடம் பேட்டி காண்க. திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கவும்.

* * * *



©KTBS Not to be republished
www.textbookpdf.in